# திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

## பாடத் திட்டம்

பாட நோக்கம்

திராவிட மொழிக் குடும்பத்தின் தாய் தமிழே என்பதனை நிறுவுவதற்கான மொழியியல் ஒப்பாய்வு முறையைக் கற்பித்தல்.

**அலகு -1**

திராவிட மொழிக்குடும்பம் - தென் திராவிடம் - நடுத்திராவிடம் - திராவிட மொழிகளின் தனித் தன்மைகள்.

**அலகு – 2.**

ஒலிப் பிறப்பு – உயிரொலி மாற்றம் - மெய்யொலி மாற்றம் - உருபன்களும் சொல்லாக்கமும்.

**அலகு – 3.**

பெயா்கள் - திணை, பால்,இடம், எண் உணா்தல் - வேற்றுமைகள் - மூவிடப்பெயா்கள் - எண்ணுப்பெயா்கள்.

**அலகு – 4.**

வினைச்சொற்களின் அமைப்பு – வினை வகைகள் - வினைச் சொற்கள் காலம் காட்டும் முறை – எச்சங்களும் முற்றுக்களும் - வினைப் பெயா்கள் - வினைப் பொருட்கள்.

**அலகு – 5.**

திராவிட மொழிகளின் சொற்றொடரமைப்பு

அலகு– 1

### 1. திராவிட மொழிக் குடும்ப ஒப்பாய்வின் வரலாறு

#### 1.1 ஒப்பியல் ஆய்வின் தொடக்கநிலை

சமஸ்கிருத மொழியை ஆராய்ந்த வில்லியம் ஜோன்ஸ்(William Jones) என்னும் அறிஞா் சமஸ்கிருத மொழியானது ஏனைய ஐரோப்பிய மொழிகளோடு தொடா்புடையது என்பதை முதன் முதலில் விளக்கிக் காட்டினாா். அவருக்குப் பின்னா் கி.பி.1816-ஆம் ஆண்டில் பேராசிரியா்கள் பாப;(Bop), ராஸ்க்(Rask), கிரிம்(Grimm) என்னும் மொழி நூலறிஞா்கள் இத்துறையில் அரிய பல ஆய்வுகளை நடத்திக் கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வந்தனா்.

1. வடமொழி (சமஸ்கிருதம்), ஜெர்மன் மொழி போன்ற ஒன்றோடொன்று தொடர்புடைய அனைத்து மொழிகளும் இந்தோ-ஐரோப்பிய மொழி (Indo-European Language) என்னும் மூல மொழியிலிருந்து பிரிந்தவை.
2. இம்மொழிகளைப் பேசிய மக்கள் சமுதாய, பொருளாதார காரணங்களால் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பிரிந்து சென்று பரந்தபோது பல்வேறு கிளைமொழிகள் தோன்றி வளரத் தொடங்கின.
3. இந்நிலையில் இந்தோ-ஐரோப்பிய மொழி,
    1. இந்தோ-இராணியன்(Indo-Iranian),
    2. அர்மீனியன;(Armenian)
    3. பால்தோ-ஸ்லாவிக;(Balto-Slavic)
    4. அல்போனியன்(Albanian),
    5. ஹெலனிக்(Hellenic),
    6. இத்தாலி(Italic),
    7. கெல்டிக்(Cltic) மற்றும்
    8. ஜெர்மானிக்(Germanic)

என்னும் எட்டுப் பிரிவுகளாகப் பிரிந்து வளர்ந்தது.

இவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல மொழிகளுக்கு இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் எனப் பெயரிட்டு, இம்மொழிகளை ஒப்பிட்டு ஆராயும் ஆய்வுமுறை ஐரோப்பாவில் தொடங்கியது. இம்மொழிகளை ஆய்ந்த பேராசிரியர் கிரிம் என்பவர் அவைகளுக்கு இடையேயுள்ள ஒலித்தொடர்பு, ஒலிமாற்றம் ஆகிவற்றை சில விதிமுறைகளைக் கொண்டு விளக்கினார். இம்மொழிகளை ஆய்ந்த அறிஞர்களுள் பேராசிரியர் ராஸ்க் என்பவர் இந்தோ-ஐரோப்பிய மொழிகளை வரையறுத்து, அவற்றினியல்புகளைத் தெளிவுறுத்தி ஓர் ஆய்வுக் கட்டுரையை கி.பி.1819-இல் வெளியிட்டார். இவர் சமஸ்கிருத மொழியை ஆய்ந்தபோது அதனோடு தொடர்பில்லாத பல சொற்களைப் பிரித்தறிந்து அவற்றை 'மலபார் மொழிச் சொற்கள்' என்று குறிப்பிட்டார். இக்காலந்தொட்டு இத்தகைய மொழிக் குடும்பம் பற்றிய ஆய்வில் பல்வேறு அறிஞர்களும் ஈடுபடத் தொடங்கினர். இவர்கள் இந்தியாவில் வழங்கும் மொழியினங்களை ஆரியம், திராவிடம், முண்டா, திபத்தோ-சீனம் என்று பல்வேறு மொழிக் குடும்பங்களாகப் பிரித்து ஆராய முற்பட்டனர்.

### 1.2 திராவிட மொழி ஆய்வின் தொடக்க நிலை

தென்னிந்திய பகுதிகளில் பெரும்பாலும் வழங்கப்பட்டுவரும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய 25 மொழிகளைத் திராவிட மொழிகள் என்று அழைக்கின்றோம். இவற்றுள் பிராகுயி மொழி வட இந்தியாவிலுள்ள பலுச்சிஸ்தான் பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றது. குருக், மால்டோ போன்ற சில மொழிகளும் வட இந்தியப் பகுதிகளில் பேசப்படுகின்றன. திராவிட மொழிக் கல்வியும், இனக்கல்வியும் இன்று பல்கிப்பெருகி வளர்ந்துள்ளது. எனினும் தொடக்கநிலையில் அதன் ஆய்வு தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய ஒரு சில மொழிகளைப் பற்றியதாகவே இருந்தது. கி.பி.1816 -இல் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சார்ந்த பேராசிரியர் பிரான்சிஸ் எல்லிஸ் (Francis,Whyte Ellis) என்பவர், பேராசிரியர் யு.னு.கேம்பல் (A.D.Campbell) என்பவர் எழுதிய

‘தெலுங்கு மொழி இலக்கணம்’ (A Grammer of the Teloogoo Language) என்னும் நூலுக்கு எழுதிய முன்னுரையில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் ஒரு தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்று கூறி அவற்றிற்கிடையேயுள்ள தொடர்பினைச் சுட்டிக்காட்டினார். 19-ஆம் நூற்றாண்டில் வடமொழியை ஆராய்ந்த ராஸ்க் என்பவர் சமஸ்கிருதச் சொற்களிலிருந்து வேறுபட்ட சொற்கள் சிலவற்றைப் பிரித்து அவை மலபார் மொழிகளுக்குரிய(திராவிட மொழிகள்) சொற்கள் கூறிச் சென்றார். கி.பி.1844-இல் கிறிஸ்தவ லாசர் என்பவர் தென்னிந்தியாவில் ஒரு தனி மொழிக் குடும்பமாகத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சுட்டிக் காட்டினார். இக்காலத்தில் சிராம்பூரில் வாழ்ந்த கிறிஸ்தவ மதப்பாதிரியான வில்லியம் கேரி(றுடைடயைஅ ஊயசநல) என்பவர் தமிழ், தெலுங்கு போன்ற மொழிகள் தனிக்குடும்பத்தைச் சார்ந்தன என்றும் அவை வட இந்திய மொழிகளிலிருந்து வேறுப்பட்டவை என்று நிறுவிச் சென்றார். இதையடுத்து பேராசிரியர் ஸ்டீவன்சன் (Stevenson 1841 - 44) என்பவர் வட மொழி தவிர்த்த ஏனைய மொழிகளை ஆய்ந்து தென்னிந்திய மொழிகள் தனிக்குடும்பத்தினைச் சார்ந்தன என்றார். இதற்கு முன்னர் பேராசிரியர் சு.நு.ராபர்ட்ஸ் (R.E.Roberts - 1779) என்பவர் பேச்சுவழக்கில் மட்டுமுள்ள மால்டோ மொழி பற்றி ஆய்ந்து கட்டுரை ஒன்றினை எழுதியச் சென்றார். தோடா மொழி பற்றி பேராசிரியர் ஸ்மிட;(B.Schmidt-1837) என்பவரும், பிராகுயி மொழி பற்றி பேராசிரியர் லீச;(R.Leech-1838) என்பவரும், பல ஆய்வுகளை மேற்கொண்டனர். இவர்களைத் தொடர்ந்து தொடக்க நிலையில் கோண்டி மொழி பற்றி வாய்சே (Voysey-1844) என்பவரும் படகா மொழிபற்றி ஆ.பஹ்லர்(M.Buhler-1849) என்பவரும், குயி மொழி பற்றி ஜான் பெர்சிவல்(John Percival Frye-1851) என்பவரும் ஆய்ந்தனர். இந்நிலையில் ர்.டீ.ஹாட்ஜன் (H.B.Hodgson) என்பவர் 1848,1856 ஆகிய ஆண்டுகளில் நடு இந்தியாவிலும், இமயமலைப் பகுதிகளிலும், தென்னிந்தியப் பகுதிகளிலுமுள்ள பழங்குடி மக்களின் சொற்கள் பலவற்றை எடுத்துக்காட்டி, அவை தென்னிந்தியாவிலுள்ள மொழிகளின் இனத்தவை என்று சுட்டிச் சென்றார். அதோடு பேராசிரியர் மாக்ஸ்முல்லர்(Max Muller) என்னும் மொழி நூல் பேரறிஞர் தென்னிந்திய மொழிகளை ‘நிஷத மொழிகள்’ (Nishada Languages) என்று பெயரிட்டு அவை வடமொழியிலிருந்து மாறுபட்டவை என்று சுட்டிக் காட்டினார்.

**டாக்டர் கால்டுவெல்**

கி.பி.1856 -இல் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை என்று போற்றப்படும் டாக்டர் கால்டுவெல;(R.Caldwell) இம் மொழிகளைத் திராவிடம் என்னும் பெயரால் அழைத்தார். அவர் இந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் ஒரு தனிக் குடும்பத்தைச் சார்ந்தவை என்றும், அவை இந்தோ-ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையன அல்ல என்றும் நிறுவினார். அவர் தென்னிந்தியாவிலுள்ள பண்பட்ட மொழிகளான (Cultivated Languages) தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளோடு சில பண்படாத மொழிகளும் (Uncultivated Langiages) திராவிட இனத்தோடு உறவுடையன என விளக்கினார். வெளிநாட்டு மொழிகளாகிய சித்திய மொழிகளோடு திராவிட மொழிகள் தொடர்புடையன என்பதையும் நிலைநாட்டித் தம் ஆய்வினை 1856-இல் நூலாக வெளியிட்டார். டாக்டர் கால்டுவெல்லைப் போன்று பேராசிரியர்கள் மாக்ஸ்முல்லர், கு.மு.ஸ்கிரேடர்(F.O.Schrader) என்பவர்களும் திராவிட மொழிகள் சித்திய மொழிகளோடு உறவுடையன என்று நிறுவ முயன்றனர்.

டாக்டர் கால்டுவெல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய ஐந்து மொழிகளையும் பண்பட்ட மொழிகளாகவும் தோடா, கோடா, கோண்டு, கூவி என்ற நான்கையும் பண்படாத மொழிகளாகவும் கருதினார். பிராகுயி, மால்டோ போன்ற மொழிகளைச் சுட்டிச் சென்றாரே தவிர அவற்றைப் பற்றிய சிறப்பாராய்ச்சியினை அவர் மேற்கொள்வில்லை. 1875-இல் வெளியிட்ட பதிப்பில் முன்னர் திருந்திய மொழிகளாகக் குறிப்பிட்ட ஐந்தோடு கொடகு மொழியினையும், திருந்தாத மொழிகளோடு ராஜ்மகால், ஒராவோன் ஆகிய மொழிகளையும் அவர் இணைத்தார். டாக்டர் கால்டுவெல் ஒப்பிலக்கணம் எழுதிய காலத்தில் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பம் தவிர்த்த ஏனைய மொழிக் குடும்பங்களில் ஒப்பியல் ஆய்வு அதிக அளவிற்கு வளார்ச்சியடையவில்லையென ஜுல்ஸ்பிளாக்(Jules Bloch) குறிப்பிடுகின்றனார். டாக்டர் கால்டுவெல் தனது நூலை வெளியிடுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஸ்லாவ்(Slav), கெல்டிக;(Celtic) மொழிகளின் இலக்கணங்கள் வெளியாயின. லைசர்(Schlieher) என்பவர் எழுதிய லித்வேனிய மொழியின்(Lithuanian) இலக்கணமும் சில காலங்களுக்கு முன்னர்தான் வெளியானது. மேலும் ஒலியியல் ஆய்வு டாக்டர் கால்டுவெல்லின் காலத்தில் அறிவியல் கண்ணோட்டத்தோடு மிகுந்த வளர்ச்சியனைப் பெறவில்லை. திருந்திய மொழிகள் என்று அவர் குறிப்பிட்ட சில மொழிகளைத் தவிர ஏனைய மொழிகளை ஆய்வதற்குரிய வாய்ப்புக்களும், சான்றுகளும் அவர் காலத்தில் மிகக் குறைவாகவே இருந்தன. இவ்வாறு ஒப்பியல் ஆய்வும், ஒலியியல் ஆய்வும் மிகப் பின் தங்கிய நிலையிருந்த காலத்தில் குறைந்த வசதிகளோடு சிறந்த ஆய்வினை அவர் மேற்கொண்டு தன் ஆய்வுக்காக டாக்டர் பட்டமும் பெற்றுள்ளார். இவருடைய ஆய்வு பெரும்பாலும் தென் திராவிட மொழிகளைப் பற்றியதாக இருப்பதால் இதனைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று பொதுநிலையில் சுட்டுவதை விடத் தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று அழைப்பதே பொருந்தும் என்கிறார் டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்.

**டாக்டர் கால்டுவெலுக்குப் பின்**

கி.பி.1866-ஆம் ஆண்டு லியன்னாவில் கூடிய மொழியாராய்ச்சி மாநாடு டாக்டர் ராபர்ட் கேஸ்ட்(Robert N.Cust) என்பவரின் தலைமையில் ஒரு மொழி ஆராய்ச்சிக் குழுவை இந்தியாவிற்கு அனுப்பி இந்திய மொழிகளினியல்பை ஆராயவேண்டுமென்று முடிவு செய்தது. இப்பணி பல ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1894-இல் தொடங்கியது. இதன் தலைமைப் பொறுப்பைப் பேராசிரியர் பு.யு.கிரியர்ஸன்(G.A.Grierson) ஏற்றார். 1891-இல் நடைபெற்ற கணக்கெடுப்பு (ஊநளௌரள சநிழசவ) இம்மொழி ஆய்வுக் குழுவிற்குப் பெரிதும் துணை செய்தது. இந்திய மொழி பற்றிய இக்கள ஆய்வில;(Linguistic Survey of India) உதவி புரிந்த டாக்டர் ஸ்டெங் கெனோவின்(Sten Konoa) முண்டா மொழிகள், திராவிட மொழிகள் பற்றிய கருத்துக்கள் 1906-இல் வெளியிடப்பட்டபோது திராவிட மொழிகளின் ஒப்பாய்வு புத்துயிர் பெறத் தொடங்கியது. இக்கள ஆய்வின் முதற்பகுதியில் தென்னிந்திய மொழிகள் விலக்க பட்ட போதிலும் 4-ஆம் பகுதியில் திராவிட, முண்டா மொழிகள் இடம் பெற்றன. டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்ட 12 மொழிகளோடு, கொலாமி, நாயக்கி என்னும் இரு மொழிகளையும் இணைத்து கிரியர்ஸண் திராவிட மொழிகள் 14 எனக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தின் பல்வேறு தனி மொழிகள் பற்றிய பல்வேறு வகையான ஆய்வுக்கட்டுரைகள் மொழி நூலறிஞர் பலரால் வெளியிடப்பட்டன. 1913-ஆம் ஆண்டில்

குவி மொழியினைப் பற்றிய ஆய்வினை பிட்ஜெரால்டு என்பவர் மேற்கொண்டு அம்மொழி திராவிட மொழிக் குடும்பத்தின் ஒரு தனி மொழியே என்ற முடிவுக்கு வந்தார். 1964-இல் பேராசிரியர் ஜூல்ஸ்பிளாக் என்பவர் 'திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு' (Structure Grammaticaled des Langues Dravidiennes) என்னும் நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்டார். திராவிட மொழிகள் பற்றிய இவரது கொள்கைகள் பலவற்றைப் பேராசிரியர் பரோ போன்ற அறிஞர்கள் பின்னர் மறுத்துரைத்தனர்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத பேராசிரியராகப் பணிபுரிந்த தாமஸ் பரோ என்பவர் திருந்தாத மொழிகளுக்கு முதலிடம் கொடுத்து அவைகளின் தன்மைகளை ஆய்ந்து பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இக்காலத்தில்தான், திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள்(South Dravidian), நடுத் திராவிட மொழிகள்(Contral Dravidian) வட திராவிட மொழிகள்(North Dravidian) என்று பிரித்து அவைகளின் இயல்புகளைத் தனித்தனியாக ஆராயும் நிலை ஏற்பட்டது. 1950-இல் பர்ஜி மொழியை ஆராய்ந்து அதனையும் பெங்கோ மொழியினையும் திராவிட மொழிக் குடும்பத்தின் தனிக் கிளைமொழிகள் என்று கண்டறிந்தார் பேராசிரியர் பரோ, இவருடன் இணைந்து ஆய்வு நடத்திய பேராசிரியர் பட்டாச்சாரியர் என்பவர் கோண்டா, கடபா ஆகிய மொழிகளை ஆய்ந்து தனிமொழிகள் என்று கண்டறிந்தார். தோடா மொழி பற்றிய தனி ஆய்வைச் சிறப்பாக மேற்கொண்ட கலிபோர்னியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் எமனோ தம் ஆய்வினைத் தனிநூலாக (Dravidian Linguistics-Ethnology and Flok Tales) வெளியிட்டார். மேலும் திராவிட மொழிகளின் ஒலியியல் பற்றிய ஒப்பியல் ஆய்வுகளையும் தனிநூலாக அவர் வெளியிட்டுள்ளார்(Dravidian Comparative Phonology-A Sketch). பேராசிரியர் பரோவின் ஒப்பாய்வு பற்றிய பல்வேறு கட்டுரைகளும், இத்துறை ஆய்வுக்குப் புத்தொளியூட்டின. பரோ, எமனோ ஆகிய இரு அறிஞர்களும் இணைந்து 'திராவிட மொழிகளின் அடிசொல் அகராதி' (A Dravidian Etymological Dictinory) ஒன்றினைத் தயாரித்து வளரும் ஒப்பியல் ஆய்விற்கு அடிகோலினர்.

இத்துறையில் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியாரான டு.ஏ.இராமசுவாமி ஐயர் குறைவான வசதிகளோடு நிறைவான ஆய்வுகள் பலவற்றை வியத்தகு முறையில் செய்துள்ளார். உஸ்மானியப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான டீா.கிருஷ்ணமூர்த்தியும், திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்ட டாக்டர் ீ.ளு.சுப்பிரமணியம் என்பவரும் இத்துறையில் சிறப்பாக குறிப்பிடத் தகுந்தோராவர். டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், டாக்டர் பு.ஐ.சுப்பிரமணியன், டாக்டர் ளு.அகத்தியலிங்கம், டாக்டர் ளு.ஏ.சண்முகம், டாக்டர் ே.குமாரசாமி ராஜா, டாக்டர் ஆ.இஸ்ரேல், டாக்டர் முத்துசண்முகம் பிள்ளை, டாக்டர் பொற்கோ ஆகியோர் ஒப்பாய்வுத் துறையில் சிறந்த தொண்டாற்றி வருகின்றனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இத்துறையில் சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டு பல நூல்களை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. டாக்டர் கமில் சுவலபில் (Kamill Zvelebel), டாக்டர் ஆ.ளு.ஆன்டானோ(M.S.Andronov) ஆகியோரும் இத்துறையில் சிறந்த பணியாற்றியுள்ளார். இத்துறையில் திராவிட மொழியியல் கழகம் மற்றும் இந்திய மொழிகளின் மைய நிறுவனம் ஆகியன ஆற்றியுள்ள பணிகள் குறிப்பிடத்தக்கன. ஒலியியல் ஆய்வு சிறப்பாக வளர்ச்சி பெற்ற போதிலும், சொல்லியல், தொடரியல் பற்றிய ஒப்பாய்வு இன்னும் ஓரளவு பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. எனினும் மாற்றிலக்கண நெறிமுறைகளின் அடிப்படையில் தொடரியல் தொடர்பான ஆய்வுகள் இன்று புத்துயிர் பெற்றுள்ளன. தொடக்கநிலையில் 12

மொழிகளையே திராவிட மொழிகளாகக் கருதினர். ஆனால் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு வளர்ச்சி பெற்ற இக்காலத்தில் பல்வேறு மொழிகள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டடுள்ளன. கிளைமொழிகள் என்று கருதப்பட்ட இருளா, எருகலா, கொறகா, குறும்பர், சோழிகா போன்ற சில மொழிகள் தனிமொழிகள் என்று நிறுவப்பட்டன. இப்போது திராவிட மொழிகள் முப்பதுக்கும் மேலாகப் பெருகியுள்ளன.

**திராவிட மொழிகளும் உட்பிரிவுகளும்**

**திராவிடம்**

தென்னிந்தியப் பகுதிகளில் வழங்கப்படும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய திராவிட மொழிகள் இலக்கண வகையால் ஒரு தனிப்பட்ட போது அமைப்பினையும், வழங்குமிடத்தால் ஒரு நெருக்கத்தினையும் கொண்டுள்ளன. மேலும் மொழிக்கு இன்றியமையாத வேர்ச்சொற்கள் (Roots) இம்மொழிகளில் பொதுப் படையாகவே அமைந்துள்ளன. எனவே இம்மொழிகளெல்லாம் ஒரு குடம்பத்தைச் சார்ந்தவை என்பது தெளிவு. இம்மொழிகளை மேல்நாட்டு ஆய்வாளர்கள் ‘மலபார் மொழிகள்’ என்றும் ‘தமுலிக்’ என்றும் வழங்கி வந்தனர். தென்னிந்திய மொழிகளில் உயர்தனிச் செம்மொழியாகத் திருத்தம் பெற்றுத் திகழும் தமிழ் மொழியின் பெயராலேயே இவ்வினம் முழுவதையும் கட்டுவதில் தவறு ஏதும் இல்லை. எனினும் தமிழ் என்பது குறிப்பிட்ட ஒரு மொழியின் பெயராக அமைவதால் பல்வேறு மொழிகளைக் கொண்ட இக்குடும்பம் முழுவதையும் கட்டுவதற்குப் பரந்த நோக்கோடு பிறிதொரு பெயரை அமைப்பதே சிறப்புடையது என்று கருதித் திராவிடம் என்று பெயரைத் தாம் கையாளுவதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

‘திராவிட’ என்ற வடசொல்லுக்கு மூன்று வடிவங்கள் (Dramida> Dravida> Dravida) உள்ளன. முதலில் இச்சொல் தமிழ்மொழி பேசப்பட்ட இடத்தைச் சுட்டுவதற்குப் பயன்பட்டது என்றும், ஆந்திரம், கேரளம் என்னும் சொற்கள், மேற்கூறப்பட்டதற்கு நிகராகத் தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகள் பேசப்பட்ட இடங்களைச் சுட்டப் பயன்பட்டன என்றும் தெரிகின்றது. இப்பெயரைத் தேர்ந்தெடுப்பதற்குரிய காரணங்களைக் கூறும் கால்டுவெல் வரலாற்று நிலையில் தனக்கு முன்னர் யார் யார் இப்பெயரினைப் பயன் படுத்தியுள்ளனர் என்பதை விரிவாக ஆராய்கின்றனர். கி.பி.7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த வடமொழி எழுத்தாளரான குமரிலபட்டர் என்பவர் தென்னிந்திய மொழியினத்தைக் குறிக்க ‘ஆந்திர திராவிட பாஷா’ என்ற தொடரைப் பயன்படுத்தியுள்ளதாகக் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். ஆனால் இத்தொடர் உண்மையிலேயே முதலியன (Dravida adi) என்றிருப்பதாகப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் கூறுகின்றார். மனுஸ்மிருதியில் தென்னிந்திய மக்கள் திராவிடா என்ற பொதுப்பெயரால் சுட்டப்படுவதையும் மேற்கோளாக டாக்டர் கால்டுவெல் காட்டிச் செல்கின்றார். பாகத மொழிகளைத் தொகைப்படுத்திய ஆய்வாளர்களும் தென்னிந்திய மொழியினங்களைத் ‘திராவிடி’ என்னும் பெயரால் குறிக்கின்றனர். பேராசிரியார் து.து.மூர்(J.J.Muir) என்பவர் தமது நூல் ஒன்றில் திராவிடம் ஒரு சிறு பிராகிருதம்(Vibhasha Minor Prakrit) என்று ஒரு வடமொழி ஆய்வாளர் குறிப்பிடுவதைக் காட்டுகின்றார். ஞ.மு.சட்டர்ஜி என்னும் மொழி நூலறிஞர், இடைகாலத்தில் பிராமணர்கள், ‘பஞ்ச திராவிடா’ என்று திராவிடம் என்ற சொல்லைப் பரந்த பொருளில் பயன்படுத்தியதைக் குறிப்பிடுகின்றார். கி.பி. 1854 -இல் வாழ்ந்த பேராசிரியர் பாபு இராஜேந்திரலால் என்னும் இந்திய

மொழி நூல் அறிஞரும் 'திராவிடி' என்ற பெயரால் தென்னிந்திய மொழிகளை அழைக்கின்றார். மேலும் இரவீந்திரநாத் தாகூர் எழுதிய நாட்டுப்பாடலும் திராவிடம் என்ற சொல் பரந்தநிலையிலேயே ஆளப்படுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும்போது டாக்டர் கால்டுவெல் கருதுவதைப் போன்று பல்வேறு காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் தென்னிந்திய மொழியினங்களையும், மக்களையும் சுட்டுவதற்குத் திராவிடம் என்ற சொல்லைக் கையாண்டுள்ளமை தெளிவு பெறும்.

**மக்களும் மொழியும்**

இந்தியாவில், ஆஸ்ட்ரிக் குடும்பம் (Austric Family)> இந்தோ-ஆரிய மொழிக் குடும்பம்(Indo-Aryan Family), திபத்தோ-சீனமொழிக்குடும்பம்(Sino-Tibetan family) திராவிட மொழிக் குடும்பம் (Dravidian Family) என்ற நான்கு மொழிக் குடும்பங்கள் உள்ளன. இவற்றுள் திராவிட மொழிக்குடும்பம் மிகவும் தொன்மை வாய்ந்தது. மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகங்களை ஏற்படுத்திச் சிந்து-பஞ்சாப் பள்ளத்தாக்குகளில் நாகரிகத்தோடு வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் என்பதையும், ஆரியர்கள் வருகையால் தென்னிந்தியப் பகுதிகளுக்கு இவர்கள் துரத்தியடிக்கப்பட்டனர் என்பதையும் வரலாற்றறிஞர்கள் வற்புறுத்திச் செல்கின்றனர். பலுச்சிஸ்தானத்தில் பேசப்படும் பிராகுயி மொழி, திராவிடர்கள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவியிருந்தனர் என்ற உண்மையைப் பறைசாற்றுகின்றது என்பர். மொழியியலறிஞர் பேராசிரியர் ஞ.மு.சட்டர்ஜி. சிந்து-கங்கைப் பகுதிகளில் திராவிட மொழிகள் பேசப்பட்டு வந்ததை ஹீராஸ் பாதிரியாரும் ஒப்புக்கொள்ளுகின்றார்.

தொடக்க நிலையிலிருந்தே ஆரிய மொழிக்குடும்பமும் திராவிட மொழிக்குடும்பமும் ஒன்றன் மீது மற்றொன்று ஆழமாகத் தாக்குரவு செலுத்தியுள்ள உண்மை நிலையைக் கண்டுகொள்ள முடிகின்றது. இத்தகைய கொள்வினைக் கொடுப்பினைகளின் விளைவாக இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையில் எண்ணற்ற ஒற்றுமைக் கூறுகள் ஏற்பட்டுள்ளன. ஆரிய மொழிகளில் காணக்கிடைக்கும் திராவிட மொழிச்சொற்கள் பற்றியும் திராவிட மொழிகளில் காட்சிதரும் ஆரிய மொழிக் குடும்ப சொற்கள் பற்றியும் பல்வேறு நிலைகளில் பல்வேறு அறிஞர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர் அமைப்பினைப் பொறுத்தவரையில் தமிழ், கன்னடம் போன்ற திராவிட மொழிகளுக்கும், பெங்காளி, இந்தி போன்ற வட இந்திய மொழிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதை பேராசிரியர் ஞ.மு.சட்டர்ஜி போன்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். தொடர் அமைப்பினைப் போன்று ஒலியன் நிலையிலும் இவ்விரு குடும்பங்களைச் சார்ந்த மொழிகளுக்கிடையில் ஒற்றுமைக் கூறுகள் பல உள்ளன. சான்றாக திராவிட மொழியினத்தைச் சார்ந்த பிராகுயி மொழியில் காணப்படும் 'எ'கர,'ஒ'கர உயிர் ஒலியன்களின் இழப்பினை (Loss of short e and o) இந்தோ-ஆரிய மொழிகளில் உள்ளது போன்ற மூக்கின உயிர் ஒலியன்களையும் (Nasal Vowel) சந்தியக்கரத்தினையும் (Diphthong) பிராகுயி, குருக் போன்ற திராவிட மொழிகளில் சந்திக்கினறோம். இந்தோ-ஆரிய மொழிகளைப் பின்பற்றித் தற்காலத் திராவிட மொழிகள் பலவற்றிலும் உயிர்ப்பு ஒலிகள்(Aspirates) தோற்றம் பெறுவதும் மேற்கூறிய உறவு நிலைகளுக்குச் சான்றாக அமையும். இந்தோ-ஆரிய மொழிகளைப் பின்பற்றி பழைய திராவிட மொழிகளில் இல்லாத கூட்டுத் தொடர்கள;(Compound sentences) தற்காலத் திராவிட மொழிகளில்

அதிகமாக வளர்ச்சி பெற்றுள்ளமையும் இங்குக் கருத்தில் கொள்ளுதற்குரியது. இந்தோ-ஆரிய மொழிகளின் தாக்குரவு திராவிட மொழிகளைப் பொறுத்த வரையில் சொற்களின் நிலையில்தான் பெருமளவிற்குக் காட்சி தருகின்றது எனலாம். சில திராவிட மொழிகளில் 70 விழுக்காடு வரை இந்தோ-ஐரோப்பிய மொழிச் சொற்களைக் காணமுடிகின்றது.

திராவிட மொழிகள் உராலிய மொழிக் குடும்பத்தோடு (Uralian) நெருங்கிய உறவு கொண்டுள்ளன என்பதை டாக்டர் கால்டுவெல் போன்ற ஒப்பியல் மொழிநூலறிஞர்கள் சுட்டிச் சென்றுள்ளனர். இவ்விரு மொழிக்குடும்பங்களுக்கிடையில் காணக்கிடைக்கும் பொதுவான சொற்கள்(Word co-incidences) பலவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்த டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகள் மங்கோலிய மொழிகளோடு உறவுடையன என்று விளக்கினார். இத்துறையில் தொடர்ந்து ஆய்வு நிகழ்த்திய அறிஞர்களால் கால்டுவெல்லின் கருத்துக்களை உறுதியாக நிலைநாட்டவோ முற்றிலும் மறுக்கவோ இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்துறையில் ஆய்வுநிகழ்த்திய கு.மு.ஸ்கிரேடர் என்பவர் இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையே உள்ள தொடர்பு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இவ்விரு குடும்ப மொழிகளையும் பேசும் மக்கள் நெருங்கி வாழ்ந்த உண்மை நிலைக்கு சான்று பகர்வதாக அமைகின்றது என்கிறார். ஆனால் இதற்கு மாறுபட்ட கருத்து பேராசிரியர் பரோவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் கருத்துப்படி இவ்விரு மொழிக்குடும்பங்களுக்கிடையேயுள்ள தொடர்பு இடநெருக்கதால் ஏற்பட்ட தொடர்பாக அமையாது குடும்ப உறவாகவே(Genetic Relationship) அமைகின்றது.

இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையே காணப்படும் எழுபத்திரண்டு இணைச்சொற்களை ஆராய்ந்த பெராசிரியர் பரோ வேறு எந்த மொழிக் குடும்பங்ககிடையிலும் காதணமுடியாத அளவிற்கு நெருங்கிய குடும்ப உறவு இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையில் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். கால இடைநிலைகளைப் பொறுத்தவரையில் இவ்விரு மொழிக் குடும்பங்களுக்கிடையிலும் நெருங்கிய உறவுகள் உள்ளன. சான்றாகத் திராவிட மொழிகளில் இடம்பெறும் இறந்தகால இடைநிலையான –த்- உருபினை ஹங்கேரிய மொழிகளில் காண்கின்றோம். தோடா; கோடா போன்ற திராவிட மொழிகளில் எதிர்காலம், நிகழ்காலம் ஆகியவற்றை வேறுபடுத்திக்காட்ட தனித்தனி இடைநிலைகள் இல்லை. இப்போக்கினை உராலிய மொழிகளிலும் காண்கின்றோம்.

பெர்மியன் (Permian) தவிர்ந்த ஏனைய அனைத்து உராலிய மொழிகளிலும் இறந்தகாலம்(ast). இறந்தகாலம் அல்லாதன(Non-Past) என்ற இருபிரிவே உள்ளன. தென் திராவிட மொழிகளில் காணக்கிடைக்கும் எதிர்கால இடைநிலையினை உக்ரிய மொழிகளிலும் காணலாம். புராதன உராலிய மொழியில் (Proto-Uralian) திராவிட மொழிகளில் உள்ளது போன்ற உருபுகளை இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை ஆகியவற்றில் காண முடிகின்றது.

திராவிட மொழிகள் மத்தியதரைக் கடற்பகுதிகளிலுள்ள பல மொழிகளோடும், திராவிட மக்கள் மத்தியதரைக் கடற்பகுதி(Mediterranean People) மக்களோடும் பல நிலைகளில் நெருங்கிய உறவு கொண்டுள்ளனர் என்பதை டாக்டர் ஜேம்ஸ் ஹார்னல்(James Harnwll) போன்ற மானிடவியல் அறிஞர்கள் விளக்கிச் செல்கின்றனர். இக்கருத்தை பேராசிரியர் ரிச்சர்ட்ஸ்(Richards)

என்பவரும் தான் எழுதிய 'Somke Dravidian Affinites and their Sequel' என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். திராவிட மக்களைப் பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்ட மானிடவியல் பேராசிரியரான டாக்டர் ஜார்ஜ் ஆலிவர் சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர்கள் திராவிட மக்களே என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். பண்டைய கிரேக்க மக்கள் பொதுவாகத் திராவிட மக்களை Dramirka என்ற பெயரால் சுட்டினர். திராவிட மக்கள் பேசிய மொழிகளின் தாக்கத்தை ஆரிய மொழிகளிலும் காணமுடிகின்றது. ஆரிய மொழிகளிலுள்ள வளைநா ஒலிகள்(Retroflex) திராவிட மொழிகளின் தாக்கத்தால் ஏற்பட்டதாகப் பேராசிரியர் ஞ.மு.சட்டர்ஜி கருதுகின்றனர். இத்துறையில் பேராசிரியர் பரோ போன்ற மேல்நாட்டு அறிஞர்களும் பல ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளனர்.

திராவிட மொழிகள் ஆசிய மொழிகளான கொரிய மொழி, ஜப்பானிய மொழி ஆகியவற்றோடு கொண்டுள்ள உறவு பல்வேறு அறிஞர்களால் விரிவாக ஆராயப்பட்டடுள்ளது. பேராசிரியர் எச்.பி.ஹியூபர்(H.B.Hubber) என்பவர் தான் எழுதிய 'கொரிய மொழி திராவிட மொழி ஒப்பாய்வு'(A Comparative Stuy of Korean Languge and Dravidian Family) என்ற நூலில் கொரிய மொழியில் திராவிட மொழிகளின் பாதிப்பு, குறிப்பாகத் தமிழ் மொழியின் தாக்குரவு அதிகமாகக் காணப்படுவதாகக் காட்டிச் செல்கின்றார். டாக்டர் சுசுமோ ஒனோ(Susumu Ohno) என்னும் ஜப்பானிய மொழிநூல் வல்லுநர் திராவிட மொழிகளுள் தலைமையிடத்தைப் பெறும் தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்கும் இடையேயுள்ளள உறவுகளைப் பல்நிலைகளில் விரிவாக ஆய்வுசெய்து ஜப்பானிய மொழியின் மூலமொழி தமிழே என்று முடிவு செய்துள்ளார். தமிழ் மொழிக்கும் ஜப்பானிய மொழிக்குமிடையே ஒலிநிலையில் ஏற்பட்ட தொடர்புகளை 'Sound Correspondences Between Tamil and Japanese' என்று தனிநூாக 1980-இல் அவர் வெளியிட்டுள்ளார். தமிழர்களுக்கும் ஜப்பானியர்களுக்குமிடையே பண்பாட்டு நிலைகளில் காணக்கிடைக்கும் உறவுகளை 'World View and Rituals among Japanese and Tamils' என்ற தலைப்பில் தனிநூலாக 1985-இல் வெளியிட்டுள்ளார். இவை தொடர்பாக மேலும் பல அரிய ஆய்வுகள் ஜப்பான் நாட்டில் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிலையில் திராவிட மொழிக் குடும்பம் உலகமொழிக் குடும்ப வரிசையில் ஆறாவது அல்லது ஏழாவது இடத்தைப் பெறுகின்றது. 1961-இல் எடுக்கப்பட்ட்ட மக்கள் தொகைக் கணிப்பின்படி இந்திய மக்களில் 28 அல்லது 29 விழுக்காட்டினர் இம்மொழிகளைப் பேசுகின்றனர் எனத் தெரிகின்றது. இந்தியாவில் வழங்கும் நான்கு மொழிக் குடும்பங்களுள் இது ஒன்றே முழுமையான இந்திய நாட்டு மொழிக்குடும்பமாகக் கருதப்பபடும் நிலையினையுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

**1.3 திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்**

உலகம் முழுவதிலும் ஏறத்தாழ நாலாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இம்மொழிகளைப் பல்வேறு குடும்பங்களாகப் பரித்து ஆராய்கிக்றன ஒப்பியலறிஞர்கள் இம்மொழிக் குடும்பங்களில் எட்டுக் குடும்பங்களே தலை சிறந்தன என்பர். இவ்வெட்டுக் குடும்பங்களுள் ஒன்றான திராவிட மொழிக் குடும்பம், ஏனைய மொழிக்குடும்பங்களோடு பல பொதுத் தன்மைமைகளைப் (ஞாயசநன கநயவரசநள) பகிர்ந்து கொண்டாலும் தனக்கெனச் சில தனித்தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றது.

1. பல்வேறு மொழிகள் தனிநிலை மொழிகளாகவும் (Synthetic languages) பகுப்புநிலை மொழிகளாகவும் (Analytical Languages) அமைய திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகளாக(Agglutinative Languages) அமைகின்றன. ஏனைய மொழிகளில் காலங்காட்டும் உருபுகள் போன்றவை தனித்து நிற்கத் திராவிட மொழிகளில் கால இடைநிலைகள், பால்காட்டும் விகுதிகள் ஆகியன வினையடிகளோடு ஒட்டியே அமைந்து நிற்கின்றன.

   எ-கா. வந்தான் → வா ͺ ந் ͺ த் ͺ ஆன்

2. வழக்கில் அதிகமாகப் பயின்று வரும் பொருட்களைக் குறிகக்கும் அடிப்படைச் சொற்கள் (Bsic Vocabularies) மொழிக்கு மொழி மாறுபட்ட போதிலும் திராவிட மொழிகள் அனைத்திலும் அவை பொதுவாக மாறாமல் ஒன்று போலவே அமைகின்றன.

| | | | |
|---|---|---|---|
| எ-கா | தமிழ் | - | கண்(Kan) |
| | மலையாளம் | - | கண்ணு(Kannu) |
| | தோடா | - | கொண்(Kon) |
| | கொடகு, தெலுங்கு | - | கன்னு(Kannu) |
| | பர்ஜி | - | கெண்(Ken) |
| | குருக் | - | ∴கன்(Kkan) |

3. எண்ணுப் பெயர்களும் ஏறத்தாழ அனைத்துத் திராவிட மொழிகளிலும் அதிக மாறுதல்களின்றி ஒன்றுபோலவே அமைந்துள்ளன.

   எ.கா. மூன்று, மூனு, மூன்னு, மூறு என்பன.

4. ஆங்கிலம் போன்ற மொழிகளில் பெரும்பாலான சொற்கள் மெய்யெழுத்துக்களைக் கொண்டே முடிய, திராவிட மொழிகளில் அதிகமான சொற்கள் உயிரெழுத்துக்களைக் கொண்டே முடிகின்றன. மெய்யைக் கொண்டு முடியும் சொற்கள் கூட ஒலித்துணையாக உயிரைப் பெற்று நிற்கின்றன.

   எ.கா. நாள் → நாளு

   இங்கு ஒலித்துணையாக ‘உ’கர உயிர் வந்து இணையக் காண்கிறோம். மூக்கொலிகளைக் கொண்டு முடியும் சொற்களில், இறுதி மூக்கின மெய் கெட்டு அதன் முன்னர் வரும் உயிரொலி மூக்கொலிச் சாயல் பெற்று நிற்கும் இயல்பினைத் திராவிட மொழிகளில் காணலாம்.

   எ.கா. அவன் → அவ(யுஎய)

   இடையின ஒலிகளைக் கொண்டு முடியும் சில சொற்களில் அவ்வொலிகள் பேச்சு வழக்கில் கெட்டு உயிரீறு பெற்ற சொற்களாக நிற்றலுமுண்டு.

   எ.கா. பந்தல் → பந்த

   கந்தல் → கந்த

5. திராவிட மொழிகளின் உயிர் எழுத்துக்களில் குறிலும் நெடிலும் அடிப்படை ஒலியன்களாக உள்ளன. இவை பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

   எ.கா. மது

மாது

மேலும் இவை தனித்தனி வரி வடிவத்தையும் பெற்றுள்ளன. ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் இவ்வேறுபாடு கிடையாது.

6. திராவிட மொழிகளில் ஒரு சொல் இ,எ என்னும் முன்னுயிர்களைக் கொண்டு தொடங்கினால் பெரும்பாலும் 'ய'கரத்தை மொழி முதலில் உடம்படு மெய்யாகப் (படனைந) பெறுவதுண்டு.

எ.கா. இலை→ இலை

இதனைப் போன்றே பின்னுயிர்களான உ,ஒ என்பன 'வ'கர உடம்படு மெய்யினைப் பெறும்.

எ.கா. உறி → உறி

திராவிட மொழிகளின் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், தொடரமைப்பு ஆகியவற்றின் தனித்தன்மைகளைப் பின்னர்க் காண்போம்.


**உட்பிரிவுகள்**


இம்மொழிகள் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் உட்பிரிவுகள் ஏற்படுத்துவதில் ஒப்பியல் அறிஞர்கள் பலரும் ஆரம்ப நிலையிலிருந்தே கருத்துச் செலுத்தி வருவதைக் காணலாம். டாக்டர் கால்டுவெல் இம்மொழிகள் கொண்டுள்ள இலக்கியவளம் போன்றவற்றை அடிப்படையாகக் கொணடு இவற்றை திருந்திய மொாழிகள் என்றும், திருந்தா அமொழிகள் என்றும் பொதுவாக இரு கூறுப்படுத்தினார். இத்தகைய பாகுபாடு பண்பாட்டு ஆய்வுக்கு அதிகத் துணை செய்யுமே தவிர மொழி ஆய்விற்கு அதிகம் துணை நிற்காது. மேலும் தமிழ் மலையாளத்தோடு உறவு கொண்டுள்ளது என்று ஒன்றோடொன்று திராவிட மொழிகள் கொண்டுள்ள தொடர்பை ஒருவாறு டாக்டர் கால்டுவெல் விளக்கிச் சென்றார். டாக்டர் ஸ்டெங் கெனோ(Sten Konow) திராவிட மொழிகளைத் தமிழ்த் தொகுதி (Tamil Group), தெலுங்குத் தொகுதி(Telugu Group) என்று இரண்டாகப் பிரித்துள்ளார். இதுவே பின்னர், தென் திராவிடம், நடுத் திராவிடம் என்னும் பிரிவுகள் ஏற்படத் துண நின்றது என்பர். மொழிநூலார், திராவிட மொழிகளை,

1. அவை வழங்கும் இடம் (Geographical Distribution),
2. மாறுதல்களின் பொதுமை (Shared Innovation),
3. அவைகளுக்கிடையேயுள்ள அடிப்படைப் பண்புகள் (Commonnesss)

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பலவாறு கூறுபடுத்துவர். எனினும் பொதுவாகத் தற்கால ஒப்பியல் அறிஞர்கள் அவை வழங்கும் நிலப்பரப்பினை அடிப்படையாகக் கொண்டு அவற்றைத் தென் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்று மூன்றாகக் கூறுபடுத்தி ஆய்கின்றனர்.

**தென் திராவிட மொழிகள்**






தமிழ், மலையாளம், இருளா, கொடகு, கோடா,தோடா, கன்னடம், படகா, துளு ஆகிய ஒன்பது மொழிகளும் தென் திராவிட மொழிகள் என்று கருதப்படுகின்றன. இவற்றுள் தமிழும் மலையாளமும் மிகப் பிற்காலத்தில் பிரிந்ததால் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன. தமிழ், மலையாள மொழிகளோடு அடுத்த நிலையில் கோடா, தோடா ஆகிய மொழிகள் நெருங்கிய உறவு கொண்டுகள்ளதாகப் பேராசிரியர் எமனோ கருதி வந்தார். ஆனால் பேராசிரியர் டு.ஏ.இராமசாமி ஐயர் கொடகு கொடகு மொழிதான் தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாள மொழிகளுக்கடுத்த நிலையில் உறவுடையது என்று நிலைநாட்டுகின்றார். தென் திராவிட மொழிகளுள் துளு மொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபடுவதால் பேராசிரியர்கள் எமனோ, டீா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், இம்மொழியினை நடுத் திராவிட மொழிக் கூட்டங்களோடு இணைத்து விட வேண்டிய அவசியத்தை வறபுறுத்தினர். ஆனால் டாக்டர் ீ.ளு.சுப்பிரமணியம் இதைத் தென் திராவிட மொழி என்று கொள்வதே ஏற்புடைத்து என்றும், தென் திராவிட மூலமொழியிலிருந்து (Proto-South Dravidian) துளு மொழி முதலில் பரிந்த காரணத்தினால்தான் அது தமிழ், மலையாளம் போன்ற மொழிகளிலிருந்து அதிக அளவு வேறுபடுகின்றது என விளங்கிக் காட்டினார்.

தென் திராவிட மொழிகளுள் படகா மொழி, கன்னடத்தின் கிளை மொழியாக (Sister language) உள்ளது. இதனைப் பேசுகின்ற மக்கள் நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். தோடா, கோடா போன்ற மொழிகளும் நீலகிரி மலைப் பகுதிகளிலுள்ள பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன. கன்னடம், துளு, கொடகு போன்றன கர்நாடக மாநிலப் பகுதியில் வழக்கிலுள்ளன. துளு மொழி 1798-ஆம் ஆண்டில் பேராசிரியர் சு.நு.ராபர்ட் (R.E.Robert) என்பவரால் தனிமொழி என்று தெரிய வந்தது. 1961-ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணிப்பின்படி, இம்மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ் | - | 3.056 கோடி |
| 2. | மலையாளம் | - | 1.701 கோடி |
| 3. | இருளா | - | 4671 |
| 4. | கொடகு | - | 80 ஆயிரம் |
| 5. | கோடா | - | 900 |
| 6. | தோடா | - | 800 |
| 7. | கன்னடம் | - | 1.742 கோடி |

8. படகா - 70 ஆயிரம்

9. துளு - 5.1 இலட்சம்

தென் திராவிட மொழிகள் முதலில் தமிழ்-கன்னடக்கிளை என்றும், துளு என்றும் பிரிந்திருக்கக வேண்டும். துளு மொழி இவ்வாறு முதலில் தனி மொழியாகப் பிரிந்த பின்னர் தமிழ்-கன்னடக்கிளை, தமிழ்-கொடகு கிளை என்றும், கன்னடம் என்றும் பிரிந்திருக்க வேண்டும். கன்னட மொழி பிரிந்து சென்ற அடுத்த நிலையில் தமிழ்-கொடகு கிளையிலிருந்து கோடா-தோடா மொழிகளிணைந்த கிளை பிரிந்திருக்க வேண்டும். இவை பிரிந்த பின்னர் தமிழ்-மலையாளம் கிளையிலிருந்து கொடகு மொழி தனியாகப் பிரிந்து சென்றது. இறுதி நிலையில் மலையாளம் தனியாகப் பிரிந்திருக்க வேண்டுமென்றும் தென் திராவிடக் கிளையிலிருந்து முறையே துளு, கன்னடம், கோடா, தோடா, கொடகு, மலையாளம் என்பன படிப்படியாகப் பிரிந்ததை விளக்கிச் செல்கின்றார் டாக்டர் ீ.ளு.சுப்பிரமணியம்.

### 1.4 தென் திராவிட மொழிகளின் சிறப்பியல்பியல்புகள்

1. ஏனைய திராவிட மொழிகளில் பெண்பால் ஒருமையும் அ.றிணை ஒன்றன்பாலும் உஒன்றாக இணைந்தே உள்ளன. ஆனால் தென் திராவிட மொழிகளில் உயர்திணை ஒருமையில் ஆண்பால், பெண்பால் என்ற பிரிவைக் காண்கின்றோம். மேலும் பெண்பால் ஒருமைக்கெனத் தனி விகுதிகள் தென் திராவிட மொழிகளில் உள்ளன.
2. ஒலியன்களின் நிலையைப் (னுளைவசடைிரவழைெ ழக ீாழநெஅநள) பொறுத்தவரையிலும் தென் திராவிட மொழிகள் சில தனித்தன்மைகளைப் பெற்றிருக்கின்றன. மொழி முதலில் வருகின்ற ‘ச’கர ஒலி இம்மொழிகளில் கெட்டு விடுகின்றது. இதனைப் பின்னர் விரிவாகக் காண்போம்.

   எ.கா. பர்ஜி - சுப்பு

   தமிழ் - உப்பு
3. இம்மொழிகளில் ஒரு சொல் வெடிப்பொலியினைீடழளளைநள) இறுதியில் கொண்டு முடியுடிமன்றால் அச்சொல் ஒலித்துணையாக ‘உ’கர ஒலியினைப் பெறுகின்றது. இத்தகைய ஒலியினை ஒலித்துணை உயிர்(நுரிாழநைெ ழச நுரெஉயைவளைந ஏழறநட) என்பர். தென் திராவிட மொழிகளில் இவ்வுகர ஒலி இடை இதழ்குவி ஒலியாக (ர்யடக சழரனெநன) உள்ளது.
4. தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் வரும் ‘இ’கர,‘உ’கர ஒலிகள் முறையே ‘எ’கர,‘ஒ’கர ஒலிகளாகத் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் மாறி விடுகின்றன. இதனையும் பின்னர் விளக்கமாகக் காண்போம்.
5. கன்னட மொழியில் ‘க’கர ஒலி முதலில் வந்து, அதை அடுத்து முன்னுயிர்(Front vowels) வந்தால் அக் ‘க’கர ஒலி தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் ‘ச’கர ஒலியாக மாறும்.

   எ.கா. கன்னடம் - கிவி

   தமிழ் - செவி

ஆனால் தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் முன்னுயிர்களோடு இணைந்து வரும் 'க' கர ஒலியையடுத்து ட்,ண்,ள் போன்ற வளை நா ஒலிகள்(Retroflex sounds) வரும் போது இம்மாற்றம் ஏற்படுவதில்லை.

6. தென் திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் மூலத் திராவிட வேற்றுமை ஏற்கும் வடிவங்களான (Oblique form)ad;> ak;(*Yan̲>*Yam) என்பவை என், எம் என்று மாறிவிடுகின்றன.
7. மேலும் இவ்விரு மொழிக் கூட்டங்களிலும் அ.:.றிணையில் பன்மை விகுதி கட்டாய உறுப்பாக (obligatory) கருதப்படமாட்டா.

   எ.கா. பத்து மாடுகள்

   பத்து மாடு
8. ஏனைய திராவிட மொழிகளில் இறந்தகால இடைநிலைககள் மிகக் குறைவாக உள்ளன. ஆனால் தென் திராவிட மொழிகளில் மூலத் திராவிட இடைநிலைகளான –த்; -ந்த்; -த்த்;, -,@(*-t-;>*-nt-; *-tt;>;-i-) என்னும் நான்கும் பயின்று வருவதைக் காணலாம்.:. கன்னடம், துளு ஆகிய இரு மொழிகள் மட்டுமே இதற்கு விதி விலக்கானவை.
9. வியங்கோள் விகுதிகளைப் பொறுத்த வரையில; *-kka என்னும் விகுதி தென் திராவிட மொழிகளில் மட்டுமே உள்ளது.
10. தோடர் வடிவில் எச்ச வடிவங்களோடு(Non-Finite forms) 'வேண்டும்' என்பதை இணைத்து உடன்பாட்டுப் பொருளையும்,'உம்' விகுதிக்குப் பதிலாக 'ஆ'காரம் அல்லது –ஆம் விகுதியை இணைத்து எதிர்மறைப் பொருளையும் உணர்த்தும் சிறப்பியல்பு தென் திராவிட மொழிகளுக்கே உரியது.:.

    எ.கா. வர வேண்டும்

    வர வேண்டாம்
11. 'ண்','ள்' ஆகிய வளைநா ஒலிகள் தென் திராவிட மொழிகளில் மட்டுமே விளக்கமாக உள்ளன. ஏனைய மொழிகளில் அவை திரிந்தும் மயங்கியும் காணப்படுகின்றன.

## 1.5 தென் திராவிட மொழிகளில் தமிழ் சிறப்பியல்புகள்

1. ஏனைய திராவிட மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது வடமொழித் தாக்குதல் மிகவும் குறைந்து காணப்படும் மொழி தமிழ் மொழியே. தமிழ் மொழியில் வட சொற்கலப்பழனனைத் தொல்காப்பியர் காலத்திலிருந்தே காண்கின்றோம். எனினும் வட சொற்களைக் கையாண்ட அறிஞர்கள் அதனைத் தமிழ் ஒலியமைப்பிற்கேற்பப் பெரும்பாலும் மாற்றியே கையாண்டுள்ளனர். தொல்காப்பியத்திலும், நன்னூலிலும் இதற்கு விதிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

   ''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ

   எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''

என்ற தொல்காப்பிய நூற்பா இதற்குச் சான்று பகரும்.

2. தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகள், தொன்மையான மொழியாக இருந்தும், ஏராளமான மக்களால் பேசப்படும் மொழிகளாக இருந்தும், எழுத்து வடிவிலமைந்த தொன்மையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழி தமிழாகவே உள்ளது.
3. ஏனைய திராவிட மொழிகளில் இலக்கிய வடிவமும், பேச்சு வடிவமும் முற்றிலும் வேறுபடுவதைக் காண்கிறோம். தமிழில் இவ்வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.
4. ஏனைய திராவிட மொழிகளிலும், ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழியிலும் கால வேறுபாடு மொழியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆங்கில மொழியை எடுத்துக் கொள்வோமெனில் சாசர் கையாண்ட ஆங்கிலத்திற்கும் தற்கால ஆங்கிலத்திற்குமிடையே மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டு இரண்டும் இரு வேறு மொழிகளோ என்ற ஐயத்தைக் கூட எழுப்புகின்றது. இவ்வேறுபாடு தமிழ் மொழயைப் பொறுத்த வரையில் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது.
5. ஏனைய திராவிட மொழிகளை விடச் சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழே. ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள்(ளுலழெலஅள) அமைவதுதமிழ் மொழியின் சொல் வளத்திற்குச் சான்றாகக் காட்சி தருகின்றது.
6. ஏனைய திராவிட மொழிகளில் பழங்காலக் கல்வெட்டுகள் அனைத்தும் வேற்று மொழிகளிலேயே அமைந்துள்ளன. ஆனால் தமிழின் தொன்மையான கல்வெட்டுக்களில் அதிகமானவை தமிழிலேயே அமைவதைக் காண்கின்றோம்.
7. தமிழின் பல அடிச் சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் (Metathesis) என்ற விதிப்படி தெலுங்கு மொழியில் வடிவம் மாறியமைவதைக் காணலாம். சுட்டுப் பெயர்களும், மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் இத்தகைய மாற்றங்களைப் பெறுகின்றன.

   எ.கா. சுட்டுப்பெயர்கள் - அதனை , தானி - தெலுங்கு
   மூவிடப்பெயர்கள் - அவர் , வாரு - தெலுங்கு
8. கன்னடம், தெலுங்கு ஆகிய தொன்மையான மொழிகளும் மலையாளமும் தற்காலத் தமிழோடு வேறுபட்ட போதிலும் அவை பழந்தமிழ் வடிவங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அமைவது தமிழின் தொன்மைக்குச் சான்றாகும். ‘இராமசரிதம்’ போன்ற பழைய மலையாள இலக்கியங்கள் கூட, தற்கால மலையாள மொழி பேசும் மக்களைவிடத் தமிழ் பேசும் மக்களால் எளிதில் புரிந்து கொள்ளும்படி அமைந்திருக்கின்றன.
9. பிறமொழித் தாக்குதல் மிகக் குறைவாகவும், தொன்மையான வடிவங்களையும், இலக்கணக் கூறுகளையும் (Grammatical category) பேணிப் பாதுகாக்கும் இயல்பு அதிகமாகவும் உள்ளமையால் ஏனைய திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குத் தமிழே பெருந்துணை புரிகின்றது.

ஏனைய திராவிட மொழிகளை விடவும் தமிழ் மொழி தனக்கென ஒரு பெரும் இலக்கணப் பாரம்பரியத்தினைப் பெற்றுத் திகழ்கின்றது. அகத்தியரை முதுபெரும் இலக்கண ஆசிரியராகக் கருதுகின்ற மரபை கிழக்குக் கடற்கரைப் பகுதி நாடுகளிலும் தமிழகத்திலும் காண்கின்றோம். சமணர்களும் பௌத்தர்களும் கூட அகத்தியரைத் தமிழறிவித்த துறவியாகப் பேசுவதைக் காணலாம்.

சமஸ்கிருத இலக்கண நூற்களின் தொடர்பு தமிழகத்தில் வேரூன்றிய கால கட்டத்தில் ‘தொல்காப்பியம்’ தோன்றியிருக்கும் என்று கருத வாய்ப்புகள் உள்ளன. இந்நூல் பழைய

இந்திய நாட்டிற்கேயுரிய இலக்கண மரபினை (Pan-Indian School Grammer) ஒட்டியமைகின்றது. உடம்படு மெய்யின்றி எழுதும் மரபினை இந்நூல் புலப்படுத்துவதால் உடம்படுமெய்(Glides) கட்டாய விதியாக ஏற்றுக்கொள்ளப்படும் முன்னர் இந்நூல் தோன்றியிருக்கலாம். தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பல இலக்கண நூற்கள் பல்வேறு காலகட்டங்களில் தமிழ் மொழியில் பிறப்பெடுத்துள்ளன. இவற்றுள் பல சமஸ்கிருத இலக்கண மரபினைப் பின்பற்றி அமைந்துள்ளன. அவற்றுள் 'வீரசோழியம்','பிரயோக விவேகம்' ஆகியன குறிப்பிடத்தக்கன.

**பேசப்படும் பகுதி**

தொல்காப்பியப் பாயிரத்தில் வடவேங்கடம்-தென்குமரி ஆகியன தமிழ் வழங்கிய நிலப்பகுதிகளாகக் குறியிடப்படுகின்றன. காக்கைப்பாடினியார் என்னும் புலவர் தமிழ் வழங்கிய எல்லையினை

''வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும்

வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்

றந்நான் கெல்லை…''

என்று வரையறுக்கின்றார்.

டாக்டர் கால்டுவெல் தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்டு பழவேற்காடு முதல் குமரி வரை பரந்து கிடக்கும் நிலப்பகுதி தமிழ் வழங்கும் இடம் என்கிறார். தென் திருவிதாங்கூர்ப் பகுதிகளில் குமரிமுனையிலிருந்து திருவனந்தபுரம் வரை இம்மொழி பேசப்பட்டு வருவதைக் காண்கின்றோம். மேலும் கண்ணனூர் போன்ற மலையாளப் பகுதிகளிலும், வட இந்தியாவின் சில பகுதிகளிலும் இம்மொழியைப் பேசும் மக்கள் உள்ளனர். இவற்றைத் தமிழ் மொழி பேசப்பட்டு வருவதைக் காணலாம். இம்மொழி ஆறு கோடி மக்களால் இன்று பேசப்படுகின்றது. இதனைப் பேசுவோர் சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து, பர்மா, மொரிசியஸ் போன்ற நரடுகளிலும் பெருவாரியாகக் காணப்படுகின்றனர். சிங்கப்பூரில் இது ஆட்சிமொழிகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் மொழியை ஒரு சர்வசேத மொழி என்றே குறிப்பிடலாம். இந்திய மொழிகளுள் சமஸ்கிருத மொழிக்கு அடுத்த நிலையில் பன்னாட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ள மொழியாக இது காட்சியளிக்கின்றது. உலகச் செம்மொழிகளின் வரிசையில் இடம்பெறும் அனைத்துத் தகுதிகளையும் தமிழ் மொழி பெற்றுத் திகழ்கின்றது.

**1.6 தமிழும் திராவிடமும்**

தமிழ் என்னும் சொல்லை ஆராய்கின்ற டாக்டர் கால்டுவெல் 'திராவிடம்' என்னும் சொல்லைத் 'தமிழ்' என்பதற்கு இணையான வட சொல் என்று கொண்டு இவ்விரு சொற்களுக்குமிடையில் ஒலியளவில் மிகுந்த வேறுபாடு இருப்பினும் அடிப்படை ஒன்றே என்று குறிப்பிட்டு,'திராவிடம்' என்ற சொல்லே படிப்படியாக மாறி இறுதியில் 'தமிழ்' என்று புத்துருப் பெற்றது என்கிறார். இச்சொல்லாய்வைப் பல்வேறு அறிஞர்களும் மறுத்துரைக்கின்றனர். தொல்காப்பியர் காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

‘தமிழென் கிளவி’ - தொல்.

‘தமிழ் கூறு நல்லுலகம்’ - தொல். –பாயிரம்

‘தமிழ் தலை மயங்கிய - புறம்.

‘தமிழ் கெழு கடல்’ - புறம்.

என்பன போன்ற தொடர்களே இதற்குச் சான்றாகும். மேலும் தமிழ் மக்கள் தம்மொழிக்குத் தம்மொழியிலேயே பெயரமைக்காமல் பிறமொழிச் சொல்லொன்றைப் பெயராக அமைத்துக் கொண்டனர் என்பது பொருத்தமாகத் தோன்றவில்லை டாக்டர் கால்டுவெல்லும் தன் கூற்றை ஏனையோர் மறுத்துரைப்பதைச் சுட்டிச் செல்கின்றார்.

மேல்நாட்டவர்கள் இம்மொழியைத் ‘தமுலிக்’ என்றும் ‘மலபார்’ என்றும் அழைத்து வந்தனர். கி.பி.1766-இல் 14-ஆம் லூயி மன்னன் தமிழன் ஒருவனுக்கு (ஆனந்தரங்கம் பிள்ளையின் உறவினர்) தமிழர் தலைவன் என்னும் பொருள்படும் ‘மலபார் தலைவன்’ என்ற பட்டத்தை வழங்கியுள்ளதைக் காண்கின்றோம். கோல்புரூக் என்னும் அறிஞரும் தமிழை மலபார் என்று மேல்நாட்டார் அழைத்ததைக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

தெலுங்கர்களும், கன்னடர்களும் தமிழ் மொழியை ‘அரவம்’ என்று அழைப்பதைக் குறித்துப் பல்வேறு கருத்துக்களை கால்டுவெல் விரிவாகக் கூறிச் செல்கின்றார். டாக்டர் குண்டர்ட் (Herman Gundert) ‘அரவம்’ என்பதை ‘அறவம்’ என்று கொண்டு, தமிழ் மொழியில் ஏனைய மொழிகளைவிட அறநெறி இலக்கியங்கள் மலிந்துள்ளதால் ‘அறம் நிறைந்த மொழி’ என்னும் கருத்துப்பட ‘அரவம்’ என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்பர். சிலர் ‘அருவா நாடு’ என்பதன் திரிபே ‘அரவம்’ என்பர். வடமொழியில் அரசம்(a-rava) என்றால் ஒலியற்றது என்பது பொருள். தமிழில் ‘ஹ’ போன்ற மூச்சொலிகள் இன்மையால் இம்மொழி ‘அரவம்’ என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தையும் டாக்டர் கால்டுவெல் தெரிவிக்கின்றார். எனினும் கன்னடர்களும், தெலுங்கர்களும் தமிழை ‘அரவம்’ என்று அழைத்ததன் காரணமாக சிறப்பாகப் புலப்படவில்லை.

**தமிழ் மக்கள்**

திராவிட மொழிகளுள் தொன்மை வாய்ந்த, பண்பட்ட, உயர்தனிச் செம்மொழியாய் இலக்கண, இலக்கிய வளம் பெற்றுத் திகழும் தமிழ் மொழியினைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் மக்களின் ஆற்றலினையும், சிறப்பினையும் வியந்து பாராட்டும் டாக்டர் கால்டுவெல் இம்மக்களை நாகரிக மேம்பாட்டின் உச்ச நிலையில், உலகிற்கு அறிவூட்டும் பேரொளியாக விளங்கிய கிரேக்க நாட்டு மக்களோடு ஒப்பிட்டுப் பேசுகின்றனர். இந்துக்களும் மூட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் குறைந்தவர்கள் தமிழ் மக்களே என்பது டாக்டர் கால்டுவெல்லின் மதிப்பீடு. பல்வேறு நாட்டு மக்களோடு தொன்றுதொட்டே கலாச்சார, பண்பாட்டு, வாணிகத் தொடர்புகள் கொண்டு, வாழ்வின் முறையிலும், மொழியிலும், கொள்வன கொண்டு, கொடுப்பன கொடுத்து மொழியையும் வாழ்வையும் வளஞ்செய்து வாழுமியல்பு தமிழ் மக்களின் பரந்த மனப்பான்மைக்கும், அறிவு வேட்கைக்கும் சான்றாகக் காட்சி தருகின்றது.

**மலையாளம்**

தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, திராவிட மொழிகளில், உறவு நிலையில் தமிழுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்படும் சிறப்பினைப் பெற்று, வளர்த்து வரும் இலக்கியச் செல்வங்களுடன் புதுப் பொலிவு பெற்றுத் திகழும் மலையாள மொழி, பண்டையத் தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியான சேர நன்னாட்டில் பேசப்பட்டு வருகின்றது. இம்மொழியைப் பேசும் மக்களின் தொகை ஏறத்தாழ இரண்டு கோடி. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் எழுந்த 'பதிற்றுப்பத்து','சிலப்பதிகாரம்' போன்ற நூற்களே சான்றாகும். மேலும் மலையாள மொழியின் தொடக்க நிலையில் எழுந்த இலக்கியங்களிலும் தமிழின் ஆதிக்கமே மிகுந்துள்ளது என்ற உண்மை நிலையும் நினைவில் கொள்ளத்தக்கது. பின்னர் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரை சமஸ்கிருத மொழியின் தாக்கமும், அதன் பின்னர் ஆங்கிலம் போன்ற மேல்நாட்டு மொழிகளின் ஆதிக்கமும் இம்மொழயில் மிகுந்தன. மேல்நாட்டு மொழிகளின் தாக்கம் மிகுந்த போது ஏராளமான மேல்நாட்டுப் பாதிரிமார்கள் இம்மொழிக்குப் பல இலக்கண நூற்களை எழுதிக் குவித்தனர்.

மலபார் கடற்கரை சிறந்த துறைமுகமாக அமைந்திருந்ததால் கிரேக்கர், யூதர், போர்த்துக்கீஸியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் இப்பகுதிக்கு வந்து வாணிகத் தொடர்பு கொள்ள வாய்ப்பாக இருந்தது. வடமொழியாளர் மலையாளம்,தமிழ் ஆகியவற்றைத் திராவிடம் என்ற பொதுப் பெயராலேயே சுட்டினர். எனினும் முற்காலத்திலிருந்தே இந்நாட்டைக் குறிக்கக் 'கேரளம்' என்ற சொல்லைப் பயன்படுத்தினர் என்பதற்கு கி.மு.3-ஆம் நூற்றாண்டில் எழுந்த அசோகனது கல்வெட்டிலுள்ள 'கேரளபுத்திரர்' என்ற தொடரே சான்றாகும். இந்நாட்டு மன்னனைப் பிளினி என்பர் 'செலபத்ராஸ்' (Celobotrats) என்றும், தாலமி 'கெரபத்ராஸ்'(Kerabotheros) என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். இயற்கையமைப்பில் இப்பகுதி வளைந்து காணப்படுவதால் 'கொங்கு நாடு' என்ற பெயரும் ஏற்பட்டது.

தமிழிலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிரிந்து சென்ற மொழியாக இருந்தபோதிலும் இம்மொழி திராவிட மொழிகளின் வினைமுற்றுக்களிலுள்ள பால்காட்டும் விகுதிகளை (Pronominal Terminations) விலக்கியுள்ளது. மேலும் அளவு கடந்த வடமொழிச் சொற்களை ஏனைய திராவிட மொழிகளை விடவும் மலையாள மொழி அதிகமாக ஏற்றுள்ளது. தமிழில் 'ஐ' கார ஈற்றைக் கொண்டு முடியும் சொற்களெல்லாம் இம்மொழியில் 'அ'கர ஈற்றைப் பெறுகின்றன.

எ.கா. மலை , மல

தமிழில் வல்லொலியும் மூக்கொலியும் இணைந்து வரும் இணைவுகள் (Nasal = Stop clusters) மலையாளத்தில் இரு மூக்கொலிகளின் இணைவுகளாக ஓரினமாதலைக் (Assimilation) காணலாம்.

இம்மொழிக்கு டாக்டர் குண்டர்ட் இலக்கண நூலும் அகராதியும் அமைந்துள்ளார். அவர் தமிழிலிருந்து மலையாளம் தோன்றியது என்ற கருத்தை ஒத்துக்கொள்ளாமல் கொடுந்தமிழின் ஒரு கிளை மலையாளம் என்றும், மற்றொரு கிளை தமிழ் என்றும் குறிப்பிடுகின்றார். 'கேரளபாணினியம்' என்ற நூலை எழுதிய பேராசிரியர் யு.சு.இராஜராஜவர்மா என்பவரும்

மலையாளம் தமிழிலிருந்து தோன்றியது என்ற டாக்டர் கால்டுவெல்லின் கொள்கையை மறுக்கின்றார். வேறு சிலர், தமிழ் மொழி மலையாளத்திலிருந்து தோன்றியது என்னும் கொள்கையை நிலை நாட்ட முயலுகின்றனர். இக்கொள்கை பேராசிரியர் ஆத்தூர் கிருஷ்ணபிஷரூலி என்பவரால் எழுதப்பட்டது. இதனை டாக்டர் மு.ஆ.ஜார்ஜ் என்பவதும் வழிமொழிகின்றார்.

வரலாற்றுணர்வோடும், மொழி நூலுணர்வோடும் இவ்விரு மொழிகளையும் நோக்கும்வோருக்கு இக்கொள்கை வியப்பையும் நகைப்பையும் விளைவிக்கும். சிலம்பும், பதிற்றுப்பத்தும், புறநானூற்றில் பல பாடல்களும் முன்னர்த் தமிழ் மொழி வழங்கிய, தற்போதைய மலையாள மொழி வழங்கும் சேர நாட்டில் முகிழ்த்தன என்பது தெளிவு. இப்போதுள்ள தமிழ் நாட்டோடு படிப்படியாகக் கலாச்சார, பண்பாட்டு, இலக்கியத் தொடர்புகளை இழந்ததாலும், வடமொழித் தொடர்பு மிகுந்தததாலும் இப்பகுதியில் பேசப்பட்டு வந்த தமிழ் மொழி வேறு ஒரு மொழியாக வளரத் தொடங்கியது. காலப்போக்கில் தமிழிலிருந்து மலையாளம் முற்றிலும் வேறுபட்ட போதிலும், இராமசரிதம்' போன்ற தொன்மையான இலக்கியங்கள் மலையாளம் பேசும் மக்களைவிடத் தமிழ் பேசும் மக்களால் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்திருக்கின்றன. பழைய மலையாள இலக்கியங்களில் தமிழ் ஒலியன்களாக பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமே மிகுதியாக உள்ளன. கிரந்த எழுத்தை யொட்டி மலையாளத்திற்கு எழுத்துக்கள் அமையவே பிற்காலத்தில் மற்ற வடமொழி ஒலிகளும் மலையாளத்தில் மிகப் பயின்று கலப்புற்றன. பண்டைய மலையாள மொழயின் இலக்கியங்கள் வடமொழியை விடத் தமிழையே பின்பற்றி அமைந்திருக்கின்றன இயல்பினன் டாக்டர் குண்டர்ட் அவர்களும், டாக்டர் மு.ஆ.ஜார்ஜ் அவர்களும் ஒத்துக் கொள்ளுகின்றனர். எனவே டாக்டர் கால்டுவெல் கூறுவதைப் போன்று தமிழின் மிகத் திரிந்த கிளைமொழி மலையாளம் என்று கொள்வதே பொருத்தம். இலக்கிய வளத்திலும், படைப்பாற்றலிலும் இன்றைய நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தில் மிக உயர்ந்த இடத்தை மலையாளமே பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்து.

**கன்னடம்**

இம்மொழி கர்நாடக மாநிலத்திலும், மராத்தி நாட்டின் தென் பகுதியிலும் பேசப்படுகின்றன. இதனைக் 'கருநாடகம்' என்றும் 'கானிரிஸ்' என்றும் அழைப்பர். நீலகிரி மலைப்பகுதிகளில் வாழும் படகர்கள் பேசும் மொழி, கன்னட மொழியோடு பெரிதும் தொடர்புடையதாகத் திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கன்னட மொழியைப் பேசுகின்ற மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ இரண்டு கோடி என்று கணக்கிடப்படுகின்றது. 'கர்நாடகா' என்ற வடசொல் திரிந்து இம்மொழியின் பெயராக அமைகின்றது என்பர் வடநூலார். எனினும் டாக்டர் குண்டர்ட் இதனைத் திராவிடச் சொல்லாகவே கருதுகின்றார். இம்மொழியில் பழங்கன்னடம், புதுக் கன்னடம் என்ற இரு வகையுண்டு. இவற்றில் புதுக் கன்னடத்தின் எழுத்து முறை தெலுங்கு மொழயின் எழுத்து முறையை ஒட்டி அமைந்திருக்கின்றது. பேராசிரியர் யு.ளு.ஆச்சாரியா(A.S.Acharya) என்பவர் இம்மொழியில் பல சிறந்த ஆய்வுகளை நடத்தியுள்ளார். இம்மொழியின் ஒலியன்கள் பற்றி ா்.ளு.பில்கிரி(H.S.Biligiri) என்பவர் ஆராய்ந்துள்ளார்.

**தேவாங்க கன்னடம்**

கன்னட மொழியின் வட்டார வழக்குகளில்(Dialects) ஒன்று தேவாங்கா கன்னடம் என்பது. தமிழ் நாட்டிலுள்ள சின்னாளப்பட்டி, அறுப்புக்கோட்டை போன்ற பகுதிகளில் வாழும் தேவாங்கா செட்டியார் என்னும் பிரிவினர் இதனைப் பேசுகின்றனர். இது கர்நாடக பகுதியில் வழங்கும் கன்னட மொழியைப் போலன்றித் தமிழ்ச் சொற்களை அதிகமாக ஏற்றுத் தமிழோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காட்சியளிக்கின்றது. தொன்மையான தமிழிலக்கியங்களில் இடம் பெற்று அழிந்துபோன சொற்கள் பலவற்றை இது இன்றும் பேணிக் காப்பது குறிப்பிடத்தக்கது.

எ.கா. வெண்திங்கள் , பெலிதிங்கலு (தே.கன்னடம்)

ஒலியன்களின் நிலைகளைப் பொறுத்தவரையிலும் இது மைசூர்ப் பகுதிகளிலுள்ள கன்னட மொழியிலிருந்து மாறுபடுகின்றது. மொழி முதலில் தமிழில் ‘ப’கர ஒலி வருமிடங்களிலெல்லாம் கன்னட மொழியில் ‘ஹ’கர ஒலி வருதல் இயல்பு. ஆனால் தேவாங்க கன்னடத்தில் மொழி முதல் ‘ஹ’ கர ஒலி கெட்டு விடுகின்றது.

எ.கா. தமிழ்-பால் ,ஹாலு(கன்னடம்) ,ஆலு(தே.கன்னடம்)

**கௌடா கன்னடம்**

கர்நாடக நாட்டின் தென்பகுதியிலும் கூர்க் மாவட்டத்திலுமுள்ள கௌடர்கள் பேசும் கன்னடமொழியின் ஒரு வட்டார வழக்கே கௌடா கன்னடம். இது கன்னட மொழியிலிருந்து பல நிலைகளிலும் மாறுபடுகின்றது. இவ்வட்டார வழக்கில் 14உயிர் ஒலிகளும்(9குறில், 5நெடில்), 22 மெய் ஒலிகளும் உள்ளதாக இதனை ஆராய்ந்த டாக்டர் மு.குஷலப்பா கௌடா குறிப்பிடுகின்றார். பேராசிரியர் உபாத்தியாயா(ருயனாலயலய) என்பவர் 1968-இல் கன்னட மொழியின் நான்கு வட்டார வழக்குகளை ஒப்பிட்டு ஆராயந்துள்ளார். கன்னட மொழியின் பேச்சு வடிவம் பற்றி பேராசிரியர் வில்லியம் பிரைட் (William Bright) விரிவாக ஆராய்ந்துள்ளார்.

**படகா**

இம்மொழியைப் பேசுகின்ற மக்கள் நீலகரி மாவட்டத்திலுள்ள ஊட்டி, குன்னூர் பகுதிகளில் பெரும்பன்மையாக உள்ளனர். இதனைக் கன்னட மொழியின் வட்டார வழக்காகவே பல ஒப்பியலறிஞர்களும் கருதி வந்தனர். எனினும் தற்போது இது தனி மொழியாகக் கருதப்படுகின்றது. 70ஆயிரம் மக்கள் இம்மொழியைப் பேசுவதாகக் கணக்கிடக்கிடப்பட்டுள்ளது. இம்மொழியை ஆராய்ந்த பேராசிரியர் எமனோ தோடர்,கோடர் ஆகியோர் நீலகரிரிப் பகுதியில் குடியேறிய காலத்திற்கு நெடுநாளைக்குப் பின்னரே படுகர் வடக்கிலிருந்து அங்கு வந்து குடியேறினர் எனவும், இவர்களின் மொழி கன்னட மொழியோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்றும் தெளிவுபடுத்துகின்றார். பழந்தமிழிலக்கியங்களில் குறிக்கப்படும் வடுகர்களே படர்கள் என்பது பலர் கருத்து. இம்மொழியை டாக்டர் ஞ.அகத்தியலிங்கம் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

**துளு**

இம்மொழியை டாக்டர் கால்டுவெல் திருந்திய மொழியாக ஏற்றுக் கொண்ட போதிலும் இதற்கு வரிவடிவமோ, இலக்கிய வளமோ கிடையாது. பேசில் மிஷனைச் சார்ந்த பாதிரிமார்கள்(Basle Missionaries) இம் மொழியில் பல நூல்களைத் தோற்றுவித்து அவற்றைக் கன்னட மொழியின் வரிவடிவில் அச்சிட்டனர். மைசூர் மாநிலத்தை அடுத்து ஓடும் சந்திரகிரி,

கல்யாணபுரி என்ற இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதி துளு மொழி பேசப்படும் எல்லையாகக் குறிக்கப்படுகின்றது. எனினும் இப்பகுதியில் வாழும் மக்கள் துளு மொழியினை மட்டும் பேசாது வேறு பல மொழிகளையும் பேசி வருகின்றனர். இம்மொழிக்குப் பேராசிரியர் து.பிரிகல்(J.Brigel) என்பவர் இலக்கணம் எழுதியுள்ளார். யு.மான்னா;(A.Manner) என்பவர் துளு-ஆங்கில; ஆங்கில-துளு அகராதிகளை மேற்கொண்டுள்ளார். பேராசிரியர் உபாத்தியாயா இம்மொழிக்கு பேரகராதி (Lexicon) ஒன்றினைத் தயாரித்துள்ளளார்.

**கொடகு**

எழுத்தும் இலக்கிய வளமும் பெறாது வழக்களவிலேயே நின்று நிலவும் இம்மொழியினை டாக்டர் மோக்லிங;(Mogling) என்பவர் ஆய்ந்து தமிழோடு பெருங்கேண்மையுடையது என்று கூறிச் சென்றார். பின்னர் வந்த பேராசிரியர் டு.ஏ.இராமசாமி ஐயரும் இம்மொழி தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளோடு கொண்டுள்ள தொடர்பை விளக்கியுள்ளார். மேஜர் கோல;(R.A.Cole) என்பவர் இதன் இலக்கணத்தையும் பல பாடல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இம்மகள் பெரும்பாலும் ஒதுங்கி வாழ்வதால், நீலகரியிலுள்ள பழங்குடி மக்களின் மொழியைப் போன்று இம்மொழியும் தொன்மைப் பண்பு மாறாமல் இருந்து வருகின்றது. ஒரு பெண் பல ஆடவர்களை மணந்து கொள்ளும் வழக்கம் இவர்களிடம் இருப்பதாக யு.ஊ.பர்னல் (A.C.Burnell) என்பவர் குறிப்பிடுகின்றார். இம்மொழி பற்றி பேராசிரியர் எமனோவும் ஆய்ந்துள்ளார். இம்மொழியின் உயிர் ஒலிகளை பேராசிரியர் எமனோ விரிவாக ஆராய்ந்துள்ளார்.

**தோடா**

நீலகிரிமலைப் பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களான தோடர்கள் பேசும் இம்மொழியினை கி.பி.1837-ஆம்ஆண்டிலேயே பேராசிரியர் பெர்னாட் ஸ்கிமிட்(Bernhard Schmid) என்பவர் ஆராய்ந்து திராவிட மொழிக் குடும்பத்தோடு தொடர்புடைய மொழி என்று குறிப்பிட்டுச் சென்றார். இம்மொனியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை 1961-ஆம் ஆண்டின் மக்கள் மொகைக் கணிப்பின்படி ஏறத்தாழ 800 என்று தெரிகின்றது. பேராசிரியர் எமனோ இம்மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை 600 என்று குறிப்பிடுகின்றார். எனினும் சில காலங்களுக்கு முன்னர் இவர்களின் எண்ணிக்கை சற்ற அதிகமாக இருந்திருக்க வேண்டுமென்றும், போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தாலும், பெண் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொன்றுவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தமையாலும் இவர்கள் எண்ணிக்கையில் குறைந்து விட்டனர் என்று கால்டுவெல் குறிப்பிடுகின்றார். இம்மக்ளைப் பற்றி பேராசிரியர் கொலோனல் மார்ஷல்(Colonel Marshall) என்பவர் விரிவான நூல் ஒள்று எழுதியிருப்பதாகத் தெரிகின்றது. இவர்களைப் பற்றி பேராசிரியர் W.H.R.hpth;];(W.H.Rivers) என்பவர் வவிரிவாக ஆராய்ந்து 770 பக்க அளவில் ‘வூந வுழனயள’ என்னும் நூலை 1906-இல் வெளியிட்டதாகத் தெரிகின்றது. ஒப்பியல் ஆய்வுக்குப் பெரிதும் துணை செய்யும் இம்மொழியைப் பற்றியும், இம்மொழி பேசும் மக்களைப் பற்றியும் பேராசிரியர் எமனோா 1935-38 வரை மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். இம்மொழியிலுள்ள ஒலியமைப்பு முறையும், ஒலிகளும் உச்சரிப்பதற்கு அரிதாக உள்ளன. ளுஆஇ உஆஇவா போன்ற ஒலிகள் இம்மொழியில் ஒலி நயத்திற்காககச் சொற்களின் இடையில் திணிக்கப்படுகின்றன. டாக்டர் ஜி.யு.போப்(G.U.Oope) இதனைத் தோடா மொழிக்கேயுரிய தனிச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்.

எ.கா. Palli (Dairy) > Palthi

இம்மொழியின் சொற்களின் முதலசையில் ஒலியழுத்தம் உள்ளது. இம்மக்களின் தொன்மையான மொழி பழங்கன்னடம் என்று டாக்டர் போப் குறிப்பிடுவது ஆய்வுக்குரியது. இம்மொழி, இம்மக்களோடு நெருங்கி வாழும் கோடர்களாலும், படகர்களாலும் கூட எளிதில் புரிந்து கொள்ள முடியாவண்ணம் கடினமாக உள்ளது. இது தமிழ், மலையாளம், கன்னடம் ஆகியவற்றின் வட்டார வழக்கு(Dialect) அல்ல என்றும், தனிமொழி என்றும் பேராசிரியர் எமனோ நிறுவுகின்றார். இம்மொழி பற்றி டாக்டர் கால்டுவெல்லுக்கு முன் குசநைனவைஉா ஆநவண என்பவர் ஆராய்ந்ததாகத் தெரிகிறது. மலையாள மொழியைப் போலன்றி இம்மொழியின் வினைமுற்றுக்களில் பாலறிகிளவிகள் உள்ளன. தெலுங்கு மொழியில் காணக் கிடக்கும் மொழி மாற்றமும்(Metathesis) இம்மொழியில் இல்லை. தோடா மொழியின் இலக்கண இமைப்புகளில் பல பழந்தமிழோடு நெருங்கிய உறவு கொண்டுள்ளன. ர்,ற் ஆகிய ஒலி வேறுபாடு ஏனைய திராவிட மொழிகளைவிட தோடாவில் மிகத் தெளிவாக உள்ளது.

**கோடா**


இம்மொழியும் நீலகரி மலைப்பகுதிகளில் வாழும் தோடர்களைப் போன்ற மற்றொரு இனத்தவர்களான கோடர்களால் பேசப்பட்டு வருகின்றது. இம்மொழியைப் பேசும் மக்களின் தொகை ஏறத்தாழ 900 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இம்மகள் பெரும்பாலும் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். டாக்டர் கால்டுவெல் இம்மொழி கன்னட மொழியின் கொச்சை மொழி பேலக் காட்சியளிப்பதாகக் குறிப்பிடுகின்றார். எனினும் இது தனிமொழி என்று நிறுவப்பட்டுள்ளது. தோடா மொழியினைச் சிறப்பாக ஆராய்ந்த பேராசிரியர் எமனோ இம்மொழியினையும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

**இருளா**


நீலகரி மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களான இருளர்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். ஆனைமலைப் பகுதியில் வாழும் இருளர்கள் 'வட்டக்காட இருளர்கள்' எனப்படுவர். நீலகிரியில் வாழ்பவர்கள் 'மலைதேச இருளர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். பேராசிரியர் கமில் சுவலபில் இம்மகள் பற்றி விரிவாக ஆய்ந்துள்ளார். மேலும் இம்மொழியில் ஆய்வு செய்துள்ளோரில் குறிப்பிடத் தகுந்தவர்களாக புநசயசனகு.னுைகைடழவா மற்றும் சு.பெரியாழ்வார் ஆகியோரும் அடங்குவர். குறும்பர்கள், படர்கள் ஆகியோருடன் இம்மகள் நெருங்கிப் பழகுவதால் குறும்பா, படகா ஆகிய மொழிகளின் சொற்கள் இவர்களது மொழியில் ஏராளம் கலந்துள்ளன.

தென் திராவிட மொழிகளுள் கசபா, குறும்பா போன்ற மொழிகளையும் இணைத்துப் பேசும் மரபு உள்ளது.

## 1.7 நடுத் திராவிட மொழிகள்




**ஐஐ கொலாமி –நாயக்கி கிளை**




நடுத் திராவிட மொழிகளைத் தெலுங்கு-குவி கிளை என்றும், கொலாமி –நாயக்கி கிளை என்றும் மொழிநூலார் இரு கூறுபடுத்துவர். தெலுங்கு-குவி கிளையில் தெலுங்கு, கோண்டி, கோண்டா, குயி, குவி பேங்கோ,மாண்டா ஆகிய ஏழு மொழிகள் உள்ளன. கொலாமி-நாய்கி கிளைனயில் கொலாமி, நாயக்கி, பர்ஜி,கடபா ஒல்லாரி,கடபா சில்லூர் ஆகிய மொழிகள் உள்ளன. இவற்றுள் கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகியன தனிமொழிகள் அல்ல என்றும் ஒரே மொழியின் கிளைகள் என்றும் சிலர் வாதிடுவர். நடுத் திராவிட மொழிகளுள் தெலுங்கு மொழியைத் தென் திராவிட மொழிகளோடு இணைத்து ஆய்வது பழைய மரபு. ஆனால் இப்போது அது நடுத் திராவிட மொழிகளோடு இணைக்கப்படுகின்றது. கொலாமி, நாயக்கி, பர்ஜி, கடபா ஆகியன தென் திராவிட மொழிகளுக்குள் சில தனித்தன்மைகளைக் கொண்டு திகழ்வதால்

அதனை ஒரு தனிக் கிளையாக பரோ, பட்டாச்சாரியா ஆகியோர் விளக்கிக் காட்டப் பேராசிரியர் எமனோவும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளார்.

**1.8 நடுத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்**

1. தென் திராவிட மொழிகளில் முன்னுயிர்களின் முன்னர் வரும் மொழி முதல் 'க'கர ஒலி,'ச'கர ஒலியாக மாறுவதைக் காணலாம். ஆனால் நடுத் திராவிட மொழிகளில் இம்மூலத் திராவிட ஒலியான 'க'கரம் மாறாமலே நிற்கின்றது.
2. வளைநா ஒலியான (Retroflex Condonant) 'ள'கர ஒலி, நாயக்கி தவிர்த்த ஏனைய மொழிகளில் காணப்படவில்லை.
3. நடுத் திராவிட மொழிகள், நெடில் ஒலிகளே இல்லாத ஓரிய போன்ற மொழிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்ட போதிலும் தமக்கேயுரிய குறில் நெடில் வேறுபாட்டை இழக்காமல் பேணிக் காக்கின்றன.
4. ஏனைய திராவிட மொழிகளைப் போன்று எழுவாய் வடிவில் எழுவாய் வடிவில் மூவிடப் பெயர்களினன் முதலுயிர் நீண்டும், வேற்றுமை ஏற்கும் வடிவில் குறுகியும் நிற்குமியல்பு இம்மொழிகளிலும் உள்ளன.
5. மூலத் திராவிட மூக்கொலியான 'ண'கரம் பெரும்பாலும் 'ன'கர ஒலியாக இம்மொழிகளில் மாறுகின்றது. எனினும் கோண்டா, பெங்கோ, மண்டா, குவி, கடபா ஒல்லாரி போன்ற மொழிகளில் இவ்வொலி சிறுபான்மை திரியாமல் வழங்கலுண்டு.
6. தென் திராவிட மொழிகளில், மொழி முதலில் 'ட'கர ஒலி வருவதில்லை. ஆனால் திராவிட மொழிகளில் இது சில இடங்களில் மொழி முதலில் வருகின்றது.
7. ஒலியன்கள் இடம் பெயர்ந்து நிற்றலை(Metathesis) குயி, குவி, பெங்கோ, மண்டா போன்ற மொழிகளில் அதிகமாகக் காண முடிகின்றது.
8. இம்மொழிகளில் ஆண்பால், ஆண்பால் அல்லாதன(Masculine and Non-Masculine) என்ற இருவகைப் பாகுபாட்டினை ஒருமையிலும் பன்மையிலும் காணமுடிகின்றது. தெலுங்கில் இப்பாகுபாடு ஒருமையில் மட்டுமே உள்ளது.
9. பெண்பால் உறவுப்பெயர்கள் (Kinship Terms) –Ms;(-al) விகுதியைப் பெற்று அமையும் மரபினை நடுத் திராவிட மொழிகளில் காணமுடிகின்றது.
10. தென் திராவிட மொழிகளிலும், வட திராவிட மொனிகளிலும் பன்மையினை உணர்த்துவதற்குப் பலவின்பால் விகுதியைக் கட்டாயம் இணைத்தாக வேண்டும் என்ற நிலை கிடையாது. ஆனால் இம்மொழிகளில் அ.்.றிணைச் சொற்கள் பன்மையுணர்த்த வேண்டுமாயின் பலவின்பால் விகுதி கட்டாயம் இணைக்கப்படவேண்டும்.

தென் திராவிட மொழிகளில் 'அவன்' என்பது படர்க்கை ஆண்பால் ஒருமை மூவிடப் பெயராக உள்ளது. ஆனால் நடுத் திராவிட மொழிகளில் இதற்கு இணையாக மூயஎயவெ என்ற வடிவம் உள்ளது.

1961-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணிப்பின்படி நடுத் திராவிட மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு தெரிய வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தெலுங்கு | - | 3.767 கோடி |
| 2. | கோண்டி | - | 15 இலட்சம் |
| 3. | கோண்டா | - | 13ஆயிரம் |

| | | | |
|---|---|---|---|
| 4. | பெங்கோ | - | 1300 |
| 5. | குயி | - | 9.4 இலட்சம் |
| 6. | குவி | - | 1.9 இலட்சம் |
| 7. | கொலாமி | - | 50ஆயிரம் |
| 8. | நாய்க்கி | - | 1500 |
| 9. | பர்ஜி | - | 20ஆயிரம் |
| 10. | கடபா | - | 8 ஆயிரம் |

**நடுத் திராவிட மொழிகளில் தெலுங்கு**

தொன்மைச் சிறப்பிலும் சொல்வளத்திலும் தெலுங்கு மொழியைத் தமிழுக்கு அடுத்த நிலையில் குறிப்பிடலாம். தேன் இனிமை நோக்கி இதனைச் 'சுந்தரத் தெலுங்கு' என்று பாரதியாரும், 'களி தெலுங்கு' என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளையும் பாராட்டிச் சென்றுள்ளனர். ஐரோப்பியர்கள் இம்மொழியினை 'ஜெண்டு'(Gentiles) என்ற போர்த்துக்கீசியச் சொல்லின் திரிபு) என்று அழைத்தனர். தமிழ் நாட்டின் வடக்கேயுள்ள ஆந்திரப் பகுதியில் இம்மொழி பேசப்படுகின்றது. வடமொழியாளர்கள் இம்மொழியினை 'ஆந்திரம்' என்று அழைத்து வந்தனர். இம்மொழியின் பெயர்க் காரணத்தை ஆய்பவர்கள் திரிலிங்கம் (மூன்று கோயில்கள்) என்னும் சொல்லே தெலுங்கு என்று திரிந்தது என்றும், இனிமை என்னும் பொருள் பயக்கும் 'தெனுகு' என்னும் சொல்ரே தெலுங்கு என்று மருவி வழங்கியது என்றும் பலவாறு கருதுவர். சீனப் பயணியான யுவான்சுவாங்(HJieum Tsang) இம்மொழி வட இந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டது என்ற சுட்டிச் செல்கின்றார். இம்மொழிகளிலிருந்து வேறுபட்டது என்ற சுட்டிச் செல்கின்றார். இம்மொழிக்கு மேல்நாட்டவார்கள் பல இலக்கண நூற்களை எழுதியுள்ளனர். நன்னயபட்டர் போன்ற வடமொழி அறிஞர்கள் இம்மொழியில் இலக்கியம் பல செய்தமையால் இம்மொழியும் வடமொழித் தொடர்பை மிகுதியாகப் பெற்றுள்ளது. தெலுங்கர்கள், ஆந்திரர்கள் என்றும் கலிங்கர்கள் என்றுதம் இரு வகைப்படுவர். தமிழை விட அதிகமான மக்கள் பேசும் இம்மொழி பல்வேறு படைப்பிலக்கியங்களைக் கொண்டு சிறப்பாக வளர்ந்து வருகின்றது. இம்மொழியின் வினையடிகளை பேராசிரியர் டீா.கிருஷ்ணமூர்த்தி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

திணை பால் பாகுபாட்டைப் பொறுத்தவரையில் ஏனைய நடுத் திராவிட மொழிகளிலிருந்து தெலுங்கு சற்று வேறுபட்டு நிற்கக் காணலாம். ஒருமையில் ஆண்பால், ஆண்பால் அல்லாதன என்ற பிரிவு தெலுங்கில் உள்ளது. இந்நிலையினை குருக், மால்டோ போன்ற வட திராவிட மொழிகளில் அதிகமாகக் காண்கிறோம். திணை பால் பாகுபாட்டைப் பொறுத்தவரையில், தெலுங்கு, குருக் ஆகிய மொழிகளின் அமைப்பே மிகத் தொன்மையானது என்று கருதுகின்றார் டாக்டர் ீ.ளு.சுப்பிரமணியன். குயி மொழியோடு தெலுங்கு பல நிலைகளில் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. குயி மொழியில் உள்ளது போன்ற ஒலி இடம் பெயர்ந்து நிற்குமியல்பினைத் தெலுங்கு மொழியிலும் காணமுடிகின்றது. பன்மை விகுதிகளைப் பொறுத்தவரையில் கோண்டா, கோண்டி, குயி, குவி போன்ற பல பொதுவான உறவு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெலுங்கு, கோண்டா, கோண்டி, குயி, குவி போன்ற மொழிகளை நடுத் திராவிட மொழிகளுள் ஒரு தனிப்பிரிவாகப் பிரித்து ஆய்வர் ஒப்பியல் அறிஞர்கள்.

**கோண்டி**

இம்மாழியைப் பேசும் மக்கள் கோண்டுவனம் என்று அழைக்கப்படும் நடு இந்தியாவின் காடுகளில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இவர்கள் தங்களைக் ‘கோயிதோர்’ என்று அழைக்கின்றனர். இவர்களிடையே பன்னிரண்டு பிரிவுகள் உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். இம்மக்களைப் பற்றிய பல செய்திகளை பேராசிரியர் Colonel Dalton vdlgthpd; ‘Ethnology of Bengal’ என்ற நூலும், ‘Gazetteeer of the Central Provinces’ என்ற நூலும் தருகின்றன. கல்கத்தாவிலுள்ள பிஷப் கல்லூரியின் பேராசிரியரான J.C.Deiberg என்பவர் இம்மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளனர். இவரைத் தொடர்ந்து Rev.J.Dawson என்பவரும் ஒரு சுருக்கமான இலக்கணக் கட்டுரையினை எழுதி வெளியிட்டுள்ளார். பேராசிரியர்கள் ஊ.பு.செனிவிக்ஸ் (C.G.Chenevix Trench) என்பாரும்,Rev.H.D.Henry Drummond) என்பாரும் இம்மெரிக்கு எழுதிய இலக்கண நூற்கள் குறிப்பித்தக்கன. பேராசிரியர்கள் ஆபிரகாம் லிண்ட் (Abraham A.Lind),யு.ே.மிட்சல்(A.N.Mitchell) ஆகியோரும் இம்மொழி பற்றி ஆய்ந்துள்ளனர்.

**குவி அல்லது கோந்த்**

இம்மொழியயைப் பேசம் மக்கள் கோண்டவனத்தின் பகுதிகளிலும், ஒரிசாவிலுள்ள சில குன்றுகளிலும் வாழ்கின்றனர். இவர்களைக் கோண்டர்கள், கந்தர்கள், $(Ksus) என்றெல்லாம் இஅழைப்பதுண்டு. இம்மொழிக்கென வரிவடிவமோ, எழுத்து வடிவிலமைந்த இலக்கியங்களோ கிடையாது. ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்கள் இம்மொழியினைப் பேசி வருகினறனர். குழந்தைகளைத் திருடி வந்து தெய்வங்களுக்குப் பலியிடும் வழக்கத்தை இம்மக்கள் முன்னர் மேற்கொண்டிருந்ததாகத் தெரிகின்றது.

**குயி**

இம்மொழி ஒரிசாவிலும், கோறாபுத் மாவட்டமப் பகுதிகளிலும் பேசப்படுகின்றது. ஏறத்தாழ ஒன்பது இலட்சம் மக்கள் இதனைப் பேசி வருவதாகத் தெரிகிறன்றது. இம்மொழியின் இலக்கணத்தை பேராசிரியர் று.று.ம்.வின்ஃ.பீல்டு (W.W.Winfield) என்னும் மேனாட்டறிஞர் எழுதியுள்ளார். இதைத் தவிர பேராசிரியர் பெரிரா(J.E.Friend-Pereira) என்பவரும் ஒரு இலக்கணநூல் எழுதியுள்ளார். பரோ, பட்டாச்சரியா ஆகிய இரு அறிஞர்களும் இணைந்து இம்மொழி பற்றிய ஆய்வுகள் பல நடத்திக் கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டுள்ளனர்.

**கோண்டா**

ஆந்திரப் பிரதேச எல்லைப் பகுதிகளில் பேசப்படும் இம்மொழியின் இலக்கண அமைப்பு போன்றவற்றை உசுமானியப் பல்கலைக்ககைப் பேராசிரியர் டீா.கிருஷ்ணமூர்த்தி என்பவர் ஆராய்ந்து பல கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். பேராசிரியர் ளு.பட்டாச்சாரியா என்பவர் இதன் இலக்கணத்தையும், பல சொற்களையும் ஆராய்ந்து ‘கோண்டா மொழி’ என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். இதைத்தவிர, பேராசிரியர்கள் பரோ, பட்டாச்சாரியா ஆகியோர் தொகுத்த பல குறிப்புக்களும் இம்மொழியைப் பற்றி துணை செய்கின்றன. இம்மொழியை ஏறத்தாழ 13 ஆயிரம் மக்கள் பேசி வருகின்றனர்.

**கொலாமி**

மத்திய பிரதேசத்தில் வழங்கப்படும் இம்மொழியை ஏறத்தாழ 50ஆயிரம் மக்கள் பேசி வருகின்றனர். பேராசிரியர் சேது மாதவராவ் என்பவர் இம்மொழியின் இலக்கண நூல் ஒன்றினை எழுதி 1950இல் வெளியிட்டுள்ளார். இம்மொழி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் எமனோ இது பற்றி சிறந்த கட்டுரை ஒன்றினை 1955-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். வில்லியம் பிரைட் என்பவரும் இம்மொழி பற்றி விரிவாக ஆய்ந்துள்ளனார். பேராசிரியர்கள் பரோவும், பட்டாச்சாரியாவும் இணைந்து இம்மொழியில் பல ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

**நாயக்கி, பர்ஜி**

நாயக்கி மத்தியப் பிரதேசப் பகுதிகளிலும் மகாராஷ்டிரத்திலும் பேசப்படுகின்றது. இம்மொழியினை ஏறத்தாழ 1500 பேர் பேசி வருவதாகத் தெரிகின்றது. பேராசிரியர் பரோவும், பட்டாச்சாரியாவும் இணைந்து இம்மொழியை விரிவாக ஆய்ந்துள்ளனர். பர்ஜி மொழியும் மத்தியப்பிரதேசப் பகுதிகளில் பேசப்படுகின்றன. மொழி பேசும் பகுதியின் மேற்கில் பஸ்தா;(Bastar) பகுதியும், கிழகக்கில் கோறாபுட்(Koraput) பகுதியும், வடக்கில் ஜகதல்பூர்(Jagdalpur) பகுதியும், தெற்கில் ஜெய்ப்பூரும் (Jaypore) அமைந்திருக்கின்றன. 1961-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணிப்பின்படி 19,847 மக்கள் இம்மொழியினைப் பேசி வருவதாகத் தெரிகிறது. பேராசிரியர் கிரியர்சனின் மொழி ஆய்வு நூல் இரண்டு பக்க அளவில் இம்மொழி பற்றி மிகச் சுருக்கமானகப் பேசுகின்றது. இம்மொழியைத் தவறுதலாகக் கோண்டி மொழியின் வமட்டார வழக்கு என்று குறித்து விட்டனர். 1953-வது ஆண்டில் பேராசிரியர்கள் பரோவும், பட்டாச்சாரியாவும் இதனைத் தனிமொழியென முதன் முதலில் நிறுவிச் சென்றனர். மேலும் இவர்கள் இம்மொழியில் நான்கு விதமான வட்டார வழக்குகள் இருப்பதாகவும் காட்டிச் செல்கின்றனர்.

**கடபா**


ஒரிசாவிலும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளிலும் இம்மொழி பேசப்படுகின்றது. கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகிய இரண்டையும் ஒரே மொழியாகச் சிலர் கொள்கின்றனர். ஆனால் பேராசிரியர்கள் பரோ, பட்டாச்சாரியா ஆகியோர் இவற்றைத் தனிக்கிளைகள் என்று கருதுகின்றனர். கடபா ஒல்லாரி பற்றி இவ்விரு அறிஞர்களும் ஆராய்ந்து தம் ஆய்வை 1957-இல் வெளியிட்டுள்ளனர். கடபா சிலலூர் பற்றி பேராசிரியர்கள் டீா.கிருஷ்ணமூர்த்தியும், பட்டாச்சாரியாவும் ஆய்ந்துள்ளனர். சிலர் இம்மொழியைத் தவறாக ‘போயா’(ீழலய) என்றழைத்ததாகத் தெரிகின்றது.

**பெங்கோ, மாண்டா**

பெங்கோ மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1300 எனத் தெரிகின்றது. இம்மொழி மிக அண்மையில் பேராசிரியர் பரோவால் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தனி மொழி என்று நிறுவப்பட்டது. மண்டா மொழி பற்றிய எந்த ஆராய்ச்சியும் இதுவரை வெளிவந்ததாகத் தெரியவில்லை. எனினும் பேராசிரியர்கள் பரோவும், பட்டாச்சாரியாவும் இம்மொழி பற்றிய பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

**1.9 வட திராவிட மொழிகள்**

**வட திராவிட மொழிகள்**




பிராகுயி, மால்டோ, குருக் ஆகிய மூன்று மொழிகளும் வட திராவிட மொழிப்பிரிவில் அடங்கும். தற்போது ஆந்திரப் பகுதிகளில் வழிங்கும் கோயா என்ற மொழியைத் தனிமொழி என்று கண்டு அதனையும் வட திராவிட மொழியோடு இணைத்துள்ளார். எனினும் சிலர் கோயா மொழியைக் கோண்டி மொழியின் வட்டார வழக்காகவே கருதுகின்றனர்.

**வட திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்**

1. மூலத் திராவிட ஒலியான 'க'கரம் மொழி முதலில் இ,ஈ தவிர்ந்த முன்னுயிர்கள் முன்னர் வரும்போது வட திராவழிட மொழிகளில் அது 'ஹ'கர ஒலியாக(X) மாறி விடுகின்றது. இம்மாற்றத்தை உரசொலியாதல்(Fricativisation) என்பர்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | - | kan |
| | மால்டோ | - | xuanu |
| | பிராகுயி | - | xan |
| | குருக் | - | xann |

2. மொழி முதலில் இடம்பெறும் மூலத் திராவிட ஒலியான வ(மூஎ) இம்மொழிகளில் 'டி' ஒலியாக மாறும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா | தமிழ் | - | vây |
| | குருக் | - | bai |
| | பிராகுயி | - | bâ |

3. மொழி முதலில் வரும் 'ச'கர ஒலி உ, எ, ஈ, ஊ, ஏ ஆகிய உயிர்களின் முன்னர் இம்மொழிகளில் 'க'கர ஒலியாக மாறுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | - | RL |
| | குருக், மால்டோ | } | kur |

4. குருக், மால்டோ மொழிகளில் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை மூவிடப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் நான்காம் வேற்றுமை வடிவங்களாகவே உள்ளன.

5. இம்மொழிகளில் முறையே இஅறந்தகால இடைநிலையாக –க்-கும் (*-k-) எதிர்கால இடைநிலையாக –ஒ-வும் (*-o-) உள்ளன.

வட திராவிட மொழிகளுள் பிராகுயி முதலில் பிரிந்திருக்க வேண்டுமென்றும், குருக், மால்டோ ஆகிய இரண்டும் நெடுங்காலம் இணைந்து நின்று பின்னர்க் காலப்போக்கில் தனி மொழிகளாகப் பிரிந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

1961-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி வட திராவிட மொழிகளைப் பேசுவோரின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. குருக் - 11.4 இலட்சம்
2. மால்டோ - 90 ஆயிரம்
3. பிராகுயி - 3 இலட்சம்

**குருக்**

இம்மொழியை டாக்டர் கால்டுவெல் ‘ஒராவோன்’ என்று குறிப்பிடுகின்றார். இம்மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 11.4 இலட்சமாக உள்ளது. இவர்கள் பீகார், அஸ்ஸாம், வங்காளம், மத்தியப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் பரந்து காணப்படுகின்றனர். பேராசிரியர் கொலோனல் டால்டன;(Colonel Dalton) இம்மக்களைப் பற்றிய குறிப்புகளை ‘வங்காள மக்களின் வரலாறு’ (Ethnology of Bengal) என்ற நூலில் தருகின்றார். கு.பட்ஸ்ச் என்னும் பாதிரியார்(Rev.F.Batsch) இம்மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளார். இம்மகள் கொங்கணத்திலிருந்து வந்ததாகவும், பாடலிபுர மலைகளில் வாழ்ந்ததாகவும் கூறிக்கொள்கின்றனர். இம்மக்களுக்கும் மால்டோ மொழி பேசும் மக்களுக்குமிடையே மிகுந்த தொடர்புடையதாக டாக்டர் கால்டுவெல் கூறிச் செல்கின்றார். இம்மொழிக்குரிய அகராதி ஒன்றினையும் இலக்கணநூல் ஒன்றினையும் 1924-ஆம் ஆண்டில் பேராசிரியர் யு.கிரிக்நாட்(A.Grignard) என்பவர் தயாரித்து வெளியிட்டுள்ளார். மேலும் Fend-Hahn என்பவரும் C.B.Leses என்பவரும் இம்மொழிக்குரிய அகராதியைத் தயாரித்துள்ளனர்.

**மால்டோ**

இம்மொழியை ஏறத்தாழ 90 ஆயிரம் மக்கள் பேசகின்றனர். இவர்கள் பீகார், மேற்கு வங்காளம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றனர். இதன் சொற்கள் பலவற்றை பேராசிரியர் டீ.ர். ஹாட்ஜன் (B.H.Hodgson), கேம்பல்(Sir.George Campell) போன்றோர் தொகுத்துள்ளனர். இம்மொழி ஆய்விற்கு Ernest Droese என்பவர் 1884-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டுள்ள ‘மால்டோ மொழி அறிமுகம்’ (Interoduction to the Malto Language) என்ற நூல் பெரிதும் துணை செய்கின்றது.

இம்மொழியைப் பேசும் மக்கள் தங்களை ‘மாலர்’(மனிதர்கள்) என்று அழைக்கின்றனர். இம்மொழியை ஆய்ந்த கிரியர்ஸன், மாலாட என்னும் சொல் மலை என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது என்றும், மாலர் என்பது மலை மனிதர்கள் என்னும் பொருளுடையது என்றும் குறிப்பிடுகின்றார். இம்மொழிக்கு இலக்கிய வளம் கிடையாது. எனினும் கிறிஸ்தவத் தொண்டர்கள் பலர் இம்மொழியில் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர்.

இம்மொழியின் உயிரொலிகளைப் பொறுத்தவரையில் குறில் நெடில் வேறுபாடு பொருள் மாற்றத்திற்கு அடிப்படைக் கருவியாக அமைகின்றது. உயிரொலிகள் சொற்களில் எல்லாவிடங்களிலும் இடம்பெறுகின்றன. எனினும் நெடில் உயிரொலிகள் மொழியின் இறுதியில் இடம்பெறுவது கிடையாது.

துடையொலிகள்(Stops), உரசொலிகள்(Fricatives), மூக்கொலிகள்(Nasals) வருடொலிகள்,(Yrills), பிரிவிளி ஒலிகள்(Laterals), ஆடொலிகள்(Flaps), இடை உயிர்கள்(ளுநஅை-எழறநடள) என்று இம்மொழியின் மெய்யொலிகள் ஏழாகக் கூறுபடுத்தப்படுகின்றன. பொதுவாக இம்மொழியில் உயிர்ப்பொலிகள்(Aspirated stops) இடம் பெறவில்லை.

**பிராகுயி**

பலுச்சிஸ்தான் பகுதிகளில் பேசப்படும் பிராகுயி மொழியினை டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்டுச் சென்ற போதிலும் அதைத் திராவிட மொழிக் குடும்பத்தில் இணைத்து விரிவாக ஆராயவில்லை. டென்னிஸ் டி.எஸ்.பிரே(னுநலெள னு ளுயரஅயசநண டீசயல) என்பவர் பிராகுயி மொழியைத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி என்று நிறுவினார். பேராசிரியர் எமனோ 1962-ஆம் ஆண்டில் பிராகுயி மொழி வடதிராவிட உட்பிரிவைச் சார்ந்தது என்று தெளிவாக விளக்கினார். மூலத் திராவிட மொழியிலிருந்து முதல் நிலையில் பிரிந்த மொழி பிராகுயி மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. திராவிட மக்களுக்கும் பிராகுயி மக்களும் ஒரே இனத்தவர் என்று கொள்வதற்கு ஏற்புடைய சான்றுகள் இல்லை. எனினும், திராவிட மொழியைப் போசுவோரின் கலப்பு அவர்களிடையே ஏற்பட்டிருக்க வேண்டுமென்று இராமச்சந்திர தீட்சிதர் கருதுகின்றார். இம்மொழி பேசும் மக்கள் பாகிஸ்தானிலுள்ள கலத்(Kalat), ஹய்ர்பூர்(Haipur) மாவட்டங்களிலும் ஈரான், ஆப்கானிஸ்தான் பகுதிகளிலும் பரந்து காணப்படுகின்றனர். இவர்கள் வாழும் பகுதிகளிலும் பலுச்சி என்னும் மொழியே பெருவழக்கிலுள்ளது. பிராகுயி மொழி திராவிட மொழியாகக் கருதப்பட்ட போதிலும் பாரசீக மொழியோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. ஏறத்தாழ மூன்று லட்சம் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். சிலர் இம்மொழி பேசுவோரின் எண்ணிக்கை ஏறத்தாழ ஐந்து இலட்சம் என்று கறிப்பிடுகின்றனர். இம்மொழி பற்றி ஆய்ந்து பேராசிரியர் எமனோ பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

எருகலா என்ற மொழியும் திராவிட மொழிக் குடும்பத்தின் மற்றொரு கிளைமொழியாகக் கருதப்படுகின்றது. கோயா மொழியின் இலக்கண அமைப்புத் தொடர்பாகவும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இரண்டு மதிப்பெண்:**

1.திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை என்று போற்றப்படுபவர் யார்?

2.தென் திராவிட மொழிகள் யாவை?

3.நடு திராவட மொழிகள் யாவை?

4.வட திராவிட மொழிகளை எழுதுக?

5.தேவாங்க கன்னட மொழியானது தமிழ்நாட்டில் எங்கு பேசப்படுகிறது?

**ஐந்து மதிப்பெண் வினா:**

1.திராவிட மொழிகளின் சிறப்பியல்கள் யாவை?

2.துளு மொழியை அறிமுகம் செய்க.

3.தென்திராவிட மொழிகளில் ஒன்றான தமிழின் சிறப்பியல்கள்புகளை ஐந்தினை விளக்குக.

5.வடதிராவிட மொழிகளின் சிறப்பியல்புகள் ஐந்தினை விளக்குக.

**பத்து மதிப்பெண் வினா:**

1.நடுத்திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

2.திராவிட மொழிகளின் உட்பிரிவுகளை தொகுத்தெழுதுக.

## அலகு - 2

### 2.1 ஒலியும் பிறப்பும்

**மொழியும் ஒலியும்**

பேசுவோரின் குரலிலிருந்து தோன்றிப் பொருளுடைய குறியீடுகளாக அமைந்து, கேட்போருக்கு உணர்த்த வேண்டிய பொருளை உணர்த்தி நிற்கும் ஒலிக் கூட்டங்களின் ஓர் ஒழுங்குபட்ட இணைப்பே மொழியாகின்றது. எனவே மொழிக்கு அடிப்படையாக அமைவது ஒலி என்பது தெளிவு. இவ்வொலிகள் பேசுவோர், கேட்போர் ஆகியோரின் மூளைகளும் உள்ளங்களும் உறவு கொள்ளத்தக்கத் தொடர்பினை ஏற்படுத்துகின்றன. ஒருவர் எழுப்பும் பொருள் பொதிந்த ஒலிக்கூட்டங்களின் இணைப்பை ஏனையோர் (Monolingual) புரிந்து கொள்ளச் சற்று அரிதாக இருந்தால் அதனை ஒரே மொழியின் மற்றொரு திரிந்த வடிவம் அல்லது வட்டார வழக்கு (Dialect) என்றும், புரிந்து கொள்ளவே முடியவில்லையெனில் அதனை வேறொரு மொழி என்றும் எளிதில் கணித்து விடலாம். பேசுவோர் ஒலிகளை வேறுபடுத்தி ஒலிப்பதற்கு அவர்களின் உடலில் அமைந்துள்ள நுரையீரல;(Lungs), குரல்வளை(Larynx), ஒலித்தசைகள்(Vocal cords), நா, இதழ், பல், அண்ணம் (Palate), மூக்கறை (Nasal cavity) போன்ற பல உறுப்புக்களும் கருவிகளாக அமைகின்றன. நுரையீரலிலிருந்து புறப்படும் காற்று இவ்வுறுப்புக்களில் தடையுற்று வெளிப்படும்போது எல்லா வகையான ஒலிகளும் பிறக்கின்றன. இவ்வுறுப்புக்கள் ஒலிகளை எழுப்புவதோடு உண்டல், சுவாசித்தல் போன்ற பிற பணிகளையும் செய்கின்றன.

**முதல் ஒலியும் துணை ஒலியும்**

ஒவ்வொரு மொழியிலும் பொருள் வேறுபாட்டைத் தரும் அடிப்படை ஒலிகளை முதல் ஒலிகள் அல்லது ஒலியன்கள் (Phonemes) என்று கூறுவர். பொருள் வேறுபாட்டினைத் தராமல் இடத்தாலும் முயற்சியாலும் வேறுபட்டு அமையும் ஒரே ஒலியனின் மாற்று வடிவங்களைத் துணை ஒலிகள் (Allo-phones) என்பர். தமிழைப் பொறுத்த வரையில் க், ச், ட், த், ப் போன்ற வல்லொலிகள் ஒலியன்களாகவும் பஇ தஇ னஇ னஇ டி போன்றன துணை ஒலிகளாகவும் அமைகின்றன. ஒரு மொழியின் ஒலியன்கள் அடுத்த மொழியிலும் ஒலியன்களாக அமைய வேண்டிய தேவையில்லை. ஒரு மொழியின் ஒலியன்கள் அடுத்த மொழியில் துணை ஒலிகளாக அமைதவதையும் காணலாம். தமிழில் ப் ஒலியனாகவும் டி துணை ஒலியாகவும் அமைய, ஆங்கில மொழியில் ↑இ டி ஆகிய இரண்டுமே ஒலியன்களாக அமைகின்றன.


பழந்தமிழர் அடிப்படை ஒலிகளை முதலெழுத்துக்கள் என்றும் சார்ந்து வரும் ஒலிகளைச் சார்பெழுத்துக்கள் என்றும் அறிவியல் கண்ணோட்டத்தோடு பிரித்த முறையினை பேராசிரியர் டானியல் ஜோன்ஸ் (Danial Jones) போன்ற மேல்நாட்டு ஒலியியல் அறிஞர்கள் வியந்து பாராட்டுகின்றனர்.[1] பொருளை வேறுபடுத்தி நிற்கும் பொருள் உணர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படை ஒலிகளை மட்டுமே பழந்தமிழர் ஒலி எழுத்துக்களாகக் கொண்டனர். அந்தந்த மொழிக்குரிய முதல் ஒலிகளை மட்டுமே ஆராய்ந்து அவற்றிற்கேற்ற வரி வடிவங்களை அமைத்துக் கொண்ட முறை இந்திய நாட்டு மொழிகளில் காணப்படும் சிறப்பியல்பாகும் என்று ஐரோப்பியரும், அமெரிக்கரும் பாராட்டுகின்றனர்.

ஒவ்வொரு மொழியிலும் குறிப்பிட்ட சில ஒலிகள் அதிக வழக்கில் இருப்பதைக் காணலாம். மலையாளம் போன்ற சில மொழிகளில் மூக்கொலிகள் மிகுந்துள்ளன. அவ்வாறே ஒலிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மொழிக் குடும்பத்திற்கும் சிற்சில தனித்தன்மைகள் இருப்பதைக் காணலாம். திராவிட மொழிகளில் உயிரெழுத்துக்களிலுள்ள குறில் நெடில் வேறுபாடு இன்றியமையாததாக அமைய ஏனைய மொழிகளில் அவ்வாறு அமையாமையினைச் சான்றாகச் சுட்டலாம். மலையாளத்தில் மூக்கொலிகள் மிகுந்திருப்பதைப் போன்று தெலுங்கில் உயிர்ஒலி இயைபு (Harmonic Sequence of Vowels) மிகுந்து வருவதையும், கன்னடத்தில் 'ப்' ஒலி குறைந்து அதற்குப் பதிலாக 'ஹ' ஒலி மிகுந்து வருவதையும் அவற்றின் தனித்தன்மைகள் எனலாம். திராவிட மொழிகளின் ஒலிகளுக்கும், வடமொழி ஒலிகளுக்கும் அடிப்படையில் சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளன. வடமொழியிலுள்ள உயிர்ப்பு ஒலிகள் தமிழில் அதிகமாக இல்லை. ஏனைய திராவிட மொழிகளிலும் அவை குறைவாகவே உள்ளன. இதனைப் போன்றே ஸ், ஹ் போன்ற வடமொழியிலுள்ள உரசொலிகளும் தமிழில் இல்லை. தமிழிலுள்ள ந், ன், ழ் போன்ற ஒலிகள் வடமொழியில் இல்லை.

**2.2 உயிரொலிகளின் பிறப்பு**

ஒலிகளை உயிரொலிகள் என்றும், மெய்யொலிகள் என்றும், இரண்டாகப் பகுப்பர். நுரையீரலிலிருந்து புறப்பட்டு வாய்ப் பகுதிக்கு (Oral cavity) வரும் காற்று பல்வேறு பகுதிகளில் (Points of articulation) தடைப்படும்போது மெய்யொலிகளும், தடையின்றி வெளிவரும் போது உயிரொலிகளும் தோன்றுகின்றன. உயிரொலிகள் குரல்வளையிலேயே ஒலிப்பைப் பெற்றுவிடுகின்றன. உயிரொலிகள் பிறக்கும்போது ஒலியுறுப்புக்களில் தடை ஏற்படாததால்

பொதுவாக அவற்றை நாவினது எழுச்சி (Advacement of the tongue), இதழினது குவிவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறுபடுத்துவர். நாவானது அடியில் படிந்திருக்கும் நிலையில் ‘அ’கரமும், முன்னோக்கி மேலெழும்போது ‘இ’கரமும், பின்னோக்கி மேலெழும்போது ‘உ’கர ஒலியும் பிறக்கின்றன. மெய்யொலிகளின் பிறப்பிடங்களைப் போன்று உயிரொலிகளின் பிறப்பிடங்களை ஒலிக்கும் இடத்தை வைத்து விளக்குவது அரிது. எனவே ஆங்கில மொழியின் உயிரொலிகளின் பிறப்பிடத்தை விளக்கிக்காட்டுவதற்கு அடிப்படை உயிரொலிகளை(Cardinal vowels) வரைபடம் மூலம் வரைந்து காட்டி அவற்றைத் துணையாகக் கொண்டு பேராசிரியர் டானியல் ஜோன்ஸ் விளக்கிக் காட்டுகின்றார். அதைப் போன்று தமிழ் மொழியின் உயிரொலிகளின் பிறப்பிடத்தையும் ஒரு முக்கோணத்தின் முனைகளுக்கு ஒப்பிட்டு விளக்குவது எளிது.




பிறப்பிடம், முயற்சி ஆகியவற்றை நோக்கிப் பார்க்கும் போது ‘இ’கரத்தோடு ‘எ’கரமும், ‘உ’கரத்தோடு ‘ஒ’கரமும் தொடர்புடையன. ‘இ’கர ‘அ’கர ஒலிகளுக்கிடையில் ‘எ’கரம் ’எ’கர ’அ’ கர ஒலிகளுக்கிடையில் ‘ஒ’ கரம் பிறத்தலும் தெளிவு.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | இலை | , | எலை |
| | இணை | , | எணை |
| | சிதல் | , | செதலு |

என்று ‘இ’கரத்தை உச்சரிக்கும் முயற்சி சுருங்கும்போது ‘அ’கரத்திற்கும் ‘இ’கரத்திற்கும் இடையில் ‘எ’கரம் பிறக்கின்றது. அவ்வாறே ‘உ’கரத்தை உச்சரிக்கும் முயற்சி சுருங்கும்போது ‘அ’கர ‘உ’கரங்களுக்கிடையில் ‘ஒ’கரம் பிறக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா | உலகம் | , | ஒலகம் |
| | உரல் | , | ஒரலு |

உடம்பு , ஒடம்பு

போன்ற பேச்சு வழக்குகளே இதற்குச் சான்று. உயிரொலிகளுள் அ,ஆ ஆகியன நா அடியில் படிந்திருக்கும் நிலையில் பிறப்பதால் கீழ் உயிர்கள் என்றும்(Central or low vowels), இ, ஈ ஆகியன நா முன்னோக்கி எழும் நிலையில் பிறப்பதால் முன்னுயிர்கள்(Front high vowels) என்றும் ஒ, ஓ ஆகியன நா பின்னோக்கி எழும் நிலையில் பிறப்பதால் பின்னுயிர்கள் (Back hifh vowels) என்றும் அழைக்கப்படுகின்றன. எ, ஏ ஆகிய ஒலிகளை இடை முன்னுயிர்கள் (Mid front vowels) என்றும், ஒ,ஓ ஆகிய ஒலிகளை இடை பின்னுயிர்கள் (Mid back vowels) என்றும் அழைக்கலாம். மேலும் உ, ஊ, ஒ, ஓ ஆகியவற்றை ஒலிக்கும் போது இதழ்குவிதல் பற்றி அவற்றை இதழ்குவி உயிர்கள்(Unrounded vowels) என்றும், ஏனையவற்றை இதழ்குவியா உயிர்கள் (Rounded vowels) என்றும் அழைப்பர். அ,இ, உ,எ,ஒ ஆகிய குறுகி ஒலிப்பதால் குறில் ஒலிகள் என்றும், நீண்டு ஒலிக்கும்போது நெடில் ஒலிகள் என்றும் பெயர் மாறும்.குறில் ஒலிகள் ஒலிப்பதற்குக் கடினமாக இருப்பதால் அதனைக் கடின உயிர்கள்(Tense vowels) என்றும், நெடில்கள் ஒலித்தற்கு எளிமையாக இருத்தலால் அதனை எளிமை உயிர்கள்(Lax vowels) என்றும் அழைப்பர். குறில் நெடில் வேறுபாடு திராவிட மொழிகளுக்கு மிகவும் இன்றியமையாதனவவாக இருப்பதால் இவற்றைத் தனித்தனி முதல் ஒலிகளாகவே கொள்வர். இவையன்றி ஐ, ஒள என்னும் இரண்டு ஒலிகள் உயிர் வரிசையில் உள்ளன. அவற்றை மொழிநூலார் முறையே ஆ̱ய்; ஆவ் ஆகியன இணைந்த கூட்டொலிகளாகவே கருதுவர்.

மொழிநூலார் கொள்கைப்படி ‘ய’கரமும் ‘வ’வகரமும் அரை உயிர்கள் (Semi vowels) என்று கொள்ளப்படும். இவற்றுள் ‘வ’கரத்தை அழுத்தமாக ஒலிக்கும்போது அது பல் இதழின் ஒலியாவே(Labio-dental) ஒலிக்கின்றது. இவ்விரு ஒலிகளும் மெய்யொலிகளாகக் கருதப்பட்டட போதிலும் உயிர்தன்மை அதிகமாக இருப்பதால் இவற்றை அரை உயிர்கள் என்று அழைக்கின்றனர். தமிழ் இலக்கண நூலாரும் இவை உயிருக்கும் மெய்க்கும் இடைப்பட்ட ஒலிகளாக அமைவதால் இடையினம் என்று அழைத்தார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

**மூக்கின உயிர்கள்**

உயிர் ஒலிகள் பிறக்கும்போது அண்ணத்தின் பின்பகுதியிலுள்ள தசைப்பகுதி(ருளரடய) மூக்கறை வாயிலை(Velic) அடைத்து விடுவதால் காற்று வாய் வழியாகச் செல்கின்றது. சில சமயங்களில் பின் அண்ணப் பகுதியிலுள்ள தலைப்பகுதி அவ்வாறு மூக்கறை வாயிலைத் தடுக்காமல் வழி விடும்போது காற்றின் ஒரு பகுதி வாய் வழியாகவும், மறுபகுதி மூக்கு வழியாகவும் செல்லும். அப்போது பிறக்கும் உயிரொலிகளை மூக்கின உயிர்கள்(Nasalised vowels) என்பர்.

எ.கா. வந்தான் ,vantâ

‘இங்கு வந்தான்’ என்ற சொல்லின் இறுதி மெய்கெட்டு, அதற்கு முந்திய ‘அ’கர உயிர் மூக்கொலிச் சாயல் பெறுகின்றது. மக்களின் ஒலிக்கும் முயற்சி சுருங்கும்போது இத்தகைய

மூக்கின ஒலிகள் ஏற்படும் என்பது பேராசிரியர் டு . ∴புளும் ∴பீல்டு (L.Bloomfield) போன்ற மொழிநூலறிஞர்களின் கருத்து.

தமிழில் மூக்கின ஒலிகள் ஒலியன்களாகக் கருதப்படும் நிலையினை எய்தியுள்ளன, இப்போக்கு ஏனைய திராவிட மொழிகளுக்கு முற்றிலும் பொருந்துவதில்லை. சான்றாகப் பேச்சு வழக்கில் 'அவன்','அவள்' என்ற இரு சொற்களிலும் இறுதி ஒலியன்களான 'ன்','ள்' ஆகியன கெட்டு விடுகின்றன. அவ்வாறு கெடும்போது 'அவன்' என்ற சொல்லின்'வ'கரத்திலுள்ள 'அ'கர உயிர் மூக்கொலிச் சாயலைப் பெற்று 'அவ' என்று ஒலிக்கும்.

இப்போது அவ் - அவன்

அவ - அவள்

என்ற இரு பேச்சு வடிவங்களிலும் உள்ள வ, வ ஆகிய இரு ஒலிகளுமே பால் பாகுபாட்டை தெளிவு படுத்துகின்றன. அதாவது வி ஆண்பாலை உணர்த்துகின்றது. எனவே மூக்கின உயிர் தனி ஒலியனின் தன்மையைப் பெறுகின்றது எனலாம்.

## 2.3 மெய்யொலிகளின் பிறப்பு
### மெய்யொலிகளின் பிறப்பு

நுரையீரலில் இருந்து வெளிவரும் காற்று வாய்ப்பகுதியின் பல்வேறு இடங்களில் தடைபடும போது மெய்யொலிகள் பிறக்கின்றன. இலக்கண அறிஞர்கள் இம்மொய்யொலிகளை வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்றாகப் பகுப்பர். அவர்கள் கருத்தப்படி க், ச், ட், த் ,ப், ற் என்ற ஆறும் வல்லினம்(Stops or Plosives) எனப்படும். மூக்கின வழியாகப் பிறக்கும் ங்,ஞ்,ண்,ந்,ன்,ம் என்பன மெல்லொலிகள் (Nasals) எனப்படும். ய், ர், ல், வ், ழ், ள் என்பன இடையினம்(Liquids) என்று வழங்கப்படும். வல்லினம் மார்பையும், மெல்லினம் மூக்கையும்,இடையினம் மிடற்றையும் இடமாகக் கொண்டு பிறக்கும் என்பது நன்னூலாரின் கொள்கை.

தற்கால மொழிநூல் அறிஞர்கள் மெய்யொலிகளை ஒலிக்கும் உறுப்புக்களாகிய இதழ், பல், அண்ணம் போன்றவற்றை(Points of articulation) ஒட்டியும், ஒலிக்கும் முறையை ஒட்டியும்(Manner of articulation) கூறுபடுத்துவர். நுரையீரலில் இருந்து வருங்காற்று குரல் வளைநாணில் (Vocal cord) அதிர்வை(ஏடிைசயவழைெ) ஏற்படுத்தினால் ஒலிப்பு ஒலிகளும்(Voiced sounds) அதிர்ரைவ ஏற்படுத்தாவிடில் ஒலிப்பில் ஒலிகளும்(Voiceless sounds) பிறக்கின்றன. ஒலிப்பு ஒலிகள் தற்காலத் தமிழிலும் ஏனைய திராவிட மொழிகளிலும் இடம்பெற்ற போதிலும் அதிகமாக அவை துணை ஒலிகளாகவே கொள்ளப்படுகின்றன. குரல்வளை நாணைக் கடந்து வருங்காற்று வாய் வழியாகச் செல்லும்போது மூக்கொலிகள் தவிர்ந்த ஏனைய ஒலிகளும்(Oral sounds), மூக்கு வழியாகச் செல்லும்போது மூக்கொலிளும், இவ்விரண்டின் வழியாகச் செல்லும்போது மூக்கின ஒலிகளும்(Nasalised sounds) பிறக்கின்றன.

'க'கர, 'ங'கர மெய்யொலிகள் பிறக்கும்போது நாவின் பின்பகுதி மேலெழுந்து கடையண்ணத்தைத் தொடுகின்றது. எனவே, இவ்விரு ஒலிகளையும் பின்னண்ண ஒலிகள்(Velar

sounds) என்று இட வகையாலும், பின்னண்ணத் தடையொலி, பின்னண்ண மூக்கொலி என்று இடமுயற்சி வகையாலும் அழைப்பர். ச்,ஞ் ஆகிய ஒலிகள் இடைநா இடையண்ணத்தோடு(Palatal) பொருந்தியிருக்கும் நிலையில் பிறக்கின்றன. இவற்றை வளைநா ஒலிகள்(Retroflex consonants) என்பர். த்,ந் ஆகிய ஒலிகள் நாவின் நுனி பல்லின் அடிப்பகுதியைத் தொடும் நிலையில் பிறப்பதால் இதனைப் பல்லின ஒலிகள் (Dental consonants) என்பர். முன்னண்ணததில் (Alveolar) நாவானது பொருந்திய நிலையில் ற்,ன் ஆகிய ஒலிகள் பிறக்கின்றன. அவற்றுள் 'ன'கரத்தை முன்னண்ண மூக்கொலி(Alveolar nasal) என்பர். 'ற'கரம் பிறக்கும்போது நாவானது முன்னண்ணத்தை வருடுவதால் இது முன்னண்ண ஆடொலி(Alveroalar trill) எனப்படும். நாவானது மேலெழுந்து முன்னண்ணத்தைத் தொடும் நிலையில் 'ர'கரம்(Alveolar flap) பிறக்கும். ல்,ழ்,ர் ஆகியன பிறக்கும் போது நாவானது வளைந்து அண்ணத்தைத் தொட, காற்று நாவின் இருமருங்கும் பிரிந்து செல்வதால் இதனைப் பிரிவழியின மெய்கள்(Lateral consonant) என்பர். மேலிழதமும், கீழிதழும் இணையும் நிலையில் பிறக்கும் ப்,ம் என்ற இரு ஒலிகளும் இதழ் ஒலிகள்(Bilabial consonants) எனப்படும். மேறபலலும் கீழிதழும் இணையும் நிலையில் பிறக்கும் 'வ'கர ஒலியினைப் பல்லிதழின மெய்(Labio-dental) என்பா. இடையண்ணப் பகுதியில் (Palatal) பிறக்கும் 'ய'கரம் உயிர்த் தன்மை பெற்றுள்ளதால் அதனை அரை உயிர் என்பர்.

2.4 உயிரொலிகளின் இயைபும் திரிபும்

திராவிட மொழிகளிலுள்ள ஒலியன்கள் பற்றிய விரிவான நூலை பேராசிரியர் எமனோ அவர்கள்('Dravidian Comparative Phonology–A Sketch) என்ற தலைப்பில் 1970-இல் வெளியிட்டுள்ளார். இந்நூலின் திராவிட மொழிகளின் ஒலியன் பற்றிய ஆய்வு மிகச் சுருக்கமாகவே அமைந்துள்ளது. இதே ஆண்டில் பேராசிரியர் கமில் சுவலபில வெளியிட்டுள்ள 'Comparative Dravidian Phonology' என்ற நூலில் திராவிட மொழிகளின் ஒலியன்கள் பற்றி சற்று விரிவாகவே ஆராய்ந்துள்ளார். ஜப்பானிய அறிஞர் உச்சிடா(Ucida Noritiko) எழுதிய 'Studies in Dravidian technology'[3](1993) என்ற நூலும் இத்துறையில் குறிப்பிடத்தகுந்த சாதனையாக அமைந்துள்ளது.

**உயிரொலிகள்**

**மூலத் திராவிட மொழியில் பத்து உயிரொலிகள் உள்ளன. அவை பின்வருமாறு.**

| | **முன்னண்ண உயிர்** | **இடையண்ண உயிர்** | பின்னண்ண உயிர் |
|---|---|---|---|
| **உயர் (High)** | ஈ<br>**இ** | | ஊ<br>உ |
| **இடை (Central)** | ஏ<br>**எ** | | |

| | | | |
|---|---|---|---|
| **தமிழ்**<br>**(Low)** | | **ஆ**<br><br>**ஆ** | |

‘ஐ’காரம், ‘ஔ’காரம் ஆகிய இரு ஒலிகளும் இங்கு இணைக்கப்படவில்லை. அவற்றுள் ‘அ’கர உயிரும், ‘ய’கர மெய்யும் இணைந்து கூட்டொலியாக ‘ஐ’காரம் தோன்றுகின்றது என்று தொல்காப்பியரே விளக்கிச் செல்கின்றார்.

**“அகரத்திம்பர் யகரப்புள்ளியும் ஐயென்**

**நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்”**

என்பது தொல்காப்பிய நூற்பா.

எ.கா. ஐயர் , அய்யர்

என்று ஒலிப்பதைக் காண்கிறோம். அவ்வாறே ‘அகர உயிரும் ‘வ’கர மெய்யும் இணைந்த நிலையில் ‘ஔ’காரம் தோன்றுகின்றது.

எ.கா. ஔவை , அவ்வை

**தாழ் உயிர்கள்**

**அ (*a)**

‘அ’கர உயிர் ஒலிப்பதற்கு அருமையாக அமைவதால் பல்வேறு மாற்றங்களையடைகின்றது என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்து[1]. இவ்வொலி சில இடங்களில் ‘எ’கர உயிராகத் திரிகின்றது.

எ.கா. பலன் , பெலன்

தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் இது அதிக அளவு மாறுவதில்லை. டாக்டர் கால்டுவெல் இரண்டு ‘அ’ கர உயிர்களின் இணைவால் ‘ஆ’கார உயிர் பிறக்கின்றது என்கின்றார். இரண்டு குறில்கள் இணைந்து நெடிலாவதற்கு ‘விண்ணவா”(vinna-v-ar) என்பது ‘விண்ணோர்’(vinnor) என்று மாறுவதைச் சான்றாகக் காட்டுகின்றார். இக்கருத்து, தொல்காப்பியனார் முதலிய மரபிலக்கண வல்லுநர்கள் கருத்திற்கும் இக்கால மொழிநூலறிஞர் கருத்துக்கும் மாறாக உள்ளது. நெடிலை ஒலிக்கும் முயற்சியும் குறிலை ஒலிக்கும் முயற்சியும் வேறுபடுவதால் இரண்டு குறில்களின் சேர்க்கையே ஒரு நெடில் என்று கருத்துப் பொருந்தவில்லை[3]. எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படும் ‘அ’கர உயிர், தோடா மொழியில’ ‘ஒ’கரமாகவும், பர்ஜி மொழியில் ‘எ’கரமாகவும் மாறுவதைக்’ காணலாம்[4].

எ.கா. 1.தமிழ் }

மலையாளம் கண்

கன்னடம்

தோடா கொண்(மழெ)

2.தமிழ் - வரு

பர்ஜி - வெரு(veru)

3.தமிழ் - மன்று

தோடா - அழன

4.தமிழ் - பன்றி

தோடா - ிநனெ

5.தமிழ் - பல்

தோடா - ிழட

இருளர்களின் மொழியில் இது ô என்று ஒலிக்கும்.

பிராகுயி மொழியில் மட்டும் இக்குறில் ஒலி காணப்படவில்லை.

ஆ (ழூயஹ)

இவ்வொலி எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது. தோடா மொழியில் இது ‘ஓ’காரமாகவும்(ழ), பர்ஜி மொழியில் ‘ஏ’காரமாகவும் உள்ளது.

எ.கா. 1. தமிழ் - ஆறு

தோடா - ழச

பர்ஜி - êன

2. தமிழ் - கால்

தோடா - மழட

பர்ஜி - மêட

தமிழ் மொழியில் இவ்வொலி சில இடங்களில் ‘ஓ’கார ஒலியாகத் திரிதலுண்டு. இத்திரிபு பெரும்பாலும் ‘ம’கர மெய்யை அடுத்தே ஏற்படுகின்றது[5].

எ.கா. வருவாம் , வருவோம்.

இங்கு ‘ம’கரமாகிய இதழொலியை அடுத்து வரும்போது ‘ஆ’கார ஒலி ‘ஓ’கார இதழொலியாக ஓரினமாகின்றது.

**முன்னுயிர்கள்**

**இ(*i)**

இவ்வொலி பிராகுயி தவிர்ந்த எல்லாத் திராவிட மொழிகளிலும் உள்ளது. பேச்சுத் தமிழில் இது 'எ'கரமாகத் திரிகின்றது.

எ.கா. இலை , எலை

இழை , எழை

தெலுங்கு, கன்னடம், குவி ஆகிய மொழிகளிலும் இது 'எ'கரமாக மாறுகின்றது. தோடா மொழியில் 'ஈ'கார நெடில் ஒலியே இதற்கு நிகராகக் காணப்படுகின்றது.

எ.கா. 1. தமிழ் - வில்

குவி - வெல்லு(vellu)

2. தமிழ் - இரண்டு

கன்னடம் - எரடு

**ஈ(மூழை)**

ஏல்லாத் திராவிட மொழிகளிலும் இவ்வொலி காணப்படுகிறது.

எ.கா. தமிழ் - ஈ

மலையாளம் - ஈச்ச

தோடா - ஈபி

**பின்னுயிர்கள்**

**உ(மூர)**

பின்னுயிரான 'உ'கரம் அதிகமான திராவிட மொழிகளில் திரிபின்றிப் பயின்று வருகின்றது. தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் மட்டும் இவ்வொலி 'ஒ'கரமாக மாறுகின்றது. தோடர் மொழியில் இதற்கு இணையாக றை அல்லது றய என்ற ஒலியே உள்ளது.

எ.கா. 1 தமிழ் - உதிர்

தோடா - wioy

2. தமிழ் - உள்

தோடா - wild

**ஊ(மூரஹ)**

பின்னுயிரான 'உ'கரத்தின் நெடில் அதிகத் திரிபின்றி எல்லாத் திராவிட மொழிகளிலும் பயின்று வருகின்றது.

எ.கா    தமிழ்    -    நூல்

மலையாளம்    -    நூல்

தோடா    -    நூஸ் (nu’s)

கொடகு    -    நூலி (nu’li)

துளு    -    நூலு

குயி    -    நூடு(nudu)

**இடை முன்னுயிர்கள்**

**எ(ழூந)**

இடை முன்னுயிரின்(mid front vowel) குறிலான ‘எ’கரத்திற்கு நிகராகத் தோடா மொழியில் **ö** ஒலியும், பர்ஜி மொழியில் ‘அ’கர ஒலியும் காணப்படுகின்றன. கோண்டா மொழியில் ‘அ’கரம் மட்டுமின்றி ‘ஆ’கார ஒலியும் உள்ளது. பிராகுயி மொழியில் மட்டும் ‘எ’கர உயிர் காணப்படவில்லை. கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் ‘எ’கரம் திரிபின்றி இடம் பெறுகின்றது. ‘எ’கரம், ‘ஏ’காரம் ஆகிய இரு ஒலிகளும் வடமொழியில் இல்லை. எனினும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் உள்ளன.

எ.கா 1.  தமிழ் }
கொடகு }    எலி

கோடா    -    eyi

கன்னடம்    -    எலி ∴ இலி

தெலுங்கு    -    எலுகா

கோண்டா    -    அலி

2.  தமிழ்    -    எழு

தோடா    -    öன

**ஏ(*e)**

தோடா மொழியில் ‘ஏ’கார உயிருக்கு நிகராக ö என்ற ஒலியும், பர்ஜி மொழியில் ‘ஆ’கார உயிரும் உள்ளன. ஏனைய மொழிகளில் இவ்வுயிரொலி திரிபின்றி வருகின்றது.

எ.கா. 1.  தமிழ்    -    தேனு

தோடா    -    வöச

2.  தமிழ்    -    வேர்

பர்ஜி - வார்

3 தமிழ் - ஏங்கு

தோடா - ö ஒ

**இடைப் பின்னுயிர்கள்**

**ஒ(*o)**

மூலத் திராவிட இடைப் பின்னுயிரின் குறிலான 'ஒ'கர ஒலி 'wa'இ 'wi' என்று பல திரிபுகளைத் தோடா மொழியில் பெறுகின்றது. கோண்டா மொழியின் சில வட்டார வழக்குகளில் இவ்வொலிக்கு நிகராக 'அ'கர உயிரே காணப்படுகின்றது. தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் 'அ'கர உயிரின் முன்னர் இது 'உ'கர ஒலியாக மாறுகின்றது. பிராகுயி மொழியில் 'ஓ'காரம், 'உ'கரம் அல்லது 'அ'கரம் மூலத் திராவிட 'ஒ'கர உயிருக்கு நிகராகக் காணக் கிடக்கின்றது.

எ.கா. 1. தமிழ் - ஒல்லும்

தோடா - wal

2. தமிழ் - சொறி

தோடா - twary

**ஓ(மூழ)**

தோடா மொழியில் மட்டுமே இந்நெடில் உயிர் wa, wi ,i என்று திரிகின்றது. ஏனைய திராவிட மொழிகளில் மாறுபாடின்றியே காணப்படுகின்றது.

எ.கா. 1. தமிழ் - சோலை

தோடா - twa's

**'ஐகார, ஔ'கார ஒலிகள்**

இவ்விரு ஒலிகளையும் மொழிநூலார் கூட்டொலிகளாகவே கருதுகின்றளனனர். இன்றைய தமிழ் உரைநடையில் 'அ'கரத்தையும் 'ய'கரத்தையும் இணைத்தெழுதி 'ஐ'காரம் உணர்த்தப்படுதலைக் காணலாம். ஆனால் டாக்டர் கால்டுவெல் 'எ'கர உயிரும் 'இ'கர உயிரும் இணைந்து 'ஐ'கார ஒலி பிறக்கின்றது என்கிறார்[8]. மூலத் திராவிட ஒலியான 'அ'கரம் 'எ'கரமாக மாறிப் பின்னர் 'இ'கரத்தோடு இணைந்து 'ஐ'காரமாகியது என்பது அவர் கொள்கை.

எ.கா தல (தெலுங்கு) , தலெ (மலையாளம்) , தலை (தமிழ்).

தம் கொள்கையை நிலைநாட்ட மலையாள மொழியின் வரி வடிவத்தில் இரண்டு ‘எ’கரங்களை இணைநத்து ‘ஐ’காரம் எழுதப்படுவதையும் கன்னடத்தில் ‘எ’கரத்தையும், ‘இ’கரத்தையும் இணைத்த நிலையில் எழுதுவதையும் சான்றாகக் காட்டுவார். வரிவடிவம் ஒரு மொழியின் உண்மையான ஒலியியல்பைப் புலப்படுத்தாது. எனவே டாக்டர் கால்டுவெல்லின் இக்கொள்கை கொள்ளத் தக்கதன்று என்று மறுக்கின்றார் டாக்டர் மு.வரதராசனார்[9].

‘ஐ’காரத்தை போன்று ‘ஔ’ காரத்தையும் சந்தியக்கரம்(Diphthong) என்று கருதும் டாக்டர் கால்டுவெல் இவ்வொலி சமஸ்கிருதத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டது என்கிறார் ‘அ’கர, ‘உ’ கர உயிரோடு இடையில் ‘வ’கர உடம்படுமெய் இணைந்த நிலையில் இவ்வொலி தேன்றுகின்றது என்று டாக்டர் கால்டுவெல் விளக்குகின்றார். தமிழில் இவ்வொலியை உடைய சொற்கள் மிகக் குறைவு. அவையும் ‘அ’கரமும் ‘வ’கரமும் இணைத்து எழுதப்படுகின்றன. தோல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் “அகரத்தின் பின்னர் உகரமேயன்றி வகரப் புள்ளியும் ஔகாரம் போல வருமென்று கொள்க” என்று விளக்கிச் செல்வதைக் காண்கின்றோம். இவை சந்தியக்கரம் என்பதை ஆராயும் டாக்டர் மு.வரதராசனார், சந்தியரக்கரம் நெடிலைப் போன்ற (இரண்டு மாத்திரை) ஒலியுடையது என்று பேராசிரியர் டானியல் ஜோன்ஸ் கூறுவதை மனதிற் கொண்டு, தன்னைக் கட்டுமிடங்களிலும், அளவெடுக்குமிடங்களிலும் தவிர, ஏனைய இடங்களில் இவ்விரு ஒலிகளும் ஒன்றரை மாத்திரையாக ஒலிப்பதால் இவை ‘அய்’, ‘அவ்’ என்னும் ஒலிகளிலிருந்து வேறுபட்டவையல்ல என்றும் இவை சந்தியரகம் அல்ல என்றும் கூறிச் செல்கின்றார்.

மரபிலக்கண வல்லுநர்கள் ஐ, ஔ ஆகிய இரு ஒலிகளையும் நெடிலாகக் கருதுவர். இதை மொழிநூலார் மறுப்பர். நெட்டெழுத்துக்கள் ய்,ர்,ல்,ழ்,ள் போன்ற மெய்யொலிகளோடு இணைந்து ஆய், ஆர், ஆல் என்றெல்லாம் சொற்களைத் தோற்றுவிக்கும். ஆனால் ஐ, ஔ ஆகியன மேற்கூறிய மெய்யொலிகளோடு இணைந்து சொற்களைத் தோற்றுவிப்பதில்லை. ஒலியமைப்பு, இலக்கண அமைப்பு, யாப்பிலக்கணப் போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும்போதும் இவை இரண்டும் நெடிலல்ல. அய், அவ் என்னும் கூட்டொலிகளே என்பார் பேராசிரியர் பொன்.கோதண்டராமன். இவற்றுள் ‘ஐ’காரம் பெயர்ச் சொல்லாகவும், வேற்றுமை உருபாகவும், முன்னிலை ஒருமை விகுதியாகவும், வியப்புப் பொருளுடைய உரிச்சொல்லாகவும் செயல்படும். ‘ஐ’காரத்தை விளக்கும் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், ‘அ’கர, ‘இ’கரம் சேர்ந்தழைத்ததே ‘ஐ’காரம் என்றும் அதுவே பின்னர் ‘அய்’ என்று வழங்கலாயிற்று என்றும் விளக்குவார்.

**ஆய்தம்**

இடனையும், பற்றுக்கோட்டினையும் கொண்டு சார்ந்து வருமியல்பினையுடைய சார்பெழுத்துக்களுள் ஒன்றாகத் தொல்காப்பியர் ஆய்தத்தைக் குறிப்பிடுகின்றார். மேலும் “நலிபு வண்ணம் பெறும்” என்று இதன் இயல்பினையும்’, முப்பாற் புறள்ளி பெறும்” என்’று இதன் வரிவடித்தையும் விளக்கிச் செல்கின்றார். ஆய்தம் உயிரெழுத்து வரிசையில் சேர்க்கப்பட்ட போதிலும் இது உயிரா, மெய்யா என்ற ஐயமும், கருத்து வேறுபாடும் இலக்கண வல்லுநர்களிடமும், உரையாசிரியர்களிடமும் இருந்து வருவதைக் காண்கிறோம். தொல்காப்பியர்

சார்பெழுத்து என்று மட்டும் கூறிச் சென்றாரே ஒழிய உயிரா, மெய்யா என்பதை விளக்கவில்லை. புத்தமித்தரனார் வீரசோழியம் சந்திப்படலம் முதற்காரிகையில் “நடு ஆய்தம்”[13] என்று கூறிச் செல்கின்றார். ஊரை கூறும் பெருந்தேவனாரும் இதனை உயிருக்கும் மெய்க்கும் நடுவாம் தன்மையாகிய அ∴கேனம் என்னும் தனிநிலை எழுத்து என்கிறார். எனவே புத்தமித்திரனார் காலத்தில் இ∴து உயிருக்கும் மெய்க்கும் இடைப்பட்ட நடு ஒலியாகக் கருதப்பட்டு வந்தது என்பது தெளிவு. எனினும் இளம்பூரணர் இதனை மெய்யொலியாகவே கொள்கின்றார்.

ஆய்த ஒலியின் இயல்பு பற்றிப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் விரிவாக ஆராய்ந்துள்ளார்[14]. அவர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் தடையொலிகள் உரசொலிகளாக மென்மைப்படுத்தப்படுவதைச் சுட்டிக்காட்டி ஆய்தத்திற்கு மென்மைப்படுத்தும் தன்மையுள்ளதால் ‘நலிபு வண்ணம்’ பெறுமென்று தொல்காப்பியர் குறிப்பிட்டார் என்கிறார்.

எ.கா. கல் ு தீது , கற்றீது

க∴றீது

ற்ற் ரீ ∴ற்

ற்,ட் போன்ற மெய்யொலிகளுக்கு மாற்று வடிவமாக வரும் ஆய்தம் தொல்காப்பியர் காலத்தில் உரசொலியாகக் கருதப்பட்டது என்பது இதனால் தெளிவாகின்றது. இது தொடக்கத்தில் தனி ஒலியாகவும் தனி வடிவெழுத்தாகவும்(grapheme) இல்லாமல் க்,ச்,ட்,த்,ப்,ற் என்னும் ஆறு வல்லொலிகளையும் மெல்லொலிகளாக்க வழங்கியிருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

ஆய்தத்தைப் பற்றிக் கூறும் டாக்டர் கால்டுவெல் இவ்வொலி உயிரின் தன்மையினையும் பெற்று வடமொழியிலிலுள்ள விசர்க்கத்தோடு ஒத்துக் காணப்படுகின்றது என்கின்றார்[16]. இவ்வாறே பேராசிரியர் மு.இராகவையங்கார் அவர்களும் ‘ஆய்தம்’ என்பது வடமொழியிலுள்ள ‘ஆஸ்தரம்’ என்றும் அது ‘ஜிக்தாமூனிய தொனி’ உடையது என்றும் குறிப்பிடுகின்றார்[17]. வேங்கடராஜூலு ரெட்டியாரும் வடமொழி ‘ஆஸ்ரதம்’ என்பதும், தமிழ் ஆய்தம் என்பதும் ஒன்றே என்ற கருத்துடையவர். டெக்கான் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் ஊ.சு.சங்கரன் என்பவர் சமஸ்ரது என்பது மயிர் என்று திரிந்ததைப் போன்று ஆஸ்ரிதம் என்பதேஆய்தம் என்றாகியது என்பர். ஆனால் பேராசிரியர் துவராக கோதண்டபாணிப் பிள்ளை ஆய்தம் தமிழ் ஒலலி என்று நிறுவியதை ஏற்றுக்கொண்டு 1961-ஆம் ஆண்டில் ஆய்தம் என்பது தமிழ் ஒலி என்றும் ‘ஆய்’ என்பதன் அடியாகப் பிறந்தது என்றும் விளக்கிச் செல்கின்றார்[18] . மேலும் பேராசிரியர் வெள்ளைவாரணர் ஆய்தம் என்ற சொல் ஆய்தல் என்ற சொல்லடியாகப் பிறந்தது என்றும், இதற்கும் ஆஸ்ரதம் என்ற சொல்லுக்குமிடையே எந்த தொடர்பும் இல்லை என்றும் நிலைநாட்டிச் செல்கின்றார்.

### உயிர் விடு ஒலி (Vowel Release or Enunciative Vowel)

திராவிட மொழிகளில் இடம் பெறும் குறில் ஒலியான ‘உ’கரத்தை விளக்கும் டாக்டர் கால்டுவெல் இவ்வொலி எளிமையான ஒலி என்றும், நிலைபேறற்ற ஒலி என்றும் இதனால் இது மொழியின் இறுதியில் ஒலித்துணையாகப்(Euphonic purpose) பயன்படுகின்றது என்றும்

குறிப்பிடுகின்றார்.[19] தெலுங்கு மொழியின் எழுத்து வடிவத்தில் எல்லாச் சொற்களும் உயிரொலிகளளைக் கொண்டு முடியவேண்டுமென்ற விதியே உள்ளது. உயிரீறு பெறாத சொற்களிலிருந்தால் அவற்றின் இறுதியில் ‘உ’கர ஒலி இணைக்கப்படுவதைக் காணலாம்.

எ.கா. நெல்லு, கண்ணு, மண்ணு

கன்னட மொழியில் ‘அ’கர ஈற்றைக் கொண்டு முடியும் சொற்களின் ஈற்றில் கூட ‘உ’கர உயிர் இணைக்கப்படுகின்றது.

எ.கா. கெலவு, பலவு

தமிழ் மொழியிறுதியில் க், ச், ட், த், ப், ற் என்ற வல்லெழுத்துக்களில் யாதேனுமொன்று வரும்போது, அவ்வொலிகளை எளிமையாக ஒலிக்க ஒலித்துணையாக ‘உ’கரம் இணைக்கப்படுகின்றது. இவ்வொலிகத்துணை ‘உ’கரம் ஏனைய குறில் ‘உ’கரத்தை விடவும் அளவில் குறுகியே ஒலிக்கின்றது.

மலையாள மொழியில் ‘உ’கரத்திற்குப் பதிலாக ‘அ’கர உயிர் இணைக்கப்படுவதைக் காணலாம். டாக்டர் குண்டர்ட் கொச்சிப் பகுதியலுள்ள சிரியன் கிறிஸ்தவ மக்களின் பேச்சு வழக்கில் ‘அ’கர ஈறு மிகுந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார். வடபகுதியிலுள்ள மலையாள மொழியில் இக்குறுகிய ‘உ’கர ஒலி தமிழை விடவும் அளவில் குறைந்து ஒலிக்கின்றது. இவ்வொலியைக் குறிக்க ‘உ’கரம் ஊர்ந்து வரும். இறுதி உயிர்மெய் எழுத்தின் மீது அரை வட்ட வடிவை ‘ ͜ ’ எழுதுதம் முறையினை மலையாள மொழியில் காணலாம். துளு மொழியிலும் இம்முறை உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

இக்குறுகிய ‘உ’கரத்தை, ஒலித்துணைப் பற்றி வருவது என்று கூறுவதை விட, முயற்சி எளிமை (economy of effort) பற்றி வருவது என்பதே மிகப் பொருந்தும் என்கிறார் டாக்டர் மு.வரதராசனார்.[20] இவ்விருதி ‘உ’கரத்தை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் அதிகமாகக் காணமுடிவதில்லை. எனினும் கிரேக்க மொழியில் இஃது இடம் பெறுவதாகத் தோன்றுகிறது. தோல்காப்பியர் காலத்திலும் குற்றியலுகரம் ஒலித்துணையாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. குற்றியலுகரம் அதனைச் சார்ந்து வரும் தடையொலிகளின் இடத்திலேயே பிறக்கின்றது; தெற்கெனத் தனிப்பிறப்பிடம் இல்லையென்று தொல்காப்பியரே குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

ஒலித்துணை ‘உ’கரம் ஏனைய முற்றுகரத்தைப் போன்று முழுமையாக ஒலிக்கப்படாமல் அரை ‘உ’கரமாக ஒலிக்கப்படுகின்றது. வில்லியம் பிரைட் (William Bright) இது ‘ஐ’ ஒலியாகத் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் ஒலிப்பதாகவும், எழுத்து வடிவில் மட்டும் ‘உ’கர ஒலியாகச் சுட்டப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார். பிறமொழிச் சொற்களான டிரள போன்ற திராவிட மொழிகளில் பேச்சு வழக்கில் ஒலித்துணை ‘உ’கரத்தை இணைத்து ஒலிப்பதைக் காணலாம். ஒலித்துணையாக ‘உ’கரம் மட்டுமின்றி ‘இ’கரமும் தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளில் இடம் பெறக் காணலாம்.

எ.கா. நாய் , நாயி

இவ்வொலித்துணை உயிர்கள் பற்றி பேராசிரியர் கணபதி பிள்ளை என்பவர் 1943-இல் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். மலையாள மொழியின் ஒலித்துணை உயிர்கள் பற்றி பேராசிரியர் டு.ஏ.இராமசுவாமி ஐயர் ஆராய்ந்துள்ளார். துளு மொழியில் இ,உ ஆகிய இரு ஒலிகளும் ஒலித்துணை ஒலிகளாகச் செயல்படுகின்றன. இவற்றோடு கொடகு மொழியில் ë உள்ளது. ஒலித்துணை உயிர்கள் தென் திராவிட மொழிகளில்தான் அதிகமாக இடம் பெறுகின்றன.

மொழியிறுதியில் ஒலித்துணையாக வரும் இவ்வொலி பற்றி வில்லியமம் பிரைட் என்பவர் ‘‘வூந நுரெைெஉயைவளைந ஏழறநட’’ என்ற கட்டுரையில் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அக்கருத்துக்களில் சிலவற்றை து.சு.மார் மற்றும் ீ. கோதண்டராமன் ஆகியோர் மறுத்துள்ளனர். எல்லா மெய்யொலிகளையடுத்தும் ஒலித்துணை உயிர் தற்காலத் தமிழின் வட்டார வழக்குகளில் வருவதாக வில்லியம் பிரைட் குறிப்படுகின்றார். ஆனால் தற்காலத் தமிழில் பல இடங்களிலும் ஒலித்துணை ‘உ’கரம் வராமல் இறுதி மெய்யொலி கெட்டு விடுவதைக் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | பந்தல் | > | பந்த |
| | கந்தல் | > | கந்த |
| | மகள் | > | மக |
| | அவள் | > | அவ |
| | மாங்காய் | > | மாங்கா |

தமிழ், மொழியைப் பொறுத்த வரையில் மெய்யீற்றைக் கொண்டு முடியும் சொற்களில் பெரும்பாலானவை ‘உ’கரத்தை ஒலித்துணையாகப் பெறுகின்றன. சில சொற்களில் இறுதி ஒலி கெட்டு அதன் முன்னர் உள்ள ஒலி மூக்கொலிச் சாயல் பெறும்.

எ.கா. makaṉ > makă

சில சொற்களில் முன்னர்க் காட்டியது போல இறுதி மெய்யே கெட்டு விடுகின்றன.

ஆ.ளு. ஆன்டர்னோ (M.S. Andronov) என்னும் சோலியத் நாட்டு அறிஞர் தமிழில் ஒலித்துணையாக வரும் ‘உ’கரம் குறுகியது என்றும், நிலைபேறு அற்றது என்றும், வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்து புணரும்போது கெட்டுவிடும் இயல்புடையது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மெய்யீற்றைக் கொண்டு முடியும் சொற்களில் எல்லாம் ஒலித் துணையாக ‘உ’கரம் இடம்பெறும் என்பதைப் பொது விதியாகக் கொள்ள முடியவில்லை. சான்றாக ‘பால்’ என்னும் சொல் பேச்சு வழக்கில் ‘பாலு’ என்று மாற்றம் பெறுகின்றது. ஆனால் ‘அப்பால்’ (beyond) என்னும் சொல் ‘அப்பாலு’ என்று மாற்றம் பெறுவது கிடையாது. ஆவ்வாறே ‘கள்’ என்பது ‘கள்ளு’ என்று மாற்றம் பெறும். ஆனால் பன்மை விகுதியான ‘கள்’ என்பது ‘கள்ளு’ என்று மாறுவதில்லை.

குறுகிய ‘உ’கரத்தைப் பெற்ற எல்லாச் சொற்களும் அவ்வுகரம் கெட்ட வழி பொருளை இழக்காமல் நிற்பதில்லை. சான்றாக எள்ளு, பல்லு ஆகிய சொற்கள் எள், பல் என்று எழுத்து வடிவில் வழங்கும். ஆனால் பள்ளு (பள்ளுப் பாடல்) என்னும் சொல் ‘பள்’ என்று வடிவம் திரிந்து பொருள் திரியாமல் நிற்பது கிடையாது. எனவே குறிப்பிட்ட இடத்தில்தான் இவ்வுகரம் இடம்பெறும் என்பது வரையறை செய்வதற்கு அரியதாக அமைந்து விடுகின்றது.

**2.5 ஒலி மாற்றங்கள் (உயிரொலிகள்)**
**‘இ’கர, ‘எ’கர,’உ’கர, ‘ஒ’கர மாற்றங்கள் (Interchange of i/e and u/o)**

திராவிட மொழிகளின் உயிரொலிகளில் ஏற்படும் மாறுதல்களுள் ‘இ’கர, ‘எ’கர,’உ’கர, ‘ஒ’கர மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன. இவ்வொலி மாற்றங்கள் தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளுக்கிடையில் மட்டுமின்றித் தமிழ்மொழியின் வரிவடித்திற்கிடையேயும் பேச்சு வழக்கிற்கிடையேயும் நிகழ்வதைக் காணலாம்.

எ.கா. இலை > எலை (பேச்சு வழக்கு)

உலகம் > ஒலகம் (பேச்சு வழக்கு)

தமிழ் மொழியின் இவ்விரு வடிவங்களைப் பொறுத்தவரையில் இம்மாற்றம் முயற்சி எளிமை நோக்கி ஏற்படுவது என்பது தெளிவு. ‘இ’கர, ‘உ’கர ஒலிகளை எழுப்பும் நாவானது முன்னோக்கியும், பின்னோக்கியும் எழும்போது இடைநிலையில் நின்று விடுவதால் ‘அ’கரத்திற்கும் ‘இ’கரத்திற்கும் இடையில் ‘எ’கர ஒலியும், ‘அ’கரத்திற்கும் ‘உ’கரத்திற்கும் இடையில் ‘ஒ’கர ஒலியும் பிறந்து விடுகின்றன. இவ்வாறு ஒரே மொழியின் இரு வடிவங்களுக்குள் மட்டுமின்றி திராவிட மொழிக் குடும்பத்தைச் சாந்த பல்வேறு மொழிகளிடையிலும் இம்மாற்றம் நிகழ்கின்றது. இவ் உயிரொலி மாற்றத்தைப் பொறுத்தவரையில் கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளை ஓரினமாகவும், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளை வேறொரு இனமாகவும் பிரித்துக் கொள்ளலாம். ‘எ’கர, ‘ஒ’கர ஒலிகளைக் கொண்டு தொடங்கும் ஏராளமான கன்னடம், துளு, தெலுங்கு ஆகிய மொழிகளின் சொற்களுக்கு நிகராகத் தமிழிலும் மலையாளத்திலும் காணப்படும் சொற்களில் இவ்வொலிகளுக்கு இணையாக முறையே ‘இ’, ‘உ’ என்னும் உயிரொலிகளே உள்ளன. இவ்வொலி மாற்றம் இருவேறிடங்களில் (Front and Back) பிறக்கும் ஒரே இன ஒலிகளுக்குள் (High vowels) ஏற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**‘இ’கர ‘எ’கர மாற்றம்**

| தமிழ் | | மலையாளம் | கன்னடம் | துளு | தெலுங்கு |
|---|---|---|---|---|---|
| 1 | இலை | இல | எலெ | எலெ | எலெ |
| 2 | இறங்கி | இறங்ஙி | eragu | eraguni | eragu |
| 3 | இள | இள | எளெ | எளெ | எலெ |

**‘உ’கர ‘ஒ’கர மாற்றம்**

| தமிழ் | | மலையாளம் | கன்னடம் | துளு | தெலுங்கு |
|---|---|---|---|---|---|
| 1 | உடல் | ஊடல் | **Odalu** | **Udal/odal** | **Odalu** |
| 2 | உலை | உலெ | ஒலை | உலெ | ஒற |
| 3 | குடை | குட | **Kode** | **kode** | **godugu** |

இவ் உயிரொலி மாற்றத்தை ஆய்ந்த பல்வேறு மொழி ஒப்பியலறிஞர்களும் பல்வேறு காரணங்களைக் காட்டி அமைதி கூறினர். ஓர் ஒழுங்குபட்ட முறையில் அமையும் இவ்வொலி மாற்றங் குறித்து மு.ஏ.சுப்பையா தனது ஆய்வுக் கட்டுரையொன்றில் விரிவாக விளக்கிச் செல்கின்றார். அவர் கருத்துப்படி மூலத் திராவிட ‘இ’கர ஒலியை வளைநாவொலிகளோ(retroflex), இடையின ஒலிகளோ(Liquids), ‘அ’கர உயிரோ அடுத்து வரும்போது இவ்வொலி ‘எ’கர ஒலியாகக் கன்னடம், துளு, தெலுங்கு போன்ற மொழிகளிலும், தற்கால மலையாளத்திலும் மாறுகின்றது. அவ்வாறே மூலத் திராவிட ‘உ’கர ஒலியை மேற்கூறிய ஒலிகள் தொடர்ந்து வரும்போது அது ‘ஒ’கர ஒலியாகக் கன்னடம், துளு, தெலுங்கு போன்ற மொழிகளிலும் தற்காலத் தமிழிலும்(பேச்சுத்தமிழ்), மலையாளத்திலும் மாறுகின்றது. ஆனால்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | - | புகை |
| | கன்னடம் | - | hoge |

என்ற சொற்களில் ‘உ’ கரத்தையடுத்துக் ‘க’கர ஒலியே வருகின்றது. எனினும் அது கன்னடத்தில் ‘ஒ’கரமாக மாறுகின்றது. ஆவ்வாறே

| | | | |
|---|---|---|---|
| எ.கா | தமிழ் | - | இதழ் |
| | கன்னடம் | - | எசள் |
| | தமிழ் | - | இவர் |
| | கன்னடம் | - | egaru |

என்னும் சொற்களில் ‘இ’கரத்தையடுத்து ‘த்’, ‘வ்’ என்னும் ஒலிகள் வந்த போதிலும் ‘இ’கரம், ‘எ’கரமாக மாறுவதைக் காண்கிறோம். எனவே மு.ஏ.சுப்பையாவின் விதிமுறை பொருத்தமற்று அமைந்து விடுகின்றது.

இவ்விளக்கத்தைச் சற்றுமாற்றி ஒரு புது விளக்கத்தைக் கொடுகின்றார் பேராசிரியர் டு.ஏ.இராமசுவாதி ஐயர். அவர் கருத்துப்படி முதலசையில்(radical syallable) ‘இ’கர, ‘உ’கர ஒலிகள் வந்து இரண்டாம் அசையில் (Derivative syllable) ‘அ’கர ஒலி வந்து இடையில் தனி மெய்கள்(signle consonants) வந்தால் ‘இ’கரமும், ‘உ’கரமும் முறையே ‘எ’கர, ‘ஒ’கரமாக மாறும், ஆனால்,

| | | | |
|---|---|---|---|
| எ.கா (1) | தமிழ் | - | புன்னை |
| | தெலுங்கு | - | பொன்ன |

(2) தமிழ் - முட்டை

கன்னடம் - மொட்ட

(3) தமிழ் - முல்லை

கன்னடம் - மொல்ல

என்ற சொற்களில் ‘உ’கரங்களையடுத்து மெய்கள் இரட்டித்து (n̲n̲இṭṭஇடட) வந்த போதிலும் ஒலி மாற்றம் நிகழ்வதைக் காண்கிறோம். இதனால் தனி மெய்கள் வரும்போது மாற்றம் நிகழ்கின்றது என்ற பேராசிரியர் டு.ஏ.இராமசுவாமி ஐயரின் விளக்கமும் பொருத்தமற்று அமைந்து விடுகின்றது.

பொதுவாக, மூலத் திராவிடக் குறில் ஒலிகளான அ,இ,எ,உ,ஒ என்ற ஐந்தும் முதலசையில் இடம்பெறும் போது அ,இ,உ என்ற மூன்று ஒலிகளே இரண்டாம் அசையில் இடம் பெறுகின்றன.

எ.கா அயச.˙.ய.˙.அ

ளை.˙.ய.˙.ச ய

நட.˙.ை.˙.ட ை

ரச.˙.ர.˙.ட ர

எ,ஒ ஆகியன இரண்டாம் அசையில் அதிகமாக இடம்பெறுவதில்லை. இவற்றுள் தமிழிலும் மலையாளத்திலும் இரண்டாம் அசையில் ‘அ’கர உயிர் வரும்போது முதலசையில் ‘இ’கர உயிரும், தெலுங்கிலும் கன்னடத்திலும் ‘எ’கர உயிரும் நிற்றலைக் காணலாம்.

எ.கா தமிழ் - மடைடயை

மலையாளம் - மடைய

கன்னடம் - மநட

தெலுங்கு - மநடந

**மூலத் திராவிட ஒலிகள் - தமிழ், மலையாளம்**

*I (ய) (-a)

i(ca


*e


*u (-a)

u(ca

*o (-a)

**மூலத் திராவிட ஒலிகள் - தெலுங்கு, கன்னடம்**




இதனால் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் ‘இ’கர உயிர் இடம்பெறுமிடங்களில் எல்லாம் தெலுங்கில் ‘எ’கர உயிரே இடம் பெறுகின்றது. மேற்கூறிய எடுத்துக்காட்டில் தெலுங்கு மொழியிலுள்ள இறுதி ‘எ’கர ஒலி, ‘ஐ’கார ஒலியின் திரிபே.

தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் இரண்டாம் அசையில் ‘அ’கரம் வந்தால் முதலசையில் ‘இ’கர, ‘உ’கரமும், தெலுங்கில் இரண்டாம் அசையில் ‘அ’கரம் வந்தால் முதலசையில் ‘எ’கர. ‘ஒ’கரமும் இடம் பெறுவதைக் காணலாம்.

இவற்றுள் எவை மூலத் திராவிட மொழியினியல்பைக் காட்டுகின்றன என்ற வினா எழுதல் இயல்பே. பேராசிரியர் பரோ இ,உ ஆகிய ஒலிகளே முதன்மையானவை என்றும் தெலுங்கு, கன்னடம் போன்றவற்றிலுள்ள எ,ஒ ஆகியன காலத்தால பிந்தியன என்றும் கருதுகின்றனர். இம்மாற்றங்களுக்குச் சில விலக்குகளும் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| எ.கா | தமிழ் | - | இரண்டு |
| | கன்னடம் | - | எரடு |
| | தமிழ் | - | இடம் |
| | கன்னடம் | - | எடம் |

இவ்வெடுத்துக்காட்டுகளில் கன்னடத்தில் தமிழைப் போன்று இரண்டாம் அசையில் ‘அ’கரம் வந்தபோதும் முதலசையில் ‘இ’கரமே இடம்பெறுகின்றது. இதனால் ‘இ’கர, ‘உ’கர ஒலிகள் மூலத் திராவிட நிலையிலே பிரித்தறிய முடியாது மயங்கிக் காணப்படுவதாகப் பேராசிரியர் பரோ குறிப்பிட்டுச் செல்கின்றார். இதைத்தவிர கன்னட மொழியில் ஒரு வகையான மாற்றம் உள்ளது. மூலத் திராவிட ‘எ’கர, ‘ஒ’கர ஒலிகள் அடுத்த அசையில் ‘இ’, ‘உ’ ஆகிய ஒலிகள் வரும் போதும் ‘இ’, கர ஒலிகளாக இம்மொழியில் மாறிவிடுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா | தமிழ் | - | எதிர் |
| | கன்னடம் | - | னைசை |

தமிழ் - எலி

கன்னடம் - டைெ

இதனை ஓரினமாதல் (Vowel Harmony) என்று குறிப்பிடலாம். இக்கன்னடச் சொற்களில் இரண்டாவது அசையில் வரும் உயர் உயிர் ஒலி (High vowel) தன் ஆற்றலால் முன்னர் வரும் இடை உயிர் ஒலியை உயர் உயிர் ஒலியாக மாற்றி விடுகின்றது.

எ.கா எ > இ

ஒ > உ

இம்மாற்றம் கன்னட மொழியில் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்திருக்கலாம் என்பது அறிஞர்கள் கருத்து.

பேராசிரியர் பரோவின் கருத்துப்படி முதலசையில் வரும் ‘எ’கர, ‘உ’கர, ‘ஒ’கர மாற்றங்கள் எல்லா மொழிகளிலும் குழப்பமாகக் கபணப்படுவதால் மூலமொழியிலே இம்மாற்றங்கள் ஏற்பட்டுப் பின்னர் தனி மொழிகளில் இணையாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். மூலமொழியில் அடிப்படை ஒலி ‘இ’கர, ‘உ’கரங்களாக அல்லது ‘எ’கர, ‘ஒ’கரங்களாக என்று அறிய முடியாத நிலையில் உள்ளன. பழைய இலக்கியங்களில் இம்மாற்றங்கள் நிறைந்தும் பின்னர்க் குறைந்தும் உள்ளன. எனினும் பேச்சு மொழியில் இம்மாற்றங்கள் அதிகமாக உள்ளன.

இவ்வொலி மாற்றங்களுக்கு பேராசிரியர் பரோ கொடுத்த விளக்கத்தையும் முடிவையும் மேலும் ஆராய்ந்த பேராசிரியர் டீா.கிருஷ்ணமூர்த்தி, பேராசிரியர் பரோ குறிப்பிடும் மூலமொழிலுள்ள இம்மயக்கத்தை (merger) மூலத் திராவிட மொழிக்குத் திருத்தியமைத்துக் காட்டுகின்றார். அவர் கருத்துப்படி மூலத் தென் திராவிட மொழியில் ‘அ’கரத்தின் முன்னர் ‘இ’கர, ‘எ’கர ஒலிகள் ‘எ’கரமாகவும் ‘உ’கரமாகவும், ‘ஒ’கர ஒலிகள் ‘ஒ’கரமாகவும் மயங்கிக் கிடக்கின்றன.

**மூலத் திராவிடம்**

எ > (எ (-அ)

எ

மூலத் தென் உ

திராவிடம் உ > (ஒ (-அ

எவ்வாறாயினும் வரலாற்றுணர்வோடு நோக்கும்போது ‘இ’கர, ‘உ’கர உயிர் வடிவங்கள் தொன்மையானவை என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவையே ‘எ’கர, ‘ஒ’கரங்களாக மாற்றம் பெற்றமைக்கு இலக்கிய வழக்கும், பேச்சு வழக்கும் பல சான்றுகளைத் தருகின்றன.

மலையாள மொழியிலும் ‘இ’கர, ‘உ’கரங்களே ‘எ’கர, ‘ஒ’கர வடிவங்களுக்கு முற்பட்டனவாகக் காட்சி தருவதாக ஒப்பியல் அறிஞர்கள் பலரும் விளக்கியுள்ளனர். எனவே ‘இ’கர, ‘உ’கர ஒலிகளே தொன்மையானவை என்றும், இவை ‘எ’கர, ‘ஒ’கரமாக மாறும் நிலை மூலத் திராவிட, குறிப்பாக மூலத் தென் திராவிட மொழி நிலையிலே தெளிவாகப் பிரித்தறிய முடியாத நிலையில் மயங்கிக் கிடக்கிறது என்று அறிகின்றோம். பேராசிரியர் டீ.கிருஷ்ணமூர்த்தி கூறுவது போல் மூலத் திராவிட ‘இ’கரமும், ‘எ’கரமும், ‘அ’கரத்திற்க்கு முன்னர் மூலத் தென் திராவிட மொழிகளில் ‘எ’கரமாக ஒன்றுபடுகின்றன என்றும், அவ்வாறே ‘உ’கர, ‘ஒ’கரம் ஒன்றுபடுகின்றன என்றும் தெளியலாம்.

## 2.6 நெடில் குறில் மாற்றம் (Long Vs Short Alternation)

### உயிர் குறுகல்

அதிகமான திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்களின் தன்மை, முன்னிலை, எழுவாய் வடிவங்களின் (Nominal forms) முதலசையிலுள்ள நெடில் அவற்றின் வேற்றுமையேற்கும் வடிவங்களில் குறுகி நிற்கின்றன. மலையாளம், தமிழ், கன்னடம், துளு ஆகிய மொழிகளிலேயே இம்மாற்றம் இடம் பெறுவதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்டுச் செல்கின்றார்.[3] தெலுங்கு, கோண்டி போன்ற மொழிகளில் இம்மாற்றம் ஏற்படுவதில்லை என்பது அவாட கருத்து. ஆனால் தெலுங்கு மொழியில் இரண்டாம் வேற்றுமையில் நெடில் குறுவதைக் காணலாம்.

எ.கா. நீ , நின்னு

இவற்றுள் நெட்டுயிர்களே தொன்மையான வடிவமென்றும் அவை காலப்போக்கில் குற்றுயிர்களாக மாறின என்றும் டாக்டர் கால்டுவெல் கருதுகின்றார்.[4]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா. யான் | > | என் | ஆன் | > | அன் (குயி, கோண்டா) |
| நீ | > | நின் | ஆம் | > | அம் |
| நீயர் | > | நும் | | | |
| தான் | > | தன் | | | |

மூவிடப் பெயர்களில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களன்றி வினையடிச் சொற்களிலும் நெடில் - குறில் மாற்றங்கள் உள்ளன. பின்னொட்டுப்(suffix) பெறாத வினையடிச் சொற்களின் முதலசையில் நெடிலுயிர் நின்று அதனையடுத்து உயிரை முதலாகக் கொண்ட பின்னொட்டு வருமாயின், அவ்வினையடிச் சொல்லின் நெடில் குறிலாக மாறிவிடுகின்றது.

எ.கா. ஆர் ு , அரற்று

இம்மாற்றத்தை பேராசிரியர் டீ.கிருஷ்ணமூர்த்தி, ‘தெலுங்கு மொழியின் வினையடிகள்’(Telugu Verbal Bases) என்ற நூலில் விரிவாக ஆராய்கின்றார். இரண்டாவது அசையிலோ அல்லது பின்னொட்டிலோ உயிரொலி முதலில் வரவில்லையென்றால் இம்மாற்றம் நிகழ்வதில்லை. சிலவிடங்களில் வினையடிச் சொற்களோடு கால இடைநிலை, பாலறிகிளவி

ஆகியவற்றை இணைக்கும் போது வினையடிச் சொல்லையடுத்து வரும் பின்னொட்டில் உயிர் முதலில் வராமலே இம்மாற்றம் நிகழ்வதுண்டு.

எ.கா. காண் கண்டான்

எனினும் அதிகமான இடங்களில் உயிரொலி தவிர ஏனைய ஒலிகள் வரும்போது மாற்றம் நிகழ்வதில்லை.

எ.கா. ஆர் } அரற்று<br>ஆர்த்தான்

இம்மாற்றத்தைச் சில எண்ணுப் பெயர்களின் பெயரடைகளிலும் காண முடிகின்றது.

எ.கா ஓர் > ஒரு

ஈர் > இரு

மூ > மு(முப்பது)

சில பெயர்கள் வினைச் சொற்களாக மாறும் போதும் இம்மாற்றம் நிகழ்கின்றது.

எ.கா. மீன் > மின்

பெயரடைகளிலும் இம்மாற்றம் உள்ளது.[5]

எ.கா. பேர் > பெருங்கல்

பாசி > பசுமை

இம்மாற்றம் இன்னும் ஆய்வு நிலையிலேயே உள்ளது.

**உயிரின் நீட்சி**

சில வினைச் சொற்களின் அடிச்சொற்கள் தொழிற்பெயருக்குரிய விகுதிகள் இணைக்கப்படாமலேயே தொழிற்பெயர்களாகச் செயல்படுகின்றன. அவ்வாறு செயல்படும்போடு அவற்றின் முதலசையிலுள்ள குற்றுயிர் நீண்டு ஒல்ப்பதைக் காணலாம்.

எ.கா. கெடு > கேடு

படு > பாடு

சுடு > சூடு

பெறு > பேறு

இத்தகைய மாற்றம் சித்திய மொழிகளில் இல்லையென்றும் சமஸ்கிருத மொழியில் உண்டு என்றும் டாக்டார் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.[6] இவற்றைத் தவிர, சில சொற்களில் ஒரு மெய்யமெழுத்துக் கெடுமானால், அவ்விழப்பை ஈடுசெய்ய அம்மெய்யின் முன்னுள்ள உயிர் நீண்டு ஒலிக்கும். இதனை 'ஊழஅிநளெயவசழல டுநபெவாநநைப ழக ஏழறநடள' என்று அழைக்கின்றார்

புளும்.ீ.பீல்டு.[7] தமிழ் மொழியில் தொன்று தொட்டே இம்மாற்றம் இருந்து வந்தமைக்கு 'மகன்' எனனும் சொல்லிலுள்ள 'க'கர ஒலி கெட்டு குறில் நீண்டு 'மான்' என்று வருவதே சான்றாகும்.

எ.கா. பகல் > பால்

பகுதி > பாதி

மிகுதி > மீதி

என்ற சொற்களில் இம்மாற்றம் தெளிவாக உள்ளது.

**உயிர் இடம் பெறுதல்(Metathesis of Vowels)**

ஒரு சொல்லிலோ, உருபினிலோ உள்ள ஒலியன்கள் இடம் பெயர்ந்து நிற்குமென்றால் அதனை ஒலி இடம் பெயர்தல் என்பர். இம்மாற்றம் திராவிட மொழிகளின் உயிரொலிகளிலும் மெய்யொலிகளிலும் உள்ளது. ஒரு சொல்லிலுள்ள ஒலியன்கள் இவ்வாறு இடம் பெயர்ந்த போதிலும் சொற்களின் பொருள் மாறுபடுவதில்லை. இவ்வொலி மாற்றம் ஒலி நயம் பற்றி ஏற்படுவது என்ற கருத்தினையுடைய டாக்டர் கால்டுவெல் இதனை 'Euphonic Displacement of Consonants and Vowels' என்றழைக்கின்றார்.[8] மெய்யொலிகளைப் பொறுத்த வரையில் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இம்மாற்றம் அதிகமாக இடம் பெறுவதாக கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

எ.கா. தமிழ் - கொப்புள் , பொக்குலி – தெலுங்கு

, பொக்குள் - மலையாளம்

தமிழ் மொழிக்குள்ளே இத்தகைய மாற்றம் நிகழ்வதைக் காணலாம்.

எ.கா. சிவிறி > விசிறி

தசை > சதை

உயிரொலிகள் இடம்பெயர்ந்து நிற்குமியல்பைத் தெலுங்கு, குயி, குவி, கோண்டா போன்ற மொழிகளிலும், பெங்கோ, மண்டா, பிராகுயி போன்ற மொழிகளிலும் அதிகமாகக் காணமுடிகின்றது. தென் திராவிட மொழிகளில் இவ்வியல்பு மிகக் குறைவு. எனினும் தமிழில் இரண்டு , ரெண்டு என்று விளங்குவதைக் காணலாம். இங்கு இர , ரெ என்று இடம் பெயர்ந்துள்ளது. சிலர் இச்சொல் தெலுங்கிலிருந்து கடன் வாங்கப்பட்டது என்பர். இதைத் தவிர 'இரவு' என்னும் சொல் பேச்சு வழக்கில் 'ராவு' என்று மாறுவதைக் காணலாம். மூன்று உயிரொலிகளைக் கொண்ட, உயிரை முதலில் பெற்ற தெலுங்குச் சொற்கள் சிலவற்றில் ஒருவித ஒலி இடம்பெயர்தலும் உயிர் ஒலி இணைவும் (Euphonic amalgamation) நடப்பதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். இம்மொழியில் தமிழின் சுட்டுப்பெயர்களான அவரு, இவரு என்பன வாரு, வீரு என்று இடம் பெயர்கின்றன. இவ்வாறே அதி,இதி போன்ற தெலுங்குச் சொற்களோடு 'ஒ' என்னும் பின்னொட்டு இணைந்த அதினி, இதினி என்னும் வடிவங்கள் தானி, தீனி என்று இடம்பெயர்ந்து அமைகின்றன. இவற்றின் முதலிலுள்ள உயிரொலிகள் இரண்டாமிடத்திற்குப் பெயர்ந்து சென்று, அங்குள்ள 'அ'கர

உயிரைக் கெடுத்து அதற்கு ஈடாக நீட்சி பெற்று நிற்கின்றன. இவ்வாறே உரல் , ஒரலு , ரோலு என்று மாறுவதையும் டாக்டர் கால்டுவெல் காட்டிச் செல்கின்றார்.

இம்மாற்றம் பெரும்பாலும் வட திராவிட மொழிகளில் இடம் பெறுவதைத் தற்கால ஒப்பியலறிஞர்கள் கண்டுள்ளனர். எனினும் இம்மாற்றத்திற்கு ஒரு தெளிவான விதி வகுக்கவோ, விளக்கம் கூறவோ முடியவில்லை இம்மாற்றம் முற்காலத்தில் ‘யபிரயநசளளை’ என்று அழைக்கப்பட்டதாகப் பேராசிரியர் எமனோ சுட்டிச் செல்கின்றார். மூலத் திராவிட மொழியில் ற்,ட்,ண்,ல்,ழ்,ள்,ர் ஆகிய ஏழு மெய்யொலிகளும் மொழி முதலில் வருவதில்லை. ஆனால் குயி, குவி, தெலுங்கு போன்ற நடுத் திராவிட மொழிகளில் ஒலி இடம் பெயர்தலால் ‘ண’கர மெய் தவிர்த்த ஏனைய ஆறு மெய்யொலிகளும் மொழி முதலில் இடம் பெறுகின்றன. அவ்வாறே மூலத் திராவிட மொழியில் இரு மெய்கள் இணைந்து (consonant clusters) மொழி முதலில் வருவதில்லை. ஆனால் ஒலி இடம் பெயர்ந்தமைவதால் குயி, தெலுங்கு போன்ற மொழிகளில் இத்தகைய இரட்டை மெய்கள் மொழிகளில் இத்தகைய இரட்டை மெய்கள் மொழி முதலில் வருகின்றன. தெலுங்கு மொழியில் ட்,ர்,ல்,ள்,ழ் அரிய ஒலிகள் பிரித்தறிய முடியா வண்ணம் மயங்கிக்(merger) கிடக்கின்றன. அதுவும் ஒலிகள் இடம் பெயர்ந்தமையால் ஏற்படும் விளைவே.

இவ்வொலி மாற்றத்தை வாய்பாடு முறையில் பேராசிரியர் டீா.கிருஷ்ணமூர்த்தி விளக்கிச் செல்கின்றார். அவர் கருத்துப்படி (உ$^{1}$)எ$^{1}$ உ$^{2}$ எ$^{2}$ என்பதில் எ$^{1}$ எ$^{2}$ ஆகிய உயிர்கள் இணைக்கின்றன(vowel contraction). இவற்றையடுத்துத் தனி மெய் வருவதாக இருந்தால் இரண்டு உயிர்களும் இணைந்து நெடிலாகும். மேய்கள் இணைந்து வருமானால் அவை குறில் ஒலியாக நிற்கும்.

1. அ ൃ அ , ஆ ∴ அ

எ.கா (ஊ) யசய (ஏ) ,(ஊ1) ஏ1ஊ2ஏ2, tracu

அரவு என்னும் இச்சொல் வசயஉர என்று தெலுங்கிலும், சயஉ என்று பெங்கோ மொழியிலும் காணக்கிடக்கின்றது. இங்கு ‘உ’ என்னும் தனி மெய்யை அடுத்து வந்ததால் ய ൃ ய , யஹ என்று நெடிலானது. இது இரட்டை மெய்களை அடுத்து வந்தால் ‘ய’ என்று குறிலாகவே நிற்கும்.

2. இ ൃ அ , எ.׃.ஏ
   எ ൃ அ , ஏ.׃.எ

இங்கு தனிமெய்யை அடுத்து வந்தால் ‘ஏ’ நெடிலாகவும் இரட்டை மெய்களை அடுத்து வந்தால் ‘எ’ எனக் குறிலாகவும் நிற்கின்றது.

3.உ ൃ அ , ஓ.׃.ஒ

எ.கா. அவன்று , வான்று (கோண்டா)

அவரு , வாரு (கோண்டா)

தலை , வடயர (குவி)

ஒலி இடம் பெயரும் விதியால் திராவிட மொழிகளின் பொதுவான அமைப்பிலிருந்து சற்று மாறுபட்ட தெலுங்கு, குவி போன்ற மொழிகளிலுள்ள சொற்களுக்கு விளக்கங்கொடுக்க முடிகின்றது. எனினும் இத்துறையில் ஆராய வேண்டியன நிரம்ப உள்ளன என்கிறார் எமனோ.

## 2.7 உயிரொலி இயைபு (Harmonic Sequence of Vowels)

இரு வேறுபட்ட ஒலிகள் ஓர் இனத்தைச் சார்ந்த ஒலிகளாக மாறுவதை ஓரினமாதல் (Assimilation) என்பர். இவ்வோரினமாதலைப் பெரும்பான்மை மெய்யொலிகளிலும் சிறுபான்மை உயிரொலிகளிலும் காண்கிறோம். உயிரொலிகளில் ஏற்படும் ஓரினமாதலை 'Harmonic Sequence of Vowels' என்ற சிறு தலைப்பில் தனியாக ஆராய்கின்றார் டாக்டர் கால்டுவெல்.[13] இத்தகைய ஒலிமாற்றம் சித்திய மொழியினத்தைச் சார்ந்த துருக்கி மொழி, பினீசிய மொழி, மங்கோலிய மொழி போன்றவற்றிலும் இடம் பெறுவதாகக் குறிப்பிடுகின்றார். திராவிட மொழிகளைப் பொறுத்தவரையில் இவ்வியைபு தெலுங்கு மொழயில் அதிகமாக உள்ளது.

எ.கா. தானி ூ கு , தானிகி

ஆவு ூ னி , ஆவுனு

இவ்விரு தெலுங்குச் சொற்களில் முதற் சொலிலிலுள்ள 'கு' என்னும் நான்காம் வேற்றுமையுருபு 'கி' என்று திரிந்தது. அதாவது முன்னுயிர் ூ பின்னுயிர் ஞீ முன்னுயிர் ூ முன்னுயிர் என்று ஓரினமாகியது. அவ்வாறே இரண்டாவது சொல்லிலுள்ள 'னி' என்னும் உருபு 'னு' என்று மாறியது. 'ஆவு' என்ற சொல்லிலுள்ள 'உ'கர உயிர் அதையடுத்து வந்த முன்னுயிராகிய 'இகரத்தையும் 'உ'கரமாக மாற்றி, பின்னுயிர் ூ முன்னயிர் ஞீ பின்னுயிர் ூ பின்னுயிர் என்று ஓரினமாகியது. தெலுங்கு மொழியில் 'இ'கரம்", 'உ'கரம் ஆகிய இரு உயிரொலிகளுக்கு இடையில் மட்டுமே இம்மாற்றம் உள்ளதாக டாக்டர் கால்டுவெல் கருதுகின்றனார்.[14] சிலவிடங்களில் உருபுகளில் மாற்றம் ஏற்படாது அவ்வுருபுகளே அடிச்சொற்களில் மாற்றம் விளைவிப்பதைக் காணலாம்.

எ.கா. கத்தி ூ லு (பன்மை உருபு) , கத்தலு.

கன்னட மொழியின் சில வட்டார வழக்குகளிலும் இம்மாற்றம் உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றனர்[15]. தமிழிலும் சில சொற்களை விரைந்து சொல்லும்போது இத்தகைய மாறுதல்கள் ஏற்படுவதுண்டு[16].

எ.கா. கத்திக்குப் பிடி , கத்திக்கிப்பிடி

துளு மொழியிலும் இத்தகைய ஒலி மாற்றம் இடம் பெறுகின்றது. தமிழில் 'அன்றி' 'இன்றி' என்னும் வினையெச்சங்களிலுள்ள 'இ'கரம், 'உ'கரமாகத் திரிவதற்கு நன்னூலார் இலக்கணம் வகுக்கின்றாா[17].

எ.கா. நாளன்றி ூ போகி , நாளன்று போகி

இம்மாற்றங்களெல்லாம் முயற்சி எளிமை நோக்கி ஏற்படுவனவாகும்.

### உடம்படுமெய் பெறல் (Prevention of Hiatus)

உயிரொலியை இறுதியிலே கொண்ட சொற்களும், உயிரை முதலிலே கொண்ட சொற்களும் புணரும்போது விட்டிசை(Hiatus) ஏற்படுதல் இயல்பு. இவ்விட்டிசையைத் தடுக்க உடம்படுமெய்கள்(gilides) தேன்றுகின்றன. அதிகமான இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் விட்டிசையைத் தடுக்க (ெ) என்னும் மூக்கொலி பயன்படுத்தப்படுகின்றது. சமஸ்கிருத மொழியில் சிலவிடங்களில் 'ம'கரமும் உடம்படுமெய்யாகப் படுத்தப்படுகின்றது. ஆங்கில மொழியில் ஒன்றன் உயிர் கெட்டு அதற்குப் பதிலாக ஈருயிரோடும் நெருங்கிய தொடர்புடைய மற்றொரு ஒலி தோன்றுவதுண்டு[19].

எ.கா. னநை ு பைெ ஸ்ரீ னலபைெ (நை.ந.-கெட்டது)

இவ்வாறு விட்டிசை ஏற்படாவிடில் ஈருயிர்களும் இணைந்து (vowel contraction) ஒன்றுபட்டு விடும். வடமொழியில் பல சொற்களில் இவ்வாறு ஈருயிர்கள் இணைந்து ஒன்றுபடல் உண்டு.[20]

எ.கா. மட ு அதிபதி ஸ்ரீ மடாதிபதி

(அ ு அ ஸ்ரீ ஆ)

நர ு இந்திரன் ஸ்ரீ நரேந்திரன்

(அ ு இ ஸ்ரீ ஏ)

தமிழில் உயிர்களின் தன்மையினையும் மெய்களின் தன்மையினையும் ஒருங்கே பெற்றுள்ள அரையுயிர்களென்று (semi vowels) அழைக்கப்படும் 'ய'கர, 'வ'கர ஒலிகள் ஒலிகள் உடம்படுமெய்யாகப் பயன்படுத்தப்படுகின்றன.தொல்காப்பியர் உடம்படுமெய்யைச் சுட்டிச் செல்கின்றாரெனினும் அவற்றை வரையறுக்கவில்லை. தொல்காப்பியர் காலத்தில் உடம்படுமெய் உசச்ரிப்பில் பயன்படுத்தப்பட்ட போதிலும் வரிவடிவில் இடம் பெறாமலிருந்திருக்கலாமென்[22]. நன்னூலார்,

"இ ஈ ஐ வரு யவ்வும் ஏனை

உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும்

உயிர்வரின் உடம்படு மெய் யென்றாகும்"

என்று 'ய'கர, 'வ'கர உடம்படுமெய்கள் வருமிடங்களை வரையறுக்கின்றார்.

கன்னடத்தில் அ, உ என்னும் உயிர்களையடுத்து 'வ'கரமும் எ, இ ஆகிய உயிர்களையடுத்து 'ய'கரமும் உடம்படுமெய்யாக இடம் பெறும்.

எ.கா. குடி ு ஓ , குட்யோ(குடித்தல்)

குடி ு அத்தெ , குட்யத்தொ

(அது குடித்தது)

மகு ு இன , மக்வின்

(குழந்தையினுடைய)

இவ் உடம்படு மெய்கள் ஒட்டுநிலை மொழியாக அமையும் திராவிட மொழிகளில் தவிர்க்க முடியாத ஒன்றாகி விடுகின்றது. அதோடு இவற்றால் அடிச்சொற்களும் சிதையாமல் காக்கப்படுகின்றன.

டாக்டர் கால்டுவெல் ‘வ’கர உடம்படுமெய்யே ம், ன், ய் போன்ற ஒலிகளாக மாறியது என்கிறார். ம்,ன்,ய்,வ் ஆகிய நான்கு உடம்படுமெய்களும் தெலுங்கு, கன்னடம், துளு ஆகிய மொழிகளில் இடம் பெறுகின்றன. தமிழில் ‘வ’கரம் வருமிடங்களிலெல்லாம் தெலுங்கு, துளு ஆகிய மொழிகளில் ‘ன’கரம் வருகின்றது. பழங்கன்னடத்தில் ‘ம’கர உடம்படுமெய்யே இடம் பெறுகின்றது.

எ.கா. தமிழ் -குரு – வ் - ஐ , குருவை

பழங் கன்னடம்-guru- m- am>gurumam

எண்ணுப் பெயர்களைப் பொறுத்த வரையில் தெலுங்கில் ‘ஹ’ ஒலியும் தமிழில் ‘ன’ ஒலியும் உடம்படுமெய்யாக உள்ளன.

எ.கா.தெலுங்கு –பயனை-(ா)-நரெ

தமிழ் - பதினைந்து

கால்டுவெல், ‘காட்டின’ பொருளன போன்ற சொற்களில் ‘ன’கரம் உடம்படுமெய்யாக உள்ளது என்கின்றார். ஆனால் அந்த ‘ன’கரம் இன், அன் என்னும் சாரியைகளிலுள்ள மெய்யேயன்றி உடம்படுமெய்யல்ல என்கிறார் டாக்டர் மு.வரதராசனார்[28].

**2.8மெய்யொலிகளின் இயைபும் திரிபும்**

**மூலத்திராவிட மெய்யொலிகள்**

தமிழ் இலக்கண வல்லுநர்கள் மெய்யொலிகளை அவை ஒலிக்கும் இயல்பு நோக்கி வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படுத்துவர். மொழிநூலார் மெய்யொலிகளை அவை பிறக்கும் இடம் (Points of articulation) நோக்கியும், ஒலிக்கும் இயல்பு (Manner of articulation) நோக்கியும் கூறுபடுத்தி விளக்கிச் செல்கின்றனர். திராவிட மொழிகளில் ஏராளமான மெய்யொலிகள் காணக்கிடக்கின்றன. எனினும் ஒப்பியல் மொழிநூலார் பதினாறு மெய்யொலிகளையே பொருள் வேறுபாடு உணர்த்தி நிற்கும் தனி மெய்யொலியன்களாகக் கருதுகின்றனர். இவற்றுள் இடையண்ண மூக்கொலியனான ‘ஞ’கரத்தைப் பல்வேறு அறிஞர்களும் தனி மெய்யொலியனாகக் கொள்ள மறுத்தனர். பின்னர் பேராசிரியர் டீா. கிருஷ்ணமூர்த்தி இதனைத் தனி ஒலியன் என்று நிறுவிக்காட்ட, பேராசிரியர் எமனோவும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு திராவிட மொழிகளின் அடிச்சொல்லகராதியில் ‘ஞ’கரத்தைத் தனி ஒலியனாக இணைத்து அதன் திரிபுகளை விளக்கியுள்ளார்.

திராவிட மொழிகளின் மெய்யொலிகளில் பல்வேறு வகையான ஒலிகள் காணப்பட்டபோதிலும் வளைநா ஒலிகள் (Retroflex) குறிப்பிடத்தகுந்த சிறப்பிடத்தைப்

பெறுகின்றன[1]. திராவிட மொழிகளின் மெய்யொலிகள் மொழியில் பயின்று வருவதில் சில பொதுத்தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றன. பொதுவாக ஒரு சொல்லின் முதலில் ஒரு மெய்யும் அதனையடுத்து ஓர் உயிரொலியுமாக ((C)VCV) அமைவதைக் காணலாம். அம்மொழிகளில் ஒரு சொல்லின் முதலில் இருமெய்கள் இரட்டித்து நிற்பதில்லை. சில மொழிகளில் ஒலிகள் இடம்பெயர்த்து (Metathesis) நிற்கும்போது மட்டுமே மொழி முதலில் மெய்யொலிகள் இரட்டித்தோ, மயங்கியோ வருகின்றன.

**அட்டவணை**

I. **திராவிட மொழிகளில் காணக்கிட்க்கும் மெய்யொலிகள்**

| விவரம்<br><br>ஒலி | இதழ்<br><br>ஒலி | பல்<br><br>ஒலி | முன்னண்ண<br><br>ஒலி | வளைநா முன்தொண்டை<br><br>ஒலி | இடையண்ண<br><br>ஒலி | பின்னண்ண<br><br>ஒலி |
|---|---|---|---|---|---|---|
| ஒலிப்பில்<br>வ<br>ங | ஒலி ါ | | | வ | | ṯ<br>ம |
| ஒலிப்பில்<br>ப | ஒலி டி | ஷ | ன<br>g | ḏ | | ḍ |
| ஒலிப்பில் | ஒலி | è | | | உ | |
| ஒலிப்பில்<br>து | | ஒலி | | | | து |
| ஒலிப்பில்<br>Ś<br>ா | ஒலி கு | | Óளு | Ś̓ | | ளு<br>ஒ |
| ஒலிப்பில்<br>ண | ஒலி | ட | ப<br>கண | | | Ẓ |
| வருடொலி | | | ச | ṛ | | |
| மூக்கொலி<br>ṅ | | அ | ெ<br>ṇ | | ń | ṉ |

| | | |
|---|---|---|
| **பிரிவளியின ஒலி** | **ஐ** | **ஐ** |
| **இடையின ஒலி ஏ ண** | **ல** | |

II. திராவிட மொழிகளின் தனி மெய்யொலியன்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ச் | ட் | ற் | த் | ப் |
| | ஞ் | ண் | | ந் | ம் |
| | | | | ர் | வ் |
| | | | ல் | | |
| | ய் | ழ் | | | |
| | | ள் | | | |

**III. திராவிட மொழிகளின் மொத்த மெய்யொலிகள்**[3]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க்- | ச்- | | | த்- | ப்- |
| -க்- | -ச்- | -ட்- | -ற்- | -த்- | |
| -க்க்- | -ச்ச்- | -ட்ட்- | -ற்ற்- | -த்த்- | -ப்ப்- |
| -ங்க்- | -ஞ்ச்- | -ண்ட்- | -ன்ற்- | -ந்த்- | -ம்ப்- |
| | ஞ் | -ண்-:-ண் | -ன்- | | ம் |
| | ய் | | | | வ் |
| | | -ழ்-:ழ்- | | -ர்- | -வ்வ்- |
| | | -ள்-:ள்- | -ல்:-ல் | | |
| | | -ள்ள்- | -ல்ல்- | | |

மூலத் திராவிட மெய்யொலிகள் இளைமொழிகளில் பலவாறு திரிந்து நிற்கின்றன.

**க;(*k) –பின்னண்ண ஒலிப்பில் ஒலி (Velar Voiceless Stop)**

**க்- (மொழி முதல்)**

இவ்வொலி திராவிட மொழிக் குடும்பத்தின் பெரும்பாலான மொழிகளில் மொழி முதலில் ஒலிப்பில் ஒலியாகவேயுள்ளது. மூலத் திராவிட மொழி முதல் 'க்'கரம், தமிழ், மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளில் இ, ஈ, எ, ஏ போன்ற முன்னுயிர்களையடுத்து வரும்போது இடையண்ண ஒலியாக (Patal Consonant) மாறி விடுகின்றது. ஆனால் குருக், மால்டோ போன்ற வட திராவிட மெரிகளில் முன்னுயிர்களையடுத்து வரினும் மாறாமல் நிற்பதைக் காணலாம். மால்டோ மொழியில் 'இ'கர உயிரையடுத்து வரும் போது மட்டும் 'ஞ' என்ற மாறுகின்றது. பிராகுயி மொழியில் இது 'ஒ' என்ற உரசொலியாகத் திரிபடைகின்றது. இதனை உரசொலியாதல் (Fricativisation) என்பா். தமிழில் சிலவிடங்களில் மொழியிறுதியில் இவ்வொலி 'ழ'கரமாகவும் திரியும்.

எ.கா. முகை , முழை

இவ்வொலி ஜரிஷ் மொழியிலுள்ள 'பா' ஒலியை ஒத்துள்ளது என்று குறிப்பிடுகின்றாா் டாக்டா் கால்டுவெல்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | கன்னடம் | - | கிவி |
| | | தமிழ், மலையாளம் | - | செவி |
| | (2) | தமிழ் | - | கிளி |
| | | தெலுங்கு | - | சிலுகா |
| | (3) | தமிழ் | - | சில |
| | | தெலுங்கு | - | கீவு |
| | (4) | தமிழ் | - | கண் |
| | | குருக் | - | முாயெ |
| | | மால்டோ | - | ஙரயரெ |

**அண்ண ஒலியாதல; (Palatalisation)**

மூலத் திராவிட 'க'கர ஒலி இ, ஈ, எ, ஏ ஆகிய முன்னுயிர்களையடுத்து வரும்போது தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் இடையண்ண ஒலியான 'ச'கரமாகத் திரியும் எனக் கண்டோம். ஆனால் தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் முன்னுயிர்களையடுத்து ட், ண், ள் போன்ற வளைநா ஒலிகள் வரும்போது இம்மாற்றம் ஏற்படுவதில்லை. இவ்விதிவிலக்கு தெலுங்கு மொழிக்கு மட்டும் பொருந்துவதில்லை.

எ.கா.தமிழ் - கிளி, தெலுங்கு - சிலுகா

மூலத் திராவிடப் பின்னண்ண ஒலி அண்ண ஒலியாகத் திரியுமியல்பைத் தெலுங்கு மொழியில் அதிகமாகக் காணமுடிகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | தமிழ் | - | சீழ் |
| | | கன்னடம் | - | கீவு |
| | | தெலுங்கு | - | சீவு |
| | (2) | கன்னடம் | - | கிவி |
| | | தமிழ் | - | செவி |
| | | தெலுங்கு | - | செவி |

இத்திரிபு தமிழ், மலையாளம், தெலங்கு ஆகிய மொழிகளின் ஒலிக் குறிப்புச்சொற்களில் ஏற்படுவதில்லை என்பது பலர் கருத்து[5].

எ.கா. தெலுங்கு – கிலகில

கன்னட மொழியில் இத்திரிபு இல்லாத போதிலும் அண்ண ஒலியாக மாறிய பல தெலுங்குச் சொற்கள் இடம்பெறுவதைக் காணலாம்[6]. வட திராவிட மொழிகளான குருக், மால்டோ ஆகிய மொழிகளில் இம்மாற்றம் ஏற்படுவதில்லை[7].

திராவிட மொழிகளில் இடம்பெறும் இவ்வொலித் திரிபு மூலத்திராவிட ஒலிகளைத் திருத்தி அமைக்கவும் ஓரளவிற்குத் துணை செய்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | கன்னடம் | - | கின்ன |
| | தமிழ் | - | சின்ன |

இவ்விரு சொற்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது ‘கின்ன’ என்ற சொல்லில் இடம்பெறும் பின்னண்ண ஒலி தொன்மையான ஒலி என்றும், அதுவே இடையண்ண ஒலியாகத் திரிந்தது என்றும் எளிதில் உய்த்துணர முடிகின்றது.

இவ்வொலி மாற்றத்தைச் சமஸ்கிருத மொழியில் காணமுடியவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | சமஸ்கிருதம் | - | கீர்த்தி |
| | | தமிழ் | - | சீர்த்தி |
| | (2) | தமிழ் | - | சேரல் |

சமஸ்கிருதம் - கேரள்

அசோகனது தொன்மையான கல்வெட்டில் ‘கேரளபுத்திர’ என்ற தொடரைக் காண்கிறோம். இது தமிழ்மொழியிலுள்ள ‘சேரமான்’ என்பதற்கு நிகரான வடமொழித் தொடர் என்பது தெளிவு. இங்கும் வடமொழியில் பின்னண்ண ஒலி இடம் பெறத் தமிழில் இடையண்ண ஒலியே காணப்படுகின்றது.

தமிழ் மொழியில் ‘ஐ’காரத்திற்கு முன்னரும் ‘க’கர ஒலி திரியாமல் நிற்கின்றது. ஆனால் தெலுங்கு மொழியில் அது ‘ச’கர் ஒலியாக மாறிவிடுவதைக் காண்கிறோம்.

எ.கா. தமிழ் - கைத்தல்

தெலுங்கு - சேது (cedu)

எனவே மூலத் திராவிட ஒலியான ‘க’கரம், ‘ச’கரமாகத் திரிவதைப் பொறுத்தமட்டில், தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளுக்குள் ஒற்றுமைகள் பல இருப்பினும் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளின் போக்கு ஒரு விதமாகவும், திராவிட மொழிகளில் முதலில் பிரிந்து சென்ற தெலுங்கு மொழியின் போக்கு வேறொரு விதமாகவும் அமைகின்றது என்பது தெளிவு[8].

இதைத்தவிர இ, ஈ, ஐ என்னும் உயிரொலிகளை அடுத்து வரும் ‘த’ என்னும் பல்லொலியும் (Dental Consonant) தமிழிலே ‘ச’கர ஒலியாகத் திரிகின்றது. ‘த’கர ஒலியின் இன ஒலியான ‘ந’கரமும் இவ்வாறு திரியும் இதனை இலக்கணப்போலி (Free Variation) என்பர்.

எ.கா. சிரித்த , சிரிச்ச

வைத்த , வச்ச

கிழிந்த , கிழிஞ்ச

**உரசொலியாதல் (Fricativisation)**

மூலத்திராவிட ஒலியான ‘க’கரம் தமிழ், மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளில் இடையண்ண ஒலியாக மாறுவதைப் போன்று குருக், மால்டோ, பிராகுயி ஆகிய மொழிகளில் உரசொலியாக் மாறுகின்றது. இம்மாற்றம், ‘க’கர ஒலியையடுத்து இ, ஈ ஆகிய ஒலிகள் தவிர்த்த ஏனைய உயிரொலிகள் வரும்போது மட்டுமே நிகழ்கின்றது.

எ.கா. தமிழ் - கண்

குருக், பிராகுயி - மாயபெ


இச்சொல்லில் ‘அ’கர உயிரின முன்னா் ‘க’கர ஒலி உரசொலியாக மாறுவதைக் காண்கிறோம்.

எ.கா.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் | | | கன்னடம் | - | கிவி |
| மலையாளம் | } | செவி | பிராகுயி | - | மாயக |
| தெலங்கு | | | குருக் | - | மாநடினய |
| துளு | | கெபி | | | |

**-க்- (மொழியிடை)**

மொழி முதலில் ஒலிப்பில் ஒலியாக ஒலிக்கும் ‘க’கரம் பொதுவாக மொழியிடையில் இரட்டிக்குமிடங்களில் வன்மையாகவும், மூக்கொலி.




களையடுத்து ஒலிப்பு ஒலியாகவும், உயிரொலிகளுக்கிடையில் உரசொலிமாகவும் ஒலிக்கினற்து. மேலும் இது தோடா மொழியில் -ஒ- ஒலியாகவும், பா்ஜி மொழியில் -ப- ஒலியாகவும், பிராகுயி மொழியில் -மா- ஒலியாகவும், மால்டோ மொழியில் -ங- ஒலியாகவும் மாறுகின்றது. தமிழ், தெலுங்கு போன்ற் மொழிகளில் இது மொழியிடையில் ‘ச’கர ஒலியாக மாறுவதில்லை.

எ.கா. தமிழ் - புகை கொடகு - பொக (ீழபந)

மலையாளம் - புக கோண்டி - பொய (ீழலய)


கோடா - பெக்(ீநப) கோண்டா - பொகோ (ீழபழ)

தோடா - ீயஒ

**ச்(ழூஉ) -இடையண்ண ஒலிப்பில் ஒலி (palata 1 Voiceless Stop)**

**ச்- (மொழி முதல்)**

மொழி முதலில் இடம்பெறும் மூலத்திராவிட ஒலியான 'ச'கரம் தமிழ் மொழியின் பேச்சு வழக்கில் பெரும்பாலும் ஸ்- என்று உரசொலியாக ஒலிக்கின்றது. மூக்கொலியை அடுத்து வரும்போது ஒலிப்பு ஒலியாகவும் (த), மொழியிடையில் இரட்டிக்குமிடங்களில் தடையொலியகாவும் (Stօl) ஒலிக்கின்றது. தோடா போன்ற தென் திராவிட மொழிகளில் 'த'கரமாகவும்', பெங்கோ, மண்டா போன்ற மொழிகளில் 'ஹ்' ஒலியகாவும், துளு போன்ற மொழிகளில் 'ஸ்' ஒலியாகவும், வட திராவிட மொழிகளில் 'க'கர ஒலியாகவம் இது திரிந்து ஒலிப்பதைக் காணலாம். இடையண்ண ஒலியான 'ச'கரம் வட திராவிட மொழிகளில் 'க'கர ஒலியாகத் திரிவதைப் பின்னண்ண இனமாதல் மொழிகளில் 'க'கர ஒலியாகத் திரிவதைப் பின்னண்ண இனமாதல் (Velarisation); என்பர் ஒப்பியல் மொழிநூலார், 'ச'கர ஒலியின் முன்னர் பெரும்பான்மையாக உ, ஊ ஆகிய உயிர்கள் இடம்பெறும் போதும், சிறுபான்மை எ, ஏ ஆகிய உயிர்கள் வரும்போதும் இம்மாற்றம் நிகழ்கின்றது என்பர்[9]. தென் திராவிட மொழிகளில் மொழி முதல் 'ச'கர மெய் சில நிலைகளில் கெட்டுவிடுமியல்பைக் காண முடிகின்றது.




எ.கா. தமிழ் - ஈ (கொடு)

கன்னடம் - ஈ

கொலாமி - சி (si)

கோண்டா - hi

மால்டோ - ciye

**மொழி முதல் ‘ச’கரம் கெடுதல்**[10]

**(The Loss of initial c/s in South Dravidian)**

மூலத் திராவிட மொழி முதல் ‘ச’கர ஒலி, தென் திராவிட மொழிகளில் கெட்டுவிடும் இயல்பைப் பேராசிரியர் பரோ விரிவாக ஆராய்ந்துள்ளார். அதே சமயம் மூலத்திராவிட மொழி முதல் ‘ச’கர ஒலி கெடாமல் அமைகின்ற பல சொற்களையும் அவர் திரட்டித் தந்துள்ளார். இதனால் மூலத் திராவிட மொழியில் இரண்டு வகையான ‘ச’கரங்கள்,

1. ჻.Dr. *C->;S.Dr.Φ –
2. P.Dr. *C- S.Dr. C-/S-

என இருந்தனவா அல்லது ஒரே வகையான ‘ச’கரம் இருந்ததா என்ற ஐயம் எழுகின்றது. கோண்டி போன்ற மொழிகளில் ‘ச’கரம் ‘ஹ’கர ஒலியாகத் திரிந்து பின்னர் கெட்டு விடுகின்றது[11]. தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளிலுள்ள இந்தோ – ஆரிய மொழிகளிலிருந்து கடன் வாங்கின ‘ஸ’கரத்தை மொழி முதலில் கொண்ட சொற்களில்தான் ‘ச’கரம் கெடுமியல்பு பெரும்’பாலும் நிகழ்வதாகப் பேராசிரியர் பரோ கருதுகின்றார். தொல்காப்பியர் ‘ச’கர மெய்மொழி முதலில் இடம்பெறாது என்று குறிப்பிடுவதும் இங்கு ஒப்பு நோக்குதற்குரியது.

“சகரக்கிளவியும் அவற்றோ ரற்றே

அ, ஐ, ஔ எனும் மூன்றலங் கடையே” (தொல்-எழுத்து-62)

சில எடுத்துக்காட்டுகள்

1. தமிழ் - அரண்

   மலையாளம் - அரண்

   சமஸ்கிருதம் - ஸரண்

2. தமிழ் - அமண்

சமஸ்கிருதம் - sramana

பிராகிருதம் - ]kdh

3. தமிழ் - ஆடை

சமஸ்கிருதம் - ஸாடகா

தென் திராவிட மொழிகளில் காணப்படும் மொழிமுதல் 'ச'கரத்தைக் கொண்ட சொற்கள் இம்மாற்றத்திற்குப் பின்னர் புகத் தொடங்கின. இவற்றின் வரவால் மொழி முதலில் 'ச'கரத்தைப் பெறாமல் தமிழில் வந்து வழங்கியச் சொற்களும் அழியத் தொடங்கின என்பது பேராசிரியர் பரோவின் கருத்து. மொழி முதலில் 'ச'கரத்தைக் கொண்ட வடசொற்கள் சங்க காலத்திலேயே 'ச'கர மெய் கெடாமல் வழங்கியமைக்கு நற்றிணையில் (பா- 228) இடம்பெறும் 'சாபம்' என்ற சொல்லே சான்றாகும். மேலும்

1. தமிழ் - சாகாடு

சமஸ்கிருதம் - ஸகட

2. தமிழ் - சடை

சமஸ்கிருதம் - ஜடா

என்னும் சொற்களிலும் 'ச'கரம் கெடவில்லை. இச்சொற்கள் தமிழிலிருந்து சமஸ்கிருத மொழிக்குச் சென்றிருக்க வேண்டுமென்பது பேராசிரியர் பரோவின் முடிவு. கோண்டி, குயி போன்ற மொழிகளிலுள்ள மொழி முதல் 'ள' ஒலியும் 'ச'கர ஒலியிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்று பேராசிரியர் பரோ குறிப்பிடுகின்றார்[2].

எ.கா. தமிழ் - அணில்

குயி - siruni

துளு - சணிலு

கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் எழுந்த அசோகனது கல்வெட்டொன்று புறநானூற்றில் காணப்படும் 'அதியமான்' என்னும் பெயரைச் 'சதியபுத்ர' (Satiya putra) என்று குறிப்பிடுகின்றது. இங்குத் தமிழ் வடிவான 'அதிய' என்பது மொழி முதலில் 'ச'கரத்தைப் பெற்று 'சதிய' என்று வடமொழியில் வழங்கியது என்பது தெளிவு. 'மகன்' என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபாகிய 'மான்' என்பது வடமொழியில் 'புத்ர' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

'ச'கரம் கெடாமல் வருகின்ற திராவிட மொழிச் சொற்களுள் 'ச'கர ஒலிக்குச் 'ச'கரம், 'ஸ'கரம் என்ற இரு மாற்றொலிகள் உள்ளன. இவற்றுள் தென் திராவிட மொழிகளுள் பெரும்பாலும் 'ஸ'கர ஒலி வழங்கவில்லை. கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய மொழிகளில்

இவ்விரு மாற்றொலிகளும் உள்ளன. எனினும் ‘ச’கர ஒலி மொழி முதலில் கெடுமியல்பை வட திராவிட மொழிகளிலும், நடுத்திராவிட மொழிகளிலும் காணமுடிவதில்லை.

திராவிட மொழிகளில் மொழி முதல் ‘க’கர ஒலி ‘ச’கர ஒலியாகத் திரியும் ஒலி மாற்றம் தொடங்குவதற்கு முன்னரே ‘ச’கர ஒலி கெடுமியல்பு நிகழ்ந்து விட்டது. ‘க’கர ஒலி ‘ச’கரமாக மாறிய பின்னர் எங்குமே மொழி முதல் ‘ச’கரம் கெட்டதாகத் தெரியவில்லை. எனவே கிறிஸ்து பிறப்பதற்குச் சில காலங்களுக்கு முன்னரே (அசோகன் கல்வெட்டு எழுந்த காலத்தையொட்டி) ‘ச’கரம் கெடுமியல்பும், அதனையடுத்து அண்ண ஒலியாகத் திரியமியல்பும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது பேராசிரியர் பரோவின் முடிவு.

**-ச்- (மொழியிடை)**

தமிழ், மலையாளம் போன்ற் தென் திராவிட மொழிகளில் மூக்கொலியை அடுத்து வரும் ‘ச’கர ஒலி ‘ஜ‘ ஒலியாகவும், உயிரொலிகளுக்கிடையில் வரும்போது ‘ளு’ என்று உரசொலியாகவும், மாறுவதைக் காண்கிறோம். ‘ச’கரத்தின் ஒலிப்பு ஒலியான ‘ஜ‘ ஒலியை மொழியிடையில் கொண்ட வடசொற்கள் தமிழில் பயின்று வரும்போது அவ்வொலி ‘ஸ’ ஒலியாகவோ, ‘ய’ ஒலியாகவோ மாறுகின்றது.

எ.கா. ராஜா , ராசா (rāsā) , ராயன்

தமிழ்நாட்டின் தென்பகுதி வட்டார வழக்கிலும் ‘ச’கர ஒலி, ‘ய’கரமாக மாறுமியல்பு உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்[14].

எ.கா. அரிசி , அரியி

மலையாள மொழியில் இவ்வொலி சிலவிடங்களில் கெட்டுவிடுகின்றது.

எ.கா. அரிசி , அரி (மலையாளம்)

டாக்டர் குண்டர்ட் கன்னடத்திலுள்ள ‘பெசர்’ என்னும் சொல்லின் மொழியிடைச் ‘ச’கர ஒலி ‘த’கர் ஒலியாகப் ‘புதர்’ (pudar) என்று துளு மொழியில் மாறுவதாக் கூறிச் செல்கின்றார். எனவே ‘ச’கர ஒலிக்கும் ‘த’கர ஒலியும் ஒரு மாற்றொலியாக அமைகின்றது என்பது தெளிவு. மொழியிடையில் இரட்டிக்குமிடங்களில் ‘ச’கர ஒலிதடையொலியாக ஒலிக்கும். எனினும் இவ்விரட்டிப்பு ஒலிகளைத் தோடா, கோடா ஆகிய மொழிகளில் காண்பது அரிது.

மொழியிடையில் வரும் இச்சகர ஒலி குயி, மண்டா, பெங்கோ போன்ற மொழிகளில் ா ஒலியாகவும், கன்னடம், தோடா, நாயக்கி, பர்ஜி, குருக், மால்டோ, பிராகுயி போன்ற மொழிகளில் ள ஒலியாகவும், கொடகு, துளு ஆகிய மொழிகளில் த ஒலியாகவும், கடபாவில் ‘ய’கர ஒலியகாவும் திரிகின்றது

மூ -உ-

- -ஊ- (தமிழ், மலையாளம், தெலுங்கு - இரட்டிக்குமிடங்களில்)
- -ள- (தமிழ், கன்னடம், தெலுங்கு, கொலாமி, நாயக்கி, கோண்டா, கோண்டி, வடதிராவிட மொழிகள்)
- -வ- (துளு)
- -த- (கொடகு, துளு,தமிழ் மலையாளம் மூக்கொலிகளை அடுத்து வருமிடங்களில்)
- -ல- -ன-(பர்ஜி, கடபா ஒல்லாரி)
- -ா- (பொங்கோ, மண்டா குயி)

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | 1. | தெலுங்கு | - | usugu (துடைத்தல்) |
| | | கொலாமி | - | usm |
| | | பர்ஜி, கடபா | | uyk |
| | 2. | தமிழ் | - | நசி |
| | | குயி | - | nahi |

**ட் (*t) வளைநா ஒலிப்பில் ஒலி (Retroflex Voiceless Stop)**

**-ட்- (மொழியிடை)**

திராவிட மொழிகளில் பொதுவாக ‘ட’கரம் ‘ண’கரம் ஆகிய ஒலிகள் மொழி முதலில் இடம்பெறுவதில்லை. ‘ட’கர ஒலியை மொழி முதலில் பெற்றுள்ள வேற்றமொழிச் சொற்கள் கூடத் தமிழ் மொழியின் இலக்கிய வடிவில் இடம்பெறும்போது ‘இ’கர உயிரை அதிகமாகப் பெற்று நிற்பதைக் காணலாம். இவ்வொலி தமிழில் இரட்டிக்குமிடங்கள் தவிர ஏனையவிடங்களில் ஒலிப்பு ஒலியாக ஒலிக்கின்றது. நாயக்கி, மண்டா குயி, குவி போன்ற மொழிகளில் இது –ச- ஒலியகாவும்: கோடா, தோடா, கன்னடம், கொடகு, துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி போன்ற மொழிகளில் -ன- ஒலியாகவும், கடபா, கோண்டி, பிராகுயி ஆகிய மொழிகளில் -ச-ஒலியாகவும் ஒலிக்கின்றது.

எ.கா. 1. தமிழ் - மயனந

தோடா - மயசவ

2. கன்னடம் - ரனய

கோண்டா - ரசரஅ

**த் (*t) பல்லினத் தடையொலி (Dental Voiceless Stop)**

இவ்வொலி அதிகமான திராவிட மொழிகளில் திரிபின்றிக் காணப்படுகின்றது.

எ.கா.

| | | |
|---|---|---|
| தமிழ், மலையாளம் | | தான் |
| தோடா | - | தோன் |
| தெலுங்கு, கொடகு, துளு, பிராகுயி | - | தானு |
| பிராகுயி | - | தேன் |

கன்னடம், துளு ஆகிய மொழிகளில் முன்னுயிர்களையடுத்து வரும்போது சில இடங்களில் ‘ச’கரமாகவும் மாறுகின்றது.

**-த்- (மொழியிடை)**

மொழியிடையில் மூக்கொலிகளையடுத்து வரும்போது ‘த’கர வல்லொலி ஒலிப்பு ஒலியாக மாறுகின்றது. தமிழ் நாட்டின் தென் பகுதி வட்டார வழக்கில் உயிரொலிகளின் முன்னர் வரும் ‘த’கரவொலி, ‘ர’கரமாக மாறுமியல்பை டாக்டர் கால்டுவெல் சுட்டிச் செல்கின்றார்[16].

எ.கா. விதை , விரை

இவ்வாறே கன்னட மொழியிலுள்ள் ‘யன’ என்னும் சாரியை ‘அர்’ என்று மாறுவதையும் காணலாம். இத்தகைய மாற்றம் பிராகிருத மொழியிலும் உள்ளது. ‘த’கரவொலி மலையாள் மொழியில் ‘ல’கரவொலியாகத் திரிகின்றது. இத்திரிபு வடமொழியிலிருந்து கடன் வாங்கிய சொற்களிலேயே அதிகமாக உள்ளது.

எ.கா. தாத்பரியம் , தால்பரியம்

தமிழ் மொழியின் பேச்சுவழக்கில் இவ்வொலி சில விடங்களில் ‘ள’ ஒலியாகத் திரிகின்றது.

எ.கா. பெரிது , பெரிசு

இவ்வொலி மாற்றம் மலையாளம் மொழியிலும் இடம் பெறுவதாக டாக்டர் குண்டர்ட் கட்டிச் செல்கின்றார். ‘ந’கர மெய்யோடு இணைந்து வரும் ‘த’கர மெய் மலையாள மொழியிலும், தமிழ்மொழியின் பேச்சு வழக்கிலும் ‘ச’கரமாகத் திரிவதைக் காணலாம்.


எ.கா. ஐந்து , அஞ்சு

மொழியிடையில் இரட்டிக்குமிடங்களிலும் இவ்வொலி ‘ச’கரமாகத் திரிதலுண்டு

எ.கா. வித்து , விச்சு

சிரித்த , சிரிச்ச

தோடா மொழியில் இது -Φ- ஒலியாகவும், கோண்டாவில் -னன- ஒலியாகவும் குருக், மால்டோ மொழிகளில் -வா- ஒலியாகவும், ஏனைய மொழிகளில் ஒலிப்பு ஒலியாகவும் திரியும்.




எ.கா. தமிழ் - udavu

கோடா - odg

தோடா - wiax

**ப் (மூழி) இதழின ஒலிப்பில் ஒலி (Bilabial Vocless Stop)**

**ப்- (மொழி முதல்)**

மொழி முதலில் வரும் ‘ப’கர ஒலி பெரும்பாலான திராவிட மொழிகளில் திரிபின்றி ஒலிப்பில் ஒலியாகவே ஒலிக்கின்றது. இப் ‘ப’கர ஒலி கன்னடத்தில் ‘ஹ்’ என்று உரசொலியாகத்

திரிகின்றது. திராவிட மொழிகளில் கன்னட மொழியில் மட்டுமே இவ்வியல்பு ஒழுங்காகக் காணக்கிடக்கின்றது.

எ.கா. 1. தமிழ் - பத்து

கன்னடம் - ஹத்து

2. தமிழ் - பாம்பு

கன்னடம் - ஹாவு

பழங்கன்னடத்திலும்,கன்னட மொழியோடு நெருங்கிய தொடர்புடைய படகா மொழியின் வட்டார வழக்கிலும் இம்மாற்றமின்மையால் இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் கன்னட மொழியில் புகுந்திருக்க வேண்டுமென்பர்[18]. மராத்தி மொழியிலும் இத்தகைய மாற்றம் இடம்பெறுவதாக டாக்டா கால்டுவெல் குறிப்பிடுகின்றார்[19]. கன்னட மொழியின் மற்றொரு வட்டார வழக்கான தேவாங்கா கன்னடத்தில் மொழி முதலில் வரும் ‘ப’கர ஒலி கெட்டு விடுகின்றது[20].

எ.கா. தமிழ் - பால்

கன்னடம் - ஹாலு

தேவாங்கா கன்னடம் - ஆலு

மொழிமுதல் ‘ப’கரம் ஒலி தெலுங்கில் சிலவிடங்களில் ‘ம’கரமாகவும் திரியும்.

எ.கா. தமிழ் - பதி

தெலுங்கு – மிதி (தொம்மிதி)

தமிழில் சிலவிடங்களில் இது ‘வ’கரமாகவும் மாறுகின்றது.

எ.கா. பகு , வகு

**-ப்- (மொழியிடை)**

மொழியிடையில் மூக்கொலிகளையடுத்து இது ஒலிப்பு ஒலியாக மாறுகின்றது. இரட்டிக்குமிடங்களில் மட்டுமே இது ஒலிப்பில் ஒலியாக ஒலிக்கின்றது. தமிழில் மொழியிடையில் இவ்வொலி சிலவிடங்களில் ‘ம’கரமாக மாறுகின்றது.

எ.கா. எண்பர் , எண்மர்

மலையாள மொழியிலும் இம்மாற்றம் ஏற்படுவதுண்டு.

எ.கா. தமிழ் - உண்பான்

மலையாளம் - உண்மான்

**ற் (மூச) முன்னண்ண ஆடொலி (Alveolar trill)**

**-ற்- (மொழியிடை)**

மூலத்திராவிட 'ற'கர ஒலி மொழி முதலில் இடம் பெறாது. இவ்வொலி தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளில் இலக்கிய வடிவில் மட்டுமே காணப்படுகின்றது. துளு மொழியில் இது –த- என்ற ஒலிப்பு ஒலியாகத் திரிகின்றது[21].

எ.கா. தமிழ் - ஆறு

துளு - ஆஜி

சிலவிடங்களில் துளு மொழியில் இது க்அ ஒலியாகவும் திரியும்.

எ.கா. தமிழ் - நூறு

துளு - ரெனர

தமிழ் மொழியின் பேச்சு வழக்கில் ர், ற் ஆகிய ஒலிகள் மாறி மாறி பொருள் மாற்றமின்றி ஒலிக்கின்றன. இதன் இரட்டை ஒலி –ற்ற்- தெலுங்கினில் -ண்ட்- என்று மாறும்.

எ.கா. தமிழ் - ஒற்றை


தெலுங்கு - ஒண்டி[22]

இவ்வொலி கோடா, கொடகு ஆகிய மொழிகளில் 'ர'கர ஒலியாகவும், கொலாமி, நாயக்கி ஆகிய மொழிகளில் 'க'கர ஒலியாகவும் மாறுகின்றது. குயி மொழியில் தஇ ச் ஆகிய ஒலிகளாகத் திரிகின்றது. கோண்டா, பிராகுயி போன்ற மொழிகளில் இது பெரும்பாலும் இரட்டித்து வருகின்றது. இது குருக், மால்டோ போன்ற மொழிகளில் ள ஒலியாகவும், கடபா மொழியில் 'ய'கர ஒலியகாவும் மாறுகின்றது. தெலுங்கிலும், கன்னடத்திலும் 'ட'க்ர ஒலியாகத் திரியும்.

-ச- (பழந்தமிழ், மலையாளம்,கன்னடம்,தெலுங்கு)

-r- (கோடா, கொடகு, துளு,கொலாமி,நாயக்கி, குயி, குவி, குருக் மால்டோ, பிராகுயி)

-ம- '(தமிழ், மலையாளம் - இரட்டிக்குமிடங்கள்)




**மூக்கொலிகள் (Nasal Consonants)**

**ங் (*n) பின்னண்ண மூக்கொலி (Velar nasal)**

**-ங்- (மொழியிடை)**

இவ்வொலி மொழிக்கு முதலில் வராது. எனினும் ‘எங்ஙனம்’, போன்ற வடிவில் இவ்வொலி மொழிக்கு முதலில் வருவதாக நன்னூலார் குறிப்பிடுகின்றார். இக்கருத்தை மொழிநூலார் மறுப்பர். பழந்தமிழில் ங், க் ஆகிய பின்னண்ண ஒலிகள் இணைந்து வருமிடமெல்லாம் மலையாளத்தில் இரு பின்னண்ண மூக்கொலிகளின் இணைவாக் மாறிவிடுகின்றது. இத்தகைய மாற்றம் வல்லொலியும் அதன் இன மூக்கொலியும் இணைந்து வருமிடங்களிலெல்லாம் (i.e. Nasal stop clusters) நிகழ்வதைக் காணலாம். இதனை மூக்கினமாதல் (Nasal Assimilation) என்பர்.

Ta. N + P > Ma. N +N

| | | |
|---|---|---|
| எ.கா. தமிழ் | - | நீங்கள் |
| மலையாளம் | - | நிங்ஙள் |

‘ங’கரஒலி, ‘ன’கர ஒலியாக வட திராவிட மொழிகளிலும், நடுத் திராவிட மொழிகளிலும் திரிந்து காணப்படுகின்றது. கோடா, தோடா கன்னடம் போன்ற மொழிகளில் இவ்வொலி கெட்டு விடுகின்றது.

| | | |
|---|---|---|
| எ.கா. தமிழ் | - | தூங்கு |
| மலையாளம் | - | வர ஹெஹெர |
| கோடா | - | வரப |
| தோடா | - | வரஒ |
| கன்னடம் | - | வரபர |

மால்டோ மொழியில் இது ‘ம’கரமாகத் திரிகின்றது.

எ.கா. தமிழ் - தூங்கு

மால்டோ - tumgle

‘ங’கர ஒலி பெரும்பாலும் அதன் இன ஒலிப்ப ஒலியோடு (ப) இணைந்தே வருவதால் மொழிநூலார் இதனைத் தனி ஒலியனாகக் கொள்ளார்.

**ஞ்- (*n`-) இடையண்ண மூக்கொலி (Palatal nasal)**

‘ஞ’கர மெய் பழந்தமிழிலும். மலையாளத்திலும், துளு மொழியின் சிலசொற்களிலும் மொழிக்கு முதலில் வருகின்றது. இம்மொழிகளில் பொருளை வேறுபடுத்திக் காட்ட இவ்வொலி துணை செய்வதால் இதனைத் தனி ஒலியனாகக் கொள்ளலாம். தற்கால மலையாளத்தில் இவ்வொலி மிகுந்துள்ளது. மொழி முதலில் ‘ஞ’கரம் இடம் பெறும் மலையாள மொழியின் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களில் ‘ந’கரமே மொழி முதலில் காணப்படுகின்றது.

எ.கா. மலையாளம் - ஞான்

தமிழ் - நான்.˙.யான்

பழந்தமிழில் ‘ஞ’கரம் வழங்கிய இடங்களிலும் தற்காலத் தமிழில் ‘ந’கரம் இடம் பெறுகின்றது.

எ.கா. ஞமலி , நாய்

ஞண்டு , நண்டு

ஞாயிறு , நாயிறு

பழந்தமிழில் ‘ஞ’கரம், ‘ஞெ’கரமாக மாறுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

எ.கா. ஞமர் , ஞெமர்

ஞண்டு , ஞெண்டு

‘அ’கர ஒலி ‘உ’கர ஒலியாக மாறும் இம்மாற்றம் பெரும்பாலம் ச், ஞ், ய் ஆகிய இடையண்ண ஒலிகளையடுத்தே நிகழ்கின்றது.

எ.கா. (1) தமிழ் - ஞங்கூழ்

மலையாளம் - ஞங்நேள்

கன்னடம் - நேகல், நேகில்

(negal. negil)

(2) தமிழ் - ஞாண்

கன்னடம் - நேண்

(3) தமிழ் - ஞாயிறு

கன்னடம் - நேசர் (nesar)

(4) தமிழ் - ஞாழல்

கன்னடம் - நேழல்

திராவிட மொழிகளில் ‘ஞ’கர ஒலி, மலையாளத்தில் மட்டும் பழங் காலத்திலிருந்து இன்றுவரை மாறாமல் இருந்து வருகின்றது. இம்மொழியின் சில வட்டார வழக்குகளில் மட்டும் ‘ஞ’கர ஒலி, ‘ஞெ’கர ஒலியாக மாறுகின்றது. தமிழிலும் மலையாளத்திலும் ‘ஊ’கார உயிரின் முன்னர் ‘ஞ’கரம் வருவதில்லை. தொல்காப்பியர் ஆ, எ, ஒ ஆகிய ஒலிகளின் முன்னர் மட்டுமே இவ்வொலி இடம் பெறுவதாக குறிப்பிடுகின்றார். எனவே அவர் காலத்தில் ‘ஞெண்டு’ போன்ற வடிவங்களே இருந்திருக்க வேண்டும். எனினும் புறநானூற்றில் ‘ஞமலி’ என்ற சொல்லும் திருமுருகாற்றுப்படையில் ‘ஞரல்’ என்ற சொல்லும் இடம் பெறுகின்றன. இவற்றுள் ‘ஞமலி” என்பதை நச்சினார்க்கினியர் திசைச்சொல் என்பர்.

மொழியிடையில் ‘ச’கர ஒலிக்கு முன்னர் வரும் ‘ஞ’கர ஒலி தெலுங்கு, கொலாமி, நாயக்கி ஆகிய மொழிகளில் ‘ண’கர ஒலியாகத் திரிகின்றது.

எ.கா. தமிழ் - அஞ்சு

தெலுங்கு - anju

மூலத் திராவிட ஒலியான ‘ஞ’கரத்தை மலையாள மொழி மட்டுமே அதிகத் திரிபின்றிப் பேணிக் காக்கின்றது.

**-ண்- (*-n-) வளைநா மூக்கொலி (Retroflex nasal)**

இவ்வொலியும் திராவிட மொழிகளில் மொழி முதலில் இடம் பெறாது. தமிழிலுள்ள ‘ண’கர மெய் தெலுங்கில் ‘ன’கர மெய்யாகக் காணப்படுகின்றது.

எ.கா. கண் , கன்னு

விண் , வின்னு

மண் , மன்னு

தமிழில் 'ன'கரம் வருமிடங்களில் மலையாளத்தில் 'ண'கர மெய் இடம்பெறுவதைக் காணலாம்.

எ.கா. நினக்கு , நிணக்கு

தமிழில் சிலவிடங்களில் 'ண'கரம், 'ம'கரமாகத் திரிவதுண்டு.

எ.கா. எண்பது , எம்பது

இவ்வொலி கோண்டா, குவி போன்ற மொழிகளில் திரிபின்றிக் காணப்பட்ட போதிலும் ஏனைய நடுத்திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் 'ண'கரமாகத் திரிகின்றது. தமிழில் ண்ட் , ட்ட் என்று மாறுகின்றது[26].

எ.கா. எண்டு , எட்டு

**ந் (*n) பல்லின மூக்கொலி (Dental nasal)**

'ந'கர ஒலி தமிழில் மொழி முதலிலும் இடையிலும் இடம்பெறுகின்றது. தெலுங்கு மொழியில் இது 'ம'கர மெய்யாக மாறுவதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். தமிழில் இவ்வொலி 'த'கர ஒலியின் முன்னா் 'ஞ'கர ஒலியாகவும், இதனையடுத்து வரும் 'த'கர ஒலி 'ச'கர ஒலியாகவம் மாறுவதைக் காணலாம். இம்மாற்றம் பெரும்பான்மை பேச்சு வழக்கிலும் சிறுபான்மை இலக்கிய வழக்கிலும் இடம் பெறுகின்றது.

எ.கா. ஐந்து , அஞ்சு

இம்மாறுதல்கள் பெரும்பாலும் 'ந'கர ஒலி இ, ஈ, ஐ என்னும் முன்னுயிர்களையடுத்து வரும்போதே நிகழ்கின்றது. தற்காலத் தமிழில் இவ்வொலி இதற்கரிய வரிவடிவத்தோடு எழுதப்பட்ட போதிலம் முன்னண்ண மூக்கொலியான (யடஎநழடயச யெளயட) 'ன'கர ஒலிகாவே ஒலிக்கப்படுகின்றது. கொலாமி, நாயக்கி போன்றி மொழிகளில் மொழிமுதல் 'ந'கர ஒலி கெட்டு விடுகின்றது[29]. குயி மொழியில் இது ன ஒலியாகத் திரிகின்றது. 'த'கர மெய்யும் 'ந'கர மெய்யும் இணைந்த இரட்டைகள் (உடரளவநசள) மலையாள மொழியில் இரு 'ந'கர ஒலி இணைந்த இரட்டைகளாக (ந்ந்) மாறிவிடுவதைக் காணலாம்.

எ.கா. தமிழ் - வந்து

மலையாளம் - வந்நு

துளு மொழியில் மொழியிடையில் இது 'த'கர ஒலியாகத் திரிதலும் உண்டு.

எ.கா. தமிழ் - பந்து

கன்னடம் - வந்து

துளு - டியவவந

பிராகுயி மொழியில் முன்னுயிர்களின் முன்னர் மட்டும் இது ன ஒலியாக மாறுகின்றது.

ழுெ-
- ெ- (அதிகமான மொழிகளில்)
- ெ- (மலையாளம், தற்காலத் தமிழ்)
- Ø (கொலாமி, நாயக்கி)
- ன- (பிராகுயி – முன்னுயிர்களின் முன்)
- ன- (குயி)

**ம் (*m) இதழின மூக்கொலி (Bilabial nasal)**

அதிகமா்ன திராவிட மொழிகளில் திரிபின்றி வழங்கும் மொழி முதல் ‘ம’கரம், பிராகுயி மொழியில் ‘டி’ ஒலியாகத் திரிகின்றது். இம்மாற்றம் முன்னுயிர்களின் (front vowels) முன்னர் ஏற்படுவதாக பேராசிரியர் டீா.கிருஷ்ணமூர்த்தி குறிப்பிடுகின்றார்[30]. கன்னடம் போன்ற மொழிகளில் மொழியிடையில் இது ‘வ’கர ஒலியாகத் திரிகின்றது.

எ.கா. (1) தமிழ், மலையாளம் } பாம்பு

கன்னடம் - பாவு

(2) தமிழ் - நாம்

கன்னடம் - நாவு

நீலகிரி மலைப் பகுதிகளில் பேசப்படும் தோடா, கோடா ஆகிய இரு மொழிகளிலும் மொழியிடையில் இவ்வொலி கெட்டு விடுகின்றது.

எ.கா. தமிழ் - பாம்பு

கோடா } - ௭ழீ

தோடா

தமிழில் மொழியிறுதியில் ‘ம’கர, ‘ன’கர ஒலிகள் மாறி மாறி இடம் பெறுவதைக் காணலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ.கா. | (1) | மரம் | (2) | குளம் | (3) | கலம் |
| | | மரன் | | குளன் | | கலன் |

இவற்றை இலக்கணநூலார் போலி (Free variation) என்பர். சிலர் இவ்விரு ஒலிகளும் பொருள் வேறுபாட்டிற்குத் துணை செய்கின்றன என்றும் ‘ம’கரம் பன்மை எண்ணையும், ‘ன’கரம் ஒருமை எண்ணையும் உணர்த்துகின்றன என்றும கூறுவர்.

**-ன் (n) முன்னண்ண மூக்கொலி (Alveolar nasal)**

மொழி முதலில் இடம் பெறாத இவ்வொலியை ஒப்பியலார் ஒலியனாகக் கொள்வதில்லை. இவ்வொலி மொழியிடையில் இனவல்லொலியோடு இணைந்தும், இரட்டித்தும், மொழியிறுதியில் தனியாகவும் வருகின்றது. மலையாள மொழியில் இது ‘ந’கரமாகத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | - | மூன்று |
| | மலையாளம் | - | மூந்நு |

கன்னடம், தோடா, கோடா போன்ற மொழிகளில் மொழியிடையில் இது கெட்டு விடுதலும் உண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | தமிழ் | - | ஒன்று |
| | | கோடா | - | ழன |
| | | தோடா | - | றனை |
| | (2) | தமிழ் | - | மூன்று |
| | | கன்னடம் | - | மூறு |

**இடையின் ஒலிகள் (Liquids)**

இடையின ஒலிகளில் ய், வ் ஆகிய இரண்டுமே தமிழில் மொழி முதலில் இடம் பெறுகின்றன. இவை தவிர்ந்த இடையின் ஒலிகளை மொழி முதலில் கொண்ட பிற மொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கும்போது அவை அ, இ, உ என்னும் உயிர்களில் யாதேனும் ஒன்றை முன்னர்ப் பெற்று நிற்கும்.

எ.கா. அரங்கம், இராமன், உலோகம்

இடையின ஒலிகளுள் ழ், ள், ற், ன் ஆகியன திராவிட மொழிகளுக்கேயுரிய சிறப்பெழுத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன.

**ய் - (*y-) அரை உயிர் (Semi vowel)**

தமிழில் இவ்வொலி மொழி முதலில் இடம் பெறுகின்றது. ஏனைய மொழிகளில் மொழி முதல் 'ய'கரம் குறைவாகவே உள்ளது. தமிழிலும் இதற்கு ந், ஞ் ஆகிய மாற்று ஒலிகள் உள்ளன.

எ.கா. யான் - யாம்

நான், ஞான் } நாம்

இவற்றுள் 'ய'கரமே தொன்மையான ஒலி என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்து. அவர் 'ய'கர வொலி ந, ஞ, எ போன்ற ஒலிகளாகத் திரிவதற்குப் பல சான்றுகள் தருகின்றார்.

எ.கா. சமஸ்கிருதம் - யுகா (yuga) , நுகம்

யமா , யமன், நமன், ஞமன், எமன்

ஆங்கிலம் - anchor , நங்கூரம்

தமிழ் மொழியில் 'ய'கர ஒலி மொழியிடையில் 'ன'கர ஒலியாக மாறுவதைக் காணலாம்.

எ.கா. சொல்லிய, சொல்லின, சொன்ன

இதோடு 'ய'கரம் தமிழில் ச், ஜ் என்னும் ஒலிகளாகவும் திரிகின்றது. இம்மாற்றம் பெரும்பாலும் தென் பகுதிவட்டார வழக்கில் (Southern dialect) இடம்பெறுவதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

எ.கா. வயிறு , வசறு

பையன்கள் , பசங்கள்

வயலை , பசலை

கன்னடம், துளு ஆகிய மொழிகளில் மொழியிடையில் இது ன ஒலியாக மாறுகின்றது. தமிழில் மொழியிறுதியில் இடம் பெறும் 'ய'கர ஒலி 'இ'கர உயிரின் மாற்று வடிவமே.

மூலத்திராவிட ஒலியான ‘ய’கரம் மொழியிடையிலம் இறுதியிலும் அதிகத் திரிபின்றியே காணப்படுகின்றது. கொடகு, துளு போன்ற மொழிகளில் இவ்வொலி அருகியே காணப்படுகின்றது. பிராகுயி மொழியில் இவ்வொலியை அதிகமாகக் காண முடியவில்லை. குயி மொழியில் இது த ஒலியாகத் திரிகின்றது. நாயக்கி, கடபா, பர்ஜி போன்ற மொழிகளில் இது வ ஒலியாக மொழியிடையில் ஒலிக்கின்றது.

| | | |
|---|---|---|
| எ.கா. தமிழ் | - | நாய் |
| நாயக்கி | - | ate |
| பர்ஜி | - | netta |
| கடபா ஒல்லாரி | - | nete |
| கடபா சில்லூர் | - | nette |

தமிழ் மொழியின் எழுத்துவடிவில் மொழியிறுதியில் இடம்பெறும் ‘ய’கர ஒலி பேச்சுவழக்கில் கெட்டுவிடுகின்றது.

எ.கா. talay > tala

அதிகமான திராவிட மொழிகளில் ‘ய’கரம் உடம்படுமெய்யாகப் (glide) பயன்படுத்தப்படுகின்றது.

மொழிமுதல் ‘ய’கரத்தைப் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர் இது ‘ஆ’கார உயிரோடு மட்டும் இணைந்து மொழி முதலில் வருமென்கின்றார். பழந்தமிழிலக்கியங்களிலும் ‘ய’கரத்தை மொழி முதலில் கொண்ட் ‘யாறு’, ‘யாடு’, ‘யாணர்’, ‘யானை’ போன்ற பல சொற்களைக் காண்கின்றோம். எனினும் அச்சொற்களிலுள்ள மொழி முதல் ‘ய’கரம் கெட்டு விடுகின்றது. அவை.

| | | |
|---|---|---|
| எ.கா. யாமை | , | ஆமை |
| யானை | , | ஆனை |
| யாண்டு | , | ஆண்டு |
| யாறு | , | ஆறு |
| யாடு | , | ஆடு |

என்று வழங்குவதைக் காணலாம். தென் திராவிட மொழிகளில் ‘ஆ’கார உயிரின் முன்னர் ‘ய’கரம் கெடுவதைப் போன்று வட திராவிட மொழிகளிலும் நடுத் திராவிட மொழிகளிலும் ‘ஏ’கார உயிரின் முன்னர் இது கெடுகின்றது.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | யாடு , ஆடு |
| கோடா | - | ar |
| தோடா | - | ad |
| கோண்டி | - | eti |
| குருக் | - | era |
| மால்டோ | - | ere |

மொழிமுதல் ‘ய’கரத்தையடுத்து வரும் அ, ஆ என்னும் உயிரொலிகள் தெலுங்கு மொழியில் எ,ஏ என்னும் உயிரொலிகளாக் மாறுகின்றன.

எ.கா. யான் , ஏனு

ஆ, ஏ ஆகிய ஒலிகளில் எது தொன்மையானது என்பதை ஆராயும் மு.ஏ. சுப்பையா இவ்விரு ஒலிகளுக்கும் மூல ஒலியாக இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ‘ஜ’ என்னும் ஒலி மூலத் திராவிட மொழியில் இருந்திருக்க வேண்டுமென்றும், அவ்வொலியே

ஆன்

யந ,-

ஏன்

என்று திரிந்திருக்க வேண்டுமென்றும், யான், யாம் என்பனவற்றின் மாற்று வடிவங்களான நான், நாம் என்பன மிகப் பிற்காலத்தில் தோன்றியிருக்க வேண்டுமென்றும் கருதுகின்றார். இக்கருத்தை பேராசிரியர் பரோ மறுத்துரைத்துள்ளார். அவர் மொழி முதலில் வரும் ‘யா’வை இஆ ஆகிய இரு ஒலிகளின் சேர்க்கையாகக் கருதுகின்றார். இதுவே தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் ‘ஆ’கார ஒலியாகவும், தெலுங்கில் ‘ஏ’கார ஒலியாகவும் திரிந்திருக்க வேண்டுமென்கிறார்.

தமிழிலும்,

யாது , எது

யான் , என்

என்று வருவதைக் காணலாம்.

**ர்;(*r) முன்னண்ண வருடொலி (Alveolar flap)**

‘ர’கர ஒலி மொழி முதலில் இடம் பெறாது. கோண்டி மொழியின் சில வட்டார வழக்குகளில் இது –ச- ஒலிக் மொழியிடையில் வருகின்றது. தோடா மொழியில் இதற்கு நிகராக –ள- -ள- ஆகிய ஒலிகளே உள்ளன. பிராகுயி மொழியிலும் இவ்வொலி காணப்படவில்லை. துளு, கொலாமி, நாயக்கி, குயி, குவி, பெங்கோ, மண்டா போன்ற மொழிகளில் இவ்வொலி பயின்று வரவில்லை.

எ.கா. (1) தமிழ் - இரு

தோடா - ist

(2) தமிழ் - இரண்டு

கன்னடம் - ரெண்டு

இலக்கியத் தமிழில் இவ்வொலி ‘ழ’கரமாக மாறும்.

எ.கா. ஈர்க்கும் , இழுக்கும்

தெலுங்கு மொழியில் இது ‘ல’கர ஒலியாகத் திரியும். கோண்டா போன்ற மொழிகளில் இது பெரும்பாலும் -ச ச- என்று இரட்டித்து ஒலிக்கின்றது.

**ல் (ழூ1) முன்னண்ண பிரிவளி ஒலி (Alveolar lateral)**

இவ்வொலியும் அதிகமாக மொழி முதலில் வராது. துளு மொழியிலும், பர்ஜி மொழியிலும் இது ‘ர’கர ஒலியாகத் திரிகின்றது.

எ.கா. தமிழ் , வில்

துளு , பிர்

தமிழ் மொழியில் ‘ற’கர ஒலி இதன் மாற்றொலியாக உள்ளது.

எ.கா. நில் - நிறுத்து

கல் - கற்பி

எல்லாத் திராவிட மொழிகளிலும் இது மொழியிடையில் இடம் பெறுகின்றது. குயி மொழியில் இது –ன- ஒலியாகத் திரிகின்றது. பிராகுயி மொழியில் -டா- என்ற மாறுகின்றது. தோடா மொழியில் ள ஒலியாகவும் கோடாவில் டை யாவும் திரிவதைக் காணலாம்.

எ.கா. தமிழ் }

பால்

மலையாளம்

| | | |
|---|---|---|
| தோடா | - | pos |
| கோடா | - | pali |
| பிராகுயி | - | palh |

தெலுங்கு மொழியில் ‘லு’ என்னும் பன்மையுருபு ‘ரு’ என்று˙ திரிகின்றது.

**வ் (*v) பல்லிதழொலி (Labio - dental)**

மொழி முதலில்˙வரும் ‘வ’கர˙மெய் கன்னடம், கொடகு, துளு ஆகிய மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் ‘டி’ ஒலியாக மாறுகின்றது.

எ.கா. வாழ் , bal (கன்னடம்)

தோடா மொழியில் இது ‘ப’கர ஒலிப்பில் ஒலியாகத் திரிகின்றது. தெலுங்கில் இது ‘ப’ ஒலியாகத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | வாரு | , | garu |
| | அறுவர் | , | aruguru |
| | பவளம் | , | pagata |

மொழியிடையில் வரும் ’வ’ கரம் தோடர் மொழியில் ‘க’ ஒலியாக மாறும் மலையாளத்தில் இது ‘ம’கர ஒலியாகத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | - | காணுவான் |
| | மலையாளம் | - | காண்மான் |

மால்டோ மொழியில் இது டிஇ ய் என்னும் ஒலியாகத் திரிகின்றது. தமிழில் ‘ய’கர மெய்யைப் போன்று இதுவும் உடம்படுமெய்யாகப் பயன்படுத்தப்படுகின்றது.

**ழ் (*l) வளைநா உரசொலி (Retroflex fricative)**

தமிழுக்கேயுரிய சிறப்பொலியாகக் கருதப்படும் ‘ழ’கர மெய் தமிழ் மொழியின் பேச்சு வழக்கில் ள், ய், ச் போன்ற திரிபுகளைப் பெறுகின்றது. ‘ழ’கரம் ‘ள’கரமாகத் திரிவதற்கு ‘வீரசோழியம்’ விதி வகுத்துள்ளது. இலக்கிய வடிவில் இவ்வொலி சிலவிடங்களில் கெட்டுவிடுகின்றது.

எ.கா. போழ்து , போது

தெலுங்கில் இது ‘ட’கரமாகவம், கன்னடத்தில் ‘ள’கரமாகவும் மாறுகின்றது.

எ.கா. எழு , ஏடு , ஏளு

கோழி , கோடி , கோளி

இம்மொழிகளில் சிலவிடங்களில் இது ‘ண்’ ஒலியாகத் திரிதலுண்டு.

எ.கா. குழி , குணி (கன்னடம்)

இவ்விரு மொழிகளிலும் ‘ழ’கரம் மறைந்தபோதிலும் மலையாள மொழியில் இன்றும் பெருவழக்கிலுள்ளது. பழங்கன்னடத்தில் இது திரியாமல் இருந்ததற்கு 9ஆம் நூற்றாண்டைய கன்னடக் கல்வெட்டுக்களே சான்று. துளு மொழியில் இவ்வொலி ‘ர’கர மெய்யாகத் திரிகின்றது.

எ.கா. பொழுது , பொருது

கோடா மொழியில் இதற்கு ள, ர, ஞ், ய என்ற மாற்று வடிவங்கள் (சநகடநஒநள) உள்ளன. கொடகு மொழியில் ஏனைய மெய்யொலிகளின் முன்னர் இது கெட்டு விடுகின்றது். தோடா மொழியில் இதன் மாற்று வடிவங்களாக ன-இ ச-இ ள-இ எ- உள்ளன.

**று;(*l) வளைநா பிரிவளி ஒலி (Retroflex lateral)**

இவ்வொலி தமிழ், மலையாளம், கோடா, கன்னடம், கொடகு, நாயக்கி ஆகிய மொழிகளில் காணப்படுகின்றது. இது ‘ல’கர ஒலியாக துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி, கடபா, குயி, குவி, மால்டோ, பிராகுயி ஆகிய மொழிகளில் திரிகின்றது. கோண்டி, கோண்டா, பெங்கோ, மண்டா ஆகியவற்றில் இதன் மாற்றொலியாக –ச- காணப்படுகின்றது. பிராகுயி மொழியில் இது –ட-இ -டா- என்று மாறுகின்றது. துளு மொழியில் சிலவிடங்களில் இது ‘ண’கரமாக மாறும்.

எ.கா. கேள் , கேண

**2.9 மெய்யொலி மாற்றங்கள்**

**வல்லொலி, மெல்லொலி மாற்றம்**

**(Convertibility of Surds and Sonants)**

தற்காலத் தமிழில் ஒலிப்பு ஒலிகள் (voiced consonants) ஒலியன்களாகக் கருதப்படும் நிலையைப் பெற்றபோதிலும் பழந்தமிழில் அவை பொருள் வேறுபாட்டிற்குத் துணை செய்யவில்லை. எனவே அவற்றிற்கென்று தனி வரிவடிவமும் அமைக்கப்படவில்லை. எனினும் ஒலிப்பில் ஒலிகளாகிய (Voiceless consonants) வல்லொலிகள் மொழியிடையில் மூக்கொலிகளையடுத்து வரும்போது மெல்லொலிகளாக (voiced) மாறி விடுகின்றன. மொழி முதலிலும், இரட்டிக்குமிடங்களிலும் மட்டுமே அவை வல்லொலிகளாக ஒலிக்கின்றன. இரு உயிர்களுக்கு இடையில் பெரும்பாலும் அவை உரசொலிகளாக (fricatives); ஒலிக்கின்றன. மேலும் அதிகமான திராவிட மொழிகளில் மொழி முதல் மெல்லொலிகள் இடம் பெறுவதில்லை. சிறுபான்மை இடம்பெறும் மொழி முதல் மெல்லொலிகளும் புணர்ச்சி மாற்றத்தாலோ, மொழியிடையிலுள்ள மெல்லொலிகளின் ஆற்றலாலோ திரிந்த வல்லொலிகள் இன மெல்லொலிகளாக அமைகின்றன[1.] வேற்று மொழிகளிலிருந்து திராவிட மொழிகளில் வந்து வழங்கும் சொற்களிலும் மொழி முதல் மெல்லொலி இடம் பெறுவதைக் காணலாம். இத்தகைய ஒலி மாற்றத்தை வல்லொலி, மெல்லொலி மாற்றம் என்று பெயரிட்டுத் தனியாக ஆராய்கின்றார் டாக்டர் கால்டுவெல்[2]. இம்மாற்றம் திராவிட மொழிக் குடும்பத்தின் கிளைமொழிகள் பலவற்றிலம் காணப்பட்டபோதிலும் தமிழ் மொழியில் உள்ளது போன்று ஒரு சமச்சீரான முறையில் அமையவில்லை என்பது அவர் கருத்து. இவ்வதியைத் தமிழ் மொழி வேற்று மொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போதும் தவறாது கையாள்வதைக் காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | வடமொழி | - | danta |
| | | தமிழ் | - | tandam |
| | (2) | வடமாழி | - | bhagya |
| | | தமிழ் | - | pakkiyam |

மேற்காட்டப்பட்ட இரு வடசொற்களிலும் முறையே னஇ டி போன்ற மெல்லொலிகள் மொழி முதலில் வந்தபோதிலும் தமிழில் மொழி முதலில் அவை வல்லொலிகளாக மாறுவதையும், ‘வ’ என்னும் வல்லொலி மூக்கொலியை் அடுத்து வரும்போது மெல்லொலியாக மாறுவதையும் காண்கிறோம் எனினும் டாக்டர் P.S. சுப்பிரமணிய சாஸ்திரியவர்கள் மூக்கொலிகளையடுத்தும், மொழியிடையிலும் வரும் வல்லொலிகள் மெல்லொலிகளாக மாறிவிடுகின்றன என்பதைப் பொதுவிதியாக, முடிந்த முடிவாகக் கொள்ள முடியாத என்கிறார்[3]. தம் கருத்திற்குச் சான்றாக மூக்கொலிகளையடுத்து வல்லொலிகள் இடம்பெறும் தெலுங்கு கன்னடம் போன்ற மொழிகளின் சொற்கள் பலவற்றை அவர் காட்டி செல்கின்றார். ஆனால், இச்சான்றுகள் பொருத்தமற்றவை என்பதும், டாக்டர் கால்டுவெல்லின் கொள்கை தவறுடையது அன்று என்பதும் பல ஒப்பியலறிஞர்களால் சிறப்பாக நிறுவப்பட்டுள்ளன[4].

திராவிட மொழிகளிலமையும் வல்லொலி, மெல்லொலி மாற்றத்தை விளக்கும் டாக்டர், கால்டுவெல் இம்மாற்றம் இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் இல்லையென்றும், எபிரேய மொழியில்

மட்டும் ஓரளவிற்கு உள்ளது என்றும், சிந்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சில மொழிகளிலும் காணக்கிடக்கின்றன என்றும் குறிப்பிட்டுச் சொல்கின்றார். தனக்கு முன்னர் 1853-ஆம் ஆண்டில் திரு. நோரிஸ் என்பவர் தமிழுக்குரிய சிறப்பு விதியாக இம்மாற்றத்தைச் சுட்டிச் சென்றதையும்[5] குறிப்பிட்டு இம்மாற்றம் மிகத் தொன்மையானது என்று முடிவு கட்டுகின்றார். எனினும், மொழியில் கண்ணோட்டத்தோடு தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் கூட இம்மாற்றத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இம்மாற்றம் ஒரினமாதலைப் போல (Assimilation) முயற்சிச் சிக்கனம் காரணமாக ஏற்படுவது என்பது பலர் கருத்து[6].

மொழியிடையில் வல்லொலி மெல்லொலியாக மாறுவதைப் பற்றி டாக்டர் கால்டுவெல் கொண்ட கருத்தை அனைவரும் ஓரளவிற்கு ஏற்று வந்தனர். இவ் ஆய்வு பின்னர் வல்லொலி, மெல்லொலி ஆகிய ஒலிகளுள் எது மூலத்திராவிட ஒலி என்ற ஐயவினாவை மொழி நூலறிஞர்களிடம் எழுப்பியது. மு.ஏ. சுப்பையர் தனது ஆய்வுக் கட்டுரையொன்றில் தமிழில் 'க்'கர வல்லொலி மொழி முதலில் வருடங்களில் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் அதற்கு இணையாக மெல்லொலி (ப) இடம் பெறுவதைக் காட்டி, வல்லொலி தான் மூலத் திராவிட ஒலி என்றும், மூலத்திராவிட மொழிநிலையில் மெல்லொலி இருந்திருக்க வாய்ப்பு இல்லை என்றும் குறிப்பிட்டடார்[7]. இக்கட்டுரையைக் கண்ட ஜுல்ஸ் பிளாக் குமரிலப்பட்டரின் 'தந்திரவர்த்திகா' என்ற இடைக்கால் சமஸ்கிருத நூலில் இடம்பெற்ற பல திராவிட மொழிச் சொற்கள் ஆராய்ந்து 'தமிழும் சமஸ்கிருதமும்' என்ற கட்டுரையில் மு.ஏ. சுப்பையாவின் கொள்கையை மறுத்து மூலத் திராவிட் மொழியில் மெல்லொலிகள் உண்டு என்பதை நிலை நிறுத்தினார். தமிழ்மொழியில் கி.பி. 100-க்கு முன்னர் மொழி முதலிலும், மொழியிடையிலும், மொழியிறுதியிலும் மெல்லொலிகள் இடம் பெற்றன என்றும் கி.பி. 2ஆம் நூற்ற்ாண்டு வரை தமிழில் மெல்லொலிகளெல்லாம் வல்லொலிகளாக் மாறின என்றும் கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் மொழியிடையில் வரும் வல்லொலிகள் மீண்டும் மெல்லொலித் தன்மை (Vocing) பெறத் தொடங்கின் என்றும் அவர் விளக்கிச் சென்றார். தன் கொள்கைக்கு ஆதரவாக.

| | | | |
|---|---|---|---|
| வடமொழி | - | கொடகா | (ghotaka) |
| தமிழ் | - | குதிரை | (kutirai) |
| கன்னடம் | - | குதிரெ | (kutire) |
| தெலுங்கு | - | குற்றமு | (gurramu) |

ஆகிய சொற்களைக் காட்டி இவற்றின் மூலத் திராவிட வடிவம் *gutr என்பதாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அவர் கருத்துப்படி மெல்லொலி மட்டுமின்றி அவற்றின் உயிர்ப்பொலியும் (Voiced aspirated consonants) மூலத் திராவிட மொழியில் இருந்திருக்க வேண்டும். இக்கருத்தை ஏற்றுக்கொண்ட மு. கோடவர்மா மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலிருந்து சில சொற்களைக் காட்டி மூலத்திராவிட மொழியில் மெல்லொலி இடம் பெற்றமையைத் தெளிவுறுத்த முயன்றுள்ளனார்.

எ.கா. (1) மலையாளம் - kettu (anekkettu)

கன்னடம் - gattu

(2) மலையாளம் - kettu

கன்னடம் - gdda

ஜுல்ஸ் பிளாக்கின் கொள்கைக்கு ஞ.மு. சட்டர்ஜி, கு.டீ.து. குப்பையர் (F.B.J. Kuifer) போன்ற பல அறிஞர்களும் ஆதரவளித்துள்ளனர்.

ஜுல்ஸ் பிளாக் போன்றோரின் கொள்கைப்படி ‘ghotaka’ (குதிரை) போன்ற சொற்கள் திராவிட மொழிச் சொற்களே. அவை வடமொழியில் பிற்காலத்தில் புகுந்தன. வடமொழியில் பிற்காலத்தில் புகுந்தன. வடமொழிக்குச் செல்லும் பின்னர் அவற்றின் முதல் ஒலி மெல்லொலியாகவே இருந்திருக்க வேண்டும். நடுத்திராவிட மொழிகளின் சொற்கள் பலவற்றிலும் மெல்லொலிகள் மொழி முதலில் இடம் பெறுவதை அவர் காட்டிச் செல்கின்றார். எனினும் மொழி முதலில் வல்லொலிகளைக் கொண்டு தொடங்கும் சொற்களுக்கு இணையான மெல்லொலிகளை மொழி முதலில் கோண்ட் தெலுங்கு, கன்னட மொழிச் சொற்களை அவரால் நிறையத்தர முடியவில்லை. இவ்வொலி மாற்றத்தைச் சிறப்பாக் ஆராய்ந்த பேராசிரியர் பரோ, மற்றும் டீ. கிருஷ்ண மூர்த்தி போன்ற் ஒப்பியல் அறிஞர்கள் ஜுல்ஸ் பிளாக்கின் கொள்கையை மறுத்து தெலுங்கிலும், கன்னடத்திலும் காணப்படும் மெல்லொலிகள் பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்றும், மூலத்திராவிட மொழியில் மொழி முதலில் மெல்லொலிகள் இடம் பெறவில்லை என்றும் கூறி பல்வேறு சான்றுகள் மூலம் தம் கருத்தை நிலைநாட்டியுள்ளனர்.

**பேராசிரியர் பரோ தரும் காரணங்கள்**

(1) மெல்லொலிகளைக் கொண்டு தொடங்கும் அதிகமானத் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளின் சொற்களுக்கு நிகரானத் தமிழ்ச் சொற்களைக் காண முடியவில்லை.

எ.கா. கன்னடம் - gadika

தெலுங்கு - gada

தமிழ் - Ø

இவ்வாறு வருகின்ற சொற்களில் பல சொற்கள் தெலுங்கு, கன்னடம் ஆகிய இவ்விரு மொழிகளுக்கும் உரிய பொதுச்சொற்களாக அமையாது ஒவ்வொரு மொழிகளுக்கும் உரிய சிறப்புச் சொற்களாகவே உள்ளன. இத்தகைய சொற்கள், கன்னட மொழியைவிட, தமிழ் மொழியிலிருந்து பெருமளவிற்கு வேறுபட்டு நிற்கும் தெலங்கு மொழியில் மிகுந்துள்ளமை குறிப்பிடப்பத்தக்கது.

(2) மெல்லொலிகளை் மொழி முதலில் கொண்ட தெலுங்கு, கன்னட மொழிச் சொற்களுக்கு இணையான சொற்கள் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் காணப்படுமிடங்களில் அவை காலத்தால் பிற்பட்ட வேற்று மொழிச் சொற்களாகவேயுள்ளன. எனவே அவை மூலத்திராவிட மொழியின் ஒலிநிலையை ஆராயத் துணை செய்யா.

எ.கா. தமிழ் - குட்டு (இரகசியம்)

தெலுங்கு }
கன்னடம் } guttu

(3) இத்தகைய் தொடர்புகள் (correspondences) பழையனவாக இருப்பினும் அவைகளில் ஓர் ஒழுங்கு முறையினைக் காண முடியவில்லை. சிலவிடங்களில் தெலுங்கு மொழியில் தமிழைப் போன்று வல்லொலியை மொழி முதலில் கொண்டு தொடங்கும் சொற்களும், சிலவிடங்களில் கன்னடத்தில் வல்லொலியை மொழி முதலில் பெற்ற சொற்களும் மாறி மாறி ஒழுங்கின்றி அமைவதைக் காணலாம்.

எ.கா. (1) கன்னடம் - garuvali

தெலுங்கு - karuvali

(2) கன்னடம் - kalta

தெலுங்கு - gadita

(4) மெல்லொலிகள் இடம்பெறும் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளைத் தனியாக எடுத்து நோக்கும்போது மெல்லொலிகள் பிற்காலத்தில் ஏற்பட்டன என்று தோன்றுகின்றது. இவ்வொலி மாற்றத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழி மூலத்திராவிட மொழியினியல்பைக் காட்டுகின்றது என்பது பேராசிரியர் பரோவின் முடிவு.

வடதிராவிட மொழிகளில் வடமொழிக்கூறுகள் மிகுந்து காணப்படுவதால் மெல்லொலியை முதலில் கொண்ட சொற்கள் அதிகமாக் காணப்படுகின்றன. மேலும் திராவிட மொழிகளில் மொழியிடையில் மாற்றம் பெற்ற மெல்லொலிகள் ஓரினமாதல் என்னும் பொது விதியால் மொழி முதலில் இடம் பெறும் வல்லொலிகளையும் மெல்லொலிகளாக மாற்றி விடுகின்றன.

எ.கா. tiruttu

↓

tirdu

↓

diddu

இவற்றைத் தவிர ஒலி இடம் பெயர்தல் (Metathesis) காரணமாகவும் மொழியிடையிலுள்ள மெல்லொலிகள் மொழி முதலில் இடம்பெயர்ந்து நின்று மெல்லொலியை மொழி முதலில் கொண்ட சொற்களைத் தோற்றுவித்து விடுகின்றன.

பழந்தமிழில் மொழி முதலில் மட்டுமின்றி ஏனைய இடங்களிலும் வல்லொலிகளே இடம் பெற்றன என்பது தெளிவு. தற்காலத் தமிழில் உள்ளது. போன்று இடத்திற்கேற்ப மாறி ஒலிக்குமியல்பு பழந்தமிழில் இல்லை என்பது அறிஞர் பலரின் கருத்துஹ[11]. கி.மு. 3ஆம் நூற்றாண்டைய பிராமி எழுத்தில் எழுதப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களில் கூட மெல்லொலிகள் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிகின்றது[12]. இடைக்காலத்தில் கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களில் கூடத் தமிழ்ச் சொற்கள் வல்லொலிகளின் வரிவடிவாலேயே எழுதப்பட்டன. அதே சமயத்தில் வட சொற்களை எழுதும் போது இவற்றில் மெல்லெழுத்துக்களுக்குரிய வரிவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. குமரிலபட்டரின் ‘தந்திரவர்த்திகா’ என்ற நூலிலுள்ள் சில தமிழ்ச்சொற்களும் வல்லொலிகளுக்குரிய வரிவடிவில் எழுதப்பட்டிருப்பது தெளிவு. கி.பி. 1350-க்கு பின்னர்தான் வல்லொலிகள் ஒலிப்புப் (voiced) பெற்றன என்பது பலர் கருத்து. எனினும் பேராசிரியர் கமில் சுவலபில் போன்ற அறிஞர்கள் பழந்தமிழில் மொழி முதலில் வல்லொலிகளும் ஏனைய இடங்களில் அதன் மாற்றொலிகளும் வழங்கியிருக்கலாம் என்று கருதுகின்றனர்[13].

**இரட்டைமெய் தனிமெய்யாதல்**

## (Consonant Alternation-Single Vs Double)

திராவிட மொழிகளில் இரட்டை மெய்கள் (Double Consonants) பொதுவாக மொழி முதலில் குற்றுயிர்கள் வரும் போது அதையடுத்து இடம்பெறுகின்றன.

எ.கா. கிள்ளு

ஆனால் இத்தகைய சொற்களில் பின்னொட்டுக்கள் (suffixes) தொடர்ந்து வரும்போது இந்நிலைக்கு முரண்பட்ட முடிவுகள் ஏற்பட்டுவிடுகின்றன்.

எ.கா. Kil/ai

இங்கு ‘ஐ’ என்னும் பின்னொட்டு தொடர்ந்து வந்தால் ‘ள’கரம் இரட்டிக்காமல் தனி மெய்யாகவே நின்றுவிட்டது. ஆனால் மடைடர என்பதைத் தொடர்ந்த வேறொரு அசை வராததால் இரட்டை மெய் தனி மெய்யாக் மாறாமல் நின்று விடுகின்றது. இம்மாற்றம் மூலத் திராவிட ஒலியன்களான *kk, *k, *cc, *c, *tt, *t, *rr, *r, *tt, *t, *pp, *p என்பவற்றில் ஏற்படுவதாக பேராசிரியர் எமனோ குறிப்பிடுகின்றார்[14].

எ.கா. கொட்டு , கொடு(க்கு) - தமிழ்

, குடுக்கு - கன்னடம்

இங்குத் அடிச்சொல்லைத் தொடர்ந்து வேறு அசைகள் (derivative syllable) வரும்போது இரட்டை மெய்கள் தனி மெய்யாக மாறவிடுகின்றன. இம்மாற்றம் பெயர்ச்சொற்களிலும் வினைச்சொற்களிலம் நிகழ்கின்றது. இம்மாற்றத்தை

$$(C)\ VC^2C^2 \longrightarrow (C^1)\ VC^2 - V\ldots$$

என்னும் வாய்ப்பாட்டால் விளக்கலாம். மேற்கூறிய வாய்பாட்டில் $C^2C^2$ ஆகியன $C^2$ ஆக மாறக் காண்கிறோம். இதனை செக் நாட்டு தமிழறிஞரான பேராசிரியர் கமில் சுவலபில் விரிவாக ஆராய்ந்துள்ளார்[15].

திராவிட மொழிகளில் தனி மெய்களும் இரட்டை மெய்களும் பொருள் வேறுபாட்டிற்குத் துணை செய்கின்றன. ஆனால் வேறு பல மொழிக் குடும்பங்களில் இவை தனி ஒலியன்களாக அமையவில்லை. இவற்றுள் தனி மெய்களே காலத்தால் முந்தியன என்பது பலர் கருத்து, இம்மெய்களுக்கு முன்னர் இடம்பெறும் மொழி முதல் குறில், நெடில் ஆகிய ஒலியன்களில் எது முதன்மையானது என்பது பற்றியும் அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். சிலர் நெட்டுயிர்களே காலத்தால் முற்பட்டன என்று வாதிடுவர்.

எ.கா. ஆர் , அரு (மை)

சேர் , செ (ன்றான்)

என்பவற்றைக் காட்டி குற்றுயிர்கள் காலத்தால் பிற்பட்டன என்று வாதிடுவர்.

**மெய்யொலிகள் ஓரினமாதல் (Assimilation of Consonants)**

வேறுபட்ட இரண்டு மெய்கள் தொடர்ந்து வரும்போது ஒன்றன் ஆற்றலால் மற்றொன்று தன் நிலைமாறி இரண்டும் ஓரினமாகி நிற்றலை ஓரினமாதல் என்பர்.

எ.கா. நின்ற , நின்ன

இங்கு ‘நின்ற’ என்னும் சொல்லிலுள்ள முன்னண்ண மூக்கொலியான (alveolar nasal) ’ன’கர ஒலி தன் ஆற்றலால் அதைத் தொடர்ந்து வந்த ‘ற’கர ஒலியையும் தன்னினமாக (d) மாற்றியது. இம்மாற்றத்திற்கு ஒலிக்கும் உறுப்புக்களின் அமைப்பே காரணம் என்கிறார். புளும்.ஃ.பீல்டு[16]. ஓர் ஒலியை ஒலிக்கும் இடத்திற்கும் அடுத்த ஒலியை ஒலிக்கும் இடத்திற்கும் இடைவெளி அதிகமாக இருந்தால் அவ்வொலியை ஒலிப்பது அரிது. எனவே முயற்சி எளிமை நோக்கி நாவானது அந்த ஒலியின் பக்கத்திலே அதற்கு அடுத்த ஒலியையும் ஒலித்து விடுகின்றது.

ஓரினமாதலைப் பெரும்பாலான உலக மொழிகளிலும் காணமுடிகின்றது. ஆங்கில மொழியில் ஏற்படும் ஓரினமாதலை வரலாற்று நிலையில் ஏற்படுவன (Historical Assimilation);

என்றும், இடத்திற்கேற்ப ஏற்படுவன (Contertual Assimilation) என்றும் இரு கூறுபடுத்தி விளக்குவர். முன்னையதற்குச் சான்றாக 13ஆம் நூற்றாண்டில் இருந்த ‘amte’ என்னும் சொல் ‘and’ என்று மாறியதைக் காட்டுவர். முன்னண்ண ஒலியான ‘வ’ ஒலியின் முன்னர் இடம் பெற்ற ஈரிதழ் மூக்கொலியான (டீடையடியைட யெளயட)’ம’கரம் முன்னண்ண் மூக்கொலி கான ‘ெ’ ஒலியாக மாறிவிடுகின்றது. இடத்திற்கேற்ப ஏற்படும் மாற்றத்திற்கு ாழசளந ளாழந என்பது ா ,:டடர என்று மாறுவதைக் காட்டுவர்.

மொழியில் ஓரே உருபனுக்கு (morpheme) பல்வேறு மாற்று உருபன்கள் (allomorph) ஏற்படுவதற்கு ஓரினமாதலே அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

எ.கா. முன்

முட் (செடி)

இம்மாற்றுருபன்களின் வடிவ மாற்றங்களுக்கு விளக்கந் தரவும் இவ்விதி பயன்படகிறது.

பல ஒலிகள் ஒலிக்கம் உறுப்புகளாலும் (Point of articulation)> ஒலிக்கும் முறையாலும் (Manner of articulation) ஓரினமாகி நிற்றலைக் காணலாம்.

எ.கா. முன் - செடி , முட்செடி ஒலிக்கும் முறை

ை.ந். பிரிவளி ஒலி தடையொலியாக மாறியது

கீழ் ு பாலம் , கீப்பாலம் ஒலிக்கும் உறுப்பு

ை.ந. ‘ழ்’ ஒலி ஈரிதழ் தடையொலியாக மாறியது.

ஓரினமாதலை (1) எங்கும் விதியாய் வருவன (established)

(2) ஒரோ வழியாய் வருவன (accident) என்று இரண்டாகப் பிரிப்பர் மொழிநூலார்.

பொதுவாக,

(1) நிலைமொழி ஈறு திரிதல் (Regressive Assimilation)
(2) வருமொழி முதல் திரிதல் (Progressive Assimilation)
(3) இரண்டு திரிதல் (Reciprocl Assimilation)
(4) தொடர்ச்சியானவை, தொடர்ச்சியற்றவை (Continuous, Non-continuous)
(5) முழுமையானவை, முழுமையற்றவை (Complete, Partial) என்று பலவாறு பிரித்து விளக்குவர்.

என்று பலவாறு பிரித்து விளக்குவர்.

எ.கா. (1) நிலைமொழி ஈறு திரிதல் - யெ ௌ ஒை , யெைை

இங்குக் கடையண்ண உரசொலியான (Velar, fricative) ‘ளு’ தன் முன்னர் வந்த முன்னண்ண மூக்கொலியை (alveolar nasal) கடையண்ண மூக்கொலியாக (Velar, nasal) மாறச் செய்தது.

(2) வருமொழி முதல் திரிதல் - என் ஂ தம்பி , என்றம்பி

(3) இரண்டும் திரிதல் - கல்ூ தூண் , கற்றூண்

(4) தொடர்ச்சியற்று வருவன – ிைெ ௌ மழ , மைெழ

வை ௌ பழ ்,வனைழ

திராவிட மொழிகளில் முன்னர் காட்டிய வகைகளுள் முதன் மூன்று வகை மாற்றங்களும் அதிகமாக இடம்பெறுகின்றன். வேறுபட்ட ஒலிகள் இவ்வாறு ஓரினமாவதற்கு மாறாக ஓரினமாக உள்ள ஒலிகள் வேறுபட்டு நிற்கும் நிலையும் (dissimilation) சில மொழிகளில் உண்டு. திராவிட மொழிகளில் இத்தகைய மாற்றம் மிகக் குறைவு. தமிழில்,

போடட , போடுறா

போன்ற பேச்சு வடிவங்களில் இம்மாற்றத்தைக் காணலாம்.

**ஒலியழுத்தம் (Stress or Accent)**

ஒரு சொல்லிலுள்ள ஓர் எழுத்தையோ, அசையையோ, அழுத்தி ஒலித்தால் அது ஒலியழுத்தம் எனப்படும்[18]. அதிகமாக அழுத்தி ஒலிக்கப்படும் பகுதியை ‘strong stress’ என்றும், அழுத்தி ஒலிக்கப்படாத பகுதியை ‘weak stress’ என்றும் அழைப்பர். ஆங்கில மொழியில் இடத்தைப் பொறுத்தும் பேசுவோரைப் பொறுத்தும் ஒலியழுத்தம் மாறுபடுவதை ஒலியியல் அறிஞர் டானியல் ஜோன்ஸ் விளக்கிச் செல்கின்றார். ஒரு தொடரில் அல்லது சொல்லில் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ, அசையையோ அழுத்திக் கூற விரும்பும்போது அப்பொருளைக் குறிக்கும் ஒலிச்சேர்க்கையை ஒலியுறுப்புக்கள் வன்மையாக ஒலிக்கின்றன. ஏனைய அசைகளையோ, பகுதிகளையோ ஒலிக்கும் போது முயற்சி எளிமையாகின்றது. இவ்வாறு அழுத்தியும், அழுத்தமின்றியும் ஒலிப்பதால் ஒரே சொல் பல்வேறு உணர்ச்சிகளையும், பொருட்களையும் வெளிப்படுத்திக் காட்ட முடிகின்றது. சான்றாக, தமிழிலுள்ள ‘ஆம்’ என்ற சொல்லையோ, ஆங்கிலத்திலுள்ள ‘லுநள’ என்பதையோ எடுத்தும், படுத்தும் ஒலித்து உடன்பாட்டினையும், வெறுப்பினையும், மகிழ்ச்சியினையும், இகழ்ச்சிக் குறிப்பினையும் காட்ட முடிகின்றது.

ஆங்கிலம் போன்ற மொழிகளில் சொற்களைப் பல அசைகளாகப் பிரித்து ஓரசையினை எடுத்தும், ஏனையவற்றைப் படுத்தும் ஒலிக்குமியல்பைக் காணலாம். இவ்வாறு ஒலிக்கும் போது

பொருள் மாறுபடுவதோடு மட்டுமின்றி இலக்கணக் கூறுகளின் (புசயஅஅயவநைஉயட உயவநபழசநைள) தன்மைகள் மாறுவதுண்டு.

எ.கா. r'ecover - Recovering from illness etc.

rec'over - Cover again

ஆங்கில மொழியில் சொற்களில் வரும் ஒலியழுத்தம் (Sentene Stress), தொடர்களில் வரும் ஒலியழுத்தம் (Sentence stress) என்று ஒலியழுத்தத்தை இரு கூறுபடுத்துவர். ஒலியழுத்தம் மொழிக்கு மொழி வேறுபடுகின்றது. ஆங்கில மொழியைப் போன்று ஒலியழுத்தம் திராவிட மொழிகளில் அதிகமான அளவு இல்லாவிடினும் குறைந்த அளவில் காணப்படுகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை. தமிழ் மொழியில் ஒலிழுத்தம் அமைந்திருப்பதை.

'எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பின்

திரிபும் தத்தமில் சிறிதுளவாகும்[19].

என்ற நன்னூல் நூற்பாவால் உணரலாம். 'தபு' என்னும் சொல்லை எடுத:து ஒலித்தால் ஒரு பொருளும், 'படுத்து' ஒலித்தால் வேறொரு பொருளும் அமைகின்றது என்று நச்சினார்க்கினியர் கூறிச் செல்வதால் ஒலியழுத்தமும் ஒரு தனி ஒலியனாகக் கருதப்பட்டமை என்பது (Supra segmental Phoneme) தெளிவு.

தொல்காப்பியர் போன்ற தொன்மையான இலக்கண ஆசிரியர்கள் ஒலியழுத்தம் பற்றி அதிக விளக்கமாகப் பேசாததால் தமிழில் ஒலியழுத்தமே இல்லை என்ற முடிவுக்கு பல அறிஞர்கள் வந்துள்ளனர். அவர்களுள் யு.ஆ. ஆர்டன் (A.M. Arden)இ து. லாசரஸ் (J.Lzarus), போப், இரேனியஸ் போன்ற மேல்நாட்டு அறிஞர்க்ள் குறிப்பிடத் தகுந்தோராவர்.

தமிழ் மொழியில் ஒழியழுத்தம் இல்லை என்பது யு.ஆ. ஆர்டன் போன்றோர்களின் கருத்து[20.] திராவிட மொழிகளில் கிரேக்கம் போன்ற மொழிகளைப் போல ஒலியழுத்தம் இல்லை. எனினும் ஒலியழுத்தமே இல்லை என்று கூறிவிடமுடியாது. இம்மொழிகளில் ஒலியழுத்த வேறுபாடு இல்லை என்பார் கருத்தை டாக்டர் கால்டுவெல் மறுக்கின்றார்[21] அவர் கருத்துப்படி ஒரு சொல்லிலுள்ள முதலசையை எடுத்தும். ஏனைய அசைகளைப் படுத்தும் ஒலிக்கும் முறை திராவிட மொழிகளின் இயல்பாகும். அவர் கூட்டுச் சொற்களில் (Compound words) இரண்டாவது மூன்றாவது அசைகளிலும் ஒலியழுத்தம் உள்ளது என்கிறார்.

எ.கா. அடங்குகிறது.

முதலசையில் ஒலியழுத்தம் அமைகின்றது என்று நிறுவிய டாக்டர் கால்டுவெல் இதற்குச் சில விதிவிலக்குகளும் உள்ளன என்று குறிப்பிடுகின்றார். ஓடுவான் என்னும் சொல் வினைமுற்றாகச் செயல்படும் போது முதலசையில் எடுத்தலோசையும், அதுவே வினையாலணையும் பெயராக

அமையும்போது 'வான்' என்னும் இறுதியசையில் எடுத்தலோசையும் அமைவதைக் காட்டுகின்றார். டாக்டர் கால்டுவெல் முதன்முதலில் கூறிய இக்கருத்தை ஆ. பெய்தான் (M.Beythan) என்பவரும் ஓரளவிற்கு ஏற்றுகொண்டுள்ளார். திராவிட மொழிகளில் நிலையான ஒலியழுத்தத்தோடு (Immutable accent) மாறிமாறி இடம்பெயர்ந்தமையும் ஒலியழுத்தமும் (Dynamic stress) உண்டு என்பதை ஆ. பெய்தான் தெளிவுபடுத்தியுள்ளார்[22]. சோவியத் நாட்டுத் தமிழறிஞரான பேராசிரியர் ரூடின் என்பவரும் இக்கருத்தினை ஆதரித்து எழுதியுள்ளார். ஆனால் சிலர் தமிழில் இறுதியசையில்தான் ஒலியழுத்தம் அமைகின்றது என்பர்.[23]

சோவியத் நாட்டுத் தமிழறிஞரான பேராசிரியர் ஆ.ளு. ஆன்டர்னோ தமிழில் ஒலியழுத்தம் உண்டு என்பதைத் தெளிவுபடுத்திக் குறிப்பிட்ட அசையில்தான் ஒலியழுத்தம் இடம்பெறுகின்றது என்று வரையறுத்துக் கூறமுடியாது என்றார். அவர் பழந்தமிழில் ஒலியழுத்தம் முதலசையில் இருந்ததென்றும் பிற்காலத்தில் தமிழிலும், பேச்சு வழக்கிலும் இந்நிலை மாறி இரண்டாம் அசையிலோ, மூன்றாம் அசையிலோ இடம்பெறத் தொடங்கிவிட்டது என்றும் கூறிச் செல்கிறார்.[24] இதற்குச் சான்றாக எழுத்து வடிவிலுள்ள சொற்கள் பல பேச்சுவழக்கில் திரிந்து காணப்படும்போது ஒலியழுத்தம் பெறாத ஒலிகள் கெட்டுவிடுவதையும், ஒலியழுத்தம் பெற்ற ஒலிகள் கெடாமல் நிற்பதையும் காட்டுகின்றார்.

எ.கா. அல்லவா , வா

இரா , ரா

இச்சொற்களில் முதலசையில் ஒலியழுத்தம் இல்லை என்பது இருந்தால் முதலசைக் கெட்டிருக்காது என்பதும் தெளிவு.

எடுத்தல், படுத்தல் ஓசை வேறுபட்டால் சொற்களின் வடிவம் மாறுவதற்குப் பல சான்றுகளைத் திராவிட மொழிகளெங்கிலும் காணலாம்.

எ.கா. போகிறான் , போறா

இங்குக் 'போ' என்னும் முதலசையில் எடுத்தலோசை உள்ளதால் அதுவும், நலிதல் ஓசையைப் பெற்ற 'றா'வும் கெடாமல் நிற்க, படுத்தலோசையினையுடைய ஒலி மறைந்துவிடுகின்றது. செய்யுட்களில் மோனை, எதுகையமைந்த சொற்களில் முதலசை ஏனைய அசைகளைவிட எடுத்தொலிக்கப்படுகின்றது.

தனிச்சொற்களில் மட்டுமல்லாமல், ஒரு தொடரிலுள்ள சில சொற்களை எடுத்தும். படுத்தும் ஒலிக்கும் முறை (Pitch or Intonation) தமிழிலும் உண்டு. உரையாசிரியரான நச்சினார்க்கினயர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதும் போது பல நூற்பாக்களில் சொற்களை எடுத்தும், படுத்தும் ஒலித்துப் பொருள் காண்பதைக் காணலாம்[25]. தமிழில் 'நான் அவனைக் கண்டேன்' என்ற தொடரில் 'நான்' என்பதை எடுத்தொலித்தால் நான்தான் பார்த்தேன்: வேறு யாரும் பார்க்கவில்லை என்ற பொருளைத் தருகின்றது. 'அவனை' என்பதை எடுத்தொலித்தால்

நான் அவனைத் தவிர வேறு யாரையும் பார்க்கவில்லை என்ற பொருளைப் பயக்கின்றது. 'பார்த்தேன்' என்ற சொல்லை எடுத்தொலித்தால் பார்க்கத்தான் செய்தேன்: வேறொன்றும் செய்யவில்லை என்ற பொருளைத் தரும்.

தொடரில் அமையும் ஒலி வேறுபாட்டை ஆங்கில மொழியில் Rising intonation, Falling intonation, Level intonation என்றெல்லாம் கூறுபடுத்தி விளக்குவர். இவற்றுள் கீழ்நோக்கிய ஒலியமுத்தத்தை (Falling intonation) முழுமைபெற்ற தொடர்களிலும், ஏவல் தொடர்களிலும் காணலாம். முழமைபெறாத தொடர்களிலும், ஏவல் தொடர்களிலும் காணலாம் முழமைபெறாத தொடர்களில் அதிகமாக மேல்நோக்கிய ஒலியமுத்தம் (Rising intonation) பயன்படுத்தப்படுகின்றது[27]. இவை பொருளை வேறுபடுத்தப் பயன்படுத்தப்படுகின்றது. இவை பொருளை வேறுபடுத்திப் பயன்படுவதால் இவற்றை ஒலியன்களாகக் கொள்வர். ஆனால் ஏனைய ஒலியன்களைப் போலக் கூறுபடுத்த இயலாமையால் இதனைக் 'கூறுபடுத்த இயலா ஒலியன்கள்' (Supra segmental Phonemes) என்பர்.

**குரல்வளைத் தடையொலி (Glottal stop)**

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த கோண்டா, குயி, குவி என்ற மொழிகளில் குரல்வளைத் தடையொலி அதிகமாகப் பயின்று வருகின்றது. மேற்கூறிய மொழிகளைப் பொறுத்தவரையில் அதனைத் தனி ஒலியனாகக் கொள்ளலாம்[28]. குவி மொழியில் இது மிகவும் அழுத்தமாக ஒலிக்கப்படுகின்றது. ஆனால் குயி. கோண்டா யென்ற பொருள்களில் இவ்வொலி அதிக அழுத்தத்துடன் ஒலிக்கப்படவில்லை.

கோண்டி, கொலாமி, நாயக்கி ஆகிய மொழிகளின் வட்டார வழக்குகளிலும் குரல்வளைத் தடையொலி இடம் பெறுவதை மொழிநூலார் சுட்டிச் சென்றுள்ளனர். தமிழ் மொழி பேசுவோர் சிலரின் பேச்சு வடிவில் இவ்வொலி மொழி முதல் உயிரொலியின் முன்னரும் மொழியிறுதி உயிரொலியின் பின்னரும் இடம்பெறுவதைக் காணலாம். ஒப்பீடு நிலையில் இவ்வொலியை ஆயும்போது கோண்டா, குயி, குவி ஆகிய மூன்று மொழிகளிலும் இது தனி ஒலியனாகச் செயல்படுவதைக் காணலாம்[29].

று.று.வின்பீல்டு (W.W.Winfield) என்னும் அறிஞர் குவி மொழியின் எதிர்மறை வினைச்சொற்களில் இவ்வொலி இடம்பெறுவதைக் காட்டிச் செல்கிறார். இவ்வொலியினை இரண்டு புள்ளிகளால் அவர் எழுதிக் காட்டியுள்ளார்.

குரல்வளை தடையொலி ஒலிப்பு ஒலியாக அமைவதில்லை. சாதாரணமாக மொழிநூலார் இவ்வொலியினை ∴?∵ என்ற குறியீட்டில் எழுதுவர்.

கோண்டா மொழியில் இது மொழி முதலிலும் இறுதியிலும் இடம் பெறுவது கிடையாது. அதிகமான இடங்களில் இரு உயிரொலிகளுக்கு் இடையில் இது இடம்பெறுவதைக் காணலாம். குவி மொழியில் உயிரொலிகளின் இடையிலும், ம, ன போன்ற மெய்யொலிகளை அடுத்தும் சில

வினையடிச் சொற்களின் இறுதியிலும் இடம் பெறுகின்றது. இம்மூன்று மொழிகளிலம் இவ்வொலி இரு மெய்யொலிகளின் இடையில் எங்குமே பயின்று வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்மறைச் சொற்கள் அனைத்திலும் குயி மொழியில் குரல்வளைத் தடையொலி இடம்பெறுவதைக் காணலாம். உயிரொலிகளில் இடையில் விட்டிசைத் தோன்றும் இடங்களிலும் இவ்வொலி இடம் பெறுதல் உண்டு.

சில பெயர்ச் சொற்களில் பெயரடி (Noun base) பால், எண் போன்றவற்றைச் சுட்டும் விகுதி ஆகியவற்றை இணைக்கும் இணைப்புத்தொடராகவும் குரல்வளைத்தடையொலி பயன்படுகின்றன.

எ.கா. முழுழாந?நளை - போலீஸ்காரன்

பழவந?நளை - விருந்தினன்

பல இடங்களில் மெய்யொலிகளின் இழப்பை ஈடுசெய்ய குரல்வளைத் தடையொலி பயின்று வருகின்றது எனத் தெரிகின்றது.

இவ்வொலி அதிகமாகத் தென் திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் ஒலியனாக அமையவில்லை. எனினும் ஒரிசா மாநிலத்திலுள்ள கேறாபூர் மாவட்டத்தில் பேசப்படும் பல நடுத்திராவிட மொழிகளில் ஒலியனாகப் பயின்று வருகின்றது. எனவே இதனைப் புராதன திராவிட ஒலியனாகக் கொள்ளமுடியவில்லை.

## 2.10 உருபன்களும் சொல்லாக்கமும்

### உருபன்கள்

ஒலியன்கள் இணைந்து பொருள் தரும் அசைகளாக மாறும் போது அவை உருபன்கள் (அழசிாநஅநள) எனப்படும். ஒலியன்கள், உருபன்கள், சொற்கள் ஆகியன ஒன்றோடொன்று தொடர்புடையன. தனி ஒலியன்களே உருபன்களாகவும், சொற்களாகவும் நிற்றலுண்டு.

எ.கா. ஆ - பசு

ஏ - அம்பு

மேற்காட்டிய ‘ஆ’, ‘ஏ’ என்னும் இரு ஒலியன்களும் பொருளைத் தருவதாலும், தனித்து நிற்பதாலும் தனி உருபன்களாகவும் (Free, morphemes) சொற்களாகவும் செயல்படுகின்றன. ஆனால் எல்லா ஒலியன்களும் உருபன்களாவதில்லை. அதே சமயம் சொற்களும் உருபன்களாக் நிற்றல் உண்டு.

எ.கா. கடல்

மரம்

இவை சொற்களாகவும் உள்ளன. அதே சமயத்தில், மேலும் கூறுபடுத்த முடியாமலும், கூறுபடுத்தினால் பொருள் தராமலும் அமைவதால் இவை உருபன்களாகவும் கொள்ளப்படுகின்றன. ஆனால் எல்லாச் சொற்களையும் உருபன்களாகக் கொள்ளமுடியாது. பழங்கள், நாய்கள் என்பன தனிச்சொற்கள். ஆனால் அவைகள் தனி உருபன்கள் அல்ல. இவை முறையே பழம் ¸ கள், நாய் ¸ கள் என்று இரு உருபன்கள் இணைந்த சொற்களாக உள்ளன. (A minimum meaningful unit) என்று மொழிநூலார் உருபனுக்கு விளக்க்ந் தருவர்[1].

உருபன்களை மொழிநூலார் கட்டு வடிவம் (Bound form) என்றும், தனி வடிவம் (free form) என்றும் இரு கூறுபடுத்துவர். தனித்தியங்கும் ஆற்றலுடைய உருபன்களைத் தனி வடிவங்கள் என்றும், தனித்தியங்கும் ஆற்றலற்றனவாய், பிற தனி வடிவங்களோடு இணைந்தியங்கும் வடிவங்களைக் கட்டு வடிவங்கள் என்றும் கூறுவது மரபு. மேற்காட்டிய நாய்கள், மரங்கள் என்னும் இரு சொற்களிலும் 'நாய்', "மரம்' என்பன தனி வடிவங்களாகவும், 'கள்' என்னும் பன்மை விகுதி கட்டு வடிவமாகவும் அமைகின்றன.

**சொற்கள்**

எழுத்து தனித்தோ, தொடர்ந்தோ, உருபன் தனித்தோ தொடர்ந்தோ சொற்கள் அமைகின்றன. சொல்லுக்கு முடிந்த முடிவாக ஒரு விதிமுறை் விளக்கம் வகுத்தல் மிக அரிது. மொழிநூலறிஞர் புளும்.்.பீல்டு சொல்லை 'மிகச்சிறிய தனிவடிவம்' (minimum free form) என்று விளக்கிச் செல்கின்றார். சொற்களைப் 'பொதுவாக மொழிநூலார் பொதுப்பொருளை உணர்த்தும் சொற்கள்' (Lexical items) என்றும், 'இலக்கணப் பொருள் உணர்த்து சொற்கள்' (Grammatical or Functional words) என்றும் இரு கூறாக்ப் பகுப்பர். மரிபலக்கண அறிஞர்கள் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என்று நான்காகப் பகுக்கின்றனர். இவற்றுள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்று இடத்தையொட்டியும் திணை, பால், எண் ஆகியவற்றையொட்டியும் வேறுபடும் இயல்புடையது பெயர்ச்சொல். வேற்றுமை ஏற்பது பெயர்ச்சொல்லின் சிறப்புப் பண்பாகும். வினைச்சொற்களோ காலத்தைக் காட்டி நிற்கும் இயல்பினையுடையன.

முதலில் திராவிட மொழிகளில் இவ்விரு வகைச் சொற்களும் இருந்திருக்க வேண்டுமென்பதும், பின்னரே இடைச்சொல், உரிச்சொல் ஆகிய இரண்டையும் இணைத்துச் சொற்களை நான்காகக் கூறுபடுத்தும் முறை ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும் தெரிகின்றது. தொல்காப்பியரும்,

"சொல்லெனப்படுப பெயரே வினையென்(று)

ஆயிரண்டு என்ப அறிந்தி சினாரே"

என்று கூறிப் பின்னர்,

“இடைச் சொற்கிளவியும் உரிச் சொற்கிளவியும்

அவற்று வழிமருங்கின் தோன்றும் என்ப”

என்று இலக்கணங் கூறுகின்றார். சொற்களை எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி, இரண்டடிற்கு மேற்பட்ட எழுத்துகளாலான சொற்கள் என்று மூவகையாகப் பிரிக்கும் மரபினைத் தொல்காப்பியரிடம் காண்கிறோம். இதைத்தவிர, பகுபதம், பகாபதம் என்று கூறுபடுத்துமியல்பை நன்னூலாரிடம் காணமுடிகின்றது.

**சொல்லாக்கம்**

திராவிட மொழிகளில் அடிச்சொற்கள் தனித்து நின்று சொல்லாகச் செயல்படுவதைக் காணலாம். வினையடிச் சொற்களெல்லாம் இம்மொழிகளில் ஏவல் வடிவங்களாக (imperative forms) உள்ளன. இதைத்தவிர வினைச்சொற்களோடு கால இடைநிலை, எதிர்மறை இடைநிலை, தன்வினை பிறவினை உருபுகள், பாலறிகிளவிகள் (Pronominal terminations) ஆகியன ஒட்டியொட்டி ஒட்டுநிலையாகப் பெரும்பாலான சொற்கள் அமைகின்றன. தமிழில் பல அடிச்சொற்கள் பெயருக்கும் வினைக்கும் பொதுவாக நிற்கின்றன.

எ.கா. பூ - பெயர்

பூத்தது - வினை

வல்லொலிகளை இறுதியிலே கொண்டு முடியும் சொற்கள் ஒலித் துணையாக ‘உ’கரத்தைப்பெற்று நிற்பதைப் பெரும்பாலான திராவிட மொழிகளில் காணலாம். இவ்வாறன்றி அடிச்சொற்களோடு தனி விகுதிகள் இணைந்தம் சொற்கள்அமைவதைக் காணலாம். திராவிட மொழிகளின் அடிச்சொற்கள் பொதுவாக ஓரசைச் சொற்களாக (Mono-syllabic) அமைகின்றன. இவற்றோடு பொருட் சிறப்பை நோக்கி ஆக்க விகுதிகள் இணைக்கப்படுகின்றன. அடிச்சொற்களோடு இணையும் இலக்கண விகுதிகள் (Grammatical additions) காலம், திணை, பால், எண் இடம் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

சொல்லாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தனிநிலை மொழி, ஒட்டுநிலை மொழி, உட்பிணைப்புநிலை மொழி என்று மொழிகளை மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள் திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழி என்ற பிரிவில் அடங்கும். மெம்மொழிகளின் கூறுகள் அடிச்சொற்களோடு ஒட்டியொட்டி அமைந்துபொருள் தந்து நிற்கும். அடிச்சொற்களோடு இணையும் இணைப்புக்களைப் பொதுவாக.

1. இலக்கண் வேறுபாடு உணர்த்துவன
2. பொருள் சிறப்புத் தருவன
3. ஒலித்துணை ஆவன

என்று மூன்றாகப் பகுக்கலாம்.

**இரண்டு மதிப்பெண் வினா:**

1.ஒலி என்பது யாது?

2.ஒலி பிறக்கும் முறையைக் காட்டும் கருவியின் பெயர் என்ன?

3.இடை முன்னுயிர்கள் என்றால் என்ன?

4.மெய்யொலிகளின் வகைகள் எத்தனை? அவை யாவை?

5.நெடில் குறில் மாற்றத்தினை எழுதுக.

**ஐந்து மதிப்பெண் வினா:**

1.மூக்கின உயிர்கள் விளக்குக.

2. நெடில் குறில் மாற்றம் -விளக்குக.

3.மெய்யொலி மாற்றத்தினை விளக்குக.

4.உருபன் சொல்லாக்கத்தினை எடுத்துக்காட்டு தந்துரைக்க.

5.முன்னன்ன ஆடொலிகளை விளக்கு.

**பத்து மதிப்பெண் வினா:**

1.மெல்லொலிகள் பற்றி “பரோ” கூறுவனவற்றை விளக்குக.

## அலகு-3

## பெயர்ச்சொற்கள்

### 3.1 இடம், திணை, பால், எண் உணர்த்தும் முறை

பெயர்ச் சொற்கள் இடம், திணை, பால எண் ஆகியவற்றைக் காட்டி நிறபதோடு வேற்றுமை ஏற்கின்றன. திராவிட மொழிகளின் பெயர்ச் சொற்களைப் பொதுவாக.

(1) பொருட் பெயர்கள் (Concerete nouns)

(2) குணப் பெயர்கள் (Abstract nouns )

(3) தொழிற் பெயர்கள் (Verbal nouns)

(4) வினையாலணையும் பெயர்கள் (Participal pronouns)

என்றும், இடப்பெயர்களை (Pronouns)

(1) மூவிடப் பெயர்கள் (Personal pronouns)

(2) சுட்டுப் பெயர்கள் (Demonstrative Pronouns)

(3) வினாப் பெயர்கள் (Interrogative pronouns)

(4) எண்ணுப் பெயர்கள் (Numerals)

என்றும் பிரிக்கலாம்.

மரபிலக்கண வல்லுநர்கள் உயர்திணைப் பெயர்கள், அ.்.றிணைப் பெயர்கள் என்று பெயர்ச் சொற்களைக் கூறபடுததுவர். மேலும் திராவிட மொழிகளின் பெயர்களை ‘உயிர் உள்ளன பற்றி வரும் பெயர்கள்’ (Animate nouns), ‘உயிரற்றன பற்றி வரும பெயர்கள் (Inanimate nouns) என்று இரு கூறுபடுத்தலாம். உயிரற்றன பற்றி வரும் பெயர்கள் இடவேற்றுமை உருவான ‘இல்’ என்பதை ஏற்று நிற்க, உயிர் உள்ளன பற்றி வரும் பெயர்கள் சில முன்னொட்டுகளாக அமையும் சொல்லுருபுகளையே பெற்று நிற்கின்றன. மலையாளம், கோடா, கன்னடம், கோண்டி, கோண்டா போன்ற மொழிகளில் உயிர் உள்ளன பற்றி வரும் பெயர்களில் இரண்டாம் வேற்றுமை உருபு கட்டாய உறுப்பாகவும், உயிரற்றன பற்றி வரும் பெயர்களில் இரண்டாம் வேற்றுமை உருபு விருப்ப உறுப்பாகவும் (Optional) உள்ளன[1].

மேலும், ‘எண்ண முடியும் பொருட்கள் பற்றிய பெயர்கள்’ (Countable nouns), ‘எண்ண முடியாப் பொருட்கள் பற்றிய பெயர்கள்’ (Mass nous) என்றும் திராவிட மொழிகளில் பெயர்களைக் கூறுபடுத்துவர். இவற்றுள் அதிகமாக முன்னைய பெயர்கள் பன்மை விகுதிகளை ஏற்கும். பினனையது பன்மை உருபுகளை அதிகமாக ஏற்பதில்லை. நடுத்திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும இதற்குப் பல விதவிலக்குகள் உள்ளன. இவற்றைத் தவிர நான்கு மணி, ஐந்து மணி என்று பொழுதைச் சுட்டி நிற்கும் பெயர்களையும் (Nouns of Time) தனியாகக் கூறுபடுத்திக் காட்டுவதுண்டு, இத்தகைய பெயர்கள் அதிகமாக ஏழாம் வேற்றுமை (இடப்பொருள்), ஐந்தாம் வேற்றுமை (நீங்கற் பொருள்), நான்காம் வேற்றுமை ஆகியவற்றை மட்டுமே ஏற்கின்றன.

## பெயர்ச் சொற்கள் இடம, திணை. பால், எண் உணர்த்தும் முறை (Person,Gender, Number, Distinction)

திராவிட மொழிகளில் தனிச்சொற்களும், சிலவிடங்களில் விகுதிகளும் திணை, பால் பாகுபாட்டைத் தெளிவுறுத்திக் காட்டுகின்றன. இம்மொழிகளில் தன்மை, முன்னிலை ஆகிய இடங்கில் பால் வேறுபாட்டைக் காண்பது அரிது. இப்பெயர்கள் ஒருமை, பன்மை என்ற எண்

வேறுபாட்டை மட்டுமே காட்டி நிற்கின்றன. படர்க்கைப் பெயர்களில் எண், திணை, பால் ஆகியவற்றைத தெளிவாகக் காணலாம்.

பால் பாகுபாடு மொழிக் குடும்பங்களுக்கு மொழிக் குடும்பங்கள் வேறுபட்டு அமைவதைக் காணலாம். வடமொழியில திராவிட மொழிகளைப் போன்று பொருட்களின் தன்மையை ஒட்டிப் பால் பாகுபாடு அமையாமல் உயிரற்ற பொருட்களும் கட்புலனாகாத நுண் பொருட்களுங்கூட ஆண், பெண் என்று கூறுபடுத்தப்படுகின்றன. இத்தகைய பால் பாகுபாட்டினை ‘இயல்பான பால் பாகுபாட்டு முறை’ (Natural Gender) என்று வழங்குகின்றனர். இம்மொழிகளில் கை விரல்கள் பெண்பால் என்றும், கால் விரல்கள் ஆண்பால் என்றும் வழங்கப்பட்டு வருவதைக் காணலாம். திராவிட மொழிகளிலும் ஆறு, ஊர் திங்கள் போன்றவற்றை உருவக முறையில் பெண்பால் என்றும், ஆண்பால் என்றும் வேறுபடுத்திச் சிறப்பிக்கும் மரபும் உள்ளது.

திராவிட மொழிகளில் திணை, ‘உயிர்திணை’ (Human) என்றும், அ∴றிணை’ (Non-Human) என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. தெலுங்கு மொழியில் இவை ‘மகத்’, ‘அகமத்’ என்று பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றன. மலையாள மொழியில் இப்பிரிவு தெளிவாக அமைந்தபோதிலும் இவற்றிற்குத் தனிப பெயர்கள் கொடுக்கப்படவில்லை. எனினும் மிகப் பழங்காலத்தில் இப்பாகுபாடுஇருந்திருக்காது என்றும், சித்திய மொழிகளில் உள்ளது போன்று எலலாப் பெயர்களும் திராவிட மொழிகளில் அ∴றிணையாகக் கருதப்பட்டிருக்க வேண்டுமென்றும் சிலர் கருதுவர்[2].

ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பைத் திராவிட மொழிகளில உயர்திணை ஒருமையில்தான் காணமுடிகின்றது. பழந்தமிழில் அ∴றிணைய பொருட்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுக்கும் முறை இருந்தபோதிலும் அவற்றிற்கெனத்தனிப் பால்காட்டும் விகுதிகள் இல்லை. மாறாகத தனிச் சொற்களே அமைகின்றன.


எ.கா.

| | | | |
|---|---|---|---|
| கடுவன், களிறு | ஆண்பால் | மந்தி, பிடி | பெண்பால் |

பால் பாகுபாடு திராவிட மொழிக் குடும்பத்திலும் மொழிக்கு மொழி வேறுபட்டுத் தோன்றுவதைக் காணலாம். பழங்கன்னடத்தில் இலக்கணநூலார். ஒன்பது வகையான பால் பாகுபாட்டினைக் காட்டுகின்றனா[3]. மலையாளம் போன்ற மொழிகிளல் சுட்டுப் பெயர்களில் மட்டும் ஐந்து வயைான பால பாகுபாடு அமைய வினைமுற்றுக்களில் பால் பாகுபாட்டினைக் காணமுடியவில்லை. தமிழிலுள்ள காணிக்காராகளின் வட்டார வழக்கிலும், தோடா கொடகு பேர்னற மொழிகளிலும் இம்முறை உள்ளது[4]. கௌடா கன்னடத்தில் சுட்டுப பெயாகளில


ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத (Non-masculine) ஒருமை, பன்மை என்ற பாகுபாடும், வினைமுற்றில் ஒருமை, பன்மை எனற பாகுபாடும் உள்ளது. கன்னட மொழியின் மற்றொரு வட்டார வழக்கில் (Soyther Havyaka Kannada) வினைமுற்றிலும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத ஒருமை, பன்மை என்ற முப்பிரிவு உள்ளது. தெலுங்கு ொழியில் சுட்டுப் பெயர்களிலும், வினைமுற்றுக்களிலு் ஆண்பால் ஒருமை, ஆண்பால் அல்லாத ஒருமை, பலர்பால், பலவின்பால் கொலாமி, நாயக்கி, பர்ஜி, கடபா போன்ற மொழிகளில் வினைமுற்றுகளிலும், சுட்டுப்பெயர்களிலும் ஆண்பால் ஒருமை, ஆண்பால் பன்மை, ஆண்பால் அல்லாத ஒருமை, ஆண்பால் அல்லாத பன்மை என்ற நால்வகைப் பகுப்புக்கள் உள்ளன. மால்டோ மொழியில் ஆண்பால் ஒருமை ஆண்பால் அல்லாத ஒருமை, பலவின்பால் என்ற மூன்று வகையான பாகுபாடே உள்ளது. பெங்கோ மொழியில் சுட்டுப்பெயர்களில் ஆறு வகையான பால் பாகுபாடு வினைமுற்றுக்களில் ஐந்து வகையான பால் பாகுபாடும் உளளன. திராவிட மொழிகளிலுள்ள பால் பாகுபாட்டை விளக்கும் ஒப்பியலறிஞர்களுள் சிலர் அவற்றை மூவகையாகவும், வேறு சில நால்வகையாகவும் கூறுபடுத்தி விளக்குவர்[5].

**முதல் வகை**




இவ்வாறு ஒருமையை ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்று மூன்றாகவும், பன்மையைப் பலர்பால், பலவின்பால் எனறு இரண்டாகவும் பிரிக்கும் முறை தமிழ் , பழைய மலையாளம், கோடா, கன்னடம், கொடகு, துளு போன்ற தென் திராவிட மொழிகளில் காணப்படுகின்றது.

**இரண்டாம் வகை**




இவ்வாறு ஒருமையை ஆண்பால், ஆண்பால் தவிர்த்தன என்று பிரித்து, ஆண்பால் தவிர்நதன என்ற பிரிவில் பெண்பால், ஒன்றன்பால் ஆகியவற்றை அடக்கும் இயலபினையும்,

பனமையைப் பலர்பால், பலவின்பால் என்ற கூறுபடுத்தும் இயல்பினையும் தெலுங்கு, நாயக்கி, கொலாமி, பர்ஜி, கடபா, குரக், மால்டோ போன்ற போன்ற மொழிகளில் காணலாம்.

**மூன்றாம் வகை**

**பெயர்ச் சொல்**

**ஒருமை** — **ஆண்பால்**, **ஆண்பால் தவிாந்தன**

**பன்மை** — **ஆண்பால்**, **ஆண்பால் தவிர்ந்தன**

கோண்டா, கோண்டி, குயி, குவி போன்ற மொழிகளில் மேற்காட்டியவாறு ஒருமை, பன்மை ஆகிய இரண்டடிலும் ஆண்பால், ஆண்பால் தவிர்ந்தன என்ற சமச்சிரான பகுப்பு முறையனைக் காண முடிகின்றது.

பிராகுயி, தோடா, தற்கால மலையாளம் ஆகியவற்றில் பால் பாகுபாடு தெளிவாக இல்லை. மூலத் திராவிட மொழியில் பால்பாகுபாடு இருந்ததா? இருந்தது என்றால் இம்மூவகைப பிரிவில் எது மூலத்திராவிட மொழியினியல்பைக் காட்டுகின்றது? என்ற ஐய வினாக்கள் எழுதல் இயல்பே. டாக்டர் கால்டுவெல் பால்பாகுபாடு திராவிட மொழிகளில் மிகப் பிற்காலத்தில் ஏற்பட்டதாகக் கருதுகின்றார்[6]. பாலிகிளவிகள் (Pronomial Terminations) இணைக்கப்படும் நிலை தொடங்கிய பின்னரே பால்பாகுபாடு அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பது அவா் கருத்து. ஆனால் பாலறிகிளவிகளைப பெறாத ஆண்பால், பெண்பால் ஆகியவற்றை குறிக்கும் சொற்களில் பால்பாகுபாடு உள்ளதைக் காண்கிறோம் எனவே டாக்டர். காலடுவெல்லின் கூற்று அவ்வளவு பொருத்தமாகத தெரியவில்லை.

ஜூல்ஸ் பிளாக் இம்மூவகைப் பிரிவில் முதல்வகைப் பாகுபாடு காலத்தால் பிந்தியது என்றும் தெலுங்கு போன்ற மொழிகளில் அமையும் இரண்டாவது வகைப் பிரிவே தொன்மையானது என்றும் குறிப்பிடுகினறார்[7]. ஜுல்ஸ் பிளாக்கின கருததையே பேராசிரியர் டீா. கிருஷ்ணமூர்த்தியும் ஏற்றுக்கொண்டு இரண்டாம்வகைப் பிரிவே தொன்மையானது என்றும் இதன் பிற்கால வளர்ச்சியே முதலாம் வகைக் கூறுபாடு என்றும் விளக்கிச் செல்கின்றார்[8]. பெண்பாலைத்தனியாகப் பிரித்து வழங்கும் முறை திராவிட மொழிகளின் பல்வேறு கிளைமொழிகளிலும் இன்னும் வளர்ச்சியடையாமல் இருபபதைச் சான்றாகக் காட்டி, ஆண்பால் தவிர்ந்தன (non-masculine) என்னும் பிரிவிலிருந்து தென் திராவிட மொழிகளில் பெண்பால் என்னும் தனிப்பிரிவு பிற்காலத்தில் நாகரிக வளர்ச்சியின் காரணமாகவும், மக்களின் மனப்போக்கிற்கு ஏற்பவும் தனியாகப் பிரிந்திருக்க வேண்டுமென்று குறிப்பிடுகின்றார். மேலும் இரண்டாவது வகைப் பாகுபாடே அதிகமான திராவிட மொழிகளில் உள்ளதையும் காட்டிச் செல்கின்றார். ஆனால் பேராசிரியர்கள் பரோவும், பட்டாச்சாரியாவும் முதல்வகையே தொன்மையானது என்று கருதுகின்றனர்[9].

**எண்**

திராவிட மொழிகளில் எணணைப் பொறுத்தவரையில் ஒருமை, பன்மை என்ற பாகுபாட்டை மட்டுமே காண்கின்றோம். இவற்றுள் ஒருமை எண்ணுக்கென தனி விகுதிகளை இணைக்கும் மரபு இல்லை. ஒருமையுருபாகவும் பயன்படுத்தப்பட்டதாக வாதிடுவர். சிலா் 'மனிதன்' என்ற சொல்லில் வரும் 'ன'கர ஒற்றையும், கன்னடச சொல்லான huruganu (பையன்) என்ற சொல்லின் இறுதி ஒலியான 'ரெ' என்பதையும், tammu-ru என்ற சொல்லின் இறுதி ஒலியான 'சர' என்பதையும் ஒருமை விகுதிகள் என்பர்[10].

இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் ஒருமை, இருமை (dual), பனமை என்ற முப்பிரிவுகள் உள்ளன. இப்பாகுபாடு திராவிட மொழிகளிலும் ஆங்காங்கு இடம்பெறுவதாகவும், 'கண்கள்' என்ற சொல் இரண்டு என்பதைச் சுட்டுவதால் பொருளடிப்படையில் இருமை என்ற பாகுபாடு இம்மொழிகளில உண்டு என்றும் சிலா் வாதிடுவர். இது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. அடிச்சொல்லுடனோ, ஒருமைப பெயா்களுடனோ பன்மை விகுதிகளை இணைத்துப் பன்மை எண்ணை உணா்த்துவது திராவிட மொழிகளின் பொதுவியல்பு, நடுத்திராவிட மொழிகளில் பெண்களைக குறிக்கும் சொற்களோடு பன்மை விகுதியினை இணைத்து உணா்திணையாக வழங்கும் வழக்கமில்லை.

உயா்திணைக்குரிய பன்மை விகுதியாகத திராவிட மொழிகளில் 'ா்' என்பது பெருவழக்கிலுள்ளது. பன்மை விகுதிகளான க, கள், ளு, ஆகியன பெரும்பான்மையான மொழிகளிலுள்ளன. சில மொழிளில் 'க'கரத்தோடு, 'உ'கர உயிா் இணைந்தும், 'அ'கரம் இணைந்து பன்மை விகுதி அமைவதுண்டு.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | நாயக்கி | - | தல் (தலை) |
| | | | - | தல்கு (தலைகள்) |
| | (2) | கோண்டா | - | மேமா் (கணவன்) |
| | | | - | மேமா்க (கணவன்மாா்கள்) |

சில மொழிகளில் -எஇ -நஎஇ - ழஎ என்பனவும் பன்மை விகுதிகளாக உள்ளன. இவ்விகுதிகளைக் கடபா, பா்ஜி, கொலாமி ஆகிய மொழிகளில் காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | பா்ஜி | - | அலியக் (எருமை) |
| | | | - | யடயைமநஎ (எருமைகள்) |
| | (2) | கடபா | - | லைய (தாய்) |
| | | | - | லைழஎ (தாய்மாா்கள்) |

திராவிட மொழிகளில் திணை, பால் பாகுபாடடில் எண்ணும் அடஙகி விடுகின்றது.

| திணை | | பால் | | எண் |
|---|---|---|---|---|
| (1) | உயர்திணை | - ஆண்பால் | } - | ஒருமை |
| | | - பெண்பால் | | |
| | | - பலர்பால் | - | பன்மை |
| (2) | அஃறிணை | - ஒன்றன்பால் | - | ஒருமை |
| | | - பலவின்பால் | - | பன்மை |

### 3.2 உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகள்

திராவிட மொழிகளில் ஒருமைக்கெனத் தனி விகுதிகள் இல்லை. எனினும் மூவிடப் பெயர்களில் இணைக்கப்படும் பாலறிகிளவிகள் எண் வேறுபாட்டையும் உணர்த்தி நிற்கின்றன. உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதிகளாகததமிழ், மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளில் 'அன்', 'ஆன்' என்னும் விகுதி இடம்பெறுகின்றன. தமிழில் காணப்படும் விகுதி ஒலித்துணையாக 'உ'கரத்தைப பெற்றுக் கன்னட மொழியில் 'அனு' என்று வருகின்றது. டு, உடு, அடு, ண்டு, உண்டு, அண்டு என்னும் வடிவங்கள் தெலுங்கு மொழியில் உள்ளன. தெலுங்கில் காணப்படும் இறுதி மூன்று வடிவங்களும் 'அன்' என்பதன திரிபே என்பர். மூவிடப பெயர்களோடு மட்டுமின்றிச் சில இடப்பெயர்களோடும் 'அன்'விகுதிகள் இடம்பெறுகின்றன. 'அன்' போன்ற விகுதிகளை இணைக்கும்போது அவை ஆண்பால் ஒருமைப் பெயர்களாகின்றன.

எ.கா. மலை ‸ அன் , மலையன்

நாடு ‸ அன் , நாடன்

திராவிட மொழிகளில் காணப்படும் ஆண்பால் ஒருமை விகுதிகளில் யஇெ மூ-ஏயஇெ மூ-(மு)மூமுயஇெ மூ-யமயஇெ மூ-யளயஇெ மூ-யவெரஇ மூ-யமஇ மூ-வவயெ என்பவற்றை மூலத் திராவிட வடிவங்களாகக் கொள்ளலாம்.

### 3.3 உயர்திணை பெண்பால் ஒருமை விகுதிகள்

பெண்பால் ஒருமை விகுதிகளாகத் தமிழ் மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளில் -அள், -ஆள், -இ என்பன உள்ளன. தெலுங்கில் சிலவிடங்களில் -ஆளு என்ற விகுதி வழங்குகின்து[12]. தமிழில் -இ என்னும் விகுதி சிறுபான்மை வழக்கிலுள்ளது. கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளிலும் இவ்விகுதியைக் காணலாம்.

எ.கா. தமிழ் - குறத்தி

தோழி

அரசி

கன்னடம் - அரசிதி

தெலுங்கு - சின்னதி

துளு, மால்டோ போன்ற மொழிகளில் ழசவை என்ற வடிவம் காணப்படுகின்றது. -ழுவவழைஇ மூயடஇ மூ-(மு)மஜைஇ மூ-யமயவவழைஇ மூ-யஉஉழை என்ற பல விகுதிகள் திராவிட மொழிக் குடும்பதின் பல்வேறு கிளைகளில் காணப்பட்டபோதிலும் வவழைஇ மூ-ஜைஇ மூ-யழை என்பவற்றை மட்டும் மூலத் திராவிட மொழி நிலைக்குத் திருத்தியமைக்க முடியும் என்கிறார். டாக்டர் ளு.ஏ.சண்முகம[13]. தமிழிலும், மலையாளத்திலும், பல நடுத்திராவிட மொழிகளிலும் ஆண்பால் ஒரும வடிவத்தோடு பெண்பால் விகுதியை இணைத்துப் பெண்பால் ஒருமையை உணர்த்தும் இயல்பும் காணக்கிடக்கின்றது.

எ.கா. பார்ப்பான் ¸ இ , பார்ப்பினி

இதை தவிர இரட்டைப் பெண்பால் விகுதிகளை இணைத்துப் பெண்பாலை உணர்த்தும் இயல்பும் தமிழ், மலையாளம் கொடகு போன்ற மொழிகளில் உள்ளன.

எ.கா. தமிழ் - மைத்தினித்தி

மலையாளம் - Kun-i-tti

**அ.்.றிணை ஒன்றன்பால் விகுதிகள்**

ஒன்றன்பால் விகுதிகளாக -து, -த போன்றன திராவிட மொழிகளில் காணப்படுகின்றன. திராவிட மொழிகளில் முற்காலத்தில் எல்லாப் பெயர்ச் சொற்களும் அ.்.றிணையாக இருந்திருக்க வேண்டுமென்றும், பின்னர்காலப்போக்கில் பாலுணர்த்தும் விகுதிகள் அவற்றோடு இணைந்து உயர்திணையாக அமைந்திருக்க வேண்டுமென்றும் டாக்டர் கால்டுவெல் கருதுகின்றார். ஒருமை பன்மையமைப்பில் திராவிட மொழிகள பெரும்பாலும் சித்திய மொழிகளை ஒத்துக் காணப்படுகின்றன. இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் விகுதி இணைத்தல், இடையொட்டு (infix) இணைத்தல், தனி வடிவம் அமைத்தல் எனப் பல முறைகள் இருக்க, திராவிட மொழிகளில் விகுதிகளை இணைத்துப் பன்மை உணர்த்தும் முறை மட்டுமே உள்ளது.

**உயர்திணைப் பலர்பால் விகுதிகள்**

தெலுங்கு தவிர்த்த ஏனைய நடுத்திராவிட மொழிகளில் ஆண்பால் பன்மை மட்டும் காணப்படுகின்றது. ஏனைய அனைத்து மொழிகளிலும் உயர்திணையில் பொதுநிலையில் பலர்பால்

(Epicine Plural) என்ற தனிப்பிரிவு உள்ளது. இவற்றுள் பலர்பால் என்ற பகுப்புதான் தொன்மையானது என்பதும ஆண்பால் பன்மை என்பது பிற்காலத்தில் ஏற்பட்டது என்பதும டாக்டர் ளு.ஏ. சண்முகம் அவர்களின் கருத்து.

உயர்திணைப் பலர் அர், ஆர், இர், -ஈர், -அ, மார் என்பன தமிழ், மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளில் பெருவழக்கில உள்ளன. –அரு, -ஆரெ, -ஏரு, -ரி, -ரு போன்றன கன்னடம். தெலுங்கு போன்ற மொழிகளில் காணப்படுகின்றன. பலர்பால் விகுதியான ‘மார்’ இடைக்காலத் தமிழிலக்கியங்களிலும். தற்கால போன்ற பன்மை விகுதிகளோடு ‘கள்’ விகுதியும் இணைந்து ‘அவர்கள்’ என்பன போன்ற இரட்டைப் பன்மை (னுழரடிடந ீடரசயட) வடிவங்களும், மரியாதைப் பன்மை (Honorific Plural) வடிவங்களும் அமைவதுண்டு. சில வட்டார வழக்குகளில் ‘க’ விகுதியும் -ங்க என்னும் விகுதியும் பலர்பால் விகுதிகளாக உள்ளன. –கள், -ன் போன்ற பன்மை விகுதிகள் உயர்திணைக்கு மட்டுமின்றி, அ.்.றிணைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

-அர் விகுதி தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் மட்டுமின்றி கோண்டா, பெங்கோ, நாயக்கி, பர்ஜி போன்ற மொழிகளில் உள்ளது. –வர் விகுதி கொடகு, கோண்டா, குயி, குருக், மால்டோ போன்ற மொழிகளிலும் காணப்படுகின்றது. இவற்றைத் தவிர, தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளிலும் ‘ஓர்’ என்னும் விகுதியும் உள்ளது.

**மரியாதைப் பன்மை**

திராவிடமொழிக் குடும்பத்தின் அதிகமான மொழிகளில், ஒருவருக்கு அதிக மரியாதை கொடுக்கவேண்டுமாயின் மூவிடப்பெயர்களின் பன்மை வடிவினை ஒருமைமையைச் சுட்டப் பயன்படுத்துவதுண்டு.

மரியாதைப் பன்மை தொல்காப்பியர் காலத்திலிருந்தே தனித்த ஓர் இலக்கணக் கூறாக மரபிலக்கண வல்லுநர்களால் கருதப்பட்டு வருவதைக் காண்கிறோம். தமிழில் மரியாதைப் பன்மை பேச்சு வழக்கிற்கே உரியதெனத் தொல்காப்பியர் சுட்டிச் செல்கின்றார். பழந்தமிழில் மரியாதப் பன்மை இலக்கியங்களில பெருவழக்காக இல்லாதபோதிலும் பாடல்களின் அடிக்குறிப்புக்களில் இடம் பெறும் புலவர் பெயரோடு பல இடங்களில் அது இணைக்கப்படுகின்றது. சிலம்பில், ‘மகனார்’, ‘மகளார்’ என்னும் வழக்குகள் இடம்பெறக் காணலாம் பிற்காலத்தில் தோன்றிய ‘வீரசோழியத்தில் ஆண் மரியாதைப் பன்மை, பெண் மியாதைப் பன்மை ஆகியனவேறுபடுத்திக் சுட்டப்படுகின்றது. இயற்பெயரோடு ‘அவர்கள்’ எனபதை இணைத்து மரியாதைப் பன்மை வடிவங்களை அமைக்கும் போக்கினை 16-ஆம் நூற்றாண்டிலிருந்து காணமுடிகின்றது.

மலையாளக் கல்வெட்டில், ‘அர்’, ‘கள்’ என்னும் விகுதிகள் மரியாதைப் பன்மையுணர்த்தத் துணைபுரிகின்றன. தமிழில் ‘தாங்கள்’, ‘நீங்கள்’, ‘அவர்கள்’ என்னும் இரட்டைப் பன்மை வடிவங்களைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம். இவற்றோடு ‘அவர்’ என்னும பலர்பால் படர்க்கை வடிவினை ‘கள்’ விகுதி சேர்க்காமல் பயன்படுத்துவதும் உண்டு. மலையாள மொழியில் ‘அத்தேகம்’, ‘இத்தேகம்’ என்பன போன்ற வடிவங்கள் உள்ளன. கன்னடத்தில் ‘ஆதனு’,

‘ஊதனு’, ‘ஈதனு’ என்பன ஆண்பால் மரியாதைப் பன்மை வடிவங்களாகவும் ‘ஆகெ’, ‘ஊகெ’, ‘ஈகெ’ என்பன பெண்பால் மரியாதைப் பன்மை வடிவங்களாக வருகின்றன.தெலுங்கில் ‘ஆயன’ ,ஈயன, ‘ஆமெ’ ‘ஈமெ’ போன்ற வடிவங்கள் உள்ளன. சில மொழிகளில் படர்க்கைப் பெயர்கள் சில மாறுதல்களோடு மரியாதைப் பன்மை வடிவங்களாக வருகின்றன. ஷைரெ என்பன போன்ற துளு மொழியின் மரியாதைப பன்மை வடிவங்கள் இதற்குச் சான்று. தெலுங்கு தவிர்ந்த ஏனைய நடுத் திராவிட மொழிகளில் ஆண்பால் பன்மை வடிவமே மரியாதைப் பன்மை வடிவமாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய பன்மை வடிவங்கள் ஒரு என்னும் எண்ணுப் பெயரடையோடு (Numeral attribute) வருவதில்லை. ஆனால் மரியாதைப் பன்மை ஒரு வேட்டுவர் என்று எண்ணுப் பெயரடையோடு வருகின்றது[16].

**பெண்பால் பன்மை**

பெண்பால் பன்மை என்னும் பரிவினைக் கோண்டி, கோயா, கோண்டா, குயி, குவி, பெங்கோ ஆகிய மொழிகளில் காண்கின்றோம். இவற்றுள் கோயா, கோண்டா, குயி, குவி என்பவற்றில் –sk(a) என்னும் பெண்பால் பன்மை விகுதி காணப்படுகின்றது. கோண்டி மொழியில் ாம உள்ளது.பெங்கோ மொழியில் -(ை)மஇ -உ என்ற விகுதிகளும் காணப்படுகின்றது.

**அ.ஃ.றிணைப் பன்மை**

தமிழில் அ.ஃ.றிணைப் பன்மை விகுதிகளாக ‘கள்’ என்பதும் அதன் மாற்று வடிவமான ‘பய’! என்பதும் காணப்படுகின்றன.’அ’ விகுதி இலக்கியத் தமிழில் பெருவழக்கிலுள்ளது. இவற்றோடு ‘பல’, ‘சில’ என்ற தனி வடிவங்களும் (Free forms) தமிழில் உள்ளன. திராவிட மொழிகளில் அ.ஃ.றிணைப் பன்மை வடிவங்கள் பல காணப்பட்ட போதிலும் -ழூமயட ழூ-ட என்பவற்றை மட்டுமே மூலத் திராவிட வடிவங்களாகக் கொள்வர். இவற்றின் மாற்று வடிவங்கள (reflexes) துளு, கொலாமி, பர்ஜி போன்ற மொழிகளில் காணப்படுகின்றன. தெலுங்கு மொழியில் ‘லு’ என்னும் விகுதியே அதிகமாகப் பயின்று வருகின்றது.

| | | | |
|---|---|---|---|
| | ஒருமை | - | பன்மை |
| எ.கா. | சிலகா | - | சிலுசிலு |
| | எலுகு | - | எலுகலு |

அ.ஃ.றிணைப் பன்மை விகுதிகளில் ‘கள்’ விகுதி குற்றுயிரைக கொண்ட ஓரசைப் பெயர்களையடுத்தும் (monsosyllabic nouns)இ (உ) ஏஊஏ என்று அமைகின்ற ஈரசைப் பெயர்களையடுத்தும் (disyllabic nouns) இடம் பெறுவதாகவும்ழூ-ட விகுதி ஏனைய பெயர்களையெடுத்து இடம்பெறுகிறது. டாக்டர் ஞ.ஏ. சண்முகம் விளக்கிச் செல்கின்றார். நடுத் திராவிட மொழிகளில் பன்மை விகுதி எண்ணமுடியும். பொருட்களின் பெயர்களோடு (count nouns) மட்டுமே இணைக்கப்படுகின்றது. ஆனால் எண்ணமுடியாப் பொருடகளின் பெயரோடும் (Mass

Nouns) பன்ம விகுதி இணைக்கப்படுவதைக் காணலாம். எனினும் இம்முறை சமச்சீராக அமையவில்லை.

**வேற்றுமைகள்**

திராவிட மொழிகளில் வேற்றுமைகள் எண்ணற்றனவாக உள்ளன. பெயர்ச்சொற்களின் பின்னா் இணைக்கப்படும் ஒவ்வொரு இணைப்பும் இம்மொழிகளில் பொதுவாக ஒரு புதிய வேற்றுமையைத் தோற்றுவிக்கின்றன[1]. இவ்வேற்றுமைகள் தொடா்களிலுள்ள பெயருக்கும், வினைக்கும் இடையேயுள்ள தொடா்பினைக் காட்டி நிற்கும். இதற்கு ஆறாம் வேற்றுமை மட்டும் விதிவிலக்கு. ஆறாம் வேற்றுமை மட்டும் பெயருக்கும் பெயருக்கும் இடையேயுள்ள உறவினைக் காட்டி நிற்கின்றது. வடமொழி இலக்கண வல்லுநா்கள் அம்மொழியிலுள்ள எட்டாக வரையறுத்து விளக்கிச் சென்றனா். இலத்தின் மொழியின் இலக்கணத்த ஒட்டி ஆங்கில மொழிக்கு இலக்கணம் அமைத்ததைப் போன்று, வடமொழியில் காணப்படும் வேற்றுமைப் பாகுபாட்டைப் பின்பற்றித் தமிழிலும் ஒப்புமையாக்க வேற்றுமைகள் எட்டு என்று வரையறுத்து விட்டனா். தொல்காப்பியா் கால்திற்கு முன்னா் தமிழில் வேற்றுமைகளை ஏழாகக் கருதும், பின்னா் அவா் காலத்தில் விளிவேற்றுமையினையும் இணைத்து வேற்றுமைகளை எட்டு என்று வகுத்தனா் என்பதும்.

‘‘வேற்றுமை தாமே ஏழென மொழிப’’[2]

‘‘விளி கொள்வதன்கண் விளியொடு எட்டே’’[3]

என்ற அவா் கூற்றால் தெளிவாகினறன. மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளின் இக்கண நூற்களான ‘லீலா திலகம்’, ‘சப்தமனி தா்பணம், ‘பாலவியாகரணமு’ என்ற நூற்களும் இம்மொழிகளில தமிழைப் போன்று எட்டு வகையான வேற்றுமைகள் உள்ளன என்ற குறிப்பிடுகின்றன.

திராவிட மொழிகளில் முற்காலத்தில் வேற்றுமைய உணா்த்த முழுச் சொற்கள் பயனபடுத்தப்பட்டிருக்க வேண்டுமென்றும், நாளடைவில் அச்சொற்கள் பிரிந்து தனித்தியங்கு ஆறறலற்ற உருபன்களாக (Bound forms) மாறி, பின்னா் உருபுகள் (suffixes) என்ற நிலையை வேற்றுமையிலும் பல பொருடட்களைக் காண்கின்றோம். மூன்றாம் வேற்றுமையில் கருவி, கருத்தா, உடன்நிகழ்ச்சி போன்ற பொருட்களும், நான்காம் வேற்றுமையில் கொடை, பகை போன்ற பல பொருட்களும் அமைவதைக் காணலாம். எனவே பொருள் நோக்கியும் தனித்தனி வேற்றுமைகளாக வகுக்கப்படவில்லை என்பது தெளிவு. ஐந்தாம் வேற்றுமைக்குரிய, ‘இல்’ உருபுக்கும், இடப்பொருளில் வரும் ஏழாம் வேற்றுமைக்குமிடையில் அதிக வேறுபாட்டைக் காணமுடியவில்லை. இரணடும் இடம் பொருளையே உணா்த்துகின்றன. நீங்கற் பொருளை உணா்த்த தற்காலத் தமிழில் ‘இல்’ உருபோடு ‘இருந்து’ போன்ற தனிச் சொற்கள் சோ்க்கப்படுகின்றன. ஒவ்வொரு மொழியிலும் அதன வளா்ச்சியை ஒட்டியும், தேவையை ஒட்டியும் வேற்றுமைகள் பலப்பலவாய் எழுதல் இயலபே இந்நிலையில் பிற மொழகளின் அமைபபப் பினபற்றித் தனக்குரிய தனித்தன்மையில் வளா்ந்து செலலும் ஒரு மொழிக்கு இலக்கண வரையறை செய்வது முற்றிலும் பொருத்தற்றதே என்பதற்குத் திராவிட மொழிகளின் வேற்றுமைப் பாகுபாடே சான்றாக அமைகின்றது.

**உருபு ஏற்கும் முறை**

திராவிட மொழிகள் வேற்றுமை உருபுகளை ஏற்பதற்கும் இந்தோ ஐரோப்பிய மொழிகள் வேற்றுமை உருபேற்பதற்குமிடையே பல வேறுபாடுகள் உள்ளன. திராவிடமொழிகளில் வேற்றுமைகள் பொதுவாக பெயர் ூ சாரியை ூ வேற்றுமை உருபு என்ற முறைபபடி அமைகினறன. பெயர்ச் சொற்கள் சாரியைகளைப (Link morph) பெறுவதிலும் ஓர் ஒழுங்கு முறையை இம்மொழிகளில் காணமுடிகின்றது. பொதுவாக 'அத்து', 'இன்' போன்ற சாரியைகள் அ∴றிணை ஒன்றன்பால் பெயர்களையடுத்தும், 'அற்றுச்' சாரியை அ∴றினைப் பலவின்பால் பெயர்களையடுத்தும் வருவதைக் காணலாம். 'அன்' சாரியை அ∴றினை ஒன்றன்பால் பெயர்களையடுத்தும் சுட்டுப் பெயர்களையடுத்தும் வருகின்றது. வேற்றுமை உருபுகளைப் பொறுத்தவரையிலும் இம்மொழிகளில் அதிகத் திரிபுகள் இல்லை. இம்மொழிகளில் காணக்கிடக்கும் ஒருசில திரிபுகள் அதிகமாகப் புணர்ச்சி வகையால் ஏற்படுவனவே.

இந்தோ ஐரோப்பிய மொழிளில் பெயர்ச் சொற்கள் வேறறுமை ஏற்கும்போது அச்சொற்களின் இறுதி ஒலிக்கேற்ப உருபுகளும் மாறுவதால் உருபேற்கும் முறைகளும் பலவாக அமைகின்றன. திராவிட மொழிகளில் பெயரீறுகளுக்கேற்ப உருபுகள் மாறும் நிலை இல்லை. மாறுதல்கள் அனைத்தும் பெயர்களுக்கும் உருபுகளுக்கும் இடையில் இணைக்கப்படும் சாரியைகளிலே நிகழ்கின்றன. இம்மொழிகளில் பெயரே வேற்றுமை ஏற்கும் அடிச்சொல்லாக (inflexuinal base) அமையும். துமிழில் 'ம'கர ஈற்றைக் கொண்ட அ∴றிணைப் பெயர்கள் உருபேற்கும் போது இறுதி ஒலி கெட்டு 'அத்து'ச் சாரியை வருவதையும், து, -டு ஆகிய ஈறுகளையுடைய பெயாகள் வேற்றுமை ஏற்கும்போது அவ்வொலிகள் இரடடிப்பதையும் காணலாம்.

எ.கா. நாடு , நாட்டை

இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் ஒருமைக்கும், பன்மைக்கும் தனித்தனி உருபுகள் உளளன. திராவிட மொழிகளில் அவ்வாறில்லை. ஆறாம் வேற்றுமையில மட்டும் ஒருமைககும், பன்மைக்கும் எனத் தனித்தனி உருபுகளைக் காண முடிகின்றது. திராவிட மொழிகளின் சொல்லுருபுகளான 'இடம்', 'கொண்டு' போன்றன தனியாக வழங்கும் தகுதியினையுடையன. வேற்றுமை உருபு ஏற்கும் முறையில் திராவிட மெழிகள் ஓரளவிற்குச் சித்திய மொழிகளை ஒத்துள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

**உருபுகளும், சாரியைகளும்**

உருபு ஏற்காமல் தொகையாக நின்று வேற்றுமைப் பொருளை உணர்த்தும்போது பெயர்ச் சொற்கள் திரியாமல் நிற்கும். உருபு ஏற்கும்போது பெயர்ச் சொல்லின் ஈறும், உருபும் திரிந்து நிற்கும்.

எ.கா. அவன் ‚ ஐ , அவனை

இராமன் ‚ ஆல் , இராமனால்

சில பெயர்ச் சொற்கள் உருபு ஏற்கும்போது அவ்வொலிச் சேர்க்கை ஒலிப்பதற்கு அரிதாக இருந்தாலோ. அல்லது அம்மொழியின் ஒலியமைப்பிற்குப் பொருந்துவதாக அமையாவிடிலோ, பெயருக்கும் உருபுக்கும் இடையில் பொருள் தராத உருபன்கள் (நஅிவல அழசிாள) சிலவற்றைப் பயன்படுத்துகின்றோம். பெயர்ச் சொற்களையும் வேற்றுமை உருபுகளையும் சார்ந்து இயைந்து வரும் இவற்றைச் சாரியை என்று மரபிலக்கண நூலாரும், ஐகெடநஒைழயெட ஐஉெசநயஅநவெள ழச யுரபஅநவெள என்று மொழிநூலாரும் அழைப்பர். சாரியைகள் தனித்து வருவதோடு, இரண்டாகஇணைந்தும் வருவதைக் காணலாம்.

எ.கா. மரம் ‚ அத்து ‚ இன் ‚ ஆல் , மரத்தினால்

‘அத்து’ச் சாரியை பெரும்பாலும் ‘ம’கர மெய்யை அடுத்து வருகின்றது. ‘உ’கர உயிரைக் கொண்டு முடியும் சொற்கள் பெரும்பாலும் ‘இன்’ சாரியைப் பெறுகின்றன.

எ.கா. பூவினால், பூவிற்கு

**3.4 திராவிட மொழிகளின் சாரியைகள்**

தமிழில் ‘உ’கரத்தைக் கொண்டு முடியும் எண்ணுப் பெயர்களை அடுத்து ‘அன்’, ‘இன்’ போன்ற சாரியைகள் இடம்பெறும். அது, இது என்னும் சுட்டுப் பெயர்களையடுத்தும் ‘அன்’ சாரியை வருகின்றது. ‘அற்று’ச் சாரியை பல, சில போன்ற பெயர்களை (Collective nouns) அடுத்து இடம் பெறுகின்றது. ‘உ’கரச் சாரியை, ‘ண’கர ஈற்றுச் சொற்களையடுத்து வருகின்றது.

எ.கா. கண்ணுக்கு

மண்ணுக்கு

மலையாள மொழியில் ‘ம’கர ஈற்றையுடைய அ∴றிணைப் பெயர்களின் முன்னர் -த்த் என்ற சாரியையும், உ, ஊ, அ போன்ற ஈறுகளையுடைய பெயர்கள் ஆறாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகியவற்றின் உருபுகள ஏற்கும்போது ‘இன்’ சாரியையும் இடம் பெறுகின்றன. கோடா மொழியில். —வ-இ -ெ- ஆகியனவும், தோடா மொழியில் -வ- வும், கொகு மொழியில் -வ-இ -யெ- ஆகியனவும், கன்னட மொழியில் -ன- -யச- ∴ -யச- எனபனவும் துளு மொழியில் -வ-இ -ன-இ -ய-இ -ந- ஆகியனவும் சாரியைகளாக வருகின்றன. கோண்டி மொழியில் -வ-இ -னஇ -ெ- போன்ற சாரியைகளையும், கோண்டா மொழியில் -வை-இ -னை- ஆகிய சாரியைகளையும, குயி மொழியில்

-ளை-இ -வலை-இ -வ-இ -யசலை- போனற சாரியைகளையும், குவி மொழியில் -ெ-இ -ெ-இ -வ- என்பன போன்ற சாரியைகளையும், குருக் மொழயில் -ை- -ய-ம- என்பன போன்ற சாரியைகளையும் காண முடிகின்றது. இவற்றுள் ழூ-யெ-இ ழூ-வவ-இ ழூ-லை-இ ழூ-ய-இ ழூ-வவ-இ ழூம- என்பனவற்றை மூலத் திராவிட வடிவங்களாகக கொள்ளலாம்[1].

### 3.5 எழுவாய் வேற்றுமை அல்லது முதல் வேற்றுமை

சித்திய மொழிகளிலும் உருது மொழியிலும் உள்ளது போன்று திராவிட மொழிகளிலும் எழுவாய் வேற்றுமை திரிபு அடையாத பெயராகவே உள்ளது. முதல் வேற்றுமயினை விளக்கும் தொல்காப்பியனாரும், நன்னூலாரும் முறையே.

''எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே'' (தொல்.சொல். 85)

என்றும்,

''எழுவா யுருபு திரியில் பெயரே" (நன்னூல் சொல். 295)

என்றும் கூறிப்போந்தனர். எனவே, எழுவாய் வேற்றுமைக்கென தனி உருபுகள் கிடையாது. வடமொழியில் பெயர்ச் சொல்லிலிருந்து எழுவாய் வேற்றுமை வடிவத்தால் மாறுபடுகின்றது. இதையொட்டி தமிழ்மொழியை ஆய்ந்த பல அறிஞர்களும் 'மரம்' என்ற வடிவில 'அம்' என்பது முதல் வேற்றுமை உருபு என்றனர். திராவி மொழிகளின் பெயர்ச் சொற்கள் பன்மை உருபினையும், வேற்றுமை உருபினையும் ஏற்கும்போது பெயர்ச் சொல் முதலிலும் பன்மை உருபு அதை அடுத்தும், இறுதியில் வேற்றுமை உருபும் நிற்றல் மரபு.

எ.கா. காய் ு கள் ு ஐ

மரம் என்ற சொல்லிலுள்ள 'அம்' வேற்றுமை உருபு என்றால், மரம் என்ற சொல் பன்மையுருபு ஏற்கும்போது 'அம்', உருபு பன்மையுருமை அடுத்து நிற்கவேண்டும். ஆனால் 'மரங்கள்' என்ற சொல்லில் 'அம்' விகுதி பன்மைக்கு முன்னர் நீங்காமல் நிற்கின்றது. எனவே, இதனை வேற்றுமையுருபு என்றால் பொருந்தாது என்கிறார் டாக்டர் மு. வரதராசனார்.

**இருவகை வடிவங்கள்**

திராவிட மொழிகளில் பெயர்ச் சொற்கள் வேற்றுமை ஏற்கும்போது பலவாறு திரிவதைக் காண்கின்றோம். பொதுவாகத் திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்கள் எழுவாய் வேற்றுமை வடிவமாக (ழேஅயைெவளைந கழசஅள) இருக்கும்போது உயிர் நீண்டும், ஏனைய வேற்றுமையில் உயிர் குறுகியும் காணப்படுகின்றது. எனவே மூவிடப் பெயர்களுக்கு எழுவாய் வடிவம் (ழேஅயைெவளைந கழசஅ), வேற்றுமை ஏற்கும் வடிவம் (முடிடநைரந கழசஅ) என்று இருவடிங்கள் அமைகின்றன.

எ.கா. தமிழ் யான்

| | | | |
|---|---|---|---|
| | | , | என்னை |
| | நான் | | |
| | நாம் | , | நம்மை |
| | நீ | , | நின்னை, உன்னை |
| | நீா் | , | நும்மை, உம்மை |
| கன்னடம் | நானு | , | நன்ன |
| | நீனு | , | நின்ன |
| | தானு | , | தன்ன |

இதைத் தவிர, சில சொற்களில் வேற்றுமை உருபு ஏற்கும்போது இறுதி வல்லினம் இரட்டித்தல், இறுதி மெய் கெடுதல் போன்ற பல திரிபுகள் ஏற்படுகின்றன.

**இரண்டாம் வேற்றுமை அல்லது செய்யப்படுபொருள் வேற்றுமை**,

கோண்டி, கோடா போன்ற மொழிகளில் இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஆகியவற்றின் பொருட்களைச செயப்படுபொருள் வடிவமே உணா்த்திவிடுகின்றது. மூலத் திராவிட வடிவங்களான மூ-யபெ-இ மூ-யல-இ மூ-(எ)மைெ போன்ற உருபுகள் அதிகத் திரிபின்றி திராவிட மொழிகளில் பயின்று வருகின்றன. மூ-யபெ-உருபின் மாற்று வடிவங்கள் கோடா, தோடா, கொடகு, கன்னடம், படகா, துளு, தெலுங்கு, கோயா, கொலாமி, நாயக்கி, பா்ஜி, குருக் மால்டோ போன்ற மொழிகளில் உள்ளன. வட திராவிட மொழிகளில் இவ்வுருபு -பஇ -ச ஆகிய ஈறுகளைக் கொண்டு முடியும் பெயா்களையடுத்து வருகின்றது. கொலாமி, நாயக்கி தவிா்தத நடுத்திராவிட மொழிகளில் மெய்யீறுகளைக் கொண்டு முடியும் பெயா்களையடுத்து மூ-மைெ உருபு இடம்பெறுகின்றது. ‘ஐ’ உருபு தமிழ், மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளில் இடம் பெறுகின்றது. இவ்வுருபு மலையைாள மொழியில் ‘எ’கா உருபாகத திரிகின்றது.

எ.கா. –அவனை ,அவனெ

கோடா மொழியில் -அ உருபு காணப்படுகின்றது. இதனை ‘ஐ’ உருபின் திரிபாகக் கொள்வா[11]. நடுத்திராவிட மொழிகளில் மூலத் திராவிட ‘அ’கர உருபு, ‘இ’கர உருபாகத் திரிகின்றது. வட திராவிட மொழிகளில் இது ‘எா்’ ̇ என்று மாறுகின்றது. இவ்வடிவம் மால்டோ மொழியில் பெரு வழக்கிலுள்ளது. செயப்படுபொருள் வேற்றுமையின் உருபின்றியே அவ்வேற்றுமையை உணா்த்தும் நிலையை எல்லாத திராவிட மொழிகளிலும் காணலாம். இரண்டாம் வேற்றுமை உருபு இவ்வாறு விருப்ப உறுப்பாக (Optional) அமையும் நிலை மூலத் திராவிடமொழியிலும் இருந்திருக்க வேண்டுமென்பது பலா் கருத்து. ஒரு தொடரிலுள்ள

செயப்படுபொருள் அ∴றிணையாக இருந்தால் தமிழ், மலையாளம், கன்னடம், குயி, பிராகுயி போன்ற மொழிகளிலும் இரண்டாம் வேற்றுமை உருபினை இணைத்துத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாய நிலை இல்லை. தமிழ், மலையாளம் போன்ற மொழிகளில் இவ்விரணடாம் வேற்றுமை உருபின்றித் தொகையாகவும் வழங்குவதைக் காணலாம். பொருள் தெளிவில்லாத இடங்களில் உருபுடன் எழுதிப் பொருளைத் தெளிவுபடுததல் இமமொழிகளின் பொதுவியல்பு.

இரண்டாம் வேற்றுமை உருபுகளை ஆராய்கின்ற டாக்டர் கால்டுவெல் ‘அம்’ என்பதுதான் தொன்மையான வடிவமென்றும், அது பின்னா் ‘அன்’ எனறும ‘ஐ’ என்றும் திரிந்தது என்றும் குறிப்பிடுகின்றாா். இவ்வுருபு பழங்கனனடத்திலும் உள்ளது.

**கருவிப் பொருள் வேற்றுமை (Instrumental Case)**

மரபிலக்கண வல்லுநா்கள் மூன்றாம் வேற்றுமை, கருவி, கருத்தா, உடன் நிகழ்ச்சி போன்ற மூன்று பொருட்களில் வரும் என்பா். இவையனைத்தையும் இணைத்து ஒரு வேற்றுமையாகக் கொள்வதைவிட இதனைக்கருவிப்பொருள் வேற்றுமை, உடன் நிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை என்று இரண்டாகக் கொள்வதே பொருந்தும், கருவிப்பொருள் வேற்றுமை உருபுகளாக ஆல், ஆன், அ. சேத, கொண்டு என்பன உளளன. இவற்றுள் ‘சே’ அல்லது ‘சேத’ என்ற உருபு தெலுங்கு மொழியில் கருவிப்பொருள்களை உணா்த்த பயன்படுத்தப்படுகின்றது.

எ.கா. நிப்புசேத – நெருப்பால்

இம்மொழியில் தோ, ஆன போன்ற உருபுகளும் கருவிப்பொருளைத் தருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | கத்திதோ | - | கத்தியால் |
| | குருவான | - | குருவால் |

பழங்கன்னடத்தில் ‘இம்’ உருபு உ்ள்ளது. இதனைத் தமிழிலுள்ள ‘இன்’ உருபின் திரிந்த வடிவமாகக் கருதுகின்றாா். டாக்டா் கால்டுவெல், புதுக்கன்னடத்தில் ‘இந்த’ என்ற உருபும் உள்ளது.

எ.கா. மரதிந்த – மரத்தா

துளு மொழியில் ‘து’ என்னும் உருபு பெருவழக்கிலுள்ளது. கொடகு மொழியில் ‘இஞ்சி’ என்னும் உருபும். நடுத்திராவிட மொழிகளில் ‘தோட’ என்ற உருபும் வழக்கிலுள்ளன. கோண்டி மொழியில் ஏழாம் வேற்றுமை, கருவிப்பொருள வேற்றுமை ஆகிய இரண்டையும் உணா்த்த ஒரு பொது வடிவம் கையாளப்படுகினறது[12]. கடபா மொழியில் -யெட என்ற உருபும், மால்டோவில் -(ை)வ என்ற உருபும், பிராகுயி மொழியில் -யவ என்ற உருபும் கருவிப்பொருளைத் தருகின்றன. எனினும் மூ-யடெ ∴ மூ-யட என்பவற்றை இவ்வேற்றுமையின் மூலத் திராவிட உருபுகளாகக் கொள்ளலாம். தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் -ஆல, -ஆன் என்னும் உருபுகளோடு

‘கொண்டு’ என்ற சொல்லுருபும் பயன்படுத்தபடுகின்றது. சிலவிடங்களில் ‘ஆன்’ உருபு உடன் நிகழ்ச்சிப் பொருளில் ‘ஓடு’ உருபுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுதலுண்டு.

எ.கா. தூங்கு கையான் ஓங்கு நடைய.

**உடன் நிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை (Sociative Vase)**

மூ்வர.். மூவர என்பனவற்றை இவ்வேற்றுமையின் மூலத் திராவிட உருபுகளாகத் திருத்தியமைக்கலாம். இவற்றுள் ‘ஓடு’ என்னும் உருபே திராவிட மொழிகளில் அதிகமாகப் பயினறு வருகின்றது. இதன் திரிபுகளைத் தமிழ், மலையாளம், கோடா, பர்ஜி போன்ற மொழிகளில் காணலாம். தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் ‘ஒடு’, ஓடு’ எனனும் உருபுகளோடு ‘உடன்’என்ற சொல்லுருபும் உள்ளது. கோடா மொழியில ‘ஓடு’ என்னும் உருபு மட்டுமே உடன் நிகழ்ச்சிப் பொருளைத தருகினறது. ‘அன்’ என்னும் உருபு பழந்தமிழில் உடன்நிகழ்ச்சிப் பொருளைத் தருகின்றது. தற்காலத்தமிழிலும், மலையாளத்திலும், கொடகு, படகா ஆகிய மொழிகளிலும ‘கூட’ என்ற சொல்லுருபு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. டாக்டர் கால்டுவெல் தமிழில் காணப்படும் ‘ஒடு’, ‘ஓடு’ என்னும் உருபுகள் ‘ஒட்டு’ என்னும் வினைப்பகுதியிலுள்ள வினைப்பகுதியினின்று பிறந்தன என்கிறார். இந்த ‘ஒடு’ உருபு இலக்கியங்களில் ஒப்புமைப் பொருளிலும் வருகின்றது.

எ.கா. மதியொடு ஒக்கும் முகம்.

கோயா, பிராகுயி ஆகிய மொழிகளில் முறையே –வழஇெ -வழ என்ற உருபுகள் உள்ளன. குருக், மால்டோ போன்ற மொழிகளில் ‘பயநெ’ என்ற உருபு உடன நிகழ்ச்சிப் பொருளைத் தருகின்றது. குயி, பெங்கோ, நாயக்கி ஆகிய மொழிகளில் -மநஇ -ாழமநஇ -ழெமழெ ஆகிய விகுதிகள் உள்ளன.

**நான்காம் வேற்றுமை அல்லது கொடைப் பொருள் வேற்றுமை (Dative Case)**

தமிழில் நான்காம் வேற்றுமை கொடை, பகை, நட்பு, தகவு, முதற்காரணம், நிமித்தகாரணம், முறை ஆகிய ஏழு பொருட்களில் வருவதாக இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகினறனர். திராவிட மொழிகளில் நான்காம் வேற்றுமை உருபுகளாக –கு, -கி, -னு, -க, -ப,கெ,-பந. -கோ, -உன், -(ர)பஇ -இக், -அகி, -இகி, -திங்கி போன்றவை உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. (1) | மரத்திற்கு | - | தமிழ் |
| (2) | மரத்தினு | - | மலையாளம் |
| (3) | மரக்கெ | - | கன்னடம் |
| (4) | குரமுனமு | - | தெலுங்கு |

| | | | |
|---|---|---|---|
| (5) | மரக்கு | - | துளு |
| (6) | கொக்கோஸ்கே (குழந்தைக்கு) | - | குருக் |
| (7) | படித்துன் (பன்றிக்கு) | - | கோண்டி |
| (8) | அபதிங்கி (அப்பாவுக்கு) | - | குயி |
| (9) | ஹரசே (காளைக்கு) | - | பிராகுயி |

சித்திய மொழிகளிலுள்ள பெஹிஸ்தான் அட்டவணைகளிலும் (Scythian tablets of Behistan), திராவிட மொழிகளின் நான்காம் வேற்றுமை உருபைப் போன்ற 'இக்கா' அல்லது 'இக்கி' என்னும் வடிவமே உள்ளது. இது மத்திய ஆசிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்குமிடையேயுள்ள தொடர்பினைக் காட்டும்.

மலையாளம், நாயக்கி, குருக் ஆகிய மொழிகளில் 'இன்' உருவு நான்காம் வேற்றுமைப் பொருளை உணர்த்துகின்றது. தமிழ, மலையாளம், கோண்டி, கன்னடம், தெலுங்கு, துளு ஆகிய மொழிகளில் நான்காம் வேற்றுமை உருபு இடப்பொருளையும் உணர்த்துகின்றது. சில மொழிகளில் இது ஒப்புமைப் பொருளையும் உணர்த்தி நிற்கின்றது. மலையாள மொழியிலுளள 'இன்னு' என்னும் உருபை ஆராயும் டாக்டர் மு.வரதராசனார் 'இன்' சாரியையும், 'கு' உருபும் சேர்ந்த 'இன்கு' எனபதே 'இன்னு' என்று திரிந்திருக்க வேண்டுமென்றும, அதுவே 'ன்னு', 'னு', 'உ' என மலையாள மொழியில் பல்வேறு வடிவங்களைப பெற்றிருக்க வேண்டுமென்றும் கருதுகின்றார்[14]. டாக்டர் கால்டுவெல் நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு'விற்கும் திசைப் பெயர்களாகிய வடக்கு, தெற்கு என்பனவற்றின் ஈற்றிலுள்ள 'கு'விற்கும் தொடர்பிருக்க வேண்டுமென்று கருதுகின்றார்.

### நீங்கற் பொருள் வேற்றுமை (Ablative Case)

-இல், -இன், -இம் போன்ற உருபுகள் ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகத் தென்திராவிட மொழிகளில் வழங்குகின்றன. கொலாமி மொழியில் -வயெவ என்ற உருபும், நாயக்கி மொழியில் -ar, -tal என்ற உருபுகளும், பர்ஜி மொழியில் -tug, -are, -arre போன்ற உருபுகளும், மால்டோவில் -(ை)வெந என்ற உருபும், பிராகுயி மொழியில் –ஆன் என்ற உருபும்ளு ஐந்தாம் வேற்றுமைப் (நீங்கற் பொருள் வேற்றுமை) பொருளைத் தருகின்றன. தமிழ், மலையாளம், கன்னடம், துளு, குருக், பிராகுயி போன்ற மொழிகளில் இவ்வேற்றுமை உருபுகள் ஒப்புமைப் பொருளை உணர்த்தவும் பயன்படுத்தப்படுகினறன.

இதன் உருபுகள இடப் பொருள் வேற்றுமை (locative case) உருபுகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இடத்தில் இருத்தலை ஏழாம் வேற்றுமையாகிய இடவேற்றுமை காட்டுகின்றது. என்றும். இடத்திலிருந்து நீங்குதலை நீங்கற் பொருள் வேற்றுமை உணர்த்துகின்றது. என்றும் இலக்கணநூலார் இவ்விரு வேற்றுமைகளையும் வேறுபடுத்திக் காட்டுவர். எனினும் இவ்வுருபுகள் நீங்கற் பொருளை உணர்த்தவில்லை என்று டாக்டர் கால்டுவெல் கூறுவது மிகப்

பொருத்தமாகவெ உள்ளது. தமிழ், மலையாளம் போன்ற மொழிகளில் -இல், -இன் என்பன இடப்பொருளை மட்டுமே தருகின்றன. நீங்கற் பொருளை உணர்த்த தமிழில் ‘இருந்து’ என்ற சொல்லுருபும், மலையாளத்தில் இதற்கு நிகராக ‘நிந்நு’ என்ற சொல்லுருபும் பயன்படுத்தப்படுகின்றன.

எ.கா. மரத்தில் இருந்து வீ ழ்ந்தது - தமிழ்

மரத்தில் நிந்நு வீணு - மலையாளம்

**ஆறாம் வேற்றுமை அல்லது உடமைப்பொருள் வேற்றுமை (Genitive Case)**

ஆறாம் வேற்றுமை உருபுகளாக –அது, -அ, -ஆது, -இன், -உடைய, -உடே, -ன்ற, -ஆர, -த, -ன்னெ, -தொ, -கி, -த்ரா, -கது, -அதி, -அத போன்றன உருபுகள் திராவிட மொழிகளில் உள்ளன. தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் -அது, -அ என்னும் இரு வடிவங்கள் உள்ளன. இவற்றுள் ‘அ’கர உருபு பன்மை உருபாகக் கருதப்படுகின்றது. ‘அ’கர உருபு தமிழ், கன்னடம், கோண்டா, நாயக்கி, பர்ஜி, பிராகுயி ஆகிய மொழிகளிலும் உள்ளது. இவ்வுருபு நீண்டு ‘ஆ’ என்று நெடிலாகத் தற்காலக் கன்னடம், கோண்டி, பிராகுயி ஆகிய மொழிகளில் வருகின்றது. ‘ஆது’ என்னும் உருபு பழந்தமிழ் இலக்கியங்களில் உள்ளது. ‘உடைய’ என்ற சொல்லுருபு தற்காலத் தமிழில் பெருவழக்கில் உள்ளது. மலையாளத்தில் இது ‘உடெ’ என்று திரிகினறது. இதனோடு ‘ன்ற’ என்ற உருபும் இம்மொழியில் அதிகமாக வழங்குகின்றது. ‘த்ரா’ என்னும் உருபு கோடா மொழியிலுள்ளது.

எ.கா. மத்ரரா – மரத்தினது

குயி மொழியில் - பயாமே என்ற உருபு உள்ளது.

தமிழில் உயிர் குறுகிய மூவிடப் பெயர்கள் ‘என் மகன்’, ‘உன் மகன்’ என்று உருபில்லாமல் ஆறாம் வேற்றுமைப் பொருளைத் தருகின்றது. குமரி மாவட்ட வட்டார வழக்கில ‘க்க’ என்னும் உருபும் உள்ளது.

எ.கா. எனக்கு வீடு

தமிழில் பெயர்ச் சொல்லோடு உருபு சேர்க்காமல் ‘இன்’ சாரியையினை இணைத்து ஆறாம் வேற்றுமைப் பொருளை உணர்த்தும் மரபும், ‘இன்’ சாரியைக்குப பின் ‘ஆறன்’ உருபினை இணைத்து அப்பொருளை உணர்த்தும் மரபும் உள்ளன.

எ.கா. மரத்தின் கொம்பு

மரத்தினது கொம்பு

ஆறாம் வேற்றுமைக்கெனப பல உருபுகள் திராவிட மொழிகளில் காணப்பட்டாலும் மூ-யவவரஇ மூ-ய என்ற இரண்டையுமே மூலத் திராவிட வடிவமாகத் திருத்தியமைக்க முடிகின்றது.

**இடப்பொருள் வேற்றுமை (Locative Vase)**

தமிழ் இலக்கண வல்லுநர்கள் இடப்பொருள் உணர்த்தும் சொற்கள் பலவற்றையும் ஏழாம் வேற்றுமை உருபு என்பர். திராவிட மொழிகளில் -இல், -இன, -கண, -கால், -இடம், -உள், அலு, -அன், -ஆன், -ஆ, -ஆ, -இ, -லு, -(ெ)யனயஇெ 'துன், -தின், -அடி போன்ற பல உருபுகள் உள்ளன. இவற்றுள; *-an *-in, *-n/* -al, *-(a)tt என்பனவற்றை மட்டும் மூலத்திராவிட வடிவங்களாகத் திருத்தியமைக்க முடிகின்றது. இவைகளெல்லாம் அ.்.றிணைப் பெயர்களோடு (Non –human nouns) மட்டுமே வருகின்றன[16].

முன்னர்க் காட்டிய உருபுகளில் முதல் ஆறு உருபுகளும் தமிழில் பெரு வழக்கில் உள்ளன. கன்னடத்தில் '-ஒள், -அல், -அல்லி, -இல்லி போன்ற வடிவங்கள் உள்ளன.

எ.கா. மரொள்

மரல்

மரல்லி

தெலுங்கு மொழியில் '‘அந்து', 'உன்னாது என்ற உருபுகள் காணப்படுகின்றன. திராவிட மொழிகளிலுள்ள ஏழாம் வேற்றுமை உருபுகளில் பெரும்பாலானவை சொல்லுருபுகளாக உள்ளன. இம்மொழிகளிலுள்ள உருபுகளில் 'இன்' உருபே பெரும்பாலான மொழிகளில் காணப்படுகின்றது. தமிழ், நாயக்கி. மலையாளம், கொலாமி, தோடா போன்ற மொழிகளில் இவ்வுரபினைக் காணலாம், 'அன்' உருபு கன்னடம், கோண்டா, குவி, குயி, பிராகுயி போன்ற மொழிகளில் உள்ளது. '(அ)த்து' என்ற் உருபு தமிழ், மலையாளம், கோண்டி, கொலாமி ஆகிய மொழிகளில் காணப்படுகின்றது. 'துன்' உருபு நாயக்கி மொழியிலும், 'அதங்' 'அடி' போன்ற உருபுகள் பிராகுயி மொழியிலும் 'அதங்' உருப்பு கொலாமி மொழியிலும் உள்ளன. பர்ஜி மொழியில், 'கெல், 'எல்' போன்ற உருபுகளும் உள்ளன. 'உள்' என்னும் உருபு தமிழ், மலையாளம், கொடகு, கன்னடம், துளு, தெலுங்கு போன்ற் மொழிகளில் இடப் பொருள் உணர்த்தப் பயன்படுத்தப்படுகின்றது. தமிழிலுள்ள 'பக்கல்' என்னும் இடப்பொருள் உணர்த்தும் சொல்லுருபு மலையாளம், கௌடர் - கன்னடம் போன்ற மொழிகளில் உயர்திணைப் பெயர்கள், மூவிடப் பெயர்கள் ஆகியவற்றையடுத்து இடப்பொருள் உணர்த்துகின்றது.

**விளி வேற்றுமை (Vocative Case)**

விளி வேற்றுமைக்கெனத் தனி உருபுகள் அதகிமான் இலக்கண ஆசிரியர்களால் வரையறுக்கப்படவில்லை. எனினும் மூநஇ மூŏ என்ற இரு உருபுகளை மூலத் திராவிட விளி வேற்றுமை உருப்புகள் எனலாம், மூந் என்ற உருபின் மாற்று வடிவங்கள் தமிழ், மலையாளம்,

கொடகு, கன்னடம், துளு, பர்ஜி ஆகிய மொழிகளிலும், மூ்இ என்பதன் மாற்று வடிவங்கள் தோடா, துளு, குருக் போன்ற மொழிகளிலும் உள்ளன. நன்னூலார் 'ஓ' என்னும் எட்டாம் வேற்றுமை உருபைச் சுட்டிச் செல்கின்றார். இடைக்காலத் தமிழிலக்கியங்களில் 'ஓ' என்னும் உருபு இணைந்து விளி வேற்றுமை அமைவதைக் காணலாம்.

எ.கா. அண்ணாவோ - (கம்பராமாயணம்)

தமிழில் பெயர்ச் சொற்களின் ஈற்றயல் உயிர் நீண்டும், திரிந்தும் விளி வேற்றுமை வடிவங்கள் அமைகின்றன.

எ.கா. மக்காள் - ஈற்றயல் நீட்சி

புலவீர் - ஈற்றயல் திரிபு

**மூவிடப் பெயர்கள்**

மாற்றுப் பெயர்களுள் (Pronouns) ஒன்றான மூவிடப் பெயர்கள் (Personal Pronouns) தொன்மையான இலக்கணக் கூறுகளுள் ஒன்றாகும். திராவிட மொழிகளின் ஒற்றுமைக் கூறுகளை விளக்க இவை பெரிதும் துணை செய்கின்றன. இம்மூவிடப் பெயர்கள் ஏனைய பெயர்ச் சொற்களினின்று சற்று வேறுபடுகின்றன. ஏனைய பெயர்ச் சொற்கள் விளி வேற்றுமை ஏற்க, மூவிடப் பெயர்கள் விளி வேற்றுமை ஏற்பதில்லை. மேலும் திராவிட மொழிகளில் உடமைப் பொருள் உணர்த்தும் ஆறாம் வேற்றுமையை அடுத்தும் மூவிடப் பெயர்கள் வருவதில்லை. எனினும் தமிழின் தற்காலப் பேச்சுவழக்கில் 'என்னவன்' ', 'என்னவள்' போன்ற வடிவங்கள் இடம்பெறுகின்றன. மூவிடப் பெயர்களுள் பொதுவாக 'ன'கர ஈறு ஒருமையினையும், 'ம'கர ஈறு பன்மையினையும் உணர்த்தி நிற்கின்றன. ஏனைய இலக்கணக் கூறுகளைவிட மூவிடப் பெயர்கள் அதிக நிலைபேறுடையன. மூவிடப் பெயர்களைத் தன்மைப் பெயர்கள் (First person)இ முன்னிலைப் பெயர்கள் (Second person), படர்க்கைப் பெயர்கள் (Third person) என்று மூன்றாகப் பிரிப்பர். இவற்றுள் தன்மை, முன்னிலை ஆகிய பெயர்கள் திணை, பால் பாகுபாட்டைக் காட்டாமல் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை மட்டுமே உணர்த்தி நிற்கின்றன. படர்க்கைப் பெயர்கள் எண் பாகுபாட்டோடு திணை, பால் ஆகியவற்றையும் காட்டி நிற்கின்றன. இதற்கு தோடர், பிராகுயி ஆகிய இரு மொழிகளும் விதிவிலக்காக உள்ளன. திராவிட மொழிகளின் மூவிடப் பெயர்களில் எழுவாய் வடிவம், வேற்றுமை ஏற்கும் வடிவம் என இரு வடிவங்கள் உள்ளன. மூவிடப் பெயர்களின் எழுவாய் வடிவில் உயிர் நீண்டும், வேற்றுமை ஏற்கும் வடிவில் உயிர் குறுகியும் காணப்படும்.

**3.6 மூவிடப்பெயர்கள்**

| மொழி | எழுவாய் வடிவம் | வேற்றுமை ஏற்கும் வடிவம் |
|---|---|---|
| **தன்மை ஒருமை** | | |

| | | | |
|---|---|---|---|
| (1) தமிழ் | யான், நான் | - | என் |
| (2) மலையாளம் | நான் | - | என் |
| (3) கோடா | ஆன் | - | என் |
| (4) தோடா | ஓன் | - | என் |
| (5) கொடகு | ெā (ெ) | - | என் |
| (6) கொலாமி | ஆன் | - | அன் |
| (7) குருக் | ஏன் | - | எங்க் (நп̃ப) |

**தன்மைப் பன்மை**

| | | | |
|---|---|---|---|
| (1) தமிழ் | யாம் | - | எம் |
| (2) மலையாளம் | ñaññal | - | eññal |
| (3) தெலுங்கு | மேமு | - | மம் |
| (4) கொலாமி | ஆம் | - | அம் |

**முன்னிலை ஒருமை**

| | | | |
|---|---|---|---|
| (1) தமிழ் | நீ | - | நின், உன் |
| (2) மலையாளம் | நீ | - | நின் |
| (3) துளு | ஈ | - | நின் |
| (4) கொலாமி | நீவ் | - | இன் |

**முன்னிலைப் பன்மை**

| | | | |
|---|---|---|---|
| (1) தமிழ் | நீர் | - | நும் |
| (2) கோடா | நீம் | - | நிம் |
| (3) கன்னடம் | நீம் | - | நிம் |
| (4) கடபா | ஈம் | - | இம் |

**தன்மை ஒருமைப் பெயர்கள்**

திராவிட மொழிகளில் யான், நான், ஆன், ஓன், ஏனி ஏனு, அனா, ஆனா, ஏன், ஈ போன்ற தன்மை ஒருமை வடிவங்கள் உள்ளன. இவற்றுள் *yān; என்பதை மூலத் திராவிட வடிவமாகக் கொள்ளலாம். பிராகுயி மொழியில் மட்டும் 'ஈ' என்னும் முற்றிலும் மாறுபட்ட வடிவத்தைக் காணமுடிகின்றது. இது முன்னிலை வடிவமான 'நீ' என்பதைப் பின்பற்றி ஒப்புமையாக்கமாகப் (analogy) படைக்கப்பட்டிருக்க வேண்டும். மூலத் திராவிட மொழியில் லā̄ெ என்பது இருந்திருக்க வேண்டும் இதுவே நெ஻ என்று தென் திராவிட மொழிகளிலும், நடுத்திராவிட மொழிகளிலும் திரிந்திருக்க வேண்டும். 'ய'கர ஒலி கெட்டு இது நடுத்திராவிட மொழிகளில் 'அன்' என்று மாறியிருக்க வேண்டும். நடுத்திராவிட மொழிகளில் காணப்படும் 'ந'கரத்தை மொழி முதலில்

கொண்ட வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் மொழி மாற்றம் (Metathesis) காரணமாகத் திரிந்தவையே.

தொல்காப்பியர் தன்மை வடிவமாக ‘யான்’ என்பதை மட்டும் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார் காலத்தில் ‘யான்’ என்பதோடு ‘நான்’ என்ற வடிவமும் படைத்துக் கொள்ளப்பட்டது. இது தன்மைப் பன்மை வடிவமான ‘நாம்’ என்பதையொட்டி ஒப்புமையாக்கமாகப் படைக்கப்பட்ட தன்மை ஒருமை வடிவாக இருக்கலாம். தன்மைப் பன்மை வடிவங்களான ‘யாம்’, ‘நாம்’ என்னும் இரு வடிவங்களும் தொல்காப்பியர், நன்னூலார் ஆகிய இருவர் காலத்திலும் பயின்று வந்தன என்பதை தெளிவு.

**தன்மைப் பன்மை**

திராவிட மொழிகளின் தன்மைப் பன்மை வடிவத்தில் ‘வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை’ (Exclusive plural), ‘உளப்பாட்டுத் தன்மைப் பன்மை’ (Inclusive plural) என இருவகையுண்டு. இவற்றுள் வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை கேட்போரை நீக்கி ஏனையோரை உளப்படுத்தி நிற்கும். உளப்பாட்டுத் தன்மைப் பன்மை கேட்போரான முன்னிலையாரையும் உளப்படுத்தி நிற்கும். இத்தகைய அமைப்பு முறை வேறு பல மொழிக் குடும்பங்களிலும் உள்ளதாகத் தெரிகின்றது[2]. இவ்வமைப்புமுறை கொண்டா, பர்ஜி, கடபா, பிராகுயி ஆகிய மொழிகளில் தெளிவாக இல்லை[3]. தமிழில் நாம் என்பது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவமாகவும், யாம், யாங்கள், நாங்கள் என்பன வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவமாகவும் உள்ளன. இக்கூறுபாடுகள் பற்றித் ‘தொல்காப்பியமோ, ‘வீரசோழியமோ எதுவும் கூறவில்லை. பழந்தமிழ் இலக்கியங்களிலும் ‘நாம் என்று வடிவம் மிகக் குறைவாகவே உள்ளது. தென் திராவிட மொழிகளில் வெளிபாட்டுத் தன்மைப் பன்மை (Ex;clusive plural) வடிவங்களில் ‘கள்’ விகுதி அதிகமாக இணைக்கப்படுகின்றது.

மூலã்அ என்ற மூலத் திராவிட எழுவாய் வடிவத்தின் வேற்றுமை ஏற்பகும் வடிவமாகத் தென்திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளிலும் ‘எம்’ என்ற வடிவமும், நடுத்திராவிட மொழிகளில் ‘அம்’ என்ற வடிவமும் உள்ளன. இவற்றோடு தமிழ், மலையாளம், கொடகு, துளு போன்ற மொழிகளில் ‘கள்’ விகுதியும் இணைக்கப்படுகின்றன. தெலுங்கு, கோண்டி, கோண்டா ஆகிய மொழிகளில் காணப்படும் ‘ம’கரத்தை முதலில் கொண்ட தன்மைப் வடிவங்கள் ஒலி இடம் பெயர்தல் காரணமாக ஏற்பட்டவையாதல் வேண்டும்[4].

**வெளிப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவங்கள்**

| மொழிகள் | எழுவாய் வடிவம் | வேற்றுமை ஏற்கும் வடிவம் |
|---|---|---|
| 1 மலையாளம் | ;ñānn;al | Ñānnannal ennal- |

| | | |
|---|---|---|
| 2 கொடகு | enga | enga- |
| | nanga | ngana- |
| 3 தெலுங்கு | ஏமு | அā |
| | மேமு | அயஅஅ- |
| | நேமு | |
| 4 குயி | ஆமு | மா- |
| 5 கொலாமி | ஆம் | அம் - |
| 6 நாயக்கி | ஆம் | அம் - |
| 7 குருக் | ஏம் | எம்- |
| 8 மால்டோ | ஏம் | எம்- |

**உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவங்கள்**

| மொழிகள் | எழுவாய் வடிவம் | வேற்றுமை ஏற்கும் வடிவம் |
|---|---|---|
| 1. தமிழ் | நாம் | நம் - |
| 2. மலையாளம் | நாம் | நம் - |
| 3. கோடா | ஆம் | அம் - |
| 4. தோடா | ஓம் | ஓம் - |
| 5. துளு | நாவு | நம் - |
| 6. தெலுங்கு | மனமு | மன – |
| 7. குருக் | நாம் | நம் - |
| 8. மால்டோ | நாம் | நம் - |

பேராசிரியர் டீா. கிருஷ்ணமூர்த்தி உளப்பாட்டு தன்மைப் பன்மை வடிவமாக *ñā;m; என்பதை மூலத் திராவிட மொழி நிலைக்குத் திருத்தியமைக்கின்றார். டாக்டர் ீ.ளு. சுப்பிரமணியம் போன்றோர் மூமெ்அ என்பதை மூலத் திராவிட வடிவமாகக் கொள்கின்றனர்.

மலையாள மொழியில் தன்மைப் பன்மை வடிவங்களாக நாம், நோம், நம்மள், ஞங்ஙள் என்ற வடிவங்கள் உள்ளன. 'யான்' என்ற ஒருமை வடிவம் 'இராம சரிதத்தில் உள்ளதாகக் குண்டர்ட் குறிப்பிடுகின்றார். கன்னட மொழியில் ஆண், ஆம் என்ற வடிவங்கள் முறையே ஒருமை பன்மை வடிவங்களாக உள்ளன. 'சப்தானுசாசனா' என்ற கன்னட இலக்கண நூலின் 288வது நூற்பா உரையில் நாமு, நாம் என்ற பன்மை் வடிவங்கள் பழங்கன்னடத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றன. பேராசிரியர் கு. கிட்டல் என்பவர் நாவு என்பதே நாமு என்று திரிந்ததாகக் குறிப்பிடுகின்றார். யெங்குளு, நம் என்ற பன்மை வடிவங்களைத் துளு மொழியில் காண முடிகின்றது. தெலுங்கு மொழியில் ஏமு, நேமு, மேமு, மனமு போன்ற வடிவங்கள் உள்ளன. ஆம், ஓம், ஏம் என்பன தோடா மொழியின் பன்மை வடிவங்களாகும்.

**முன்னிலைப் பெயர்கள்**

தன்மைப் பெயர்களைப் போல, முன்னிலைப் பெயர்களும் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை மட்டுமே உணர்த்தி நிற்கின்றன. தமிழில் முன்னிலைப் பன்மை வடிவங்களாகத் தொல்காப்பியர் 'நீயிர்' என்பதையும், நன்னூலார் 'நீவீர்', 'நீர்' என்பனவற்றையும் சுட்டிச் செல்கின்றனர். சிந்தாமணியில் 'நீம்' என்னும் பன்மை வடிவம் உள்ளது. இச்சொல் கன்னட மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டிருக்கலாம் என்று டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை கருதுகின்றார். குமரி மாவட்ட மீனவர்களின் பேச்சு மொழியில் 'நீம்' என்னும் வடிவம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழில் காணப்படும் 'நீ' என்னும் முன்னிலை ஒருமை வடிவிற்கு, 'நின்', 'உன்' என்ற இரு வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் உள்ளன. நீயிர், நீவிர், நீங்கள் என்னும் பன்மை வடிவங்களுக்கு நும், உம், நுங்கள் என்னும் வேற்றுமை ஏற்கும் வடிவங்கள் உள்ளன. மலையாளத்தில் நீ, நின், நிங்கள் என்பனவும், கோடாவில் நீ, நீம் என்ற வடிவங்களும், தோடாவில் நீ, நும் என்னும் வடிவங்களும் முன்னிலை மூவிடப் பெயர்களாக உள்ளன. தெலுங்கில் நீவு, மீரு போன்ற வடிவங்களையும், கோண்டாவில் இம்மா, இம்மத் போன்ற வடிவங்களையும் குயி மொழியில் ஈனு, ஈறு் என்பனவற்றையும், பிராகுயி மொழியில் நீ, நெ என்பனவற்றையும் காண முடிகின்றது.

### 3.7 படர்க்கை மூவிடப் பெயர்கள்

தமிழில் காணப்படும் தான், தாம் என்பன படர்க்கை மூவிடப் பெயர்களாகும். தொல்காப்பியர் இவற்றைப் படர்க்கை மூவிடப் பெயர்கள் என்று கருதியதாகத் தெரியவில்லை. எனினும், நன்னூலார் இவற்றைப் படர்க்கை மூவிடப் பெயர்களாகவே கொண்டுள்ளார். இவ்விரு பெயர்களிலும் ஏனைய மூவிடப் பெயர்களைப் போன்று ஒருமை, பன்மை என்ற எண் பாகுபாடு மட்டும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றுள் 'தான்' என்பது ஒருமைப் பெயராகவும், 'தாம்' என்பது பன்மைப் பெயராகவும் உள்ளன. இவ்விரு வடிவங்களும் ஏனைய மூவிடப்

பெயர்களைப் போல விளி வேற்றுமையினையு ம், பெயரடைகளையும் ஏற்பதில்லை. தான், தாம் என்பனவற்றின் வேற்றுமை ஏற்கும் வடிவங்களாகத் தன், தம் என்பன அமைகின்றன. தோடா மொழியில் தேன், தம் என்ற பெயர்களும், கொடகு மொழியில் தானி. தங்க் என்பனவும் உள்ளன. இவைகள் தற்கட்டுப் பெயர்களாகவும் (reflexive pronoun) செயல்படுகின்றன. இவ்வடிவங்கள் தற்காலத்தில் வழக்கில் குறைந்து விட்டன. இவற்றுக்குப் பதிலாகச் சுட்டின் அடியாகப் பிறக்கும் பால்காட்டும் விகுதி பெற்ற பெயர்களான அவன், அவன், அவர், அது, அவை போகின்றன. படர்க்கைப் பெயர்களாக வருகின்றன. இவை படர்க்கைப் பெயர்களான தான், தாம் என்பனவற்றைப் போலல்லாமல் திணை, பால் ஆகியவற்றைக் காட்டி நிற்பதால், திராவிட மொழிகளில் அதிகச் செல்வாக்குப் பெற்றுவிட்டன.

**சுட்டுப்பெயர்கள்**

சுட்டுப்பெயர்களின் அடிச்சொற்களோடு பாலறிகிளவிகள் இணையும்போது சுட்டுப் பெயர்கள் உருப்பெறுகின்றன. தமிழில் ‘அ’சுரம் சேய்மைச் சுட்டாகவும், ‘இ’கரம் அண்மைச் சுட்டாகவும் அமையும். இவற்றோடு திணை, பால் காட்டும் விகுதிகளை இணைக்கும் போது அவன், அவள், அவர், அது, அவை போன்ற சுட்டுப் பெயர்கள் தோன்றுகின்றன. இச்சுட்டுப் பெயர்களே மூவிடப் பெயர்களுள் படர்க்கைப் பெயர்களாகச் செயல்படுகின்றன தெலுங்கில் வாடு, அதிவாடு, வாள்ளு, ஆ, ஆயன, அவி, வீடு, ஈ, இதி என்பனவும், கன்னடத்தில் அவம், அவள், அவரு, அது, இவரு, இவன், இத, இது, இவர் என்பனவும், கோண்டியில் வோா், வூர், வோ், அத், இத், அவ், இவ் என்பனவும் சுட்டுப் பெயர்களாகும் தமிழைப் போன்று பழங்கன்னடத்திலும், துளுவிலும் மிகச்செய்மை, அண்மை இரண்டிற்கும் இடையில் நிற்பவரைச் சுட்ட ‘உ’கரம் பயன்படுத்தப்படுகின்றது. சுட்டுப் பெயர்களின் அடிச்சொல் வடிவங்களில் ‘அவ், இவ்’ என்பனவற்றை மூலத் திராவிட வடிவங்களாகப் பலர் குறிப்பிடுகின்றனர். சிலர் அ, இ என்பனவே மூலத் திராவிட வடிவங்கள் என்றும் ‘வ்’ உடம்படு மெய்யே என்றும் சுட்டுவர்.

## 3.8 வினாப் பெயர்கள் (Interrogative Pronouns)

திராவிட மொழிகளின் வினாப் பெயர்கள் அமைப்பில் பெரும் பாலும் சுட்டுப் பெயர்களை ஒத்துக் காணப்படுகின்றன. யா, ய, எ, ஏ என்பன பொதுவாக வினாப் டிபயர்களின் அடிச்சொற்களாக உள்ளன. இவ்வினா அடிச்சொற்களோடு பாலறிகிளவிகள் இணையும் போது வினாப் பெயர்கள் அமைகின்றன.

எ.கா. யாவன், எவன்

எவள்

யாவர், எவர்

யாவை, எவை

இவையனைத்தையும் குறிக்கப் பொது நிலையில் ‘யார்’, ‘எது’ என்ற வடிவங்களைப் பயன்படுத்தலும் உண்டு. கோடா மொழியில் நஎஇெ நஎடஇ நஇ நஎச என்ற வினாப் பெயர்கள் உள்ளன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ.கா. | தோடா | ė(ãெ-) | - | யார், எது | - | ஒருமை |
| | கொடகு | ஆரு | - | யார், எது | - | ஒருமை |
| | | நெரை | - | எது | | |
| | நாயக்கி | bol, bor | - | யார் | - | ஆண்பால் |
| | | bav | - | யார் | - | பெண்பால் |

என்பன போன்ற வடிவங்கள் தோடா, கொடகு, நாயக்கி போன்ற மொழிகளில் உள்ளன. சுட்டு, வினாப் பெயர்களைப் பொறுத்த மட்டில் தமிழ், மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளில் அதிக வேறுபாடுகள் இல்லை.

### பெயரடைகள் (Adjectives)

பெயர்களைச் சிறப்பிக்க வரும் இலக்கணக் கூறுகளைப் பெயரடைகள் என்கிறோம். திராவிட மொழிகளில் பெயரடைகள் திணை, பால் எண் போன்றவற்றை உணர்த்துவதில்லை. பெயரடைகள் இம்மொழிகளில் பெரும்பாலும் பெயருக்கு முன்னர் இடம் பெறுகின்றன. நாயக்கி, பிராகுயி போன்ற மொழிகளில் பெயருக்குப் பின்னரும் பெயரடைகள் வருவதுண்டு. திராவிட மொழிகளில் பெரும்பாலும் ‘அ’கரமே பெயரடை உருபாக உள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ.கா. | தமிழ் | - | நல்ல | | |
| | | | பெரிய | | |
| | மலையாளம் | - | வலிய | | |
| | பிராகுயி | - | லக்க | (சிறிய) | |
| | கன்னடம் | - | dodda | (பெரிய) | |
| | | | | உமைமய | (சிறிய) |

இவைகள் காலத்தால் மிகவும் பிற்பட்டவை என்பது பழைய இலக்கிய வடிவங்களை ஆராயும்போது தெளிவாகின்றன. தமிழில் காணப்படும் மேற்காட்டப்பட்ட பெயரடை வடிவங்கள் அ.்.றிணைப் படர்க்கை மூவிடப் பெயர்களின் திரிபு என்பது பலர் கருத்து.

குயி மொழியில் எல்லாப் பெயரடைகளும் ‘இ’கர ஈற்றைப் பெறுகின்றன.

எ.கா. குயி deri - பெரிய

kogen - சிறிய

பெயரடை உருபுகள் தற்காலத் திராவிட மொழிகளில் மிகக்குறைவாக உள்ளது. போல மூலத் திராவிட மொழியிலும் மிகக் குறைவாகத்தான் இருந்திருக்க வேண்டும். அதிகமான திராவிட மொழிகளில் பெயரே பெயரடையாக நின்று மற்றொரு பெயரைச் சிறப்பித்தலைக் காணலாம்.

எ.கா. தமிழ் மட்குடம்

பொன்முடி

தெலுங்கு - stri – nāyagam

இத்தகைய அமைப்பு முறையே மூலத் திராவிட அமைப்பு முறையாகவும் இருந்திருக்கலாம். குருக் மொழியைத் தவிர்த்த ஏனைய திராவிட மொழிகளில் பெயரடை தனி இலக்கணக் கூறாகப் பெயரிலிருந்து சற்று வேறுபட்டுக் காணப்பட்டபோதிலும், மூலத் திராவிட மொழியில் பெயருக்கும் பெயரடைக்குமிடையே அதிக வேற்றுமை இருந்திருக்க முடியாது என்பது பலர் கருத்து. தமிழில் பெயர்களோடு, பண்பு அடிச்சொற்களும் பெயரடைகளாக வருதலுண்டு.

எ.கா. நல்வழி, நன்னூல்

இவற்றோடு பெயரெச்சங்களும் பெயரடைகளாக வருகின்றன.

எ.கா. படித்த பாடம்

தமிழில் 'சில்', 'பல்' போன்ற சொற்களோடு 'அ'கரம் இணைந்து சில, பல என்றும் பெயரடைகள் அமைகின்றன.

### 3.9 எண்ணுப் பெயர்கள்

பெயர் வகைகளுள் ஒன்றான எண்ணுப் பெயர்கள் மூவிடப் பெயர்களைப் போன்ற அதிக மாறுதல்களின்றி திராவிட மொழிகளில் வழங்குகின்றன. எண்ணுப் பெயர்கள் இம்மொழிகளில் மூவிடப் பெயர்களைப் போன்று குறுகிய வடிவங்களைப் பெற்றுள்ளன. மேலும் இவை மூவிடப் பெயர்களைப் போன்று விளி வேற்றுமையினை ஏற்பதுமில்லை. பெயரடைகளைத் தொடர்வதுமில்லை. இவை அ∴றிணை ஏற்பதுமில்லை, பெயரடைகளைத் தொடர்வதுமில்லை. இவை அ∴றிணை ஒருமை சுட்டுப் பெயர்களோடு இணைந்து வரும் 'அன்' சாரியையினை ஏற்கின்றன. எண்ணுப் பெயர்களை எண்ணுமறைப் பெயர்கள் (ordinals)> மற்றும் எண்ணுப் பெயர்கள் (cardinals) என்று இரண்டாகப் பிரிக்கலாம். முதலாம், இரண்டாம் என்பன எண்ணுமுறைப் பெயர்களாகவும், ஒன்று, இரண்டு என்பன எண்ணுப் பெயர்களாகவும் கொள்ளப்படும். ஆங்கில மொழியில் one, two என்ற எண்ணப் பெயர்களுக்கு முற்றிலும் வடிவத்தால் மாறுபட்ட first, second என்ற எண்ணுமுறைப் பெயர்கள் உள்ளன. திராவிட

மொழிகளில் இத்தகைய வேறுபாடு இல்லை. தமிழில் ஒன்று, இரண்டு என்பனவற்றோடு ‘ஆம்’ என்ற விகுதி இணைந்து ஒன்றாம், இரண்டாம் என்று எண்ணுமுறைப் பெயர்கள் அமைகின்றன. இவ்வாறின்றி, ‘:ஆவது’ என்ற விகுதியை இணைத்து ஒன்றாவது, இரண்டாவது என்று எண்ணுமுறைப் பெயர்களை அமைத்தலுமுண்டு.

எண்ணுப் பெயர்களில் தனித்து வழங்கும் வடிவங்களோடு தனித்து வழங்காமல் அடையாக வரும் ஒரு, இரு, மூ போன்ற வடிவங்களும் உள்ளன. இவ்வெண்ணுப் பெயரடைகளோடு, எண்ணுப் பெயரடிகள் (numeral bases) இணைந்து இருபது, முப்பது போன்ற பத்திற்கு மேல் வரும் எண்ணுப் பெயர் வடிவங்கள் அமைகின்றன. பழந்தமிழில் ‘பான்’ என்னும் விகுதி இணைந்து ‘ஒருபான்’, ‘இருபான்’ என்று வருவதைக் காணலாம். இதனால் இருபது, முப்பது என்று எண்ணும் வழக்கம் வருவதற்கு முன்னர் ஒருவான், இருபான் என்று எண்ணும் முறையே இருந்தது என்பது தெளிவு, திராவிட மொழிகளில் ஓர், ஈர், மூ, நால், சை (cai), சார் (Cār), ஏழ், எண், தொண், பத், நூற் என்பன் எண்ணுப் பெயர்களின் அடிச்சொற்களாக உள்ளன.

எண்ணுமுறைப் பெயர்கள் சில மொழிகளில் மட்டுமே உள்ளன. தமிழைப் போன்று எண்ணுப் பெயரோடு ‘ஆம்’ விகுதி சேர்த்து எண்ணுமுறைப் பெயரமைக்கும் மரபை மலையாள மொழியிலும் காணலாம். இம்மொழியில் ‘இரண்டாவது’ போன்ற வடிவங்களிலுள்ள ‘ஆவது’ என்பதற்குப் பதிலாக ‘ஆமத்த’ என்ற வடிவம் உள்ளது.

எ.கா. இரண்டாமத்த

மூணாமத்த

குயி மொழியில் எண்ணுப் பெயர்களை எண்ணுமுறைப் பெயர்களாக மாற்ற ‘தரி’ என்பதை இணைப்பர்.

எ.கா. sāri - நான்கு

. sāritari - நான்காம்

தெலுங்கு மொழியில் - ō அல்லது –யௌā ஆகி எண்ணுமறைப் பெயர் விகுதிகள் உள்ளன.

எ.கா. ரெண்டு { ரெண்டோ
ரெண்டவா

கன்னட மொழியில் -யநெலயஇ - யசெ் ஆகிய எண்ணுமுறைப் பெயர் விகுதிகள் உள்ளன.

எ.கா. ondu { ondaneya / ondane }

துளு, கொடகு ஆகிய மொழிகளில் - ane என்ற விகுதி உள்ளது.

எ.கா. nuji - nujane

குருக் மொழியில் வā என்னும் விகுதியும், பிராகுயி மொழியில் -imjkõ என்ற வடிவமும் காணப்படுகின்றன.

எ.கா. குருக் - Mûnd –mûndtā

பிராகுயி - irat – ratimlkõ

மால்டோ மொழியிலுள்ள எண்ணுமுறைப் பெயர்களனைத்தும் இந்தி மொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவை. திராவிட மொழிகளிலுள்ள எண்ணுப் பெயர்களில் *onlu, *okantu, *iranjtu, *muntu, *caintu, *ėtu, *enttu, *ton, *pattu என்பனவற்றை மூலத் திராவிட வடிவங்களாகக் கொள்ளலாம்.

**ஒன்று**

ஓர், ஒரு என்பன ஒன்று என்ற எண்ணுப் பெயரின் அடைகளாக உள்ளன. இவற்றுள் ஓர் என்பது உயிரை முதலில் கொண்ட பெயர்களுக்கு முன்னரும், ஒரு என்பது மெய்யை முதலில் கொண்ட பெயர்களுக்கு முன்னரும் இடம் பெறும். இவ்விரு வடிவங்களையும் மூலத் திராவிட வடிவங்களாகப் பேராசிரியர் எமனோ கொள்கின்றார். இவ்வடிவங்களுக்கு நிகராகத் தெலுங்கு மொழியில் 'ஒக' என்ற வடிவம் உள்ளது. இவ் எண்ணுப் பெயர் அடைகள் உயர்திணைப் பெயர்கள் அ.்.றிணைப் பெயர்கள் ஆகியவற்றின் முன்னர் வருகின்றன. துளு மொழியில் 'ஒரி', 'ஓர' போன்ற வடிவங்கள் உள்ளன. தெலுங்கு மொழியிலுள்ள 'ஒக' என்பது வட மொழியிலுள்ள 'ஏக' என்பதன் திரியாக இருக்கலாம் என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்து. திராவிட மொழிகளின் எண்ணுப்பெயர் ஒன்று என்றிருப்பதால் அதன் அடையும் 'ஒள்' என்றிருக்க வேண்டும். ஆனால் ஒரு, ஓர் என்று காணப்படுகின்றது. இதனை விளக்கும் பேராசிரியர் எமனோ 'ஓர்' என்னும் வடிவம் இரு, ஈர் என்பவற்றின் ஒப்புமையாக்கமாக ஏற்பட்டிருக்க வேண்டுமென்கிறார். டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளிலுள்ள ஒன்று என்னும் எண்ணுப்பெயர் இந்தோ – ஐரோப்பிய் மொழிகளிலுள்ள ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் வடிவத்தோடு தொடர்புடையது என்று விளக்கிச் செல்கின்றார்.

**இரண்டு**

இவ் எண்ணுப் பெயர் கோடா, தோடா, கொடகு, கன்னடம், துளு போன்ற தென் திராவிட மொழிகளில் நலனஇநனஇ நயனொஇை நசயனரஇ சயனனர என்று பல திரிபுகளைப் பெறுகின்றது. தெலுங்கு மொழியில் 'ரெண்டு' என்னும் வடிவமும், கடபாவில் 'இண்டி' என்னும் வடிவமும் உள்ளன. இரண்டு என்பதனோடு தொடர்புடைய 'இரட்டை' என்னும் வடிவம் தமிழ், மலையாளம், தோடா, தெலுங்கு போன்று மொழிகளில் உள்ளன. இவ்வடிவங்கள் *iran-tt-ay, *iran-tt-I போன்ற வடிவங்கிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்பர்.

இதன் எண்ணுப் பெயரடையாக ஈர், இரு என்பன உள்ளன. இவற்றுள் 'ஈர்' என்பது உயிரை முதலில் கொண்ட சொற்களின் முன்னரும், 'இரு' என்பது மெய்யெழுத்தை முதலில் கொண்ட சொற்களின் முன்னரும் இடம் பெறுகின்றன. தமிழ், பெய்கோ, பிராகுயி போன்ற மொழிகளில் இவவெண்ணுப் பெயரடை உயர்திணைப் பெயர்களின் முன்னரும், ஏனைய மொழிகளில் அ∴றிணைப் பெயர்களின் முன்னரும் வருவதைக் காணலாம்.

**மூன்று**

மூன்று என்ற எண்ணுப் பெயருக்கு மூந்நு, மூட், மூறு, அரதை, முண்டரீ போன்ற வடிவங்கள் மலையாளம், தோடா, கன்னடம், துளு, கோண்டா போன்ற மொழிகளில் உள்ளன. 'மூன்ற' என்ற வடிவமும், அதன் மாற்று வடிவங்களும் துளு, கொலாமி, நாயக்கி, குயி போன்ற மொழிகளில் உள்ளன. பேராசிரியர் எமனோ அரசெை என்பதனையே மூலத் திராவிட வடிவாகத் திருத்தியமைக்கின்றார். இதன் எண்ணுப் பெயரடை வடிவங்களாக மூ.மு என்பன உள்ளன. இவற்றுள் 'மூ' என்பது அரை உயிர்கள், உயிரொலிகள் ஆகியவற்றின் முன்னர் பெரும்பாலும் இடம் பெறுவதைக் காணலாம். கொடகு மொழியில் முப்பது என்பது ரெீயனை என்று காணப்படுகின்றது. இதனை 'ந'கரத்தை முதலில் கொண்ட நாற்பது என்ற எண்ணுப் பெயரின் தாக்கத்தால் ஏற்பட்ட மாறுதலாக பேராசிரியர் எமனோ் கருதுகின்றார்.

**நான்கு**

நான்கு என்பதன் மூலத் திராவிட வடிவமாக 'நூல்கு' என்பது கொள்ளப்படுகின்றது. பழந்தமிழில் இவ்வடிவம் உள்ளது. மலையாளத்தில் 'நாங்கு' என்ற வடிவம், கொடகு மொழியில் 'நாலி' என்ற வடிவமும் காணப்படுகின்றன. கோண்டா, கோண்டி, குயி, நாயக்கி போன்ற மொழிகளில் யெபைஇ யெரைபெஇ யெடை போன்ற வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றின் பெயரடை வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றின் பெயரடை வடிவங்களாக நால், நான், நோ, நல், நெல் என்பன உள்ளன. தோடா மொழியில் 'நோ' என்ற வடிவமும், பர்ஜி மொழியில் 'நெல்' என்னும் வடிவமும் காணப்படுகின்றன இவற்றுள் 'நால்' என்பதை மூலத் திராவிட வடிவமாகக் கொள்வர். இது தடையொலிகளின் முன்னர் 'நாற்' என்னும் மாற்று வடிவத்தைப் பெறுகின்றது. மூக்கொலிகள் தொடர்ந்து வரும்போது 'நான்' என்னும் மாற்று வடிவத்தைப் பெறும். தொல்காப்பியத்திலும் நால், நான் என்னும் இரு வடிவங்களைக் காணலாம்.

**ஐந்து**

ஐந்து என்பதன் மூலத் திராவிட வடிவமாக ழூஉயலவெர என்பது திருத்தியமைக்கப்படுகின்றது. மொழி முதல் ‘ச’கர ஒலி கெட்டு தமிழில் ‘ஐந்து’ என்றும், மலையாளத்தில் ‘அஞ்சு’ என்றும் ˙கோடாவில் ‘அஞ்’ என்றும் கொடகு மொழியில் ‘அஞ்சு’ என்றும் இது வழங்குவதைக் காணலாம். கன்னட மொழியில் ‘ஐது’ என்ற வடிவமும், துளு மொழியில் ‘ஐனு’ என்ற வடிவமும், தெலுங்கில் ‘ஏனு’ என்ற வடிவமும் இடம் பெறுகின்றன. நாயக்கி, பர்ஜி, கடபா, கயி போன்ற மொழிகளில் ‘ள’, ˙ ‘சி’ ஆகிய ஒலிகளை மொழி முதலில் கொண்ட sendi, sendi, ceduk, saiung, singi போன்ற வடிவங்களைக் காணலாம்.

டாக்டர் கால்டுவெல் ‘அய்’ என்பதை ஐந்து என்பதன் அடிச்சொல்லாகக் (radical from) கொள்கின்றார். டாக்டர் ஁.ளு. சுப்பிரமணியம் தென் திராவிட மொழிகளில் முதலில் பிரிந்து சென்ற துளு மொழியில் ‘ஐனு’ என்ற வடிவம் உள்ளதால் ழூயலடெ என்பதை மூலத் திராவிட வடிவமாகத் திருத்தியமைக்கின்றார். டாக்டர் ளு.ஏ. சண்முகம் ஐந்து என்பதன் அடிச்சொல், டாக்டர் கால்டுவெல் கூறும் ‘அய்’ அன்று (உ)யலஅ என்பதே என்று விளக்கிச்செல்கின்றார். மொழி முதல் ‘ச’கர மெய்யைக் கொண்ட வடிவங்கள் முன்னர் கூறிய நடுத்திராவிட மொழிகள் பலவற்றிலும் உள்ளன. இச் ‘ச’கரம் தென்திராவிட மொழிகளில் கெட்டு விடுகின்றது. ‘ஐ’ என்பது மூல என்பது மூல வடிவம் என்றும் அது ‘கை’ என்பதிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்றும் கூறுவார் டாக்டர் மு. வரதராசன்.

**ஆறு**

ஆறு என்ற எண்ணுப் பெயரினையும், அதன் சற்று திரிந்த மாற்று வடிவங்களையும் தமிழ், மலையாளம், கோடா, தோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, கொடகு, கோண்டா ஆகிய மொழிகளில் காணலாம். கோண்டி, குயி, நாயக்கி போன்ற் மொழிகளில் ‘ளு’ ஒலியை மொழி முதலில் கொண்ட ளயசரபெஇ ளயதயஇை ளயன போன்ற வடிவங்கள் உள்ளன. இவற்றுள் உயவர என்பதனையே மூலத்திராவிட வடிவமாகக் கொள்வர். ஆறு என்பதன் குறுகிய வடிவமான ஆறு என்பது தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் உள்ளன.

எ.கா. அறுவர்

‘ஆறு’ என்பதன் பெயரடை வடிவமாகத் தமிழ், மலையாளம் கோடா, தோடா, கன்னடம் ஆகிய மொழிகளில் அறு என்பது காணப்படுகின்றது.

**ஏழு**

தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளில் இவ் எண்ணுப் பெயர் அதிக மாற்றமின்றிக் காணப்படுகின்றது. கோடா மொழியில் ந ல என்ற வடிவமும், தோடாவில் ழற என்ற வடிவமும், கோண்டி மொழியில் நசரபெ என்ற வடிவமும் உள்ளன. இவற்றுள் *e) என்பதே மூலத் திராவிட வடிவம். எழுவர், எழுநூறு போன்ற வடிவங்களில் முதலுயிர் குறுகிக்

காணப்படுகின்றது. தெலுங்கு மொழியில் ஏழு என்பது ஏடு என்று திரிகின்றது. தமிழில் உள்ள ‘ழ’கர மெய் தெலுங்கில் ‘ட’கர மெய்யாக மாறுவது இயல்பாகும்.

**எட்டு**

எட்டு என்னும் வடிவம் தமிழிலும், மலையாளத்திலும் திரிபின்றி ‘எட்டு’ என்றே வழங்குகின்றது. கன்னடத்தில் எண்டு என்றும், தெலுங்கில் எனிமிதி என்றும் இது திரிகின்றது. தோடா மொழியில் ழுவ என்ற வடிவம் உள்ளது. கோண்டி, கொலாமி போன்ற மொழிகளில் தென்மிதி, எனுமிதி போன்ற வடிவங்கள் உள்ளன. இவற்றுள் ூநவெர என்பதை மூலத் திராவிட வடிவமாகக் கொள்வர். இவ்வெண்ணுப் பெயரின் நெடில் வடிவம் எங்கும் காணப்படவில்லை. எண்பது என்பதற்கு நிகராகத் தெலுங்கில் எனிபதி (நரெடியனை) என்ற வடிவம் உள்ளது. மிதி என்பது தெலுங்கு மொழியில் பத்தை உணர்த்துகின்றது. ஒன்பது என்னும் எண்ணுப் பெயர் இம்மொழியில் தொம்மிதி என்று காணப்படுகின்றது. இதன் ஒப்புமையாக்கமாகத் தோன்றிய சொல்லே எனிமிதி என்பது எண்டு என்ற மூலத் திராவிட வடிவத்தின் அடிச்சொல் எண் என்பதாக உள்ளது.

**ஒன்பது**

ஒன்பது என்ற எண்ணுப் பெயரின் மூலத் திராவிட வடிவங்களாக *ton, *tonpatu என்பன கொள்ளப்படுகின்றன. திராவிட மொழிகளில் ‘த’கர மெய்யைக் கொண்டு தொடங்கும் எண்ணுப் பெயர்கள், ‘ஒ’கர உயிரைக் கொண்டு தொடங்கும் எண்ணுப் பெயர்கள் என்று இருவகை மாற்று வடிவங்கள் இதற்கு உள்ளன. தமிழில் ஒன்பது, ஒன்பான் என்னும் பெயர்களும், மலையாளத்தில் ஒம்பது என்னும் பெயரும், கோடாவில் ழடியன என்னும் பெயரும், தோடாவில் நவைழ Ө என்ற வடிவமும் உள்ளன. இம்மொழிகளைப் பொறுத்தவரையில் ூழடீயவர என்ற வடிவத்தை மூலத் திராவிட வடிவமாகக் கொள்ளலாம். தெலுங்கு, கொலாமி, கோண்டி போன்ற மொழிகளில் முறையே தொம்மிதி, தொம்தி போன்ற வடிவங்கள் உள்ளன. தமிழிலும் தொண்ணூறு போன்ற வடிவங்களில் ‘த’கர மெய்யே மொழி முதலில் உள்ளன. துளு மொழியில் ஒர்ம்பா என்ற வடிவமும் உள்ளது.

டாக்டர் கால்டுவெல் ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற எண்ணுப் பெயர்களின் அடிச்சொல் ‘தொள்’ என்றிருக்க வேண்டுமென்றும், இது தமிழில் தொன்மையைக் குறிக்கும் ‘தொல்’ என்பதனோடு நெருங்கியத் தொடர்புடையது என்றும் விளக்கிச் செல்கின்றார். தமிழிலுள்ள தொண்டு என்பதற்கு, முன்னர் என்பது பொருளென்றும், பத்துக்கு முன்னர் உள்ள எண்ணுப் பெயரைக் குறிக்கத் ‘தொண்டுபத்து’ என்று வந்திருக்க வேண்டுமென்று அவர் கூறிச் செல்கின்றார். துளு மொழியிலுள்ள ளழடீய என்பதிலுள்ள ளழ என்பது, தொல் என்பதோடு தொடர்புடையது என்றும் அவர் விளக்கியுள்ளார்.

ஒன்பது என்னும் வடிமும், அதன் திரிபுகளும் தென் திராவிட மொழிகளிலும், கோண்டி மொழியிலும் காணப்படுகின்றன. கோண்டி மொழியிலுள்ள வடிவம் தென் திராவிட

மொழிகளையொட்டி அமைந்திருக்க வேண்டுமென்பர். தொண் என்பதிலுள்ள ‘த’கரம் கெட்டு ‘ஒண’ என்று வந்திருக்க வேண்டும். அதோடு ‘ண’கர ஒலி ‘ன’கர, ஒலியாகத் திரிந்திருக்க வேண்டும். ‘த’கரம் கெட்ட நிலையில் ‘ஒண்’ என்பது ‘ஒன்று’ என்பதன் அடிச்சொல்லோடு பிறழ உணரப்பட்டு ‘ஒன்பது’ என்ற வடிவம் அமைந்திருக்க வேண்டுமென்று விளக்கிச் செல்வர்.

**பத்து**

தமிழில் பத்து என்பதற்கு ப.ஃ.து, பது, பான், பதின் என்ற மாற்று வடிவங்கள் உள்ளன. தோடாவில் ‘பொத்’ என்னும் வடிவமும், ‘பொன்’ என்ற மாற்று வடிவமும் காணப்படுகின்றன. துளு மொழியில் பத்து என்பதன் மாற்று வடிவங்களாகப் பதுன், பது, வது போன்ற உள்ளன. இவற்றுள் பத்து, பதின், பதி, பன், பது என்பன மூலத் திராவிட வடிவங்களாகத் திருத்தியமைக்கப்படுகின்றன. இவற்றுள் பத்து என்பதன் மாற்று வடிவங்கள் தெலுங்கு, கோண்டி, கொலாமி ஆகிய மொழிகளிலும், பதின் என்பதன் மாற்று வடிவங்கள் கோடா, கொடகு போன்ற மொழிகளிலும் பழந்தமிழிலும் உள்ளன. கன்னடத்தில் பத்து என்பது ஹத்து என்று மாறுகின்றது. பதின் என்ற வடிவின் இறுதி ‘ன’கர மெய் கெட்டு தெலுங்கில் பதி என்று வழங்குவதைக் காணலாம்.

**நூறு**

நூறு என்ற எண்ணுப் பெயர் அதிக மாற்றங்களின்றி திராவிட மொழிகளில் வழங்குவதைக் காணலாம். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் நூறு என்ற வடிவமும், கோடா, தோடா, கோண்டி ஆகிய மொழிகளில் முறையே ரெசஇ ரெசஇ ரெச என்றும் வடிவங்களும், துளுமொழியில் ரெனர என்ற வடிவமும் உள்ளன. இதன் வேற்றுமை ஏற்கும் வடிவமாக நூற்று என்பது காணப்படுகின்றது. கன்னடத்தில் வேற்றுமை ஏற்கும் வடிவத்தில் ரெச – என்று ஒற்றை மெய்யே இடம்பெறுகின்றது. துளு மொழியின் வேற்றுமை ஏற்கும் வடிவத்தில் ‘அ’கர உயிர் ஈற்றெழுத்தாக உள்ளது.

**ஆயிரம்**

மூஉயலசையஅ என்பது இதன் மூலத் திராவிட வடிவம். இது வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்ட் ‘சஹஸ்ரா’ என்னும் சொல்லின் திரிபாகும். ளயாயளசய என்பதன் முதலிலுள்ள ‘ள’ ஒலி கெட்டு, இடையிலுள்ள ‘ர’ ஒலிக்குப் பதில் ‘ல’ ஒலி தோன்றி, இரு ‘அ’கர நெடிலாக மாறி (Vovwel contraction) இத்தகைய வடிவம் தோன்றியிருக்கலாம்.

எ.கா. sahasra, aya ra $\left\{\begin{array}{lcl} s & = & \varnothing \\ h & = & y \end{array}\right.$

ayara > ayra a+ a = a

ayra > ayram

தெலுங்கில் காணப்படும் வேயி, வேலு என்ற சொற்கள் திராவிடச் சொற்களென்று தோன்றுகின்றன. எனினும் வேறு மொழிகளில் இ∴து இடம் பெறாமையின் இதனை மூலத் திராவிட மொழிநிலைக்குத் திருத்தியமைப்பது அரிது.

**இரண்டு மதிப்பெண் வினா:**

1.வேற்றுமை என்றால் என்ன?

2.வினாப்பெயர்களின் அடிசொற் எழுத்துக்கள் யாவை?

3.திராவிட மொழிகளில் மூவிடப் பெயர்களின் வடிவம் எவ்வாறு அமைகிறது?

4.உயர்திணை பெண்பால் விகுதியினை எழுதுக.

5.கருவி பொருள் வேற்றுமை என்றால் என்ன?

**ஐந்து மதிப்பெண் வினா:**

1.திராவிட மொழிகளில் பால் பாகுபாடு குறித்து எழுதுக.

2.எண்ணுப்பெயர்கள் - விளக்குக.

3.மூவிடப் பெயர்களை உதாரணத்துடன் விளக்குக.

**பத்து மதிப்பெண் வினா:**

1.திராவிட மொழிகள் வேற்றுமை உருபை ஏற்கும் முறை குறித்து எழுதுக.

## அலகு – 4

## வினைச் சொற்களின் அமைப்பும் சிறப்பும்

### 4.1 வினைச் சொற்களின் அமைப்பும் சிறப்பும்

திராவிட மொழிகளில் வேற்றுமை ஏற்கும் அடிச்சொற்களைப் (Stem) பெயர் என்றும், காலங்காட்டும் இடைநிலைகளை ஏற்கும் அடிச்சொற்களை வினை என்றும் கூறுபடுத்துகின்றோம். வினைச்சொற்களைப் பொதுப்பொருள் உணர்த்தும் வினைச்சொற்கள் என்றும், இலக்கணப் பொருள் உணர்த்தும் துணைவினைகள் (Auxilliary verbs) என்றும் இரு கூறுபடுத்தலாம். இவற்றுள் பொதுப் பொருள் உணர்த்தும் வினைவடிவங்கள் எண்ணற்றனவாய், வரையறைக்குள் அடங்காதனவாய் (Open set items) உள்ளன. இலக்கணப் பொருள் உணர்த்தும் வினை வடிவங்கள் எண்ணிக்கையில் குறைந்து, வரையறைக்குள் அடங்குவனவாக (Close set items) உள்ளன. திராவிட மொழிகளின் வினையடிச் சொற்களோடு (Ver;bal basis)-வு, -கு, -ங்கு, -ந்து, -து, -பு, -ம்பு போன்ற விகுதிகளைச் சேர்ப்பதால் பெரும்பாலான வினைச்சொற்கள் அமைகின்றன[1]. இம்மொழிகளின் வினைச்சொற்கள் காலங்காட்டும் போது அடிச்சொற்கள் முதலில் அமைய, அதனையடுத்து தன்வினை, பிறவினை, இயக்குவினைகளுக்குரிய இடைநிலைகளும், அதனையடுத்து காலங்காட்டும் இடைநிலைகளும், இறுதியில் பால்காட்டும் விகுதிகளும் ஒன்றோடொன்று ஒட்டி, ஒட்டு நிலையாக (Agghuntinative) அமைந்து நிற்கின்றன. இவ்வாறு அவை புணர்ந்து நிற்கும்பாது சிறிதளவு திரிபும் ஏற்படும்.

ஆங்கிலம் போன்ற மொழிகளில் செயலின் தொடர்ச்சியைக் காட்ட (continuous tense) துணைவினைகளைச் சேர்த்து அமைக்கும் நீட்சியான வினை வடிவங்கள் பல சொற்களின் கூட்டாகக் கருதப்பட, திராவிட மொழிகளின் வினை வடிவங்கள் பால்காட்டும் விகுதி, கால இடைநிலை போன்ற இலக்கணக் கூறுகளோடு இணைந்து நெடிதாக அமைந்த போதிலும் தனிச் சொற்களாகவே கருதப்படுகின்றன. திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் ஒட்டு நிலையாய்

அமைந்த போதிலும் ஏவல் வினைகளில் மட்டும் இடைநிலைகளும், விகுதிகளும் இணைக்கப்படுவதில்லை. அதிகமாக இம்மொழிகளில் வினைப்பகுதிகளே ஏவல் வடிவங்களாகச் செயல்படுகின்றன. இவற்றோடு பன்மை விகுதிகளும், மரியாதைப் பன்மை விகுதிகளும் இணைந்து வருதலுண்டு.

எ.கா. வாருங்கள் , வாங்க

போங்கள் , போங்க

ஆங்கிலம் போன்ற மொழிகளின் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. ஆனால் திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

எ.கா. வந்தான் { உயர்திணை, ஆண்பால், ஒருமை

இப்பொதுவியல்புக்கு மலையாள மொழி மட்டுமே விதிவிலக்காக உள்ளது. மலையாள மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பாலறிகிளவிகள் இன்மையால், வினைச்சொற்களுக்கு முன்னர் இடம்பெறும் எழுவாயைக் கொண்டே திணை, பால், எண் போன்றவற்றை அறிய வேண்டிய நிலையுள்ளது. எனினும் வினைச்சொற்களோடு இணைக்கப்படும் பாலறிகிளவிகள் அம்மொழியில் இடம் பெற்றமை பற்றி குறிப்பு அம்மொழியின் பழைய இலக்கண நூலான 'லீலாதிலகத்தில்' உள்ளது[2]. தற்காலப் பேச்சுத் தமிழிலும் பாலறிகிளவகள் பயனன்படுத்தப்படாத இடங்கள் உள்ளன.

எ.கா. அவன் வந்தாச்சி

அது வந்தாச்சி

ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது திராவிட மொழிகளின் வினைச்சொல்லாக்கம் (conjugation) எளிமையாக உள்ளது என்று டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்[3]. வினைச்சொற்கள் கூறுபடுத்தப்படுகின்றன. வியங்கோள் வினை என்ற அமைப்பு துளு மொழி தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகளில் உள்ளன. இம்முறையில் திராவிட மொழிகள் சித்திய மொழிகளளோடு நெருங்கிய தொடர்புடையன என்பது டாக்டர் கால்டுவெல்லின் கருத்து. பாலறிகிளவிகள் பெறாத வினைமுற்று வடிவங்கள் மலையாளம் தவிர்ந்த வேறு பல மொழிகளிலும் உள்ளன. தமிழிலுள்ள அவன் செய்வான்' போன்ற வடிவங்கள் பாலறிகிளவி

பெற்றும், ‘அவன் செய்யும்’ என்றும் பாலறிகிளிவ பெறாமலும் வருவதுண்டு. இம்மொழிகளின் வினைச் சொற்களில் கால இடைநிலைகளோடு சிலவிடங்களில் சாரியைகளும் இடம் பெறுவதுண்டு.

எ.கா. வந்தனன் - ‘அன்’ சாரியை

திராவிட மொழிகளின் வினைச்சொற்களில் தன்வினை (Intransitive), பிறவினை (Transitive), இயக்குவினை (Causitive) என்ற மூவகையான வினை வகைகளையும், ஏவல் வினை, நிபந்தனை வினை, வியங்கோள் வினை என்னும் பல்வேறு வினைப்பொருட்களையும் (moods) காணலாம். வினைச்சொற்களின் பொருளைச் சிறப்பிக்க் ஐரோப்பிய மொழிகளில் முன்னொட்டுக்கள் (Prepositions) பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் திராவிட மொழிகளில் துணை வினைகளும், எச்சமாக அடுக்கும் வினைகளும் (Particles and infinitives) பயன்படுத்தப்படுகின்றன. இம்மொழிகளின் வினைச்சொற்களைக் காலங்காட்டும் முறை, வினையின் தன்மை, பால்காட்டும் முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கூறுபடுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | (1) | வந்தான் | காலம் |
| | | வருகிறான் | (இறந்தகாலம் ∴ நிகழ்காலம்) |
| | (2) | வந்தான் | வினையின் தன்மை |
| | | வருக | (முற்று ∴ வியங்கோள்) |
| | (3) | வந்தான் | பால் |
| | | வந்தாள் | (ஆண்பால் ∴ பெண்பால்) |

### 4.2 வினைவகைகள்

**தன்வினை, பிறவினை, இயக்குவினை (Intransitive,Transitive & Casitive verbs)**

திராவிட மொழிகளின் வினைச்சொற்களை இலக்கண ஆசிரியர்களும், மொழிநூலாரும் தன்வினைகள் (Intransitive verbs), பிறவினைகள் (Tra;nsitive verbs) என்று இரு கூறுபடுதுவர். ஒரு வினையைத் தானே செய்தால் தன்வினை என்றும், பிறரைச் செய்வித்தால் பிறவினை என்றும் அழைப்பார். இவற்றை முறையே Self-action words என்றும் Outward-action words என்றும் டாக்டர் கால்டுவெல் பெயரிட்டு விளக்கிச் செல்கிறார்[1].

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | ஓடினேன் | - | தன்வினை |
| | ஓட்டினேன் | - | பிறவினை |
| | ஒட்டுவித்தேன் | - | இயக்குவினை |

இவ்வினைகள் கால இடைநிலைகளை ஏற்பதிலும், பாலறிகிளவிகளை இணைத்துக் கொள்வதிலும் ஏனைய வினைகளிலிருந்து வேறுபடுவதில்லை. இவற்றுள் தன்வினைகள் செயப்படுபொருளைப் பெறுவதில்லை. இவற்றுள் தன்வினைகள் செயப்படுபொருளைப் பெறுவதில்லை. பிறவினைகள் செயப்படுபொருளைப் பெற்று நிற்கும். தன்வினைகளையெல்லாம் எளிதில் பிறவினைகளாக மாற்ற முடியும். வினைச்சொற்களைத் தன்வினைகள், பிறவினைகள் என்று பகுக்கும் முறை ஹங்கேரிய மொழியிலும் உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்[2].

தொடரளவில் அமையும் பிறவினைகளை மொழிநூலார் இரண்டாகக் கூறுபடுத்துவர். சில பிறவினை வடிவங்களில் பிறவினைகளுக்குரிய இடைநிலைகள் வெளிப்படையாகத் தெரிகின்றன.

எ.கா. ஆட்சி நடத்து.

அவற்றை ஆக்கப் பிறவினைகள் (Derived Transitive) என்பர். தின், கொல் போன்ற பிறவினை வடிவங்களில் இடைநிலைகள் வெளிப்படையாகத் தெரியவில்லை. எனினும் அவை இயல்பாகப் பிறவினை வடிவங்களாக அமைவதால் அவற்றை ‘இயல்பாக அமைந்த பிறவினைகள்’ (Inherent Transitive) என்பர். இயல்பாக அமைந்த பிறவினைகளுக்கும், தன்வினைகளுக்குமிடையேயுள்ள வேறுபாட்டை உருபன் நிலையில் (Morphologic Level) கண்டறிவது அரிது. தொடரன் நிலையில் (Syntactic Level) மட்டுமே அவற்றைத் தெளிவாகப் பிரித்தறிய முடிகின்றது.

வினை வகைகளை ஆராயும் டாக்டர் கால்டுவெல் இயக்குவினையைத் தனியாக, விரிவாக ஆராய்கின்றார். இவ்வினையை இலக்கண ஆசிரியர்கள் பிறவினைகளோடு இணைத்தனர். வீரமாமுனிவர் இதைத் தனியாக ஏவல்வினை என்றழைத்தார். இது தன்வினை, பிறவினை ஆகியவற்றிலிருந்து சற்று வேறுபடுகின்றது. திராவிட மொழிகளில் இயக்குவினைகள் பிறவினைகளாகவும் செயல்படுவதுண்டு. திராவிட மொழிகளின் இயக்குவினை வடிவங்களுக்கு நிகரான் வினைவடிவங்கள் இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் இல்லை. எனினும் சித்திய மொழிகளில் உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் இயக்கு வினைகளுக்கென தனிவடிவங்களும், உருபுகளும் இல்லையெனினும் துணைவினைகளை இணைத்து இயக்குவினைப் பொருளை உணர்த்தும் மரபினைக் காணலாம். திராவிட மொழிகளில் ‘வி’, ‘பி’ போன்ற தனி உருபுகள் காணப்பட்ட போதிலும், துணை வினைகளை இயக்குவினை அமைப்பிற்குப் பயன்படுத்துவதை அதிகமாகக் காணலாம். தமிழில் பண்ணு, செய் என்னும் துணை வினைகளும், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மாடு, செய்யு போன்ற துணை வினைகளும், இயக்குவினையமைப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாகத் திராவிட மொழிகளில் பிறவினைக்குரிய அடிச்சொற்களோடு இயக்குவினைகளுக்குரிய் உருபுகளைச் சேர்ப்பதால் இயக்குவினை வடிவங்கள் அமைகின்றன். பழந்தமிழ் தெலுங்கு, பிராகுயி ஆகிய மொழிகிளல் இயக்குவினைக்கெனத் தனி வடிவம் உள்ளது. தனியாக உள்ள இத்தகைய இயக்குவினை வடிவங்கள் காலத்தால் மிகப் பிற்பட்டவை என்பது பல அறிஞர்கள் கருத்து. ஆனால் சிலர் இவ்வடிவங்கள் மூலத் திராவிட மொழியிலே உள்ளன என்பர். மலையாள மொழியில் ‘இ’, ‘பி’ போன்றவை இயக்குவினை உருபுகளாக உள்ளன[4].

எ.கா. செய்யிச்சு

சோதிப்பிச்சு

**பிறவினை, இயக்குவினை உருபுகள் (Transtive verb & causitive verbs)**

**தமிழ்**

1. தமிழ் மொழியில் வினைப்பகுதியின் ஈற்றிலுள்ள வல்லினத்தை இரட்டித்து பிறவினை, இயக்குவினை வடிவங்களை அமைக்க முடிகின்றது.

எ.கா. ஆகு , ஆக்கு
வாடு , வாட்டு
பெருகு , பெருக்கு

இம்முறை கோடா, கொடகு, கோண்டா, குயி, பெங்கோ போன்ற மொழிகளிலும் உள்ளன.

2. மூக்கொலியும், அதன் இனத்தடையொலியும் இணைந்து வரும் இடங்களை (nasal +stop clusters) இரு வல்லொலிகளின் இணைவாக மாற்றுவதன் மூலமும் பிறவினை் வடிவங்களை அமைக்கலாம்.

எ.கா. அடங்கு , அடக்கு

நீங்கு , நீக்கு

3. வினைப்பகுதியோடு ‘த்த்’ இணைத்துப் பிறவினை அமைத்தல்.

எ.கா. நிகழ் , நிகழ்த்து

அலர் , அலர்த்து

பற , பறத்து

நட , நடத்து

4. வினைப்பகுதியோடு ‘று’, ‘டு’ இணைத்தல்

எ.கா. அகல் , அகற்று

துயில் , துயிற்று

காண் , காட்டு

சுருள் , சுருட்டு

5. வினைப்பகுதியோடு ‘ப்ப்’ இணைத்தல்

எ.கா. களி , களிப்பி

6. வினைப்பகுதியோடு ‘உ’ சேர்த்தல்,

எ.கா. கட , கடவு

7. வினைப்பகுதியோடு ‘செய், பண்ணு’ போன்றவற்றைச் சேர்த்தல்.

எ.கா. உண்ணச் செய்

உறங்கப் பண்ணு

8. இ, ய், ர், ழ் ஆகிய ஒலிகளைக் கொண்டு முடியும் ஐ(ஊ)ஏஊஏஸ வினையடிச் சொற்களோடு –ந்த், -ட்- முதலிய இறந்தகால இடைநிலைகளையும், -கிறு- என்னும் நிகழ்கால இடைநிலையினையும், -வ்-, -உம்- என்னும் ' எதிர்கால் இடைநிலைகளையும் இணைத்துத் தன்வினைகளையும் -த்த-, -க்கிறு-, -ப்ப்-, -க்கு- போன்றவற்றை இணைத்துப் பிறவினைகளையும் அமைக்கலாம்.

எ.கா. கழிந்தது , கழித்தது

கழிகிறது , கழிக்கிறது

கழியும் , கழிக்கும்

9. இயக்குவினை உருபுகளான வி.பி போன்றவற்றைப் பிறவினையடிகளோடு இணைத்தும், சிலவிடங்களில் தன்வினையடிகளோடு இணைத்தும் இயக்குவினை வடிவங்களை அமைக்கலாம்.

எ.கா. செய் , செய்வி

நட , நடப்பி

உண் , உண்பி

அறி , அறிவி

பேராசிரியர் டு.ஏ. இராமசுவாமி ஐயர் இத்தகைய இடைச்சொற்களைப் பெறும் அடிச்சொற்கள் சங் இலக்கயிங்களில் மிகக் குறைவாகவாகவும், ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடல்களில் சற்று மிகுந்ததும் வருவதைக் காட்டுகின்றார். தொல்காப்பியம்

761-வது நூற்பாவில் ‘அம்ம கேட்பிக்கும்’ என்ற இயக்குவினைத் தொடர் வருகின்றது. ‘மறப்பித்தாய்’ (கலி. 50) என்று கலித்தொகையிலும், ‘பிறப்பித்தோர்’ (பரி.. 2-73) என்று பரிபாடலிலும் இத்தகைய இயக்கவினை வடிவங்கள் இடம் பெறுகின்றன. தற்காலத் தமிழில் இயக்குவினைக்குரிய இடைச்சொற்களைப் பயன்படுத்தும் மரபு இல்லை. வினையெச்ச வடிவங்களேடு ‘வை’ என்னும் துணை வினையை இணைத்து இயக்குவினைப் பொருளை உணர்த்தும் மரபே மிகுந்துள்ளது.

எ.கா. சொல்லவை

நடக்கவை

பிறவினை, இயக்கவினையமைப்பில் மலையாள மொழி பெரும்பாலும் தமிழை ஒட்டியே அமைகின்றது.

**கோடா**

ஒலிப்பு ஒலியை ஒலிப்பில் ஒலியாக் மாற்றுவதன் மூலம் தன்வினைகளைப் பறவினைகளாக்கும் மரபினைக் கோடர் மொழியில் காணலாம்.

எ.கா. ய்அ- ப- , யஅ-ம-

இம்மொழியில் -ச்-, -த்- போன்றன பிறவினைக்குரிய இடைச்சொற்களாக உள்ளன. மேலும் ச், ர் ஆகிய ஒலிகளின் முன்னர் ய், ஞ் (தெ) ஆகிய ஒ லிகள் வந்தும் ‘இ’கரத்தின் முன்னர் ‘வ’கரம் கெட்டும், ‘ண்’, ‘த்’ ஆகிய ஒலிகள் கெட்டு அவற்றின் இடத்தில் -ட்- ஒலி வந்தும் இம்மொழியில் இயக்குவினை இடைச்சொற்கள் அமைகின்றன.

**தோடா**

தோடா மொழியிலும் கோடாவைப் போன்று ஒலிப்பு ஒலி ஒலிப்பில் ஒலியாக மாறி பிறவினைகள் அமைகின்றன.

எ.கா. யட-ஒ- (அசைதல்) , யட-ம- (அசைத்தல்)

-ச்-,ட் -த்- போன்றன இம்மொழியில் பிறவினை இடைச்சொற்களாக உள்ளன.

**கொடகு**

இம்மொழியில் வினைச்சொல்லின் இறுதியிலுள்ள ஒலிப்பு ஒலியை ஒலிப்பில் ஒலியாக் மாற்றுவதாலும், ஒலிப்பு ஒலியும் அதன் இன மூக்கொலியும் இணைந்த இணைவை (யெளயட ൂ எழஉைநன ளவழி) ஒலிப்பில் ஒலியாக மாற்றுவதாலும் பிறவினைகளை அமைக்கலாம்.

எ.கா. ண-ம , ய-ம-

ëச - யńப , ëச – யம

சிலவிடங்களில் -ம-இ -வ-இ -ளி- போன்ற பிறவினை இடைநிலைகளைத் தன்வினை அடிச்சொற்களோடு இணைத்தும் பிறவினைகள் அமைக்கப்படுகின்றன. இம்மொழியில் இயக்குவினை இடைநிலையாக –ச்-உள்ளது.

**கன்னடம்**

இம்மொழியில் ‘இசு’ என்பது பிறவினைக்குரிய இடைநிலையாக உள்ளது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 10-ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களில் -ப்பு- என்ற வடிவம் இருந்ததாகத் தெரிகின்றது. ஒலிப்பு ஒலிகள் ஒலிப்பில் ஒலிகளாக மாறி பிறவினைகள் அமையும் இயல்பும் இம்மொழியில் உள்ளது.

எ.கா. am – ugu > am – uku

**துளு**

இம்மொழியில் பிறவினை இடைநிலையாக ‘பு’ என்பது காணப்படுகின்றது. இதனை இம்மொழியின் பல வட்டார வழக்குகளிலும் காணலாம். – போ- என்னும் இயக்குவினை இடைநிலையும் இம்மாழியில் இடம் பெறுகின்றது.

**தெலுங்கு**

இம்மொழியில் -சு-, -பு-, இஞ்சு- போன்ற இடைநிலைகள் பிறவினையமைப்பிற்குப் பயன்படுகின்றன.

எ.கா. செயிஞ்சு - செய்விக்க

பிலிபிஞ்ச - அழைப்பிக்க

தற்கால தெலுங்கு மொழியில் சில துணை வினைகளைத் தன்வினையடிகளோடு இணைத்து பிறவினை, இயக்குவினை வடிவங்கள் அமைக்கப்படுகின்றன.

**கோண்டி, கோண்டா, பெங்கோ மொழிகள்**

கோண்டி மொழியில் -ஹ-, -பூஸ்-, -ஊஸ்- என்ற பிறவினை இடைநிலைகள் உள்ளன. கோண்டா மொழியில் தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்ற -இஸ்-, -ப-, -பிஸ்- போன்ற இடைநிலைகள் இணைக்கப்படுகின்றன பெங்கோ மொழியில் ஒலிப்பு ஒலிகள் அதன் இன ஒலிப்பில் ஒலிகளாக மாறி பிறவினைகள் அமைகின்றன.

**குயி, குவி**

-ம-இ -ள-இ -வ-இ ி- போன்றன குயி மொழியிலுள்ள பிறவினை இடைநிலைகள். குவி மொழியில் -வ-இ -ா-இ ி- போன்ற இடைநிலைகளும் உள்ளன. இம்மொழியில் பிறவினை, ‘இயக்குவினை அமைப்பிற்கு –கி- என்னும் துணை வினையும் பயன்படுத்தப்படுகின்றது.

**கொலாமி, நாயக்கி, பர்ஜி**

கொலாமி மொழியில் -அப்-, -இப்-, -ப்-, -க்-, -த்- ஆகிய பிறவினை இடைநிலைகள் உள்ளன. தன்வினை வடிவங்களோடு –அப்- என்னும் இடைநிலை இணைந்து நாயக்கி மொழியில் பிறவினைகள் அமைவதைக் காணலாம். பர்ஜி மொழியில் -இப்-, -இத்- என்னும் இரு இடைநிலைகள் உள்ளன.

**குருக், மால்டோ, பிராகுயி**

ி-இ -வ- போன்ற இடைநிலைகள் பிராகுயி மொழியிலும், -வச- என்னும் இடைநிலை மால்டோ மொழியிலும் உள்ளன.

தன்வினை, பிறவினை வடிவங்களைப் பற்றி விரிவாக ஆராய்ந்த டாக்டர் ீ.ளு. சுப்பிரமணியம் திராவிட மொழிகளில் மொததம் மூன்று வகைகாயன பிறவினை - இயக்குவினை வடிவாக்க முறை காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். போ , போக்கு போன்ற வடிவங்களை முதல் வகையாகக் கொள்கின்றார்.

ே , ெ

ெ , ெ என்ற முறைப்படி அமைக்கின்ற வடிவங்களை இரண்டாவது வகையாகக் கொள்கின்றார்.

எ.கா. திருந்து , திருத்து

ஆகு , ஆக்கு

இத்தகைய அமைப்பு முறை தமிழ், கொடகு, கோடா, குவி போன்ற மொழிகளிலும் பழங்கன்னடம், பர்ஜி போன்ற மொழிகளின் தொன்மையான வினை வடிவங்களிலும் உள்ளன. இவ்விரு வகை அமைப்பு முறைகளும் மூலத்திராவிட மொழியிலும் இருந்திருக்க வேண்டுமென்பது அவர் கருத்து வினையடிகளோடு –த்த்-, -த்-, -ந்த்- போன்ற இடைநிலைகளை இணைத்துத் தன்வினை பிறவினைகளை வேறுபடுத்திக் காட்டும் அமைப்பினைக் கொண்ட வடிவங்கள் மூன்றாவது வகையாகக் கொள்ளப்படுகின்றன.

**2. செயப்பாட்டு வினை**

செய்வினை, செயப்பாட்டு வினை என்னும் பாகுபாட்டைப் பழந்தமிழ் இலக்கணங்களில் காணமுடியவில்லை. எனினும் இவை ‘இலக்கண விளக்கம்’ என்னும் நூலில் இடம் பெறுகின்றன. திராவிட மொழிகளுக்கு ஒப்பிலக்கணம் கண்ட டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினை என்ற அமைப்பே கிடையாது என்று கூறிச் செல்வதைக் காண்கிறோம். கன்னட மொழிக்கு இலக்கணம் வகுத்த கு. கிட்டல் (கு.முவைவநட) என்பவா் கன்னட மொழியின் இலக்கிய வடிவில் இப்பாகுபாடு உள்ளபோதிலும் பேச்சு வழக்கிலும், தற்கால இலக்கியங்களிலும் இல்லை என்று கூறி இவ்வமைப்பு, வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றின் தொடா்பால் கன்னட மொழியில் புகுந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றாா். டாக்டா் ஜி.யு.போப் அவா்களும் தமிழில் செயப்பாட்டு வினை இல்லை. எனினும் தொடரில் இது ஓரளவிற்கு உணா்த்தப்படுகின்றது என்று குறிப்பிட்டுச் செல்கின்றாா். பழந்தமிழ் இலக்கண ஆசிரியா்கள் செய்வினை, செயப்பாட்டு வினை என்ற பாகுபாடு இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் உள்ளது போலத் தமிழில் தெளிவாக இல்லாமையால் இப்பாகுபாட்டிற்குச் சிறப்பளிக்காது விட்டுச் சென்றனா். எனினும் பழங்காலத்திலிருந்தே செயப்பாட்டு வினை தமிழில் இருந்து வந்தது என்பதற்கு “எழுத்தெனப்படுப” என்ற தொல்காப்பியத் தொடரே சான்றாக உள்ளது என்றும், இத்தொடரிலுள்ள ‘படு’ என்பதும் செயப்பாட்டு வினைப்பொருளை (passivity) உணா்த்துகின்றது என்றும் டாக்டா் அ. சிதம்பரநாத செட்டியாா் ‘தமிழில் செயப்பாட்டு வினை’ (Passive Voice in tamil) என்ற கட்டுரையில் விளக்கிச் செல்கின்றாா். தொல்காப்பியா் மூன்றாம் வேற்றுமையுருபு கருத்தாப்பொருளில் வரும் என்று கூறுவதால் அவா் காலத்தில் செயப்பாட்டு வினை இருந்திருக்க வேண்டும் என்று டாக்டா் ீ.ளு. சுப்பிரமணிய சாஸ்திரி அவா்களும் சுட்டிச் செல்கின்றாா்.

செய்வினைக்கும், செயப்பாட்டு வினைக்குமிடையே அடிப்படையில் சில வேறுபாடுகள் உள்ளன. செய்வினையில் வினை செய்பவனே எழுவாயாக அமைய, செயப்பாட்டு வினையில் செயல்படுபொருளே எழுவாயாக அமைகின்றது. செய்வினையின் எழுவாய், செயப்பாட்டு வினையில் மூன்றாம் வேற்றுமைக் கருவிப் பொருள் உருபைப் பெறும். செயப்பாட்டு பொருளுக்குச் சிறப்புக் கொடுக்க எண்ணும் போதும், எழுவாய் தெரியாத நிலையிலும், எழுவாயை அறிவிக்க வேண்டாத நிலையிலும் தமிழில் செயப்பாட்டு வினையமைப்புக்கள் இடம் பெறுகின்றன என்பா்[12].

திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினைக்குரிய இடைநிலையாகப் ‘படு’ என்பது காணப்படுகின்றது. எனினும் இம்மொழிகளின் பல வினைவடிவங்களில் இது செயப்பாட்டு வினைப் பொருளை உணா்த்துவதில்லை. ‘படு’ என்பது ‘வெட்கப்பட்டான்’ போன்ற தமிழ் வடிவங்களிலும், ளபைபரியனனயனர போன்ற தெலுங்கு மொழியின் வடிவங்களிலும், வெட்கப்படுத்தினான் (sigguparacenu) போன்ற பிறவினை வடிவங்களுக்கு நிகரான தன்வினை வடிவங்களைச் சுட்டப் பயன்படவில்லை என்பது தெளிவு. இவற்றின் உண்மையான செயப்பாட்டு வினை வடிவம் ‘வெட்கப்படுத்தப்பட்டான்’ என்பதே என்று தெளிவுபடுத்துகின்றாா் டாக்டா் ளு. அகத்தியலிங்கம். மேலும் ‘படித்த பாடம்’ போன்ற வடிவங்கள் செயப்பாட்டு வினை வடிவங்கள் அல்ல என்பதையும் அவா் சிறப்பாக விளக்கிச் செல்கின்றாா்.

செய்வினையின் எழுவாயும், செயப்படு பொருளும், செயப்பாட்டு வினையில் முறையே கருவியாகவும் (In strumental), எழுவாய் வடிவாகவும் (Nominative) மாற்றப்படுகின்றன. திராவிட

மொழிகளைப் போன்று புராதன இந்தோ – ஐரோப்பிய மொழிகளிலும் (P;rimitive Indo – Euro - pean) செயப்பாட்டு வினைப் பொருளில் பயன்படுத்தப்படும் ‘ற’ என்னும் உருபு தொடக்க காலத்தில் தனித்தியங்கும் சொல்லாக இருந்து பின்னர் காலப்போக்கில் ஒரு கட்டு உருபனாக (bound morpheme) மாற்றம் பெற்றது என்ற கருதப்படுகின்றது. இதனால் சமஸ்கிருத மொழியிலும், செயப்பாட்டு வினை வடிவம் தொடக்க காலத்தில் இல்லை என்ற நிலை தெளிவு பெறுகின்றது. அவ்வாறே தமிழில் காணப்படும் ‘படு’ என்னும் வடிவமும், தொடக்க காலத்தில் தனிச் சொல்லாக (Free form) இருந்த பின்னர் ஒரு கட்டு உருபன் (bound morpheme) என்ற நிலைக்கு மாறி இருக்க வேண்டும் என கருதப்படுகின்றது.

மாற்றிலக்கண வல்லுனர்கள் செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களிடையே உள்ள உறவை மிகச்சிறப்பாக விளக்கியுள்ளனர். இவ்விருவகைத் தொடர்களையும் ஒரே புறவடிவத்தில் புதைவடிவங்களாக அவர்கள் விளக்கிச் செல்கின்றனர்.

**செயப்பாட்டு வினை உணர்த்தப்படும் முறை**

(1) இந்தோ – ஐரோப்பிய மொழிகளைப் போல ‘அது என்னால் உடைக்கப்பட்டது’ என்று கூறாமல், ‘அது என்னால் உடைந்தது’ என்று கூறினாலே தமிழில் அது செயப்பாட்டு வினைப் பொருளைத்தருகின்றது. இவ்வாறு செயப்பாட்டு வினைப் பொருள் உணர்த்தப்படும் முறை ஜப்பானிய மொழிகளிலும் உள்ளது என்கிறார் டாக்டர் கால்டுவெல்.

(2) மேலும் பொருள் தெளிவுபட வேண்டுமாயின் ‘ஆயிற்று’, ‘போயிற்று’ என்பவற்றைச் சேர்த்து அது ‘உடைந்து போயிற்று’, ‘உடைந்ததாயிற்று’ என்ற கூறுவது மற்றொரு வகை.

(3) வினையாலணையும் பெயர்களில் செய்வினையே செயப்பாட்டு வினைப் பொருளைத் தருவதையும் டாக்டர் கால்டுவெல் காட்டிச் செல்கின்றார்.
எ.கா. சொன்னது போதும் - சொல்லப்பட்டது போதும்.

(4) ‘உண்’ என்னும் துணை வினையை பெயர், தொழிற்பெயர் ஆகியவற்றோடு இணைத்துச் செயப்பாட்டு வினையுணர்த்தும் மரபும் தமிழில் உள்ளது.
எ.கா. கொலையுண்டான்

(5) தற்காலத் தமிழிலும், ஏனைய திராவிட மொழிகளிலும் ‘படு’ என்னும் துணை வினையை இணைத்துச் செயப்பாட்டு வினைப் பொருளை உணர்த்தும் மரபே உள்ளது. இம்முறை துளு மொழியில் மட்டும் கிடையாது.

ஐரோப்பிய மொழிகளிலும் தொடக்க காலத்தில் செயப்பாட்டு வினை இல்லை என்றும், பிற்காலத்தில் வளர்ந்து இடம் பெற்றது என்றும் ளு.மு. சட்டர்ஜி குறிப்பிடுகின்றார்.

**3. எதிர்மறை வினைகள்**

திராவிட மொழிகளில் எதிர்மறை வினைகள் பலவாறு அமைகின்றன. எனினும் அடிச்சொல் ₊ எதிர்மறை இடைநிலை ₊ பாலறிகிளவி என்பதே பொதுவான அமைப்பு முறையாக உள்ளது. சிலவிடங்களில் காலங்காட்டும் இடைநிலைகள் கெட்டுவிடுவதால் எதிர்மறை வினைகள் அமைகின்றன.

எ.கா. காணேன் - காண் ₊Ø ₊ ஏன்

இத்தகைய அமைப்பு முறையே ஆல்பிரட் மாஸ்டர் என்பவர் ணநசழ வநளெந என்கிறார். இதனைப் பிற்கால அறிஞர்கள் ஏற்கவில்லை. சில் இடங்களில் ஒன்றன்பால், பலவின்பால் வடிவங்களில் ‘ஆ’காரம் எதிர்மறை இடைநிலையாக வருதல் உண்டு.

எ.கா. மாடு ஓடா

திராவிட மொழிகளில் எதிர்மறை வினைமுற்றுக்கள் மட்டுமன்றி எதிர்மறை பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் உள்ளன. நடுத்திராவிட மொழிகளில் எதிர்மறைக்கெனத் தனி வடிவங்களும் உள்ளன. இத்தகைய வடிவங்களில் எதிர்மறை வடிவங்களையடுத்து இறந்தகால இடைநிலைகள் அமைகின்றன. தமிழ், கோடா போன்ற மொழிகளில் ‘ஆ’காரம் எதிர்மறை இடைநிலையாக உள்ளது. வினையடைகளிலும் ‘ஆ’காரம் இடைநிலை எதிமறைப் பொருளைத் தந்து நிற்கின்றது.

எ.கா. ஓடாது சென்றான்

மூலத் திராவிட எதிர்மறை இடைநிலையான ‘வா’ என்பது அகமான நடுத்திராவிட மொழிகளிலும், கோண்டா, பெங்கோ, மண்டா போன்ற மொழிகளிலும் காணப்படுகின்றது. சில இடங்களில் இது குறுகி, ‘வ’ என்று எதிமறையை உணர்த்தி நிற்பதைக் காணலாம். பெங்கோ, குயி, குவி போன்ற மொழிகளில் குரலவளை ஒலி (புடழவவயட ளவழி) ‘அ’கரத்தோடு இணைந்து ஜ?யஸ என்று எதிர்மறை இடைநிலையாக வருகின்றது.

மேற்காட்டிய அமைப்பு முறைகள் மட்டுமின்றி அடிச்சொல் ₊ எதிர்மறை இடைநிலை ₊ இறந்தகால இடைநிலை ₊ பாலறிகிளவி என்ற முறைிலும் எதிர்மறை வினைகள் அமைகின்றன. இத்தகைய அமைப்பு முறையினைக் கோண்டா, பெங்கோ. குயி, குவி போன்ற மொழிகளில் காணலாம். இவ்வமைப்பை மூலத் திராவிட மொழி நிலைக்குத் திருத்தியமைப்பது அரிதாக உள்ளது. வினைமுற்றுக்களில் -ஆ- என்னும் இடைநிலை எதிர்மறையையேக் காட்டி நிற்குமென்றாலும் சிலவிடங்களில் -நத்- என்னும் இடைநிலை இணைந்து –ஆத்- என்று எதிர்மறை இடைநிலை அமைவதைக் காணலாம்.

எ.கா. வராது

சில மொழிகளில் ‘ஆ’காரத்தோ்டு, ‘கு’ இணைந்து ‘ஆளு’ என்று எதிர்மறை இடைநிலைகள் அமைகின்றன. பெயரடைகளிலும் ‘ஆ’காரமே எதிர்மறைப் பொருளை உணர்த்தி நிற்கின்றது. நடுத் திராவிட மொழிகளில் ‘அ’கர இடைநிலை எதிர்மறைப் பொருளைத் தருகின்றது.

துளு போன்ற தென் திராவிட மொழிகளிலும் 'ஆ'காரமே எதிர்மறைக்குரிய இடைநிலையாகக் கருதப்படுகின்றது. இவ்விடைநிலைகளுள் 'ஆ'காரமே மூலத்திராவிட வடிவமென்பது பலர் கருத்து. வேறு சிலர் 'அ'காரமே மூலத்திராவிட வடிவமென்று வாதிடுவார். அதிகமான திராவிட மொழிகளில் முதலசை தவிர்ந்த ஏனைய் அசைகளில் நெட்டுயிர்கள் இடம் பெறுவதில்லை. துளு மொழியில் 'அ'கரத்தை அடுத்துவரும் குறில் ஒலியான 'அ'கரமும் இணைந்த நெடிலாவதைத் தடுக்க இரு 'அ'கர ஒலிகளுக்குமிடையில் 'ய'கர உடம்படுமெய் வருவதைக் காணலாம்.

எ.கா. ய ு யர , யலயெ

எனவே 'அ'கரமே மூலத்திராவிட வடிவமென்பது தெளிவு.

எதிர்மறைப் பொருளை உணர்த்துவதிலும் திராவிட மொழிகள் இந்தோ –ஐரோப்பிய மொழிகளிலிருந்து வேறுபடுகின்றன. ஐரோப்பிய் மொழிகளில் எதிர்மறை உணர்த்தும் சொல் வினைச்சொல்லின் உறுப்பாகாமல் தனித்து நிற்க. திராவிட மொழிகளில் எதிர்மறை இடைநிலைகள் வினையடிச் சொல்லோடு ஒட்டு நிலையாக இணைந்து நிற்பதைக் காணலாம். இம்மொழிகளில் கால இடைநிலையைப் பெறாத எதிர்மறை வடிவங்கள் காலத்தைக் காட்டுவதில்லை. தமிழில் அல், இல் போன்ற எதிர்மறைச் சொற்களும் எதிர்மறைப் பொருளைத் தருகின்றன. இவை தனியாக எதிர்மறையை உணர்த்தும் என்கிறார். டாக்டர் கால்டுவெல். 'இல்லை', 'மாட்டான்' என்பன போன்ற சொல்லுருபுகளும் தற்காலத் தமிழில் எதிர்மறைப் பொருளை உணர்த்தப் பயன்படுகின்றன.

மலையாள மொழிகளில் வினையடிகளோடு அல்ல, இல்ல என்பவற்றை இணைப்பதாலும், 'ஆ'கரத்தைச் சேர்ப்பதாலம் எதிர்மறை வடிவங்கள் அமையும். கொடகு மொழியில் வினைமுற்றோடு 'அ'கரம் இணைந்து எதிர்மறை உருப்பெறுவதைக் காணலாம். அதோடு இம்மொழியின் வினையெச்சத்தில் 'அதெ' என்பது பெயரெச்சத்தில் 'அத்' என்பதும் இணைந்து எதிர்மறை அமைதலுண்டு. கன்னடத்தில் உருபு இன்றியும், வினைமுற்றுக்களோடு 'அ'கரம் இணைந்தும் எதிர்மறைப் பொருள் உணர்த்தும் முறை உள்ளது. துளு மொழியில் 'அ'கரம் பெரும்பாலும் எதிர்மறை இடைநிலையாக உள்ளது. அதோடு 'ஜி', 'ரி' போன்ற இடைநிலைகளும் பயின்று வருகின்றன.

இவ்வெதிர்மறை இடைநிலைகளைத் தொடர்ந்து இம்மொழியில் பால் காட்டும் விகுதிகள் இடம் பெறுகின்றன. தெலுங்கிலும் 'அ'கரமே பெரும்பாலும் எதிர்மறை இடைநிலையாகச் செயல்படுகின்றது. வினையெச்சத்தோடு 'லேது' என்னும் சொல்லுருப்பு இணைந்தும் எதிர்மறை வடிவங்கள் அமைகின்றன. தொழிற்பெயரோடு பேச்சுவழக்கில் 'வய' என்னும் பின்னொட்டு இணைந்தும் எதிர்மறை வடிவம் அமையக் காணலாம்.

கோண்டி மொழியில் -ல-இ -ந- போன்றனவும், -maki(a) போன்ற பின்னொட்டுக்களும் எதிர்மறைப் பொருளை உணர்த்தத் துணை செய்கின்றன. எதிர்மறை வினையெச்ச விகுதியாக

இம்மொழியில் -yak என்னும் பின்னொட்டு உள்ளது. கோயா் மொழியில் -vo- என்னும் எதிர்மறை இடைநிலை உள்ளது. இறந்தகால எதிர்மறை வடிவங்களில் ill- என்பதும், நிகழ்கால எதிர்மறை வடிவங்களில் டைடந என்பதும் எதிர்மறை வினையெச்சத்தில் -யமரவெய என்பதும் எதிர்மறைப் பொருளைத் தரும்.

கோண்ட மொழியில் பொதுவாக -?- எதிர்மறை இடைநிலையாக உள்ளனது. இது வினையடிகளோடு இணையும் போது அவ் வினையடிகள் மாற்று வடிவங்களைப் பெற்று நிற்கும். பெங்கோ மொழியில் எதிர்மறை இடைநிலையாக –உ- காட்சி தருகின்றது. அதோடு –ய-இ -னந- போன்றனவும் எதிர்மறைப் பொருளைத் தருகின்றன. கொலாமி மொழியில் -ந- எதிர்மறை இடைநிலையாக உள்ளது. இதே இடைநிலையை நாயக்கி மொழியிலும் காணலாம். பா்ஜி மொழியில் 'அ'கரமே பெரும்பாலும் எதிர்மறை இடைநிலையாக உள்ளது. இவ்விடை நிலையினை கடபா மொழியிலும் காணலாம்.

## 4. குறிப்பு வினைகள் (Appellative Verb or Conjugated Noun)

தமிழ் மொழியில் வினைச்சொற்களைக் குறிப்பு வினைகள் என்றும் தெரிநிலை வினைகள் என்றும் இரு கூறுபடுத்துவா். இக்குறிப்பு வினை வடிவங்கள் இலக்கிய வழக்கில் காணப்பட்ட போதிலும் பேச்சு வழக்கில் அருகிலே காணப்படுகின்றன. திராவிட மொழிகளில் பெயர்ச்சொற்களோடு திணை, பால், இடங்களுக்குரிய விகுதிகளை இணைப்பதால் அவற்றைக் குறிப்பு வினைகளாக மாற்றிவிட முடியும் என்பது டாக்டா் கால்டுவெல்லின் கருத்து. இத்தகைய அமைப்பு முறையை 'னநசளையவழைெ' என்பா் மொழிநூலாா். இவைகள் குறிப்பு வினைகள் என்று அழைக்கப்பட்ட போதிலும், வினைச் சொற்களைப் போன்று காலங்காட்டுவதில்லை. எனினும் மரபிலக்கண வல்லுநா்கள் தெரிநிலை வினைகள் காலத்தை வெளிப்படையாகக் காட்டும் என்றும், குறிப்பு வினைகள் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் என்றும் கூறுவா். டாக்டா் கால்டுவெல் குறிப்பு வினைகளை நிகழ்காலத்திற்குரியதாகக் கொள்கின்றாா் எனினும் ஆராய்ந்து நோக்குமிடத்து இவை எந்தக் காலத்தையும் காட்டுவதில்லை என்பது தெளிவாகின்றது.

இலக்கண ஆசிரியா்கள் காலங்காட்டும் தெரிநிலை வினை வடிவங்கள் அடிச்சொல் ஸ கால இடைநிலை ஸ பாலறிகிளவி அல்லது அடிச்சொல் ஸ எதிர்மறை இடைநிலை ஸ பாலறிகிளவி என்ற பொது அமைப்பில் அமைய, குறிப்பு வினைகள். குறிப்பு வினையடிஸ பாலறிகிளவி என்ற அமைப்பில் அதைவதாகக் காட்டுவா். குறிப்புவினை வடிவங்கள் கால இடைநிலைகளை ஏற்காத போதிலும் தெரிநிலை வினைவடிவங்கள் போல மூன்றிடமும், ஐம்பாலும் ஏற்கும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ.கா. | (நான்) | நல்லென் | - | தன்மை | | |
| | (நீ) | நல்லை | - | முன்னிலை | | |
| | (அவன்) | நல்லன் | - | படா்க்கை | - | ஆண்பால் |
| | (அவள்) | நல்லள் | - | படா்க்கை | - | பெண்பால் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அவர்) | நல்லர் | - | படர்க்கை | - | பலர்பால் |
| (அது) | நன்று | - | படர்க்கை | - | ஒன்றன்பால் |
| (அவை) | நல்ல | - | படர்க்கை | - | பலவின்பால் |

மேலும் தெரிநிலை வினைகள் 'அன்' சாரியை பெறும் என்றும், குறிப்பு வினைகள் 'இன்' சாரியைப் பெறுமென்றும் இவ்விரு வகை வினைகளையும் வேறுபடுத்திக் காட்டுவர். தெரிநிலை வினைகளைப் போல குறிப்பு வினைகள் ஏவலாகச் செயல்படுவதில்லை.

எவ்வாறாயினும், இக்குறிப்பு வினைகளை ஆராய்ந்து நோக்குமிடத்து இவைகள் வினைச் சொற்களன்று, பெயர்களே என்பது தெளிவாகின்றன. ஒரு தொடரில் எழுவாயும், வினைச் சொல்லும் அமைய வேண்டும் என்ற கொள்கையால்தான் இவற்றை வினைகளாகக் கொண்டு குறிப்பு வினைகள் என்ற பெயரைக் கொடுத்திருக்க வேண்டுமென்றும் திராவிட மொழிகளில் வினைச் சொற்களினின்றியும், 'அது பசு' போன்றெல்லாம் தொடர்கள் அமையுமென்று கொண்டால் இவற்றையும் பெயர்கள் என்றே கொள்ளலாம் என்றும் டாக்டர் மு. வரதராசனார் விளக்கிச்செல்கின்றார். வீரமாமுனிவர் இவற்றைப் பெயர்கள் என்று கொண்டு "They are called vinaikkurippu, the sign of the verb that is nouns serving like a verb, to express some action or passion" என்று கூறிச் செல்லுகின்றார்[21].

தெலுங்கு மொழியில் -னு, -னி ஆகிய விகுதிகள் குறிப்பு வினையமைப்பிற்குத் துணைசெய்கின்றன.

எ.கா. sevakudu – nu

kavi-ni

இம்மொழியில் பன்மை வடிவிற்கு –மு விகுதி பயன்படுத்தப்படுகின்றது. மலையாளத்தில் -அன், -ஏன் போன்ற விகுதிகள் ஒருமைக்கும், -அங்஼ள் என்ற் விகுதி பன்மைக்கும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

எ.கா. அடியன், அடியேன், அடியங்஼ள்.

தென் திராவிட மொழிகளில் குறிப்பு வினைகள் அமையும் முறையை டாக்டர் கால்டுவெல் விரிவாக விளக்கிச் செல்கின்றார்[22].

**4.3 வினைச்சொற்கள் காலம் காட்டும் முறை**

திராவிட மொழிகளில் வினையடிகளோடு காலங்காட்டும் இடைநிலைகள் இணைந்து நின்று காலத்தைக் காட்டி நிற்கின்றன. பழந்தமிழில் இறந்தகாலம் (ியளவ). இறந்தகாலம் அல்லாதன (ழேெியளவ) என இரு காலங்களே உள்ளன. பேச்சுவழக்கில் மட்டுமேயுள்ள திருந்தாத திராவிட மொழிகள் பலவற்றிலும் பழந்தமிழைப் போன்று இறந்தகாலம், இறந்தகாலம் அல்லாதன என்ற

இரு பாகுபாடே காணக்கிடக்கின்றன. தொல்காப்பியர், காலம் மூன்று என்று குறிப்பிட்ட போதிலும் இரண்டு காலங்களையே காட்டிச் செல்கின்றார்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | செய்த | - | இறந்தகாலம் |
| | செய்யும் | - | இறந்தகாலம் அல்லாதது |

மூலத்திராவிட மொழியிலும் இவ்விருவகையான் காலப்பாகுபாடுதான் இருந்திருக்க வேண்டுமென்பது பெரும்பாலானோர் கருத்து. இவற்றுள் இறப்பு அல்லாத காலத்தில் ஆங்கிலத்தில் எதிர்காலமும் அடங்கும். இறப்பு அல்லாத காலத்தை யழசளைவ கரவரசந என்றும் அழைப்பர். இறப்பு அல்லாத காலத்திலிருந்து நிகழ்காலம் வடிவங்கள் எதிர்காலத்தையும் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | நான் வருகிறேன் | - | நிகழ்காலம் |
| | நான் (நாளை) வருகிறேன் | - | எதிர்காலம் |

**இறந்தகாலம்**

தென் திராவிட மொழிகளில் ஏராளமான இறந்தகால இடைநிலைகள் உள்ளன. அவற்றுள் -த்-, -த்த்-, -ந்த்-, -இ- போன்றவற்றை மூலத்திராவிட வடிவங்களாகக் கொள்வர். இவ்வடிவங்கள் தென் திராவிட மொழிகளில் அதிகமாக உள்ளன. பழந்தமிழிலுள்ள இறந்தகால வினை வடிவங்களை அவை ஏற்கும் இறந்தகால இடைநிலைகளை அடிப்படையாகக் கொண்டு நான்காகப் பகுக்கலாம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அவை | (1) | செய் | + | த் | + | ஆன | → | செய்தான் |
| | (2) | நட | + | ந்த் | + | ஆன் | → | நடந்தான் |
| | (3) | அடி | + | த்த் | + | ஆன் | → | அடித்தான் |
| | (4) | அடங்கு | + | இன் | + | ஆன் | → | அடங்கினான் |

பேச்சுத் தமிழில் -ந்த், -ந்த் - என்னும் இடைநிலைகள் இடையண்ண ஒலிகளாக மாறி முறையே –ஞ்ச், -ச்ச் - என்று முன்னுயிர்களையடுத்து வருகின்றன. இத்தகையத் திரிபு பெற்ற இடைநிலைகள் இலக்கியங்களில் அதிகமாக இடம் பெறாவிடினும் இம்மாற்றம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே ஏற்பட்டிருக்க வேண்டுமென்பது தெளிவு. அப்பர் தேவாரத்தில் இத்தகைய இடைநிலைகள் சிலவிடங்களில் வருகின்றன. ‘த’கர இடைநிலை கூட பேச்சுத் தமிழில் -ஞ்ச்- என்று திரிந்து வருவதைக் காணலாம்.

எ.கா. பெய்தது , பெஞ்சது

தமிழில் இறந்தகால அடிச்சொற்களோடு (stem) ‘உ’கர, ‘இ’கர ஒலிகளை இணைத்து வினையெச்ச வடிவங்கள் அமைப்பதுண்டு.

எ.கா. நடந்து

திரும்பி

இவ்வாறே இறந்தகால வினையடிச் சொல்லோடு ‘அ’கரத்தை இணைக்கும் போது இறந்தகாலப் பெயரெச்சங்கள் ஏற்படுகின்றன.

எ.கா. வந்த

ஓடிய

தமிழிலுள்ள -ந்த்- என்ற இடைநிலைக்கு நிகராக மலையாள மொழியில் -ந்த்- என்ற இடைநிலை உள்ளது. பழங்காலக் கல்வெட்டுக்களில் ‘என்ற’ ‘ந்த, போன்ற் வடிவங்கள் உள்ளன. இம்மொழியில் -ண்ண்- என்ற இடைநிலையே பெருவழக்கிலுள்ளது. தற்கால மலையாளத்தில் -இ-, -ந்த்-, -ந்-, -ண்-, -ற்-, -ட்-, -ச்-, -த்- போன்ற இடைநிலைகளும் காணப்படுகின்றன. கன்னட மொழியில் -ன-இ -த்-, -னெ-இ -னை- போன்ற இடைநிலைகள் பெருவழக்கில் உள்ளன. தெலுங்கு மொழியில் -எ-, -இ-, -ஆ-, -இன்- போன்ற இடைநிலைகள் காணப்படுகின்றன. இறந்தகால இடைநிலைகளைப் பொறுத்தவரையில் தென் திராவிட மொழிகளுக்கும் நடுத்திராவிட மொழிகளுக்குமிடையே அதிக ஒற்றுமைக் கூறுகளைக் காணமுடிகின்றது. கோண்டா, கோண்டி, குயி போன்ற மொழிகளில் -இத்- என்னும் இடைநிலையே பெருவழக்கில் உள்ளது. தமிழிலுள்ள நான்கு இடைநிலைகளையும் குயி மொழி –த்-, -இ- என்னும் இரு இடைநிலைகளாகச் (d/t and i/y) சுருக்கிக் கையாள்கின்றது. பர்ஜி மொழியில் ‘க’ என்னும் இறந்தகால் இடைநிலை அதிகமாகப் பயின்று வருகின்றது.

தமிழ், கொடகு ஆகிய மொழிகள் வினையடிகளோடு த், ந்த், த்த, இ என்ற இடைநிலைகளை இணைத்து இறந்தகால வினைவடிவங்களை் அமைத்துக் கொள்கின்றன. இம்முறையே மூலத்திராவிட மொழியின் இயல்பாகும். இவற்றுள் -த்த்-, -த்- என்பவற்றைத் தொடர்ந்து முன்னுயிர்கள் வம்போது அவை அண்ண ஒலியாக மாறக் காணலாம். நடுத்திராவிட மொழிகளின் இறந்தகால வினைவடிவங்களின் அமைப்பு மிக எளிமையாக உள்ளது. -இத்- என்னும் இறந்தகால இடைநிலையை பழைய தெலுங்கு, குயி, குவி ஆகியவற்றில் காணலாம். வட திராவிட மொழிகளில் -க்க்- என்ற இறந்தகால இடைநிலையே பெருவழக்கில் உள்ளது.

இவற்றுள் இறந்தகால இடைநிலையான –த்- பெரும்பாலும் ஓரசைச் சொற்களையடுத்து வரக்காணலாம். சில இடங்களில் (ந) எநள என்ற அமைப்புடைய் ஈரசைச் சொற்களையடுத்தும் இது வருதலுன்டு.

எ.கா. தமிழ் செய் ൗ த்

கொடகு கெய் ൗ த்

தோடா கிங் ൗ த்

ஊ$^1$ஏ$^1$ஊ$^2$ர என்ற அமைப்புடை வினையடிகளில் ஊ$^2$ என்பது க,ட,ற ஆகிய் மெய்களில் ஏதாவது ஒன்றாக இருந்தால் அது க, ட, ற என்பவற்றுள் ஒன்றை இறந்தகால இடைநிலையாக ஏற்கும்.

எ.கா. தமிழ் நகு நக்க

இடு இட்ட

பெறு பெற்ற

$_{ஊஏ}$ என்ற அமைப்புடைய வினையடிகளே பெரும்பாலும் -த்த்- என்னும் இறந்தகால இடைநிலையை ஏற்கும்.

எ.கா. தமிழ் நோ , நொந்தான்

மலையாளத்தில் ந்த் , ந்ந் என்று மாறி

விடுகின்றது.

அள, எழு போன் வினைவடிவங்களும் 'ந்த்' இடைநிலையை ஏற்ற நிற்கக் காணலாம். அடி, படி போன்ற 'இ'கர ஈற்று வினையடிகள் 'த்த்' என்று இறந்த்கால் இடைநிலையை ஏற்கும். இறந்தகால இடைநிலைகளுள் "இ'கரமே திராவிட் மொழிகள் அனைத்திலும் பரவலாகக் காணப்படுகிறது. கோடா, தோடர் போன்ற மொழிகளில் இது 'ய'கரமாகத் திரியும்.

**இறந்தகாலம் அல்லாதன (Non-past)**

திராவிட மொழிகளில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முப்பிரிவு தோன்றும் முன்னர், இறந்தகாலம் அல்லாதன என்ற கூறுபாடே நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தியிருக்க வேண்டும். எனவேதான் திராவிட மொழிகளை ஆராய்ந்த டாக்டர் கால்டுவெல் இம்மொழிகளில் இறந்தகாலம், ட் எதிர்காலம் என இரு காலங்களே உள்ளன என்று குறிப்பிடுகின்றார். மூலத்திராவிட மொழியில் -ப்ப்-, -ப்-, -ச்ச்-, -த்-, -த்-, -உம்-, -ன- போன்றன இறந்தகாலம் அல்லாதனவற்றின் இடைநிலைகளாக இருந்திருக்க வேண்டும். இவ்விடைநிலைகள் சிலவிடங்களில் எதிர்காலத்தையும், சிலவிடங்களில் நிகழ்காலத்தையும் உணர்த்தி நிற்கின்றன. நிகழ்காலத்தை இடைநிலைகள் இல்லாமல் கூட்டுவடிவங்களால் (ிநசனிசயளவை

உழளெவசரஉவழைெ) உணர்த்தும் முறையும் இம்மொழிகளில் உள்ளன. –கிறு-, -கின்று-, -ஆநின்று- என்பன தமிழில் நிகழ்காலத்தை உணர்த்தும் தனி வடிவங்களாக உள்ளன.

மூலத்திராவிட இடைநிலைகளான் -த்த்- என்பதை நடுத்திராவிட மொழிகளிலும், -ப்ப்- என்பதைத் தென் திராவிட மொழிகளிலும் காணலாம். –க்க்- இடைநிலை தமிழ் மலையாளம், தோடா, கோடா, கன்னடம், கொலாமி, பர்ஜி ஆகிய மொழிகளில் உள்ளன.

எ.கா. தமிழ் - நடக்குவன

-த்த்- இடைநிலை தமிழ், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளில் இடம்பெறுகின்றது. -உம்- இடைநிலை தமிழ், மலையாளம், கோடா, துளு, கொலாமி, பர்ஜி போன்ற மொழிகளில் மிகுதியாக இடம்பெறுகின்றது. குயி மொழியில் -வா-, -ந-, -ஏசி-, (esi) போன்ற இடைநிலைகளும் உள்ளன.

மலையாள மொழியில் நிகழ்கால் இடைநிலைகளாக –உன்னு-, -குன்னு- என்பன உள்ளன. பழைய மலையாளத்தில் -இன்னு- என்னும் இடைநிலையும் உள்ளது. தெலுங்கு மொழியில் -சு- அல்லது –து- என்னும் இடைநிலை நிகழ்காலத்தைக் குறிக்கப் பயன்படுகின்றது. புதுக்கன்னட மொழியில் நிகழ்காலங்காட்டும் இடைநிலைகளாக –உத்-, -உத-, -மாடுத்த- என்ற வடிவங்களும், பழங்கன்னடத்தில் -தப்- என்ற இடைநிலையும் பயன்படுத்தப்படுகின்றன.

எ.கா. baldapen – (வாழ்கிறேன்)

திராவிட மொழிகளில் எதிர்காலம் தெளிவற்றதாக உள்ளது. பேச்சு மொழியில் நிகழ்காலாத்தையே எதிர்காலமாக வழங்குதலும் உண்டு. நிகழ்காலம் என்பது நிலையற்ற நொடிப்பொழுதுளவான ஒரு காலம், ஆகையாலும், எதிர்காலத்தின் முந்திய ஒரு பகுதியே நிகழ்வு என்று கூறுமாறு உள்ளது. ஆகையாலும், இவ்வாறு வழங்க வாய்ப்பு ஏற்படுகின்றது என்கிறார் பேராசிரியர் சு.பு. பந்தர்கர். தமிழ் மொழியில் வ், ப்ப், ப், உம் போன்றன எதிர்கால இடைநிலைகளாக உள்ளன. இவற்றுள் வினைப்பகுதியோடு ‘உம்’ இணைத்து அமைக்கப்படும் எதிர்கால வடிவத்தை னநகநஉவளைந கரவரசந என்றழைக்கின்றார். டாக்டர் கால்டுவெல் இத்தகைய வடிவங்களில் பால்காட்டும் விகுதிகள் இணைக்கப்படுவதில்லை. மலையாள மொழியில் -உம்-, -ஆம்- ஆகியன எதிர்கால இடைநிலைகளாக அமைகின்றன. தெலுங்கில் எதிர்கால இடைநிலையாக ‘உ’கரமே பெருவழக்கில் உள்ளது. எனினும் ஒருமையில் ‘உனு’ என்னும் வடிவமும், பன்மையில் ‘உமு’ என்னும் வடிவமும் விகுதிகளாக அமைந்து எதிர்காலத்தை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

எ.கா. சேஸ்தனு - ஒருமை

சேஸ்தமு - பன்மை

கன்னட மொழியில் ‘வ’கரமே எதிர்காலத்தை உணர்த்துகின்றது. தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளின் பேச்சுவழக்கில் எதிர்காலத்தைப் பயன்படுத்துவது மிகக்குறைவு. எதிர்காலத்திற்குப் பதிலாக நிகழ்காலமே பயன்படுத்தப்படுகின்றது.

இறந்தகாலம் அல்லாததைச் சுட்டும் இடைநிலைகளுள் மூலத்திராவிட வடிவங்களாக மூப்ப், மூக்க, மூத்த, மூஉம், மூந் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைத் தவிர மூல வட திராவிட (Proto – North Dravidian) மொழிகளின் இடைநிலையாக மூஓ என்பதைத் திருத்தியமைக்க முடிகின்றது.

இவற்றுள் மூப்ப் இடைநிலை தென் திராவிட மொழிகளில் வெருவழக்கிலுள்ளது. கோடா மொழியில் ‘வ’ என்னும் இடைநிலையும், தோடாவில் ‘ி’ என்னும் இடைநிலையும் இறந்தகாலம் அல்லாதவற்றை உணர்த்துவதுண்டு. கொடகு மொழியில் இவ்விரு இடைநிலைகளுமே காணப்படுகின்றன. வட திராவிட மொழிகளுள் பிராகுயி மொழியில் மட்டும் ‘ப்’ இடைநிலை காணப்படுகின்றது. வட திராவிட மொழியிலுள்ள் ‘ஒ’ என்னும் இடைநிலையை ‘வ’கர இடைநிலையின் வளர்ச்சி என்பர்.

மூலத்திராவிட இடைநிலையான மூக்க என்பதன் மாற்று வடிவங்களைத் தமிழ், மலையாளம், கோடா, தோடா, கொடகு, கன்னடம், மூத்த் என்னும் இடைநிலையினைப் பழந்தமிழ், கன்னடம், தெலங்கு, கோண்டி, குயி, கொலாமி, நாயக்கி, பர்ஜி, கடபா ஆகிய மொழிகளில் காணலாம். அவ்வாறே மூரஅ விகுதியினைத் தமிழ், மலையாளம், கொடகு, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி ஆகிய மொழிகளில் காண முடிகின்றது. ‘ந’ இடை நிலையினைத் துளு மொழியில் அதிகமாகக் காணமுடிகின்றது. கோண்டி, கோயா ஆகிய மொழிகளிலும் இது சற்று திரித்து வழங்கக் காணலாம்.

நிகழ்கால வினையடைக் (Present Adverb) கென தனி உருபுகள் தமிழ், மலையாளம், துளு போன்ற மொழிகளில் இல்லாத போதிலும் கோடா போன்ற மொழிகளில் இவற்றைக் காண முடிகின்றது. தெலுங்கு மொழியல் ‘cun’ என்னும் உருபு உள்ளது. இது கொலாமியில் ‘san’ எனத் திரியும் இவற்றை மூலத்திராவிட நிலைக்குத் திருத்தியமைப்பது அரிது.

### 4.4 எச்சங்களும் முற்றுக்களும்

திராவிட மொழிகளின் வினை வடிவங்கள் முற்றக்கள் என்றும், எச்சங்கள் என்றும் இரு கூறுபடுத்தப்படுகின்றன. முற்றுக்களில் அடிச்சொல், கால இடைநிலைகள், பால்காட்டும் விகுதிகள் ஆகியன இணைந்து நிற்கும். எச்சங்கள் பாலறிகிளவிகளைப் பெறாமலே நிற்கின்றன. எச்ச வடிவங்களைப் பெயரெச்சங்கள் என்றும், வினையெச்சங்கள் என்றும் இரு கூறுபடுத்துவர். இரண்டுமே வினைச்சொற்கள், எனினும் பெயரைக் கொண்டு முடியும் வினைச்சொற்கள் பெயரெச்சம் என்றும், வினைமுற்றுகளைக் கொண்டு முடியும் வினைச்சொற்கள் வினையெச்சம் என்றும் அழைக்கப்படுகின்றன.

#### பெயரெச்சங்கள்

நாயக்கி தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்கள் தெளிவாக உள்ளன. ஐரோப்பிய மொழிகளில் உள்ள றூழஇறூைஉூஇ றூநசநஇ றூயவ போன்ற இணைப்புப் பெயர்களின் பணியினைத் திராவிட மொழிகளில் பெயரெச்ச வடிவங்களே செய்கின்றன.

எ.கா. I saw the man who came.

வந்த மனிதனைக் கண்டேன்

இவ்விரு தொடர்களில், ஆங்கில மொழித் தொடரில் who என்ற இணைப்புப் பெயர் இடம் பெறுகின்றது. ஆனால் தமிழில் ‘வந்த’ என்ற பெயரெச்சமே இணைப்பு இடப்பெயரின் கடமையைச் செய்வதைக் காண்கின்றோம். பெயரெச்ச வடிவங்கள் அவற்றையடுத்து வரும் பெயர்கள் காட்டும் எண், திணை, பால் ஆகியவற்றிற்கேற்ப மாறுவதில்லை. தொல்காப்பியர் பெயரெச்சங்களைப் ‘பெயரெஞ்சுக்கிளவி’ என்று அழைக்கின்றார். தமிழில் பெயரெச்சங்கள் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலங்களையும் காட்டி நிற்கும். தொல்காப்பியர் “செய்த’ என்னும் இறந்தகாலப் பெயரெச்ச வடிவத்தையும் ‘செய்யும்’ என்னும் நிகழ்கால, எதிர்கால வடிவத்தையும் மட்டுமே குறிப்பிட்ட போதிலும் இடைக்கால இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் ‘செய்கின்ற’, ‘செய்யாநின்ற’ என்பன நிகழ்கால பெயரெச்ச வடிவத்தையும் குறிப்பிடுகின்றார். எதிர்மறைப் பெயரெச்சங்களாகச் ‘செய்யாத’, ‘செய்யாமலிருந்த’இ ‘செய்யப்பட்ட’, ‘செய்யப்படுகின்ற’, ‘செய்யப்படும்’ போன்ற வடிவங்கள் உடன்பாட்டுப் பெயரெச்சங்களாகக் காணப்படுகின்றன.

மலையாளம், கொலாமி போன்ற மொழிகளிலும் பெயரெச்சங்கள் மூன்று காலங்களையும் காட்டுகின்றன. குருக், மால்டோ போன்ற மொழிகளிலும் நிகழ்கால, இறந்தகால இடைநிலைகளைப் பெயரெச்ச வடிவங்கள் ஏற்கின்றன. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொலாமி போன்ற மொழிகளில் கால இடைநிலைகளோடு ‘அ’கர விகுதி இணைந்து பெயரெச்ச வடிவங்கள் அமைகின்றன.

எ.கா. தமிழ் - செய்த

மலையாளம் - செய்யுந்ந

கன்னடம் - marida

தெலுங்கு - சேசின

கோண்டா, குயி, குவி, துளு போன்ற மொழிகளில் -இ- விகுதிணைந்து பெயரெச்ச வடிவங்கள் அமைகின்றன.

எ.கா. காண்டா - sini

குயி - nogni

குவி - tupi

துளு - tuti

கொடகு மொழியில் -உ- என்னும் விகுதி காணப்படுகின்றது. –உ- விகுதி தமிழில் மட்டுமின்றி குருக் மொழியிலும் உள்ளது. கோண்டி மொழியில் -அல் விகுதியுள்ளது. பர்ஜி மொழியில் -அள்- விகுதி பெருவழக்கிலுள்ளது. எதிர்காலத்தைச் சுட்டப்பயன்படும் -உம்- விகுதியை பெயரெச்ச விகுதியாக மூலத்திராவிட நிலைக்குத் திருத்தியமைக்கலாம்.

### 4.5 வினையெச்சங்கள்

'தொல்காப்பியம்', 'வீரசோழியம்' ஆகியன வினையெச்சங்களை விளக்காதபோதிலும் பின்னர் வந்த நன்னூலார் வினையெச்சங்கள் தொழிலையும் காலத்தையும் காட்டி, பால்காட்டாது வினை எஞ்சி நிற்கும் என்று விதிவகுத்துள்ளார். வினையெச்சத்தை விளக்காத போதிலும் தொல்காப்பியர் ஒன்பது வகையான வினையெச்ச வாய்பாடுகளைக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

'செய்து செய்யுச் செய்பு செய்தெனச்

செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென

அவ்வகை ஒன்பதும் ̇ வினையெஞ்சுகிளவி' (தொல்.சொல். 228)

இவற்றைத் தவிர தொல்காப்பியர் 'மயங்காமை' என்பதை வினையெச்சமாக ஆள்வதால் அவர் காலத்தில் 'செய்யாமை' என்ற வாய்பாட்டு வடிவமும் இருந்தது என்பது தெளிவு[1]. 'செய்யாமல் போன்ற வாய்பாட்டு வடிவங்கள் 'கலித்தொகையில் உள்ளன. இன்றைய தமிழில் 'செய்வதற்கு', 'செய்தால்' என்ற வாய்பாட்டு வடிவங்களோடு, செய்யாவிடின்', 'செய்யாவிட்டால்' போன்ற வாய்பாட்டு எதிர்மறை வடிவங்களும் உள்ளன. நன்னூலார் ஆ, வான், பான், பாக்கு என்ற ஈறுகளையுடைய வினையெச்ச வடிவங்களைக் குறிப்பிடுவதோடு வினையெச்ச வாய்பாடுகள் எந்தெந்த காலங்களைக் காட்டி நிற்கும் என்பதையும் தெளிவாக வரையறுத்துள்ளார்.

கோண்டா மொழியில் இறந்தகாலம், எதிர்காலம் ஆகியவற்றின் இடைநிலைகளை ஏற்றுநிற்கும் வினையடிச் சொற்களோடு –a(no) என்ற விகுதியை இணைப்பதால் வினையெச்ச வடிவங்கள் அமைகின்றன.

எ.கா. ki - (செய்)

kinano - (செய்த)

பர்ஜி, கடபா, குருக். பிராகுயி ஆகிய மொழிகளில் வினையடிச் சொற்களோடு 'இ'கர விகுதியை இணைப்பதால் வினையெச்ச வடிவங்கள் அமைகின்றன. கொலாமி மொழியில் அ என்ற விகுதியும், துளு மொழியில் onudu என்ற விகுதியும், நாயக்கி மொழியில் உஇ -உமைஇ- ளமைஇ -உபஇ -ளபை போன்ற விகுதிகளும் உள்ளன. குவி மொழியில் நிழ்கால வினையெச்ச

வடிவில் -இ- விகுதியும், இறந்தகால வடிவில் -அ விகுதியும் உள்ளன. கோடா மொழியில் -ச விகுதியும், கோண்டி மொழியில் உழசநஇ -தழசந போன்ற வடிவங்களும், மால்டோ மொழியில் -எ விகுதியும் வினையெச்ச அமைப்பிற்குத் துணை செய்கின்றன. எதிர்மறை வினையெச்ச வடிவங்கள் தமிழ், மலையாளம், கோடா, கொடகு, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி, கோண்டா, குயி, மால்டோ ஆகிய மொழிகளில் உள்ளன. இவற்றுள் கோடா, கொடகு, கொலாமி போன்ற மொழிகளில் உள்ளன. இவற்றுள் கோடா, கொடகு, கொலாமி போன்ற மொழிகளில் 'ஆ'காரம் எதிர்மறை வினையெச்ச் விகுதியாக உள்ளது. மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளில் 'எ'கர உருபு உள்ளது. மால்டோ – மொழியில் -டியடழ என்ற உருபும், கோண்டா மொழியில் -ழெ என்ற உருபும் உள்ளன.

எச்ச வடிவங்களை உணர்த்தும் பின்னொட்டுக்களுள் மூலத் திராவிட வடிவமாக மூ-அ என்பதைக் குறிப்பிடலாம். எச்சங்களின் செயற்பாட்டினை உருபன் நிலையைவிட தொடர்களில் வைத்துத்தான் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். குறிக்கோள், காரணம், பயன் போன்ற பல பொருட்களை எச்சங்கள் தந்து நிற்கும். கன்னடம், கொலாமி, பர்ஜி, கோண்டா, பெங்கோ, பிராகுயி போன்ற மொழிகளில் தொழிற்பெயர் வடிவங்களே எச்சங்களின் பணியினைச் செய்கின்றன.

எச்சங்களை உணர்த:தும் பின்னொட்டான 'அ'கரத்தைத் தமிழ், பழைய மலையாளம், கோண்டி, குருக் போன்ற மொழிகளில் காண முடிகின்றது. திராவிட மொழிக் குடும்பத்தின் எல்லாப் பிரிவுகளைச் சார்ந்த மொழிகளிலம் இது வருவதால் இதனை மூலத் திராவிட மொழிநிலைக்குத் திருத்தியமைப்பது எளிது. டாக்டர் கால்டுவெல் எச்ச வடிவங்களின் பின்னொட்டான "அ'கரத்திற்கும், தொழிற்பெயர் விகுதியான –அல் என்பதற்கும் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். அதோடு 'அ'கரம் தொன்மையான வடிவம் என்றும் அதன்திரிந்த வடிவமே 'அல்' என்றும் கட்டிச் செல்கின்றார். தமிழ் போன்ற மொழிகளில் இவ்விரு விகுதிகளும் ஒரே பணியினைச் செய்யாததால் இவ்விரண்டையும் ஒன்றாக இணைத்து நோக்குவது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை.

தெலுங்கு மொழியில் -அ விகுதிக்குப் பதில் -அன் என்னும் விகுதியைக் காணலாம். இதன் இறுதியிலள்ள -இன்- என்னும் ஒலியனைத் தமிழிலுள்ள 'அல்' என்பதன் இறுதியிலுள்ள 'ல்' என்னும் ஒலியனின் திரிந்த் வடிவாக பேராசிரியர் டு.ஏ. இராமசுவாமி ஐயர் கருதுகின்றார். தலைப்பில் பின்னர்க் காணலாம்.

**வினைமுற்றுக்கள் திணை, பால் உணர்த்தும் முறை**

திராவிட மொழிகளின் வினைமுற்றுக்கள் திணை, பால், எண் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. இவற்றை அறிய வினைப்பகுதிகளின் இறுதியில் இணைக்கப்படும் பாலறிகிளவிகளே துணை செய்கின்றன. இத்தகைய அமைப்பு முறைக்கு மலையாள் மொழி மட்டுமே விதிவிலக்கு. எனினும் பழைய மலையாளச் செய்யுட்களில் பாலறிகிளவிகளைக் காண்கின்றோம். திராவிட மொழிகளின் வினைமுற்றுக்கள் திணை, பால் உணர்த்தும் முறையை ஆய்ந்த பல அறிஞர்களும் வினைமுற்றுக்கள் திணை, பால் உணர்த்தும் முறை மூலத்திராவிட மொழியில் இல்லை என்பர். தமிழில் காணப்படும் பழைய வினை வடிவங்களான செய்கு, செய்கும்

என்பவற்றிலம் பாலறிகிளவிகள் இடம்பெறவில்லை. இவ்வாறே கன்னட மொழியிலும் 'கெய்கும்' (geygum) என்ற பொது வினை வடிவம் பால் வேறுபாட்டைக் காட்டாமல் எல்லாப் பாலுக்கும் பொதுவாக வருவதைக் காணலாம். திராவிட மொழிகளின் வினை முற்றுக்களிலும் படர்க்கை வினைமுற்றக்கள் மட்டுமே பால் பாகுபாட்டை உணர்த்து கின்றன. எனவே திணை, பால் உணர்த்தும் முறை சமுதாய மாற்றத்திற்கேற்ப பிற்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி எனலாம். பாலறிகிளவிகளை வினையடிச் சொற்களோடு இணைத்து வினைமுற்றுக்கள் அமைக்கும் மரபு மங்கோலிய மொழிகளிலும் உள்ளதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகின்றார்.

### பாலறிகிளவிகள் (Pronominal Terminations)

திராவிட மொழிகளில் பால் பாகுபாட்டினை உணர்த்த பாலறிகிளவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை திராவிட மொழிகளின் மூவிடப் பெயர்களோடும், கட்டுப் பெயர்களோடும் தொடர்புடையன. எனவேதான் டாக்டர் கால்டுவெல் போன்றோர் திராவிட மொழிகளில் பாலறிகிளவிகள் முற்காலத்தில் இல்லை என்றும் பின்னர் மூவிடப் பெயர்களின் குறுகிய வடிவங்கள் வினையடிச் சொற்களோடு இணைக்கப்பட்டன என்றும கூறுகின்றனர். இக்கருத்தை பின்னர் வந்த அறிஞர்கள் பலரும் ஏற்கவில்லை. மூவிடப் பெயர்கள் நாளடைவில் திரிந்து பாலறிக்கிளவிகளாக மாறின என்று கொள்வதைவிட வழங்காலத்திலிருந்தே வினைமுற்றுக்களின் பின்னர் மூவிடப் பெயர்களின் தன்மையைப் பெற்றுள்ள பால்காட்டும் விகுதிகள் இணைக்கப்படும் மரபு இருந்து வருகின்றது என்று கொள்வதே பொருந்தும் என்பர். இப்பாலறிகிளவிகளை வினைமுற்றுக்களில் மட்டுமன்றி சில பெயர் வடிவங்களிலும் கான முடிகின்றது.

எ.கா. மகன் அன் (ஆண்பால், ஒருமை, உயர்திணை)

மகள் அள் (பெண்பால், ஒருமை, உயர்திணை)

திராவிட மொழிகளில் தற்காலமலையாள் மொழியில் மட்டும் பாலறிகிளவிகள் இல்லை. எனவே இம்மொழியின் வினைமுற்றுக்கள் திணை, பால் பாகுபாட்டினை உணர்த்துவதில்லை. வினைமுற்றுக்களின் முன்னர் வரும் பெயர்ச்சொற்களை (எழுவாய்) கொண்டுதான் திணை, பால் பாகுபாட்டை உணர முடிகின்றது.

எ.கா. அவன் வந்து

அவள் வந்து

அது வந்து

இம்மொழியின் வினைமுற்றுக்களில் பாலறிகிளவிகள் இன்மையால் புற அமைப்பில் வினைமுற்றுக்களும், எச்சங்களும் ஒன்றுபோலக் காணப்படுகின்றன. மலையாள மொழியைத் தவிர பழந்தமிழிலும், தெலுங்கிலம், கன்னடத்திலும் பாலறிகிளவிகள் இல்லாத பல வினைமுற்று வடிவங்கள் உள்ளன.

எ.கா. தமிழ் செய்யும், செய்கும்

தெலுங்கு சாலு(ம்), சாகு(ம்)

கன்னடம் beku(m),sabu(m)

இவ்வடிவங்கள் மூலத்திராவிட மொழியில் பாலறிகிளவிகள் இல்லை என்னும் டாக்டர் கால்டுவெல்லின் கூற்றை அரண்செய்வன் போலத் தோன்றுகின்றன. எனினும் தொல்காப்பியர் காலத்தில் உயர்திணைப் பலர்பால் வினைமுற்றுக்கள் பலவற்றிலும் பாலறிகிளவிகள் இடம் பெற்றன என்பதற்குத் ‘என்மனார் புலவர்’ போன்ற அவர் கையாண்டுள்ள தொடர்களே சான்று, எனவே பழங்காலத்து வினைமுற்று வடிவங்கள் பாலறிகிளவிகளைப் பெற்றம், பெறாமலம் வந்தன என்பது தெளிவு.

பாலறிகிளவிகளை் ஆராய்ந்த் டாக்டர் கால்டுவெல், மூலத் திராவி. மொழியில் பாலறிகளவிகள் இல்லை என்றும், பாலறிகிளவிகளைப் பொறுத்த வரையில் மலையாள மொழி மூலத் திராவிட மொழியினியல்பைக் காட்டுகின்றது என்றும் கூறிச் சென்றுள்ளார். டாக்டர் மு.ஆ. ஜார்ஜ் போன்ற மொழியல் அறிஞர்களும் இக்கருத்தை வழிமொழிந்தனர். ஆனால் பேராசிரியர் டு.ஏ. இராமசுவாமி ஐயர் போன்றோர் அக்கருத்தை மறுத்து மலையாள மொழியில் பாலறிகிளவிகள் இருந்தததாகவும் நாளடைவில் அவை கெட்டுவிட்டதாகவும் நிறுவுகின்றனர்.

1. மலையாள மொழியின் பழைய இலக்கியமான ‘இராமசரிதத்தில்’ அதிகமான வினைமுற்றுக்கள் பாலறிகிளவிகளைப் பெற்றே அமைகின்றன. படிப்படியாகப் பாலறிகிளவிகள் இலக்கிய வழக்கில் அழிந்து வந்ததற்குக் காலந்தோறும் எழுந்த மலையாள் மொழியன் இலக்கியங்களே் சான்று.
2. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் எழுந்த ‘லீலாதிலகம்’ என்னும் இலக்கண நுல் பாலறிகிளவிகளைக் குறிப்பிடுகின்றது. லீலாதிலகத்தில் ‘வந்தான்’, ‘இருந்தான்’ போன்ற வினைமுற்றுக்கள் வட்டார வழக்குகளாகச் சுட்டப்படுவதால் பேச்சு வழக்கிலும் பாலறிகிளவி கள் இருந்தமை தெளிவு பெறுகின்றன.
3. லக்காடி (Lakkadiv), அமிண்டி (Admindiv) தீவிலுள்ள மலையாள மொழியின் வட்டார வழக்குகளில் இன்றும் பாலறிகிளவிகள் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது.
4. மலையாள மொழியின் பழைய கல்வெட்டுக்களிலும் பாலறிகிளவிகள் பயின்று வருவதைக் காணலாம்.
5. கி.பி. 10-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் மலையாள மொழி தமிழின் ஒரு வட்டார வழக்காக் இருந்ததே தவிர தனிமொழியாக உருப்பெறவில்லை. எனவே மலையாள மொழி மூலத் திராவிட மொழியினியல்பைக் காட்டுகின்றது என்று கூறுவது அவ்வளவு ஏற்புடைய கூற்றாக இல்லை.
6. மலையாளம் தவிர்ந்த அனைத்து மொழிகளிலும் பாலறிகிளவிகள் இடம் பெறுகின்றன. எனவே மூலத் திராவிட மொழியிலும் பாலறிகிளவிகள் இருந்தன என்றும், மலையாள மொழியில் மிகப் பிற்காலத்தில் இவை கெட்டன என்றும் கொள்ளலாம்.

**ஆண்பால் ஒருமை விகுதிகள்**

தென் திராவிட மொழிகளில் ஆண்பால் ஒருமை விகுதிகளாக ‘ ஆன்’ என்ற வடிவமும் தன் அதன் மாற்று வடிவமான ‘அன்’ என்பதும் உள்ளன. நடுத்திராவிட மொழிகளில் *-anr என்னும் விகுதி உள்ளது. தென்திராவிட் மொழிகளிலுள்ள ஆண்பால் ஒருமை படர்க்கை மூவிடப் பெயர்களுள் யஎயசெ என்பதை மூலத்திராவிட எழுவாய் வடிவமாகவும், ‘அவன்’ என்பதை வேற்றுமை ஏற்கும் வடிவமாகவும் கொண்டு ‘அவன்’ என்னும் வேற்றமை ஏற்கும் வடிவாகப் பயன்படுத்தப்படுகின்றது என்று பேராசிரியர்களான பரோ, பட்டாச்சாரியர் ஆகியோர் கருதுகின்றனர்.

**பெண்பால் ஒருமை விகுதிகள்**

குருக் மால்டோ போன்ற மொழிகளிலும், நடுத்திராவிட மொழிகளிலும் பெண்பால் என்னும் பாகுபாடு தெளிவாக இல்லை. தென்திராவிட மொழிகளில் -ஆள்-, -அள் என்னும் விகுதிகள் பெண்பால் ஒருமை விகுதிகளாக உள்ளன.

எ.கா. வந்தான்

வந்தனன்

**பலர்பால் விகுதிகள்**

பெரும்பாலான மொழிகளில் பலர்பால் விகுதியாக –ஆர் விகுதி பயன்படுத்தப்படுகின்றது. தெலுங்கு தவிர்ந்த நடுத்திராவிட மொழிகளில் -ஆர் விகுதி ஆண்பால் பன்மையினையும், பலவின்பால் விகுதிகள் பெண்பால் பண்மையினையும் உணர்த்துவதைக் காணலாம். –ஆர் விகுதியைப் பலர்பால் விகுதியாகப் பயன்படுத்துவது மிகப் பிற்கால வழக்கு என்றும் மூலத்திராவிட மொழியில் இது ஆண்பால் பன்மை விகுதியாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்றும் பேராசிரியர் டீா. கிருஷ்ணமூர்த்தி கருதுகின்றார். தமிழில் -ஆர் விகுதியோடு –ஆர்கள் என்னும் இரட்டைப் பன்மை வடிவமும் -ஆங்கன் என்னும் வடிவமும் பெருவழக்கில் உள்ளன.

**ஒன்றன்பால் விகுதிகள்**

தென் திராவிட மொழிகளில் ஒன்றன்பால் விகுதியாக –அது என்பது காணப்படுகின்றது. இவ்விகுதி தெலுங்கு, கோண்டா, பெங்கோ, கொலாமி, நாயக்கி, குருக், மால்டோ போன்ற மொழிகளிலும் உள்ளது. ஏனைய மொழிகளில் -எ, -அ போன்ற விகுதிகள் உள்ளன.

**பலவின்பால் விகுதிகள்**

-அ என்னும் பலவின்பால் விகுதி பழந்தமிழ், பழைய மலையாளம், துளு ஆகிய மொழிகளில் உள்ளன. தற்காலத் தமிழில் ஒன்றன்பால் விகதியான –அது பலவின்பால் விகுதியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. கன்னட மொழியில் -அவ் என்ற விகுதி உள்ளது.

**எண் உணர்த்தும் முறை - தன்மை ஒருமை விகுதிகள்**

திராவிட மொழிகளின் தன்மை, முன்னலை ஆகிய மூவிடப் பெயர்களில் எண் வேறுபாடு தெளிவாக உள்ளது. தமிழில் -என், -ஏன் என்பன தன்மை ஒருமை விகுதிகளாக உள்ளன. துளு மொழியில் -என் என்னம் விகுதி 'ந' என்ற மாறுகின்றது. கோண்டா, குயி போன்ற் மொழிகளில் -என் என்பதன் இறுதி 'ன'கரம் கெட்டு அதன் முன்னா் பழந்தமிழில் -அன், சாரியையை அடுத்து –என் விகுதி இடம் பெறுகின்றது. –அல் விகுதியும் இடம் பெறுவதுண்டு.

எ.கா. வருவல்

**வெளிப்பாட்டுத்தன்மைப் பன்மை விகுதிகள்**

மூலத் திராவிட விகுதியான மூ-எஅ என்பதன் மாற்று வடிவங்கள் எல்லாத் திராவிட மொழிகளிலும் இடம் பெறுகின்றன. பிராகுயி மொழியில் மட்டும் 'ம'கரத்திற்குப் பதிலாக 'ன்'கரம் காணப்படுகின்றது. தமிழில் 'ஓம்' என்னும் விகுதி உள்ளது. தன்மைப் பன்மை மூவிடப் பெயர் விகுதியாக 'அம்' (யாம்) என்னும் விகுதி பழந்தமிழில் உள்ளது. திருக்குறளில் 15 இடங்களில் இவ்வடிவம் இடம் பெறுவதாக மு.ஏ. சுப்பையா குறிப்பிடுகின்றார்.

**உளப்பாட்டுத் தன்மை பன்மை விகுதிகள்**

கோடா, தோடா, தெலுங்கு, கோண்டி, கோண்டா, பெங்கோ, குயி, குவி, பா்ஜி, குருக், மால்டோ போன்ற மொழிகளில் உளப்பாட்டுத் தன்மை பன்மைக்குத் தனி விகுதிகள் உள்ளன. தெலுங்கு மொழியில் எதிர்கால வினைமுற்றுக்களில் மட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதிகள் இடம்பெறும். தொல்காப்பிய உரையாசிரியர்களான சேனாவரையா், நச்சினாா்க்கினியா் போன்றோா் 'அம்', 'ஆம்' என்பவற்றை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வடிவங்களாகக் குறிப்பிடுகின்றனா். தமிழில் அமையும் உளப்பாட்டுத் தன்மை, பன்மம் விகுதிகள் போன்றவற்றின் செயற்பாடுகள் குறித்து ச. அகத்தியலிங்கம் போன்றோா் மிக விரிவாக ஆராய்ந்துள்ளனா். தெலுங்கு மொழியில் -ஆமு (amu) என்ற விகுதியும், கோண்டா மொழியில் -வய என்ற விகுதியும் பா்ஜி மொழியில் அா் என்ற விகுதியும் உள்ப்பாட்டுத் தன்மைப் பன்மை விகுதிகளாக உள்ளன.

**முன்னிலை ஒருமை விகுதிகள்**

*;-ay, -*;-I என்பவற்றை முன்னலை ஒருமையின் மூலத் திராவிட வடிவங்களாகக் கொள்வா். இவற்றின் மாற்று வடிவங்கள் தெலுங்கு, கொலாமி, பா்ஜி, கடபா, பிராகுயி தவிா்த்த ஏனைய மொழிகளில் உள்ளன. பா்ஜி மொழியில் -த விகுதியும், கடபா மொழியில் - ட விகுதியும்

உள்ளன. தெலங்கு மொழியில் -வு, -வி என்னும் விகுதிகள் காணப்படுகின்றன. தமிழில் -ஆய், -ஐ என்னும் விகுதிக் உள்ளன.

எ.கா. வந்தாய்

வந்தனை

**முன்னிலை பன்மை விகுதிகள்**

அதிகமான திராவிட மொழிகளில் முன்னலைப் பன்மை விகுதிகளாக் -ஈர் என்னும் விகுதியும் அதன் மாறற் வடிவங்களும் இடம்பெறுகின்றன. கோண்டி மொழியில் மட்டும் -வை என்னும் விகுதி உள்ளது -ஈர் என்னும் விகுதியும், அதன் இரட்டைப் பன்மை வடிங்களான -ஈர்கள், ஈங்க்(ள்), -இங்(கள்) என்பனவும் உள்ளன.

## 4.6 வினையடியாகப் பிறக்கும் பெயர்கள்

### வினையாலணையும் பெயர்கள் (Participial Nouns)

செயலின் நிகழ்ச்சியைக் காட்டும் சொற்களை வினைச் சொற்கள் என்றும், செயலை இன்னதென்று கூறுவதைத் தொழிற் பெயர்கள் என்றும், அத்தொழில் செய்பவனை உணர்த்தும் சொற்களைள் வினையாலணையும் பெயர்கள் என்று அழைக்கின்றோம். பெயரெச்சங்களோடு, வினையைச் செய்பவனை உணர்த்தும் பெயர்ச் சொற்களை இணைக்கும்போது விணையாலணையும் பெயர்கள் ஏற்படுகின்றன. பெயரிலிருந்து வினையாலணையும் பெயரை வேறுபடுத்திக் காட்டும் முறை தமிழ், மலையாளம், கோடா, கன்னடம், துளு, தெலுங்கு, கொலாமி, பர்ஜி, கோண்டி, கோண்டர் ஆகிய மொழிகளில் உள்ளன. வினையடியாகப் பிறந்தபோதிலும் வினையாலணையும் பெயர்கள் பெயர்ச்சொற்களுக்குரிய் தன்மைகளையும், வினைச் சொற்களுக்குரிய தன்மைகளையும் ஒருங்கே பெற்று நிற்கின்றன. வினைச் சொற்களைப் போலக் காலத்தைக் காட்டி, பெயர்ச் சொற்களைப் போல வேற்றுமை ஏற்று நிற்றல் இவற்றின் இயல்பு.

தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளில் பெயரெச்ச வடிவங்களோடு, கால இடைநிலைகளையும், படர்க்கை மூவிடப் பெயர்களையும் இணைப்பதால் வினையாலணையும் பெயர்கள் அமைகின்றன.

எ.கா. தமிழ் - செய்பவன்

மலையாளம் - வருந்நவன்

கன்னடம் - maruvavanu

துளு - malpunaye

வினையாலணையும் பெயர்களின் எதிர்மறை வடிவங்கள் தமிழ், மலையாளம், கோடா, கன்னடம், தெலுங்கு, பர்ஜி, மால்டோ ஆகிய மொழிகளில் உள்ளன. எதிர்மறைப் பெயரெச்சங்களோடு வினையாலணையும் பெயர்களுக்குரிய விகுதிகளை இணைக்கும்போது வினையாலணையும் பெயர்களின் எதிர்மறை வடிவங்கள் அமைகின்றன.

எ.கா. செய்யாதவன்

பழந்தமிழில் -ஆன், -ஆள், -ஆர் போன்றவற்றை செய்யாத, செய்- போன்ற வினையடிகளோடு இணைத்து எதிர்மறை வினையாலணையும் பெயர்களை அமைக்கும் முறை உள்ளது.

எ.கா. செய்யாதான்

அறியான்

கோண்டி மொழியில் -வால் என்னும் விகுதியும் கன்னடத்தில் -அவ் என்னும் விகுதியும் வினையாலணையும் பெயரமைக்கத் தணை செய்கின்றன.

எ.கா. கோண்டி - அட்வால் (அமைப்போன்)

கன்னடம் - cbjt (ஒடித்தவன்)

### தொழிற்பெயர்கள் (Verbal Nouns)

திராவிட மொழிகளில் வினைடிகளோடு தொழிற்பெயர் விகுதிகள் இணைக்கப்படும்போது தொழிற்பெயர்கள் அமைகின்றன. தொழிலின் நிகழ்ச்சியை வினைச் சொற்கள் உணர்த்த, இன்ன தொழில் என்பதைத் தொழிற்பெயர்கள் காட்டி நிற்கும். பெயர்ச் சொற்களைப் போல தொழிற்பெயர்கள் வேற்றுமை ஏற்கின்றன. தொழிற்பெயர்களை,

(1) காலம் உணர்த்தாத தொழிற்பெயர்கள்
(2) காலம் உணர்த்தும் தொழிற்பெயர்கள்

என்று இரு கூறுபடுத்துவர்.

வினைப்பகுதிகளொடு –தல், - அல், -அம், -கை, -வை, -கு, -பு, -வு, -சி, -கள் போன்ற விகுதிகளை இணைப்பதால் தமிழில் காலம் உணர்த்தாத தொழிற்பெயர்கள் அமையும்.

எ.கா. ஒடித்தல், ஆடல், நாட்டம், இடர்க்கை, திரிபு, அயர்ச்சி, டிது, கடவுள், என்பன.

வினைப்பகுதியோடு கால இடநிலையை இணைத்து அதன் பின்னர் -மை விகுதியை அல்லது –து விகுதியை இணைக்கும்போது காலம்காட்டும் தொழிற்பெயர்கள் அமையும்.

எ.கா. நடந்தது, நடந்தமை

தொழிற்பெயர் விகுதிகளில் ‘கை’ விகதியும், ‘தல்’ விகுதியும் தமிழில் அதிகமாகப் பயின்று வருகின்றன.

தமிழைத் தவிர மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொலாமி, நாயக்கி, கடபா, கோண்டி, கோண்டா, குயி, குவி, குருக், மால்டோ, பிராகுயி போன்ற மொழிகளிலும் தொழிற்பெயர்கள் உள்ளன. இவற்றுள் -uxa என்னும் விகுதி மலையாளத்திலும், -al-, -alu என்பன கன்னடத்திலும் -aramu, -atamu என்பன் தெலுங்கு மொழியிலும், -ரன என்பது கொலாமி மொழியிலும், -enmur என்பது நாயக்கி மொழியிலும், -ய் என்பது கடபா மொழியிலும், யயெ என்பது கோண்டி மொழியிலும், -வநஇெ -னநெ என்பன் கோண்டா மொழியிலும், -யஇ-ழனெை என்பன குயி மொழயியலும், -யடஇை -யலை என்பன குவி மொழியியலும், -யெ என்பத் குருக் மொழியிலும், -ழெஇ -யவை என்பன மால்டோ மொழியிலும், -பைெ என்பது பிராகுயி மொழியிலும் உள்ளன.

| | | |
|---|---|---|
| எ.கா. மலையாளம் | - | veyyuxa |
| கன்னடம் | - | beral (u) |
| தெலுங்கு | - | veyaamu |
| கொலாமி | - | stud |
| நாயக்கி | - | kahenmur |
| கடபா | - | kasal |
| கோண்டி | - | tindana |
| கோண்டா | - | parden |

திராவிட மொழிகளின் பல இலக்கியங்களில் ஏராளமான தொழிற்பெயர்கள் உள்ளன. வினைமுற்றுக்களும், எச்சங்களும் கூடத் தொழிற்பெயர்களிலிருந்து தோன்றியிருக்க வேண்டுமென்பது பலர் கருத்து. தொழிற்பெயர்களின் எதிர்மறை வடிவங்கள் மலையாளம், பழைய தெலுங்கு, குவி, குயி போன்ற மொழிகளில் இடம் பெறுவதாகத் தெரிகின்றது. கோண்டி மொழியில் -மார் என்னும் தொழிற்பெயர் விகுதியும் உள்ளது.

எ.கா. அட்மார் - சமைத்தல்

### 4.7 வினையடியாகப் பிறக்கும் பெயர்கள்

திராவிட மொழிகளில் வினையடிகளோடு சில விகுதிகள் இணைவதாலும், வினைப் பகுதிகளில் சில மாறற்ங்கள் ஏற்படுவதாலும் பல பெயர்ச் சொற்கள் தோன்றுகின்றன. இவற்றை

வினையடியாகப் பிறக்கும் பெயர்கள் (Derivative Nouns) என்ற தலைப்பில் தனியாக ஆராய்கின்றார் டாக்டர் கால்டுவெல்.

(1) சில வினையடிகள் ஏவல் வினைகளாகவும், எத்தகைய திரிபும் பெறாமல் பெயர்ச் சொற்களாகவும் திராவிட் மொழிகளில் செயல்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| எ.கா. | (1) | கட்டு ஒரு கட்டு | - | ஏவல் வினையடி பெயர் |
| | (2) | அடி ஓர் அடி | - | ஏவல், வினையடி பெயர் |
| | (3) | தல்லு (மலையாளம்) | - | ஏவல், வினையடி |
| | | ஒரு கல்லு | - | பெயர் |

(2) சில வினையடிச் சொற்களில் விகுதிகள் இணையாமல், ஈற்றிலுள்ள வல்லொலி இரட்டிப்பதால் அவைகள் பெயர்களாக மாறுவதுண்டு.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | எழுது | , | எழுத்து |
| | பாடு | , | பாட்டு |

தெலுங்கு மொழியில் இவ்வாறு வினையடியின் ஈற்றுமெய் இரட்டித்தப் பெயராகும் இயல்பு இல்லையெனினும் வினையடியின் இறுதி ஒலிப்பு ஒலிய ஒலிப்பில் ஒலியாக மாற்றுவதால் இதற்கு இணையான பெயர்கள் அமைகின்றன என்கிறார் டாக்டர் கால்டுவெல்.

(3) இவ்விரு வகைகளைத் தவிர வினைப்பகுதியின் முதலுயிர் நீண்டும் பெயர்கள் அமைவதைக் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| எ.கா. | படு | , | பாடு |
| | மின் | , | மீன் |
| | நக்கு | , | நாக்கு |

தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வினைப்பகுதியின் முதலுயிர் நீற்வதோடு இறுதி ஒலிப்பு ஒலி ஒலிப்பில் ஒலியகாவும் மாறுகின்றது.

(4) வினையடியின் முதலுயிர் குறுகுவதாலும் பெயர்ச்சொற்கள் அமைவதுண்டு.

எ.கா. காண் , கண்

(5) வினையடியோடு –மை விகுதியை இணைப்பதால் பெரும்பாலான பண்புப் பெயர்கள் தோன்றுகின்றன.

எ.கா. பொது , பொறுமை

பெரு , பெருமை

(6) விளையடியோடு –அம் விகுதியை இணைப்பதாலும் பல பெயர்ச் சொற்கள் அமைகின்றன. இத்தனை பெயர்ச்சொற்களை அமைக்கும்போது வினைப்பகுதியின் இறுதியில் மூக்கொலியிருப்பின் அது வல்லொலியாக மாறும்.

எ.கா. தூங்கு , தூக்கம்

திருந்து , திருத்தம்

விரும்பு , விருப்பம்

தேக்கு , தேக்கம்

(7) –கை, -தி, -பு, -சி போன்ற் விகுதிகள் வினைப்பகுதிகளோடு இணைவதாலும் திராவிட மொழிகளில் ஏராளமான பெயர்ச் சொற்கள் தோன்றுகின்றன.

எ.கா. செய்கை, கெடுதி, வேம்பு, புகழ்ச்சி

(8) தமிழ், மலையைாளம் போன்ற மொழிகளில் கண், மானம், பாடு போன்ற சொல்லுரப்புகனை வினையடிகளோடு இணைப்பதாலும் பல பெயர்கள் அமைகின்றன.

எ.கா. இடுக்கண், சேர்மானம், கட்டுப்பாடு

இவ்வாறு அமையும் பெயர்களை வகைப்படுத்திக் காட்டுவது அரிது.

**4.8 வினைப்பொருட்கள்**

திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் ஏவல், வியங்கோள் என்பன போன்ற பல பொருட்களில் வருகின்றன். டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளில் வினை நிலையுரைத்தல் (Indicative mood) என்ற ஒரு வினைப்பொருளே உண்டு என்றும் ஏனைய வினைப் பொருட்களை உணர்த்தக் கூட்டு வடிவங்களே பயன்படுத்தப்படுகின்றன என்றும் கூறிச் செல்கின்றார். திராவிட மொழிகளில் வினைப்பொருட்களின் வேறபாட்டை உருபன்கள் நிலையிலும் (Morphological level) வேறு சிலவிடங்களில் தொடரளவிலும் (Syntactical level) வேறு சிலவிடங்களில் தொடரளவிலும் (Syntactical level) காணமுடிகின்றது.

எ.கா. (1) வா - உருபன் நிலை

(2) வந்து இருந்தான் - தொடர்நிலை

உருபன்களின் நிலையில் வினைப்பொருட்களைக் காட்ட இடைநிலைகளையும், விகுதிகளையும் பயன்படுத்துவதும், தொடர்நிலையில் துணை வினைகளைப் பயன்படுத்துவதும் இம்மொழிகளின் பொதுவியல்புகளாகும். திராவிட மொழிகளின் வினைகளை அவை உணர்த்தும்

பொருள்களுக்கேற்ப ஏவல் வினை (Imperative mood), வியங்கோள் வினை (Otative mood), செயலெஞ்சு வினை (Infinitive mood), நிபந்தனை வினை (Conditional mood or Subjunctive mood), வினை நிலையுரைத்தல் (Indicative mood) என்று பல வகைப்படுத்துவர்.

**ஏவல் வினை (Imperative mood)**

ஏவல் வினை கட்டளையிடும் நிலையில் அமைகின்றது. ஏவற் பொருள் தரும் வினைகளை உடன்பாடு, எதிர்மறை என்ற இரண்டாகப் பிரிக்கலாம். ஏவல் முன்னிலையில் வரும். ஏவல் வினைகள் முன்னிலை ஒருமை ஏவல், முன்னிலைப் பன்மை ஏவல் என்ற எண் வேறுபாட்டைக் காட்டி நிற்கின்றன. திராவிட மொழிகளில் ஏவல் வினைகளுக்கெனத் தனி விகுதிகள் கிடையாது. வினையடிச் சொற்களே முன்னிலை ஒருமைக்குரிய் ஏவல் வடிவங்களாக அமைகின்றன. சில மொழிகளில் வினையடிச் சொல்லோடு முன்னிலை ஒருமைக்குரிய விகுதியும், பன்மைக்குரிய விகுதியும் இணைக்கப்படுதலுண்டு. எதிர்மறை ஏவல்களில் வினைப்பகுதி, எண் உணர்த்தும் விகுதி ஆகியவற்றினிடையில் எதிர்மறைக்குரிய இடைச்சொற்கள் அமைகின்றன.

எ.கா. போகாதிர், போகாதிர்கள்

தொல்காப்பியர் வியங்கோள் வினையைப் பற்றிக் குறிப்பிட்ட போதிலும் ஏவல் வினையைத் தனியாகக் குறிப்பிட்டு விளக்கிச் செல்லவில்லை. எனினும் ‘செய்யாமை’ என்னும் முன்னிலைச் சொல் ‘ஆய்’ விகுதி கெட்டு ‘செய்’ என்னும் வடிவில் ஏவல் வினை அமையும் என்பதைத் ‘தொல்காப்பியத்தால் அறியமுடிகின்றது. வினைப்பகுதிகள் மட்டுமன்றி அவற்றோடு ‘இ’கரம் இணைந்து ஊக்கி, காட்டி, தேற்றி என்று அமைகின்ற ஏவல் வடிவங்களைக் ‘கலித்தொகை’யில் காண்கிறோம். இவையன்றி வினைப்பகுதியோடு ‘ஐ’ விகுதி இணைந்து வந்தை, கண்டை என வரும் வடிவங்களும், அறிமோ, அறிமதி என்று –மோ, -மதி ஆகிய விகுதிகள் இணைந்து வரும் வடிங்களையும் இலக்கியங்களில் காணலாம். இவை தவிர ‘மின்’, ’மின்கள்’ என்னும் வடிவங்கள் ‘சிலப்பதிகாரம்’, ‘தேவாரம்’ போன்ற இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. பேச்சுவழக்கில் முன்னிலைப் பன்மையினை உணர்த்த உங்கள் என்ற விகுதி இணைந்து செய்யுங்கள் என்பன் போன் வடிவங்களும் அமைகின்றன.

மலையாள மொழியில் வினைப்பகுதியோடு ஒலித்துணை ‘உ’கரம் இணைந்தும் இணையாமலும் ஏவல் ஒருமை வடிவங்கள் அமைகின்றன. இவற்றோடு இடையில் ‘க’கர ஒலி இரட்டித்து வந்தும் ஏவல்கள் அமைவதுண்டு.

எ.கா. ˙வா - ‘உ’கரம் இணையாமை

வரு - ‘உ’கரம் இணைந்து

இரு - ‘உ’கரம் இணைந்து

இருக்கு - ‘உ’கரத்துடன் இரட்டித்த ‘க’கரம் இணைந்து.

-வின், -ப்பின் போன்ற விகுதிகள் பழைய் மலையாளத்தில் வினைப்பகுதியோடு இணைந்து பன்மை ஏவல் வடிவங்கள் அமைதலண்டு. தற்கால மலையாளத்தில் ஏவல் வினைகளுக்கு ஒருமைக்கென்றும், பன்மைக்கென்றும் தனி விகுதிகள் இல்லை. வினைப்பகுதியோடு –எ, -உ ஆகியன இணைந்து ஏவல்கள் அமைகின்றன. வினைப்பகுதியோடு -உக என்ற் விகுதியை இணைத்து மரியாதை ஏவல் (ீழடவைந ைஇநசயவளைந) அமைக்கும் மரபு மலையாள மொழியில் உள்ளது.

கோடா மொழியில் வினையடிச் சொல்லோடு ‘ம’கரம் இணைந்து பன்மை ஏவல் வடிவங்கள் அமைகின்றன். தோடா மொழியில் பன்மைக்கு ஸ (-ள) விகுதி சேர்க்கப்படும்.

எ.கா. தோடோ - போஸ் (ீழள)

கொடகு மொழியில் -ரி, -இரி போன்றன ஏவல் பன்மை் விகுதிகளாக உள்ளன. பழங்கன்னடத்தில் -இம் விகுதியும், புதுக்கன்னடத்தில் -இ, -இரி என்னும் விகுதிகளும் ஏவல் பன்மை விகுதிகளாக உள்ளன.

துளு மொழியில் ஒருமை வடிவில் வினைப்பகுதியோடு –ல விகுதியும், பன்மையில் -இ, -லெ ஆகிய விகுதிகளும் உள்ளன. குயி மொழியில் -மு விகுதி ஒருமைக்கு –து விகுதி பன்மைக்கும் இணைக்கப்படுகின்றன.

தெலுங்கு மொழியில் வினையடி ஏவலாக வருகின்றது. சில இடங்களில் வினையடியோடு –மு என்னும் விகுதி இணைந்தும் ஏவல் வடிவங்கள் அமைவதைக் காணலாம்.

எ.கா. செப்புமு - சொல்

சூடுமு - பார்

தற்காலத் தெலுங்கில் -மு விகுதி மிக குறைவாகவே பயின்று வருகின்றது. ஏவல் பன்மையை உணர்த்த வினையடிகயோடு பழந்தெலுங்கில் ‘உண்டு’ என்னும் சொல்லுருபை இணைக்கும் மரபு உள்ளது.

எ.கா. போ போண்டு - போ! போ!

ரா ரண்டு - வா! வா!

தற்காலத் தெலுங்கில் ‘அண்டி’ என்ற் சொல்லுருபே பெருவழக்கிலுள்ளது.

எ.கா. திண் அண்டி - உண்

ரண்டி - வா

கோண்டா மொழியில் ஏவல் ஒருமைக்கு ?ய என்னும் விகுதியும் பன்மைக்கு னர என்னும் விகுதியும் உள்ளன.

எ.கா. சய? ய வா ஒருமை

சய னர வா பன்மை

பெங்கோ மொழியில் ஒருமை விகுதியாக –யவும், பன்மை விகுதியாக –யவ என்பதுவும் பெருவழக்கில் உள்ளன. கொலாமி மொழியில் ஏவல் ஒருமைக்கென தனி விகுதி இல்லை. – உா் என்னும் விகுதி பன்மை உருபாக அமைகின்றது். ஏவல் வடிவங்களைப் பொறுத்த வரையில் கொலாமி மொழியின் அமைப்பினையே பா்ஜி மொழி பெற்றுத் திகழ்கிறது.

குருக் மொழியில் எவல் ஒருமை பெண்பால் விகுதியாக –ஆ என்னும் விகுதியும், பெண்கள் பெண்களுக்குள் பேசிக்கொள்ளும் போது –ஏ என்னும் விகுதியும் பயன்படுத்தப்படுகின்றன. வால்டோ மொழியில் -அ, -கு ஆகியன முறையே ஒருமை, பன்மை விகுதிகளாக உள்ளன.

ஒப்பிட்டு நிலையில் நோக்கும்போது பெரும்பாலான் மொழிகளில் வினையடியே ஏவல் ஒருமையாகச் செயல்படுகின்றது. எனினும் சில மொழிகளில் ஏவல் ஒருமைக்கென சில விகுதிகள் உள்ளன. இவற்றுள் கொண்டா, கோண்டி, பெங்கோ போன்ற மொழிகளில் -அ ஏவல் ஒருமை விகுதியாக உள்ளது.

**வியங்கோள் வினை (Optative Mood)**

தமிழில் ஏவல் வினை முன்னலையாருக்கு இடும் கட்டளையாக அமைய, வியங்கோள் வாழ்த்தல், வைதல், விரும்பல் முதலிய பொருட்களில் வருவதாக இலக்கண ஆசிரியா்கள் குறிப்பிடுகின்றனா். ஏவல் முன்னிலைக்க மட்டும் உரியது என்றும், வியங்கோள் இருதிணை ஐம்பால் மூவிடங்க்ளில் வரும் என்றும் நன்னூலாா் இவ்விரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகின்றாா். ஏவலைப் போன்று எதிா்மறை, உடன்பாடு ஆகிய இரு வடிவங்கள் வியங்கோளிலும் உள்ளன. தமிழ் மொழியில் -இய, -இயா், -க என்பன வியங்கோள் விகுதியாக் உள்ளன.

எ.கா. செய்க், வாழ்க, வாழிய, வாழியா்

மலையாளம், பழங்கன்னடம், துளு ஆகிய மொழிகளிலும் -க விகுதியே உள்ளது. மலையாள மொழியிலுள்ள மரியாதைப் பன்மை வியங்கோளோடு தொடா்புடையது என்பா். டாக்டா் ".ளு. சுப்பிரமணியம் திராவிட மொழிகளில் எச்சங்களுக்கம் வியங்கோளுக்குமிடையே நெருங்கிய தொடா்பு உண்டு என்றும், தொடக்க காலத்தில் எச்ச வடிவங்களே வியங்கோளாக இருந்திருக்க வேண்டுமென்றும் -க விகுதி மிகப் பிற்காலத்தில் ஏற்பட்டிருக்க் வேண்டுமென்றும் கருதுகின்றாா். கோடா மொழியில் -மொ் என்னும் விகுதி வியங்கோள் விகுதியாகக் காணப்படுகின்றது. கன்னட மொழியில் -பநஇ -மந ஆகிய விகுதிகளும், துளு மொழியில் -யனை என்னும் விகுதியும்

உள்ளன. –யனை என்னும் விகுதி படர்க்கைக்கு மட்டுமே உரியது. தெலுங்கு மொழியில் -நனரெ, -தன் போன்ற விகுதிகள் உள்ளன.

தோடா மொழியில் வியங்கோள் விகுதியாக –கோ என்பது வழக்கிலுள்ளது. திராவிட மொழிகளில் தொடர் நிலையில் எச்ச் வடிவங்களோடு 'வேண்டும்' என்னும் சொல்லுருபு இணையும்போது வியங்கோள் வடிவங்கள் தோன்றுவதுண்டு.

எ.கா. வர ௣ வேண்டும்.

இங்கு 'வேண்டும்' என்பது கட்டாயம் (must) என்ற அழுத்தப் பொருண்மையினைத் தரவும் துணை செய்கின்றது. இது போன்ற அமைப்பினைத் தமிழ், மலையாளம், கன்னடம், துளு போன்ற மொழிகளிலும் காணலாம்.

**செயலெஞ்சு் வினை (Infinitive mood)**

ஐரோப்பிய மொழிகளில் செயலெஞ்சு் வினையைத் தனி வகையாகவே் கொள்ளுகின்றனர். திராவிட மொழிகளில் செயலெஞ்சு வினைகள் இடம்பெற்ற போதிலும் அவற்றைத் தனி வகையாகக் கொள்வதில்லை. செயலெஞ்சு வினைகளைப் பெயரெச்ச வடிவங்கள் என்றும், வினையெச்ச வடிவங்கள் என்றும் இரண்டாகப் பகுப்பர். தெலுங்கு போன்ற மொழிகளில் தொழிற்பெயர்களே செயலெஞ்சு வினைகளாக நிற்பதாக டாக்டர் கால்டுவெல் குறிப்பிடுகிறார். தமிழிலும் 'வரவேண்டும்' போன்ற வினையெச்ச வடிவங்கள் என்பர். பிராகுயி, குருக் போன்ற வட திராவிட மொழிகளிலும் தொழிற் பெயர்களே செயலெஞ்சு வினைகளாக நிற்கின்றன. திராவிட மொழிகளில் கோண்டி, துளு தவிர்ந்த ஏனைய மொழிகளில் வினையடிகளின் இறுதியில் 'அ'கர உருபை இணைப்பதால் செயலெஞ்சு வினை வடிவங்கள் அமைகின்றன. கன்னட மொழியில் தொழிற் பெயர்களோடு நான்காம் வேற்றுமை உருபு இணைந்து எச்ச வடிவங்கள் அமைகின்றன.

கோண்டி மொழியில் வினைப்பகுதியோடு யடடநஇ டைடந என்பவற்றை இணைப்பதால் செயலெஞ்சு வினை வடிவங்கள் அமைகின்றன. துளு மொழியில் லெஇ நசந போன்றவற்றை வினைப் பகுதியோடு இணைப்பதால் இத்தகைய வினை வடிவங்கள் அமைகின்றன. பேராசிரியர் மாக்ஸ் முல்லர் திராவிட மொழிகளில் -மய் எச்ச உருபாக உள்ளது என்கிறார். இக்கூற்றை டாக்டர் கால்டுவெல் சிறப்பாக் மறுத்து 'அ' கரம் தான் எச்ச உருபு என்று நிலை நாட்டுகிறார்.

**நிபந்தனை வினை (Conditional mood)**

இந்தோ – ஐரோப்பிய மொழிகளிலும், துருக்கி, பினீஷிய மொழிகளிலும் நிபந்தனை வினை மிகத் தெளிவாக அமைகின்றது. திராவிட மொழி வினைச் சொற்களும் நிபந்தனை வினைப் பொருளை உணாத்தவல்லன்.

வினையடிச் சொற்களின் இறுதியில் நிபந்தனை வினைப் பொருளைத் தரும் -ஆல், -இன் போன்ற விகுதிகளை இணைப்பதால் இத்தகைய வினை வடிவங்கள் அமைகின்றன. தமிழில் -ஆல், -இன், -இல், -கால் என என்ற விகுதிகள் நிபந்தனைப் பொருளைத் தருகின்றன.

எ.கா. தரின் கொள்வேன்

தந்தால் நல்லது

இவ்விகுதிகள் மட்டுமின்றி 'ஆனால்', 'ஆகில்', 'என்றால்' போன்ற சொற்கள் வினைமுற்றுக்களோடு இணைந்தம் நிபந்தனை வினைப் பொருளைத் தருகின்றன.

எ.கா. வந்தாரானால்

இவையன்றி ஏழாம் வேற்றுமைப் பொருளில் வரும் கால், கடை போன்ற உருபுகள் சேர்ந்தும் நிபந்தனை வினைகள் அமையும்.

எ.கா. செய்தக்கால்

கன்னட மொழியில் -சந என்பது நிபந்தனை வினை விகுதியாக உள்ளது. இதனை யசந என்பதன் சுருங்கிய வடிவாக டாக்டர் குண்டர்ட் கருதுகின்றார். துளு மொழியல் -வ, -ட ஆகிய விகுதிகள் உள்ளன. தெலுங்கு மொழியில் -யெ என்றும் விகுதி நிபந்தனை வினைப் பொருளைத் தருகின்றது.

**இரண்டு மதிப்பெண் வினா:**

1.தன்வினை,பிறவினை என்றால் என்ன?

2.தொல்காப்பியர் குறிப்பிடும் வினையெச்ச வாயப்பாடுகள் யாவை?

3.வினையாலனையும் பெயர்கள் யாவை?

4.வினையடியாக பிறக்கும் பெயர்களைக் குறிப்பிடுக.

5.நிபந்தனை வினை என்றால் என்ன?

**ஐந்து மதிப்பெண் வினா:**

1.தன்வினை,பிறவினை வாக்கியங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2.குறிப்பு வினை - விளக்குக.

3.நிபந்தனை வினை குறித்து எழுதுக.

4.திராவிட மொழிகளில் தொழிற்பெயர் விகுதிகள் அமைவதை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

**பத்து மதிப்பெண் வினா:**

1.எதிர்மறை - வினைகளை சான்று தந்து நிறுவுக.

## அலகு - 5

## திராவிட மொழிகளின் தொடரமைப்பு

### 5.1 திராவிட மொழிகள்

சொற்கள் முறைப்படி அமைந்து பொருளைத் தரும்போது அது சொற்றொடர் என்று கருதப்படும். சொற்களின் சேர்க்கை பேசுவோன், கேட்போன் ஆகயோர் மனநிலைக்கு ஏற்ப அமைந்து, கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை செய்ய வேண்டும். தொடர்களில் அமையும் சொற்களின் சேர்க்கை பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட மரபுப்படியே அமைகின்றது. இம்மரபு மொழிக்கு மொழி மாறுபடுதல் இயல்பே சான்றாக ஆங்கில மொழியில் அதிகமாக வினைச்சொற்கள் முற்றும் தொடர்களின் (finite sentence) நடுவிலும் தமிழில் வினைமுற்றுக்கள் தொடரின் இறுதியிலம் அமைவதைக் காண்கிறோம். ஜரிஷ் போனற் சில மொழிகளில் வினைச் சொற்கள் தொடரின் முதலில் நிற்றலுண்டு இவ்வாறே திராவிட மொழிகளில் வினையடிகள், இடைநிலைகள் போன்றன ஒட்டுநிலையில் அமைந்து நிற்க. சீனா மொழியில் ஒவ்வொரு சொல்லம் தனியாக நிற்றலைக் காண்கிறோம். அமெரிக்கப் பழங்குடி மக்களின் மொயில் இலக்கண வேறுபாடு உணர்த்தும் விகுதிகள், எழுவாய், பயனிலை போன்றன பின்னர் நிற்கின்ற. திராவிட மொழிகளின்

தொடரமைப்பைப் பொறுத்தவரையில் மொழிக்கு மொழி அதிக வேறுபாடுகளைக் காண் முடியவில்லை. இம்மொழிகளின் தொடா் பற்றிய ஆய்வு மிகப் பின்தங்கிய நிலையிலுள்ளதால் பேச்சளவில் மட்டுமே நின்று நிலவும் சில மொழிகளின் தொடாமைப்புகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. எனினும் தொடரமைப்பைப் பொறுத்தவரையில் திராவிட மொழிகள் இந்தோ – ஐரோப்பிய மொழிகளிலிருந்து பல வகையிலும் மாறுபடுவதைக் காண்கிறோம்.

**சொற்களின் நிலை (Word Order)**

ஒரு மொழியின் ஆன்ம ஓட்டத்தை முழமையாகப் புரிந்துகொள்ள அம்மொழியின் தொடரமைப்பு பற்றிய அறிவு மிகவும் தேவை. மொழி ஆய்வுக்கு ஒலியன் பற்றிய ஆய்வும் உருபன் பற்றிய ஆய்வும் உடம்பு என்றால் தொடா் பற்றிய ஆய்வு உயிராக அமைகின்றது.

திராவிட் மொழிகளில் பொதுவாகப் பெயரடைகள் பெயா்களுக்கு முன்னா் அமைகின்றன. பெயரடைகள் தனித்து இயங்கும் ஆற்றல் அற்றனவாக பெயா்த்தொடரின் (Mopun phrase) உறுப்பாக இம்மொழிகளில் அமைகின்றன.

வினையடைகள் (Adverb) பெயரடைகளைச் சிறப்பிக்கும் இடங்களும் இம்மொழிகளில் உள்ளன. அவ்வாறு அமையும் இடங்களில் வினையடைகளும் பெயா்த்தொடரின் ஒரு பகுதியாகவே செயல்படும்.

மலையாள மொழியை பொறுத்தவரையில் வினைச்சொற்களைச் சிறப்பிக்கும் வினையடைகள், பெயரடைகளைப் போலன்றித் தனித்து இயங்கும் தன்மைபெற்றுத் திகழ்கின்றன. இந்நிலையில் அவை வினைச்சொற்களிலிருந்து வேறுபட்ட தனித்த உறுப்பாகச் செயல்படும் தன்மையுடையன.

பெயரடைத் தொடா்கள் (Adjectival phrases);; இம்மொழியில் பெயா்த்தொடா்களின் பகுதியாகச் செயல்பட வினையடைத் தொடா்கள் (Adverbial phrases) வினைச்சொற்களோடு நெருங்கிய தொடா்ப கொண்டபோதும் தனித்தியங்கும் ஆற்றல் உடையன.

திராவிட மொழிகளின் முற்றுத் தொடா்களில் எழுவாய் முதலிலும் வினைமுற்றுக்கள் இறுதியிலும் அமைகின்றன. செயப்படுபொருள் இவ்விரண்டிற்குமிடையில் இடம்பெறும் பெயரடைகள் பெயா்களுக்கு முன்னா் இடம் பெறுகின்றன. உணா்ச்சி வசப்பட்டடு பேசுமிடங்களிலும், கவிதை வடிவிலும் இந்நிலை மாறியும் அமைதல் உண்டு.

**இயைபு (Concord)**

இந்தி போன்ற வட இந்திய மொழிகளில் பெயரடைக்கும், அதை அடுத்து வரும் பெயருக்குமிடையே எஎண், பால் ஆகியவற்றில் இயைபுகள் இருப்பதைக் காணலாம்.

எ.கா. அச்சா லட்கா - நல்ல பையன்

அச்சி லட்கி - நல்ல பெண்

அச்சே லட்கே - நல்ல பையன்கள்

திராவிட மொழிகளில் இத்தகைய இயைபு (ஊழஉெழசன) கிடையாது. நல்ல பையன், நல்ல பெண் என்று பெயரடைகள் பெயா்களோடு இயைபு இன்றியே வருகின்றன. இதற்கு கோண்டி மொழி மட்டும் விதிவிலக்காக உள்ளது. இம்மொழியில் பெயருக்கும் பெயரடைக்கும் பால், இட இயைபு உண்டு.

திராவிட மொழிகளில் ம்றுத் தொடா்களின் இறுதியில் அமையும் வினைமுற்று வடிவங்கள் எழுவாயோடு எண்ணால் (Bymber) இயைபு கொண்டுள்ளன.

எ.கா. நான் வந்தேன் - வருமை } தன்மை

நாம் வந்தோம் - பன்மை

நீ வந்தாய் - ஒருமை } முன்னிலை

நீா் வந்தீா் - பன்மை

நீங்கள் வந்தீா்கள் - மரியாதை பன்மை

படா்க்கை மூவிடப் பெயரின் வினைமுற்றுக்கள் எழுவாயோடு திணை, பால், எண் ஆகியவற்றுள் இயைபு கொண்டுள்ளன.

எ.கா. அவன் வந்தான் - ஆண்பால் } ஒருமை } உயா்திணை

அவள் வந்தாள் - பெண்பால்

அவா் வந்தாா் - பலா்பால் - பன்மை

அது வந்தது - ஒன்றன்பால் - ஒருமை } அ.்.றிணை

அவை வந்தன - பலவின்பால் - பன்மை

இவ்வியைபினை மலையாள் மொழியில் மட்டும் காண முடியவில்லை. வினைமுற்றுக்களில் பாலறிகிளவிகள் இணையும் மரபு இம்மொழியில் இளமையால் வினைமுற்றுக்கள் திணை, பால் வேறுபாட்டைக் காட்டி நிற்பதில்லை.

ஆங்கிலம் போன்ற மொழிகளின் தொடர்களின் முந்நு நிலைகள் (Preposition) அமையுமிடைங்களிலெல்லாம் தமிழில் பிந்து நிலைகளே (Post Position)அமைகின்றன.

எ.கா. on the Table - ஆங்கிலம்

மேசையின் மேல் - தமிழ்

ஆங்கில் மொழியில் இரு தொடர்களை இணைக்க இணைப்பு இடப்பெயர்களைப் (Relative Pronouns) பயன்படுத்தும் இடங்களிலெல்லாம் தமிழ், மலையாளம் போன்ற திராவிட மொழிகளில் பெயரெச்சங்களையோ, வினையாலணையும் வினையாலணையும் பெயர்களையோ பயன்படுத்துவதைக் காணலாம்.

திராவிட மொழிகளில் வினைச்சொற்களின்றியும் தொடர்கள் அமைகின்றன. இவ்வாறு பெயர் பயனிலையாக வரும் திராவிட மொழிகளின் தொடர்களுக்கு இணையாக உள்ள ஆங்கிலத் தொடர்களில; is, are போன்ற துணை வினைகள் இணைக்கப்படுகின்றன.

எ.கா. அவன் இராமன்

He is Raman

பல பெயர்கள் தொடர்ந்து வரும்போது அவற்றை இணைப்பதற்கு ‘உம்’ என்னும் இடைச் சொல்லை அப்பெயர்கள் எல்லாவற்றோடும் இணைக்கும் மரபைத் தமிழ் போன்ற திராவிட மொழிகளில் காண முடிகின்றது. ஆனால் ஆங்கிலம் போன்ற மொழிகளில் ‘உம்’மை இடைச் சொல்லக்கு நிகரான ‘and’ என்னும் இணைப்பு இடைச்சொல் அவற்றின் இறுதியில் மட்டுந்தான் வருகின்றது.

எ.கா. இராமனும், சீதையும் இலக்குவனும் வந்தனர் - தமிழ்

Rama. Sita and Lakshmana came - ஆங்கிலம்

ஆங்கிலத் தொடர்களில் சொற்களுக்கிடையேயுள்ள் உறவு இலக்கண உறவாக அமைய, திராவிட மொழித் தொடர்களில் அவ்வுறவு உருபன்களைப் பொறுத்ததாக (morphological relation) அமைகின்றது. எனவே, சொல்லிலக்கணம் திட்பமாக அமைந்த திராவிட மொழிகள் போன்ற ஒட்டுநிலை மொழிகளில் சொற்களின் அமைப்பு முறை நெகிழ்ச்சியுடையதாகவும், ஆங்கிலம் போன்ற தொடரமைப்பு திட்பமாக் உள்ள மொழிகளில் அது நெகிழ்ச்சியற்றதாகவும் அமைகின்றன.

எனவே அம்மொழிகளில் ஒரு தொடரிலஸ்ள சொற்களை மாற்றியமைத்தாலும் பொருள் மாறிவிடுகின்றது. இந்நிலை தமிழ் போன்ற திராவிட மொழகளில் இல்லை.

எ.கா. இராமன் இராவணனைக் கொன்றான் , இராவணனை

இராமன் கொன்றான் - பொருள் மாறவில்லை

Rma Killed Ravana > Ravana Killed Rama – பொருள் மாறுபடுகிறது.

திராவிட மொழகளின் எழுவாய் அ.்.றிணைப் பெயராகவே, உயர்திணைப் பெயராகவோ, எண்ணும் பெயராகவோ, மூவிடப் பெயராகவோ, தொழிற் பெயராகவோ, வினையாலணையும் பெயராகவோ, எச்ச வடிவங்களாகவோ, குணப் பெயர்களாகவோ அமைகின்றது. இம்மொழிகளின் பயனிலை வடிவங்கள் தனி வடிவங்களாகவோ. (Simple Predicate), கூட்டு வடிவங்களாகவோ (Complex predicate) அமையும். தனி வளைப்பயனிலைகள் (Simple verbal Predicate) வினைமுற்றுக்களாகவோ, 'செய்ய' போன்ற் எச்ச வடிவங்களாகவோ, வியங்கோள் வடிவங்களாகவோ பெரும்பாலும் அமைகின்றன. வினை பயனிலையின் கூட்டு வடிவங்கள் (ஊழஅிடநஒ ஏநசடியட ீசநனைஉயவந) பெரும்பாலும் எச்சங்களும் முற்றுக்களும் இணைந்து அமைகின்றன.

**5.2 அகராதி வடிவம், பொருட் குறிப்பு (Lexical and Semantic aspect)**

மொழியின் தொடர்களைஂ ஆராய இலக்கண வதிகளான புறவடிவம் பற்றிய விதிகளை (புச்யஅஅயவஉையட சரடநள) விடவும் பொருட்களை பற்றிய விதிகளை அறிதல் மிகவும் தேவை. மனிதனுடைய மொழி அவன் வாழும் சூழ்நிலைகளோடு. சமுதாயப் போக்குகளோடும் இணைபிரியா தொடர்பு கொண்டுள்ளது. இதனால் மொழியிலுள்ள பொருள் பொதிந்த ஒவ்வொரு வடிவமும் உச்சரிப்பு வடிவு, பொருள் வடிவு என்ற இரு கூறுகளையும் ஒருங்கே பெற்று நிற்கக் காணலாம். இவற்றுள் பொருளைப் பற்றிய விதிகள் புறஅமைப்பு பற்றிய விதிகளோடு ஓரளவு இணைந்தேயுள்ளன. புறவடிவமான அகராதி வடிவங்கள் பொருளைப் பெறும் போது மட்டுமே கருத்துப் பரிமாற்றத்திற்குரிய கருவியாக மொழி செயல்பட முடியும். எனினும் புறவடிவங்களைப் புறக்கணித்தும் மொழி சிறந்த முறையில் கருத்துப் பரிமாற்றக் கருவியாகப் பயன்படுவதுண்டு, எனவே மொழியை, குறிப்பாகப் பேச்சு மொழியை எடுத்துக் கொள்வோமென்றால் இலக்கண விதிகளை (Grammaticality) விட, ஏற்றுக்கொள்ளும் நிலையே (யுஉஉநிவயடிடைவைல) இன்றியமையாதது.

சான்றாக 1. உண்மை அவனை அச்சுறுத்தியது

2. நாய் அவனைத் துரத்தியது

3. அனுமன் இராவணனைப் பயமுறுத்தினான்

இம்மூன்று தொடர்களும் வேறுபட்ட அமைப்பினையுடையன. இவற்றுள். முதற்றொடரின் எழுவாய் வடிவற்ற பெயராகவும் (Abstract noun), இரண்டாம் தொடரின் எழுவாய் அ.ஃறிணைப் பெயராகவும், மூன்றாம் தொடரின் எழுவாய் உயர்திணைப் பெயராகவும் உள்ளன. இவற்றுள் 'அவன் உண்மையைய் அச்சுறுத்தினான்' என்று முதற்தொடரை சற்று மாற்றி வழங்கினாலும் அதைப் பேசுபவன் ஏற்றுக் கொள்வதில்லை. புற அமைப்பில் இலக்கண விதிப்படி அமைந்த போதிலும் இத்தொடர் ஏற்றுக்கொள்ளும் இயல்பினைப் பெறாமல் போய்விடுகின்றது. மேலும், முதல் எடுத்துக்காட்டில், நுண் பொருள் பெயரான எழுவாய்க்கு 'அச்சுறுத்தியது' என்னம் பருப்பொருள் எழுவாய்க்குரிய அ.ஃறிணை ஒருமை வினைமுற்று கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்றவிடங்களில் வடிவற்ற நுண் கொடுக்கப்பட்டுள்ளது. இது போன்றவிடங்களில் வடிவற்ற நுண் பொருளை உருவகப் போக்கில் உயிருடைய ஒன்றாகக் கருதி இது போன்ற தொடர்களை ஏற்றுக் கொள்கின்றோம். விதியைப் புறக்கணித்தும் கருத்தைப் புலப்படுத்தி நிற்கும் இது போன்ற கீழ்க் காணும் தொடர்களைத் திராவிட மொழிகள் அனைத்திலும் காணலாம்.

எ.கா. கடமை அவனைத் திருத்தியது

காமம் அவனைக் கெடுத்தது

**5.3 வினைப்பாகுபாடு**

ஆங்கில் மொழியில் வினைச் சொற்களைச் செயப்படுபொருள் ஏற்பன, ஏலாதன என்று கூறுபடுத்துவர். இக்கூறுபாடு திராவிட மொழிகளுக்கும் பொருந்தும்.

எ.கா. அவன் மறைந்தான்

அவன் எழுதினான்.

இவ்விரு தொடர்களுள் முதற்தொடர் செயப்படுபொருளை ஏற்பதில்லை. ஆனால் இரண்டாம் தொடர் செயப்படுபொருளைப் பெற்று நிற்கும்.

**தொழிற்பெயர் ஏற்பன**

செயப்படுபொருளை ஏற்றும். ஏற்க மறுத்தும் நிற்கும் வினைச் சொற்களைப் போல சில வினைச் சொற்கள் தொழிற்பெயரை ஏற்றும சில ஏற்க் மறுத்தும் நிற்பதைக் காணலாம்.

எ.கா. 1. நான் ஓடவதைக் விரும்புகிறேன்.

2. நான் ஓடுவதைக் கொடுப்பேன்

இவ்விரு தொடர்களில் முதலில் காட்டப்பட்டிருக்கும் தொடர் இலக்கண் அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும் சரியாகவே அமைகின்றது. ஆனால் இரண்டாவது காட்டப்பட்டிருக்கும் தொடர் புற அமைப்பில் ஏற்புடையதாக்க் காணப்படினும் பொருளடிப்படையில் நோக்கும்போது

தவறுடையதே. இதிலிருந்து ஒரு சில வினைச்சொற்களே தொழிற்பெயரை ஏற்று நிற்கும் ஆற்றலுடையன என்பது தெளிவு. எனவே வினைச் சொற்களை,

1. தொழிற்பெயர் ஏற்பன
2. தொழிற்பெயர் ஏற்க மறுப்பன

என்று இரு கூறுபடுத்த முடிகின்றது. இத்தகைய தன்மைகளை மரபிலக்கண் வல்லுநர்கள் உருபன் பற்றிய பகுதியில் (Morphology) விளக்க, மாற்றிலக்கண வல்லநர்கள் பொருளில் (Semantics) பற்றிய் பகுதியில் விளக்குவர்.

**5.4 வினைமுற்றும் செயப்படு பொருளும்**

**எ.கா.**

| செய்பவன் | காலம் | பொருள் | செயல் |
|---|---|---|---|
| **1. இந்தப் பையன்** | **நேற்று** | **தண்ணீர்** | **குடித்தான்** |
| **2. ,, ,,** | **,,** | **சர்க்கரை** | **,,** |
| **3. ,, ,,** | **,,** | **காற்று** | **,,** |

ஒருவன் செயல் நிகழ வேண்டுமாயின் செய்பவனும், செயப்படு பொருளும் தேவை. மேற்சுட்டிய தொடர்களில் செய்பவன் உயர்திணையாகவம், செயப்படுபொருட்கள் அ∴றிணைப் பொருட்களாகவும் உள்ளன. எனினும் எல்லா வினைமுற்றுக்களும் எல்லாச் செயப்படுபொருட்களையும் ஏற்றுக் கொள்வதில்லை. 'குடித்தான்' என்னும் வினைமுற்று தண்ணீர், பால் போன்ற திரவப் பொருட்களைத்தான் ஏற்று நிற்குமே தவிர சோறு, சர்க்கரை போன்ற திடப்பொருட்களைத்தான் ஏற்று நிற்குமே தவிர சோறு, சர்க்கரை போன்ற திடப்பொருட்களை ஏற்பதில்லை. அவ்வாறு ஏற்று நின்றாலும் அத்தொடரைக் கேட்போன் இலக்கண விதிப்படி சரியாக அமைந்தால், பொருள் அடிப்படையில் தவறான தொடர் என்று புரிந்து கொள்வான். எனவே, பொருள்அடிப்படையில் தொடர்களையும், இலக்கணக் கூறுகளையும் அணுக வேண்டியது இன்றியமையாததாக அமைந்துவிடுகின்றது.

ஒவ்வொரு தொடரும் பல்வேறு பொருட்களைத் தன்அக அமைப்பில் பெற்றுத் திகழக் காணலாம். எனவே அக அமைப்பைப் புறக்கணித்து புற அமைப்பை மட்டும் ஆராய்வது தவறுடைய செய்கையாகவே அமையும். எனவே புற வடிவத்தோடு (Surface Structure) புதை வடிவத்தையும் (Dee Structure) அமையும்போதுதான் மொழியின் அமைப்பு பற்றிய ஆய்வு முழுமை பெறும். சான்றாக, சிலம்பில வரும் 'ஆறைங்காவதம்' என்ற தொடரைக் காட்டலாம். புறவடிவில் 'ஆறோ' ஐந்தோ காவதம்' என்ற பொருளையும் புதை வடிவில் 'முப்பது காவதம்' என்ற பொளையும், இத்தொடர் தரவில்லையா? இத்தகைய புற, புதை வடிவங்கள் மொழியானது சிறய் தொடர்களில் கூட பல்வேறு கருத்துக்களைத் தாங்கி நிற்குமியல்பைக் காட்டுகின்றன.

சான்றாக “அழகிய இராமனும் சிதையும் காதலித்தனா்” என்ற தொடரை எடுத்துக் கொள்வோம். இத்தொடரிலுள்ள ‘அழகிய’ என்ற சொல் ஒரு சொல் மயக்கத்தை (ambiguity) உண்டு பண்ணி.

1. அழகிய இராமன் காதலித்தான்
2. அழகிய சீதை காதலித்தான்
3. அழகிய சீதையும் அழகிய இராமனும் காதலித்தனா்
4. அழகிய சீதை அழகிய இராமனைக ் காதலித்தான்
5. அழகிய சீதை இராமனைக் காதலித்தான்

என்பன போன்ற வடிவங்களைத் தோற்றுவித்து விடுகின்றது.

மேற்கூறிய எடுத்துக்காட்டுக்களைக் கூற்றில் நோக்கும்போது, தொடரின் புற அமைப்பும் பொருளும் நெருங்கிய தொடா்புடையன என்று அறிகின்றோம். எனினும் புறஅமைப்பும் பொருளும் சிற்சில இடங்களில் தொடா்பற்று நிற்பதைக் காணலாம். புற அமைப்பைச் சிறப்பாகப் பெற்ற் தொடா்களேல்லாம் பொருளைச் சிறப்பாக விளக்கி நிற்பதில்லை. மாறாக, பொருளைச் சிறப்பாக வெளிப்படுத்தி நிற்கும் தொடா்கள் சிலவிடங்களில் இலக்கண அமைப்பை மீறிய புறவடிவங்களைப் பெற்றிருக்கக் காணலாம். இதனால் மொழியானது பொருளை வெளிப்படுத்தி நிற்கும் முறை் மகக்ள் மன நிலையை ஒட்டி அமைந்து பின் மரபு வழியாகப் போற்றப்பட்டு வருகிறது என்பது தெளிவு.

சான்றாக, “அவன் இராமன்’ என்று கூறும்போது கேட்பவன் மேற்கூறிய தொடரில் இராமன் என்பவன் சுட்டப் பெறுகிறான்ட் என்பதை உணா்ந்துகொள்கிறான். அதே சமயம் ‘அவன் புல’ என்று கூறும்போது அத்தொடா் இலக்க்ணமுறைப்படி அமைந்தபோதிலம் கேட்பவனால் மேலோட்டமாக அதன் பொருளை் உடனடியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதுபோன்ற உருவகப் பொருளில் அமைந்த தொடா்கள் எல்லா மொழிகளிலும் நிறந்து காணப்படுகின்றன. எனவே ஒரு மொழியின் தொடா்பற்றிய ஆய்வு சிறக்க அம்மொழியின் புதை வடிவம். பொருட்கூறு ஆகியன பற்றிய ஆய்வு மிகவும் தேவைப்படுகின்றது. மாற்றிலக்கண முறையிலமையும் ஆய்வு முறைகளில் மேற்கூறிய அனைத்துக் கூறுகளும் ஆராயப்படுவதால் மொழியின் தொடா்பற்றிய ஆய்வு ஓரளவு முழுமை பெறுகின்றது எனலாம்.

தமிழில் இடத்தைச் சுட்டும் பெயா்சொற்களை திசையைச் சுட்டும் பெயா்ச் சொற்கள் என்றும், ஏனைய இடப்பெயா்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் திசையைச் சட்டும் பெயா்ச் சொற்கள் நான்காம் வேற்றுமையை ஏற்பதில்லை. மாறாக் ‘எ’கர உருபு அவற்றோடு இணைந்து கிழக்கே, மேற்கே என்று வரும்.

தற்காலத் தமிழில் படா்க்கை மூவிடப் பெயா்களைச் சுட்ட தனி வடிவங்கள் கிடையாது. மாறாகச் சுட்டுப்பெயா்கள் அனைத்தும் படா்க்கை மூவிடப் பெயா்களாகப் பயன்படுத்தப் படுகின்றன.

பழந்தமிழில் படா்க்கை ஆண்பால், பெண்பால் ஆகியவற்றின் பன்மை வடிவங்களை உணா்த்த தனி வடிவங்கள் கிடையாது.. ‘அவா்’ என்னும் பொதுவடிவத்தால் அவை

உணர்த்தப்பட்டன. காலப்போக்கில் ‘அவர்கள்’ என்னும் வடிவம் புகுந்தது. தற்போது ‘அவனுக’, ‘அவளுக’ என்பன் போன்ற பன்மை வடிவங்கள் பேச்சுத் தமிழில் இடம் பெற்று மெதுவாக எழுத்து வடிவிலும் புகத் தொடங்கியுள்ளதைக் காண்கிறோம்.

வினைவடிங்களின் அமைப்பைப் பொறுத்த வரையிலும் பழந்தமிழிலிருந்து தற்காலத் தமிழ் வேறுபடுவதைக் காணலாம். ‘செய்யலாம்’ என்பன போன்ற வடிவங்களுக்குப் பதிலாக பல்வேறு துணை வினைகளைப் புகுத்தி நுட்பமான பொருள் வேறுபாடுகளைக் காட்டும் வண்ணம் தொடர்கள் அமைக்கும் பாங்கினைத் தற்காலத் தமிழில் காண்கிறோம். துணை வினைகளின் ஊடுருவல் காரணமாக ஏராளமான வினைப் பொருட்கள் (ஆழழனள) தோற்றம் பெற்றுள்ளன.

‘இரு’ என்னும் வினைச் சொல் காலப்போக்கில் to be என்னும் பொருளுடைய துணை வினையாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக

வந்து இருந்தேன்

வந்து இருக்கிறேன்

வந்து இருப்பேன்

என்பன போன்ற தொடர்கள் தோன்றத் தொடங்கியுள்ளன.

செயலின் தொடர்ச்சியைக் காட்ட துணை விளைகளைப் பயன்படுத்தித் தொடர்களை அமைக்கும் போக்கு பழந்தமிழில் இல்லை. ஆனால் வினைச் சொல்லோடு ‘கிட்டு இரு’, கொண்டு இரு என்பன பேன்ற துணை வினைகளை இணைத்து செயலின் தொடர்ச்சியைச் சிறப்பாகக் காட்டும் போக்க தற்காலத் தமிழில் உள்ளது.

எ.கா. அவன் பேசிக்கிட்டிருந்தான்

அவன் நடந்து கொண்டிருந்தான்

‘விடு’ என்னும் வினைச் சொல்லை துணை வினையாகப் பயன்படுத்தி ‘வந்துவிட்டான்’ என்பன் போன்ற தொடர்களை வைத்து உறுதிப்பொருளில் பயன்படுத்தும் போக்கு தற்காலத் தமிழில் மிகுந்துள்ளது. சிறுத் தொடர்களை இணைத்துக் கூட்டுத் தொடர்களை அமைக்கும் போக்கும் தற்காலத் தமிழில் மிகுதுள்ளது.